# நண்பகல் ஞாயிறு

நெஞ்சம் நிறைந்த அய்யா இரா. இளவரசு அவர்கள் மறைந்து ஓராண்டு நிறைவுறுகிறது. அவரது முதலாம் ஆண்டு நினைவாக இந்நூல் மீள்பதிப்பாக வெளிவருகின்றது.

**முனைவர் இரா. இளவரசு**
மேனாள் பேராசிரியர் & தலைவர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**அமிழ்தம் பதிப்பகம்**

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **நண்பகல் ஞாயிறு** |
| ஆசிரியர் | : | **முனைவர் இரா. இளவரசு** |
| பதிப்பாளர் | : | **இ. வளர்மதி** |
| மறுபதிப்பு | : | 2015 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 192 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 180/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | மதர்போர்டு<br>சென்னை - 14. |
| அட்டை வடிவமைப்பு | : | டிராட்ஸ்கி மருது |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>வடபழனி, சென்னை - 26. |
| வெளியீடு | : | **அமிழ்தம் பதிப்பகம்**<br>பி-11, குல்மொகர் அடுக்ககம்,<br>15பி, தெற்கு போக்கு சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017. |
| விற்பனையகம் | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017.<br>9444410654, 044-24339030 |



**தோற்றம்: 12-6-1939**
**மறைவு : 22-1-2015**

# மீள்பதிப்பு

பேராசிரியர் இளவரசு என் நெஞ்சம் நிறைந்த தமிழ்ப் பேரறிஞர் திராவிட இயக்கக் கொள்கைகளிலும் தனித்தமிழியக்கக் கொள்கை களிலும் பேரீடுபாடு கொண்ட பெருந்தமிழ் அறிஞர். தனித்தமிழியக்க முன்னோடிகளில் முன்னவர். தனக்கென வாழாது தமிழ்க்கென வாழ்ந்தவர். என் தமிழ் வாழ்வில் என்னைத் தூக்கி நிறுத்திய பெருமக்களில் இவருக்குப் பெரும் பங்குண்டு. கொள்கையில் உறுதியும், அஞ்சா நெஞ்சமும், எந்த நிலையிலும் யாரிடமும் தலைதாழா தன்மானப் பேராசான்.

இப்பெருந்தமிழ் அறிஞர் மறைந்து ஓராண்டு முடிந்து விட்டது. என்போன்றார்க்கு அவர் மறைந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரோடு பழகிய நாட்கள் என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுகள். மலேசியத் திருமண்ணில் மொழிநூல் கதிரவன், மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டை ஒட்டி தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட நூல்களின் அறிமுக விழா 2002 இல் நடைபெற்றது. நாங்கள் இருவரும் கலந்துகொண்ட அந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன். கண்களில் நீர்வழிய அவருடைய நினைவாக அவர் எழுதிய அறிவுச் செல்வங்களை தமிழ் கூறும் நல்லுலகம் பயன்கொள்ளும் வகையில் மீள் பதிப்புச் செய்வதை என் கடமையாகக் கொள்கிறேன்.

**– கோ இளவழகன்**

# நண்பகல் ஞாயிறு

ஆய்வாளர்கள் என்று அழைத்துக் கொள்ளும் பலரின் உரைநடை 'பாடம் பண்ணிய அருங்காட்சியகப் பறவை போல' உயிர்ப்பற்று இருக்கும். ஆனால் பேராசிரியர் இளவரசு அவர்களுடைய உரைநடை உயிர்ப்புமிக்க உரைநடை. எடுப்பும் மிடுக்கும் நிறைந்த, கவித்துவம் பொங்கும் எழில்நடை.

பேராசிரியர் இளவரசு அவர்கள் எதைச் செய்தாலும் அதில் நேர்த்தியும் அழகும் இருக்கும். அதிகாலையில் எழும் ஞாயிறுக்கும் மாலைவேளையில் மறையும் ஞாயிறுக்கும் இடையே 'நண்பகல் ஞாயிறை' கண்டெடுத்தவர் இளவரசு அவர்கள்.

பேராசிரியர் இளவரசு அவர்களின் ஆய்வுப் புலமையின் அடர்த்தியும் ஆழமும் நோக்கும் போக்கும் 'நண்பகல் ஞாயிறு' போல நிலைத்து நிற்கும் தன்மையதாகும். இத்தன்மை தமிழ்ப் பகைமையையும் தாய்மொழிப் பகைமையையும் சுட்டெரிக்கும்.

எதிர் கருத்து நிலை உடையவர்களிடம் கூட, ஆய்வுத்தேடலில் உண்மைநிலை வெளிப்படுமானால் அதைத் தயங்காது ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை வாய்ந்தவர்.

பேராசிரியர் இளவரசு அவர்கள் எவரையும் வெறுமனே முகத்துக்கு முகம் புகழமாட்டார் அதே மாதிரி எவருடைய புகழ்மொழிகளையும் போற்றிப் பாடல்களையும் உயிரோடு இருந்தவரை ஏற்றுக்கொள்ளாத இயல்பினராக வாழ்ந்தார்.

2015 ஆம் ஆண்டு சனவரி 22ஆம் நாள் பேராசிரியரின் உயிர்க்காற்று காற்றில் கலந்தது. அவரின் இழப்பு ஏற்படுத்திய வலி சொல்லொணா துயரம் படிந்ததாகும்.

பேராசிரியர் இளவரசு அவர்கள், அவருடைய நூல்களில் வாழ்கிறார். கருத்துகளில் உலவுகிறார். சொற்பொழிவு பதிவுகளில் முழங்குகிறார். இந்த ஒட்டுமொத்த உருவகத்தைத் தலைமேல் சுமந்து பரப்பத் தமிழ்மண் பதிப்பகம் முன்னிற்கிறது. 2016 ஆம் ஆண்டு பேராசிரியர் இளவரசு அவர்களின் முதலாண்டு நினைவேந்தல் நிகழ்வில் 'நண்பகல் ஞாயிறின்' மறுபதிப்டை தம் மார்பில் சுடர்விடும் பொற் பதக்கமாகக் கருதி தமிழ்மண் பதிப்பகம் பெருமிதத்துடன் வெளியிடுகிறது.

**– வைகறை**

## முகப்பில்...

கட்டுரை என்னும் சொல் பழந்தமிழில் பேச்சுச் சார்ந்த ஒலிவடிவத்தையே குறித்து நின்றது. 'பல பல கட்டுரை பண்டையிற் பாராட்டி' எனக் கலித்தொகையிலும் 'உலவாக் கட்டுரை பல பாராட்டி' எனச் சிலப்பதிகாரத்திலும் 'கட்டுரை விரித்தும் கற்பவை பகர்ந்தும்' என மணிமேகலை யிலும் வரும் இடங்களிலெல்லாம் 'சொல்லப் படுதலையே' சுட்டி நிற்கக் காணலாம். உறுதி யாகச் சொல்லப்படுவது, தெளிவாகச் சொல்லப் படுவது, பொருள் பொதியச் சொல்லப்படுவது எனப் பேச்சுச் சார்ந்த பொருளே 'கட்டுரை'க்குத் தரப்பட்டுள்ளது.

இன்று கட்டுரை என்பது ஒருபொருள் குறித்து உரைநடையில் கட்டுக்கோப்புடன் முன்னுரை, பொருளுரை, முடிவுரை முதலிய பாகுபாடு களோடு எழுதப்பெறுவதையே குறித்து நிற்கின் றது. கல்வியகங்களில் கட்டுரை எழுதுதல் இன்றியமையாப் பயிற்சியாகக் கற்பிக்கப் பெறுகின்றது. கட்டுரைப்போட்டிகளும் நடத்தப் பெறுகின்றன. 'நண்பகல் ஞாயிறு' என்னும் பெயர் பூண்டு உங்கள் கைகளில் தவழும் இந்நூல் எனது கட்டுரைகளின் தொகுப்பாகும். இக்கட்டுரைகள் மேற்குறித்த இரண்டு வகையான

பொருள்களுக்கும் இடந்தருபவை. தொலைக் காட்சியிலும் வானொலியிலும் நான் பேசியவை நூலின் முற்பகுதியில் (1 - 13) இடம்பெற் றுள்ளன. சென்னைத் தொலைக்காட்சியில் 15 மணித்துளி அளவிலான 'சிந்தனைக் கதிர்' நிகழ்ச்சியில் பேசியவை முதலிலும் சென்னை, திருச்சி வானொலிகளில் 3 மணித்துளி, 5 மணித்துளி, 15 மணித்துளி என்னும் கால அளவில் நிகழ்த்திய உரைகள் அடுத்தும் அளிக்கப்பெற்றுள்ளன. கட்டுரைகளின் அளவைக் கொண்டு அவை நிகழ்த்தப்பெற்ற காலத்தை அறியலாம்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழக்காறு (பேசுந்தமிழ்), செய்யுளாறு (எழுதுந்தமிழ்) என்னும் இருவகைப் பகுநிலைகளைத் தமிழ் மொழி எய்தியிருந்தது. அவ்விரு நிலைகளையும் கருத்திற்கொண்டே தொல்காப்பியர் இலக்கணம் செய்தார். ஆனால் பேசுந்தமிழ் கொச்சையானது; புறக்கணிக்கத்தக்கது என்னும் போக்கு பிற்காலத் தில் நிலவலாயிற்று. இது தவறான போக்கு என்பதை உணர்த்தும் வகையில் இலைமறை காயாகப் பேச்சுத்தமிழில் புதையுண்டிருக்கும் சொற்செல்வத்தைத் துலக்கிக் காட்டும் வகையில் 'பேசுந்தமிழ்' என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுத விரும்பினேன். அந்த நோக்கில் உருவான

வையே ஏகாரவினா, உகரச்சுட்டு, மூடு, தவ முதலிய கட்டுரைகள்.

இத்தொகுப்பில் பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை சுந்தரேசனார், பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழ்த்தூதர் தனிநாயக அடிகளார் ஆகியோரின் மறைவை ஒட்டி எழுதப்பெற்ற 'நினைவேந்தல்' கட்டுரைகள், இணைந்துள்ளன. அவர்களோடு எனக்கிருந்த தொடர்புகளை முன்வைக்காமல் இவை எழுதப்பெற்றன. 'தமிழியக்கம்' இதழில் 'பயில்வான்' என்னும் புனைபெயரில் இவை எழுதப்பெற்றன. இவ்வரிசையில் இன்னும் பல அறிஞர்களின் தமிழ்க்கொடையை, அவர்களோடு எனக்கிருந்த தொடர்பை இணைத்து எழுதத் திட்டமிட்டுள்ளேன். பலர்க்கும் தெரியாத மறுபக்கங்களையும் காட்டும் வகையில் அவை அமையும்.

பெருங்கதையின் மொழியமைப்புப் பற்றிய என் முனைவர் பட்ட ஆய்வேடு, நூலாக வெளிவர வேண்டும் என்று வலியுறுத்துபவர் பலர். தமிழ் வடிவில் நூலாகும்போது அது பலர்க்கும் பயன்படும். அவ்வாய்வேட்டில் இடம் பெற்றுள்ள இரண்டு கட்டுரைகளின் தமிழ்வடிவம் இத்தொகுப்பில் இணைந்துள்ளது. எழுபதுகளின்

தொடக்கத்தில் பாரதியார் பற்றியும் பாரதிதாசன் பற்றியும் எழுதி இதழ்களில் வெளியிடப்பெற்ற கட்டுரைகள் அப்படியே தரப்பட்டுள்ளன. அக்கட்டுரைகளில் சேர்க்கவேண்டிய தரவுகள் சில கிடைத்துள்ளன. பாவேந்தரின் படைப்புகள் பற்றி எழுதியுள்ள கட்டுரையில் நூலாகவேண்டிய முறைமை பற்றிக் குறிப்பிட்ட கருத்துகளுக் கிணங்க அவரின் படைப்புகள் பின்னர் பிறரால் நூலாகியுள்ளன. 'பாரதியின் பாப்பாப் பாட்டு' என்னும் கட்டுரை பலராலும் வரவேற்கப் பட்டதாகும். அறிஞர் கைலாசபதியின் பாரதியில் பாடபேதம் பற்றிய கட்டுரை விரிவாக்கம் பெற எனது கட்டுரை பயன்பட்டது நினைவு கூரத்தக்கது. பாரதியார் பாரதிதாசன் அறிமுகம் புதுவைக்குப் பாரதியார் சென்ற ஆண்டிலேயே (1908) நிகழ்ந்ததாகப் பலரும் குறிப்பிட்டு வருகின்றனர். இதுபற்றி எனது 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' என்னும் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். அதைப் பலரும் கண்ணுறாத நிலையில் அதுபற்றி மட்டும் விளக்கமாக எழுதவேண்டிய தேவையேற் பட்டதன் விளைவே 'பாரதியார் பாரதிதாசன் அறிமுகம்' என்னும் கட்டுரை. பாரதிதாசன் ஆய்வில் எதிர்ப்படும் சிக்கல்கள், அவர் படைப்புகள் செம்மையான முறையில் பதிப்பிக்கப்படாமையினால் ஏற்படுவது பற்றிச்

சில கட்டுரைகள் பேசுகின்றன. இச்சிக்கல்களும் இவற்றுக்கான தீர்வுகளும் தனிநூலாக விரைவில் வெளிவர உள்ளன. 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்னும் நூலே (1926) பாரதிதாச னின் முதல்நூலாகப் பலராலும் குறிப்பிடப் பட்டது. அதற்கு முன்னரே 'மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு' (1920), 'மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்' (1925) ஆகிய நூல்கள் வெளிவந்திருப்பதைச் சில ஆண்டுகளின் முன் அறிய முடிந்தது. (சிவ.இளங்கோ, புதுவை). எனது 'பாரதிதாச னின் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்னும் கட்டுரை என்னிசைவு பெறாமலேயே முன்பகுதி நீக்கப்பெற்று இன்னொருவரின் தொகுப்பு நூலில் இடம்பெற்றது. ஆட்சி, கல்வி, வாணிகம் முதலிய வற்றால் மேலை உலகத்தினரோடு தொடர்பு அதிகமாய் உள்ளது. சப்பான், சீனம் முதலிய கீழ்த்திசை உலகினரோடு தொன்மையான பண்பாட்டு உறவுகள் இலைமறைகாய்போல் ஏராளமாக உள்ளன. அவற்றை அறியவேண்டிய பெரும் பொறுப்பு நமக்குள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே 'மரபுக்குச் சொந்தக் காரர்கள்' என்னும் கட்டுரை.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பல நிலைகளில் பல ஊடகங்களில் வெளி

வந்தவை. அறிமுகக் கட்டுரைகளும் ஆய்வுக் கட்டுரைகளும் இதன்கண் அடங்கும். நீரோட்டமாய்ச் செல்லும் கட்டுரைகளும் நின்று நிறுத்திப் படிக்கச் செய்யும் கட்டுரைகளும் கலந்துள்ளன. இருப்பவற்றையெல்லாம் ஒரு தொகுப்பில் கொண்டு வரவேண்டும் என்று எண்ணியதன் விளைவு இது. பல காய்கறிகளைச் சேர்த்துச் செய்யும் 'கூட்டவியல்' போன்ற தொகுப்பு பல நிலையினர்க்கும் பயனும் சுவையும் நல்க வல்லது.

இதில் இடம்பெற்றுள்ள படைப்புகள் உலகைக் காண உதவிய தொலைக்காட்சி, வானொலி நிலையத்தினர், தமிழியக்கம், தமிழ்ப்பொழில், கொங்கு, தமிழ்ப்பணி, முகம், ஆனந்தவிகடன், தினமணி முதலிய தாளிகையாளர் அனைவர்க்கும் என் அகங்கனிந்த நன்றி.

இப்படைப்புகளை வரிசைப்படுத்தி நூல்வடிவில் காணவும் காட்டவும் செய்தவர்கள் இனிய நண்பர்கள் க.சந்திரசேகரன், புலவர் வைகறை வாணன், பாலமுருகன் ஆகியோர்.

பொருட்செலவைப் பொருட்படுத்தாது இதை வெளியிடுவோர் தமிழ்மதி பதிப்பகத்தார். நூலாக்கத்துக்குத் துணை நின்ற இனிய நண்பர்கள்

கோ.இளவழகன், மதிவாணன், அரங்கராசு முதலியோர்க்கு நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வெளியீடு நான் நிகழ்த்திய பல்வேறு கருத்தரங்கு, அறக்கட்டளைச்சொற்பொழிவுகள் நூல்வடிவம் பெற வேண்டிய தேவையை எனக்கு உணர்த்துகிறது. தொல்காப்பியம் தொடங்கி கு.மு.அண்ணல்தங்கோ வரை நிகழ்த்தப்பெற்ற அவ்வாய்வுகள் விரைவில் நூலாக வெளிவரும்.

நிறைந்த அன்புடன்
இரா.இளவரசு

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | வாய்மொழி இலக்கிய மாண்பு | 15 |
| 2. | ஒரு பெண் | 19 |
| 3. | பேச்சுமொழிப் பெட்டகம் | 22 |
| 4. | தனிமனிதனும் சமூகமும் | 25 |
| 5. | யானை இறங்குகை | 28 |
| 6. | வினையிடை நின்ற சான்றோர் | 30 |
| 7. | நீர் செத்து அயின்ற தோகை | 33 |
| 8. | பள்ளிப்பிள்ளைகள் | 35 |
| 9. | அவள் வாத்திச்சி | 37 |
| 10. | கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம் | 39 |
| 11. | கொடுமை கண்டு கொதிக்கும் வானம் | 41 |
| 12. | ஏடும் எழுதுவோரும் | 45 |
| 13. | உலகை நோக்கிய இலக்கியம் | 49 |
| 14. | பேசுந்தமிழ் | 53 |
| 15. | ஏகார வினா | 57 |
| 16. | உகரச்சுட்டு | 59 |
| 17. | மூடு | 62 |
| 18. | தவ | 64 |
| 19 | ஆடவர்க்கும் பசப்பு | 67 |
| 20. | 'பிறந்தவன்' 'பிறந்தவள்' | 70 |

| | | |
|---|---|---|
| 21. | இசையோடு | 74 |
| 22. | இப்படியும் ஒரு முகம் | 80 |
| 23. | நண்பகல் ஞாயிறு | 84 |
| 24 | பெருங்கதைப் பெயராய்வு | 95 |
| 25. | பெருங்கதையின் தனிநிலைகள் | 102 |
| 26. | இளங்கோவின் புதுநெறி | 107 |
| 27. | பாரதிதாசனின் 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' | 111 |
| 28. | பாவேந்தரின் வரலாறு பற்றி | 128 |
| 29. | பாரதிதாசனின் படைப்புக்கள் பற்றி... | 134 |
| 30. | ஆய்வு - நோக்கும் போக்கும் - சில குறிப்புகள் | 144 |
| 31. | மரபுக்குச் சொந்தக்காரர்கள் | 151 |
| 32. | மடிந்தது கீழ்மைக்குணம் | 157 |
| 33. | தமிழர் நிலையை உயர்த்தியவர் | 160 |
| 34. | பாரதியார் - பாரதிதாசன் அறிமுகம் | 166 |
| 35. | பாரதியின் 'பாப்பாப் பாட்டு' | 172 |
| 36. | உரைகளில் உதாரணம் - ஒரு குறிப்பு | 186 |

1

# வாய்மொழி இலக்கிய மாண்பு

உயிர்களின் வளர்ச்சியில் மனிதன் உருவானான். மனிதனின் வளர்ச்சியில் மொழி முகிழ்த்தது; மொழியின் மலர்ச்சியில் இலக்கியம் பூத்தது. எழுத்தும், கல்வியும் ஏற்படுவதற்கு முன்னரே இலக்கியம் மலர்ந்து விட்டது.

கல்வி, கேள்விகளிற் சிறந்த செந்நாப் புலவர்களால் இயற்றப் பட்டவையே இலக்கியம் என்பது இன்று ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றாகிவிட்டது. எழுதப் படிக்க மாந்தன் கற்றுக்கொள்வதற்கு முன்னரே இலக்கியத்தைச் சமைக்கத் தொடங்கிவிட்டான். வாயைத்தம் வாழிடமாகக் கொண்டு செவிநுகர்கனிகளாக அமைந்த அந்த இலக்கியங்களே வாய்மொழி இலக்கியங்கள்.

எழுதப்பட்ட இலக்கியங்களின் மூலமாகவும் முன்னோடியாகவும் அமைவன வாய்மொழி இலக்கியங்கள்.

எழுத்திலக்கியங்களில் மேன்மக்களின் தலைமையே பெரிதும் பேசப்பட வாய்மொழி இலக்கியங்கள் எளிய மக்களின் உணர்ச்சிகளுக்கு முதன்மை அளிக்கின்றன.

இலக்கிய நெறிமுறைகள் எனும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை எழுத்திலக்கியங்கள். கட்டுப்பாட்டுப் போர்வைகளில் தங்களை மூடிக்கொள்ளாமல் உணர்ச்சிகளின் வெளிப்படையான ஊர்வலமாக அமைவன வாய்மொழி இலக்கியங்கள்.

வரையறுக்கப்பட்ட வாழ்க்கையை எழுத்திலக்கியங்களில் எதிர்கொள்ளும் நாம், போலிமையற்ற, பூச்சுகளற்ற நடப்பு வாழ்க்கையை வாய்மொழி இலக்கியங்களில் கண்டுகளிக்கிறோம்.

அந்த வாய்மொழி இலக்கியம் கதைகள், விடுகதைகள், பாடல்கள், பழமொழிகள் முதலிய பலவகையாக விரிகின்றது.

ஒரு வீடு

அண்ணன் தம்பி இருவர்

அண்ணன் வெளியில் வேலைக்குச் சென்றுவிட்டான்.

தம்பி கட்டிலில் படுத்திருக்கிறான். கட்டிலுக்குக் கீழே சாக்குப்பைக்குள் ஏதோ ஒன்று கட்டிக் கிடக்கிறது. படுத்திருந்த தம்பி, வீட்டிலிருந்து அண்ணியைப் பார்த்து 'சாக்குப் பைக்குள் என்ன இருக்கிறது?' என்று கேட்கிறான். அண்ணியோ 'அதற்குள் இருப்பது உடும்பு; ஊரிலிருந்து கறிக்குக் கொடுத்தனுப்பி இருக்கிறார்கள்' என்கிறாள். 'அப்படியா? அதிலே ஒரு இறகு பிடுங்கிக் கொடுங்க காது குடையணும்' என்கிறான் கொழுந்தன். அண்ணி, 'இது என்ன கோழியா? இறகு பிடுங்கிக் கொடுக்க?' என்று குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறாள்.

மாலை வந்தது; வேலைக்குச் சென்றிருந்த கணவன் வீடு திரும்பினான்; அவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டே ''சேதி தெரியுங்களா? உங்க தம்பி, உடும்பிலிருந்து ஒரு இறகு பிடுங்கிக் கொடுங்க, காது குடையணும்னு கேட்கிறார் எப்படி இருக்கு கதை ?'' என்று சிரித்தாள். அவளோடு சேர்ந்து அவள் கணவனும் சிரித்தான்; சிரித்துவிட்டு ''முட்டாள்பய! அவன் என்னத்தைக் கண்டான்? உடும்பிலே போயி இறகு பிடுங்கணும்னு நெனைச்சிருக்கான், அது என்ன ஆமைன்னு நெனச்சான் போல இருக்கு'' என்றான்.

ஒருவனைப் பார்த்துப் பஞ்சபாண்டவர் எத்தனைபேர் என்று கேட்டார்கள். ''பஞ்சபாண்டவர் கட்டில்கால் போல மூன்று பேர்'' என்றானாம், அப்படி அல்லவா இந்தக்கதை அமைகிறது. இந்தக்கதை எதை உணர்த்துகிறது? ஆண்களைக் காட்டிலும் பெண் அறிவுடையவள் என்பதைத்தானே!

இப்படி ஏராளமான கதைகள், மக்கள் நாவில் வழங்கிவருகின்றன.

இரண்டு விடுகதைகள்!

''இரண்டு கை உண்டு
எட்டிப் பிடிக்க முடியாது;
நான்கு கால் உண்டு
நடந்து செல்ல முடியாது;
முதுகு உண்டு; முகமில்லை;
அது என்ன?''

சொல்லுங்கள்

இதற்கு விடை ''கையுள்ள நாற்காலி''

இன்னொரு விடுகதை. இது வெளிநாட்டு விடுகதை.

உங்களுக்குச் சொந்தமான ஒரு பொருள்,
அதை, உங்களைக் காட்டிலும்
மற்றவர்களே, மிகுதியாய்ப் பயன்படுத்துகிறார்கள்

அது என்ன? ''உங்கள் பெயர்தான்''

இப்படிக் கற்பனைச் சிறப்பு வாய்ந்த பல்லாயிரக் கணக்கான விடுகதைகள் கல்லாதவர் கற்றவர் என்னும் எல்லோரிடையிலும் வழங்கி வருகின்றன.

வாய்ப்பு வசதியற்ற எளியவன் ஒருவன் 'நம்மால் இது நடக்குமா?' என்று சோர்ந்திருக்கிறான். அவனுக்கு நம்பிக்கையையும் எழுச்சியையும் தருவனவாக அவன் முன்னே சில பழமொழிகள் அணிவகுக்கின்றன.

'எறும்பு ஊரக் கல்லும் தேயும்'

'சிற்றுளியால் மலையும் தகரும்'

'சிற்றெறும்பு! சின்ன உளி! இவற்றிலும் நாம் தாழ்ந்து விட்டோமா?' என்று எழுச்சி பெறுகிறான். முயற்சியில் ஈடுபடுகிறான்; முதலில் தோல்வி கிடைக்கிறது.

'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' 'முயன்றால் முடியாததில்லை' 'முயற்சி திருவினையாக்கும்' 'இன்னும் ஈடுபடு' 'இன்னும் ஈடுபடு' என்று அவனைத் தூண்டுகின்றன.

வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த இத்தகைய எளிய பழமொழி கள் அணியழகு வாய்ந்தவை.

ஒரு குழந்தை அழுகிறது. தாலாட்டுகிறாள் தாய். அவளின் கற்பனைக் களமாகக் கண்ணீர் அமைகிறது.

''ஆரடித்த கண்ணீர்
    ஆறாய்ப் பெருகியது
சித்திரை மாதம் சிறந்த
    வெள்ளம் வந்ததுபோல்
வைகாசி மாதம் வசந்த
    வெள்ளம் வந்ததுபோல்
ஆறு பெருகி
    ஆனை குளிப்பாட்டிக்
குட்டம் பெருகிக்
    குதிரை குளிப்பாட்டி....
வாய்க்காலில் ஓடி
    வழிப்போக்கர் சந்திசெய்து
இஞ்சிக்குப் பாய்ந்து
    இருவாட்சி வேரோடி

மஞ்சளுக்குப் பாய்ந்து
மருதாணி வேரோடி
தாழைக்கும் பாய்கையிலே
தளும்பினதாம் கண்ணீர்
வாழைக்கும் பாய்கையிலே
வற்றினதாம் கண்ணீர்''

கண்ணீர் வற்றுகிறது, கற்பனை வற்றவில்லை. எளிதில் நினைவில் நிறுத்தும் எதுகை மோனை! மயக்கவல்ல கற்பனை! மறக்கமுடியா உவமை! அடுக்கு வருணனை! அழகிய உணர்ச்சி ஆகிய அனைத்தும் இப்பாடலில் அமைந்திருக்கின்றன. எந்தப் புலவனின் பாடலுக்கும் இளைத்த பாடல் இல்லை இது.

இப்படி, கதைகள், விடுகதைகள், பழமொழிகள், பாடல்கள் எனப்பலவகையாக விரிந்திருக்கும் வாய்மொழி இலக்கியத்தைப் பாதுகாப்பதும் வாழ்வித்து வளர்த்தெடுப்பதும் செவியிற் சுவையுணர்ந்த ஒவ்வொரு மாந்தரின் கடமையாகும். வாய்மொழி இலக்கியம் வளம் நிறைந்த இலக்கியம் என்பதை மறவோம்.

2

# ஒரு பெண்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு நாள்! முன்னிரவுப் பொழுது; ஒரு வீட்டின் கதவு தட்டப்படுகிறது; உள்ளே இருக்கும் பெண் 'யார் அது?' என்று கேட்கிறாள்.

''நான் ஒரு வழிப்போக்கன்; எனக்குப் பாதுகாப்புக் கொடுங்கள்? எனக் குரல் வருகிறது. கதவைக் திறக்கிறாள்.

வெளியே ஒரு பெரியவர்; குழி விழுந்த கண்கள்; அழுக்கேறிய உடைகள்; புழுதி படிந்த கால்கள்; மிகவும் களைத்துப் போயிருக்கிறார். இவளுக்கு இரக்கம் ஏற்படுகிறது. 'வெளியே சென்ற கணவர் இன்னும் திரும்பவில்லையே' என்னும் தயக்கம்; என்றாலும் ''வாருங்கள் உள்ளே!'' என்று அழைக்கிறாள்.

ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு அடுக்களைக்குள் சென்று ஒரு தட்டில் சப்பாத்தியும் பாலும் குடிநீரும் கொண்டுவந்து, ''இப்போதைக்கு இதுமட்டும்தான் இருக்கிறது; சாப்பிடுங்கள்'' என்கிறாள். பல நாள் பட்டினி என்பதால் அவரால் சரிவரச் சாப்பிட முடியவில்லை. இதனைக் கவலையோடு கவனித்துக் கொண்டிருந்த அவள் ''உங்களுக்கு இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?'' என்று கேட்கிறாள்.

''ஓ! அதுவா, துயரம் தோய்ந்த கொடுமையான கதை'' என்று சொல்லத் தொடங்குகிறார்.

நம் நாட்டை ஆளும் வெள்ளையர் அரசு, என்னைத் 'தேசத் துரோகி' என்கிறது. நாட்டு மக்களோ என்னை 'விடுதலை வீரன்' என்று போற்றுகிறார்கள். வெள்ளை அரசு என் தலைக்கு விலை வைத்து விட்டது. காட்டிக் கொடுப்பவர்களுக்குக் கைநிறையப் பொருள் கிடைக்கும். காவல் துறையின் கண்களில் மண்ணைத் தூவி மறைந்து

வாழ்கிறேன். என் பெயர் இது'' என இறுதியில் தன் பெயரைக் குறிப்பிடுகிறார்.

அந்தப் பெயரைக் கேள்விப்பட்டதும் அவளுக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. வியப்பும் மதிப்பும் மேலிட இரு கைகளைக் கூப்பி வணங்குகிறாள். அவளுடைய உதடுகள் 'நானா சாகிப்! நானா சாகிப்' என அவர் பெயரை உச்சரிக்கின்றன.

களைத்துப் போயிருக்கும் பெரியவரைப் பக்கத்து அறையில் படுக்க வைக்கிறாள். ஆழ்ந்த உறக்கம் அவரை அணைத்துக் கொள்கிறது. அவளோ விழித்திருக்கிறாள்.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் கழிந்திருக்கும்; உறங்கிக் கொண் டிருக்கும் தன்னை யாரோ உலுக்கி எழுப்புவதை உணர்கிறார் பெரியவர்.

''தாத்தா எழுந்திருங்க, உடனே இந்த இடத்தை விட்டு ஓடிப்போங்க; ஓடிப் போங்க!'' என்று குரல் கேட்கிறது; அவளே தான் எழுப்புகிறாள்.

தூக்கக் கலக்கத்தோடு கதவருகே செல்கிறார் நானா சாகிப். அங்கே கண்ட காட்சி அவரை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

கத்தியால் குத்தப்பட்ட ஒரு மனிதர் குருதிவழியக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறார். நானா சாகிப்பின் பார்வை அந்தப் பெண்பக்கம் திரும்புகிறது. அவள் கைகளிலோ குருதிக் கறை!

''என்ன இது! நீயா இந்தக் கொலையை...'' என்று அவர் கேட்டு முடிப்பதற்கு முன்பே அந்தப்பெண்,

''ஆம் நான்தான் செய்தேன்'' என்று தலையை நிமிர்த்தி அமைதியாக, உறுதியாகச் சொல்கிறாள்.

''இவர் ஓர் இழிபிறவி; காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர். நீங்கள் உறங்கும் போதே உங்களை அடையாளம் கண்டு கொண்டார். உங்கள் தலைக்கு வைத்துள்ள விலையைப் பெற விரும்பினார். காவல் நிலையத்திற்குச் சென்று காட்டிக் கொடுக்க முயன்றார். முறையல்ல என்று பலமுறை எடுத்துச் சொன்னேன். தடுத்துப் பார்த்தேன். அதனால் எரிச்சல் அடைந்து ஒரு கத்தியுடன் என் மீது பாய்ந்தார். அதே கத்தியால் இப்படி ஆகிவிட்டது; இவர்தான் என் கணவர்'' என்கிறாள், ''தாயே! உன் தியாகத்தின்முன் என்னைப் போன்றவர்கள் இழப்பு எம்மாத்திரம் '' என்று அந்த வீராங்கனையின் திருவடிகளில் விழுந்து வணங்குகிறார் நானாசாகிப்!

இது ஒரு கதை. பஞ்சாபி மொழியில் ஒய். பி.சிங் என்பவரால் எழுதப் பெற்றது. இதில் இடம்பெறும் நானா சாகிப், 1858இல் நிகழ்ந்த

முதல் விடுதலைப் போரை முன்னின்று நடத்திய புரட்சியாளர். இப்படி, எத்தனை எத்தனையோ எளிய மக்களின் தியாகங்கள், மண்ணுக்கடியில் புதையுண்டு கிடக்கும் தங்கத்தைப் போல மறைந்து கிடக்கின்றன..

கணவன் - மனைவி, அவர்களின் உறவுநிலை பற்றிக் காலங் காலமாகச் சொல்லப்பட்டுவருவது என்ன?

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்' 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்றெல்லாம் காலம் காலமாகக் கணவனை வணங்கி வழிபட்டு வருபவர்கள் இந்தியப் பெண்கள்.

அன்புடைக் கணவன் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை''

என்ன கொடுமை கணவன் இழைத்தாலும் பெண்ணாய்ப் பிறந்தவள் எதிர்ப்பேச்சுப் பேசாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பது தான் அவளுக்குப் பெருமை என்பதுதான் ஏட்டிலும் நாட்டிலும் இருந்துவரும் முறைமை. இந்த முறைமை பஞ்சாபிக் கதையில் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது. தவறு செய்பவன் தாலிகட்டிய கணவனே ஆனாலும் மனைவியே அவனுக்குத் தண்டனை வழங்கலாம் எனும் புதுமை உருவாக்கப்படுகிறது.

எல்லோரின் நன்மைக்காகத் தொல்லைகளைத் தாங்கி வாடும் தியாகம் ஒரு புறம்.

நல்லோரைக் காட்டிக் கொடுத்துக் காசுபெற முனையும் நயவஞ்சகம் ஒரு புறம்.

இவற்றில் வீழ்த்தப்படவேண்டியது நயவஞ்சகமே; அந்த நயவஞ்சகம் கணவன் உருவில் வந்தாலும் களையப்பட வேண்டியது தான் என்று துணிவோடு முடிவெடுக்கிறாளே ஒரு பெண். அந்தப்பெண், வாழ்த்தப்பட வேண்டியவள்; வணக்கத்திற்குரியவள். வருங்காலம் இப்படிப்பட்ட பெண்களின் வளர்காலம் ஆகுக.

■

# 3

# பேச்சுமொழிப் பெட்டகம்

மக்கள் நாவில் வழங்கிவரும் மொழி ஒன்று. ஏடுகளில் எழுதப்பட்டு வரும் மொழி ஒன்று. நாவில் வழங்குவதை 'உலகவழக்கு' என்றும், 'பேச்சுமொழி' என்றும் குறிப்பிடுவர். ஏடுகளில் இடம்பெற் றிருப்பதைச் 'செய்யுள் வழக்கு' என்றும், 'எழுத்து மொழி' என்றும் குறிப்பிடுவர். இவ்விருவகை மொழிகளும் தம்முள் பெரிதும் தொடர் புடைடன என்றாலும் பல வேறுபாடுகளையும் கொண்டுள்ளன.

உலகவழக்கு என்று சொல்லப்படும் பேச்சுமொழி தன்னளவி லேயே இடங்களுக்கேற்ப, இனங்களுக்கேற்பப் பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. 'இருக்கிறது' என்னும் சொல் 'இருக்றது', 'இருக்குது', 'இருக்கு', 'கீது' எனப் பலவாறாகத் திரிந்து வழங்குகிறது. இவ்வாறு திரிந்து வழங்குவதை வைத்துக் கொண்டு பேச்சுத் தமிழைக் 'கொச்சைத் தமிழ்' என்றும் 'இழிந்த வழக்கு' என்றும் அறிஞர் பெருமக்களே புறக்கணித்து வந்தனர். அந்தப் புறக்கணிப்பு சரிதானா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

தொல்காப்பியர் மரபியலில் 'மூடு' என்னும் பெயர்ச் சொல் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். நாம் 'கதவைமூடு' என்று சொல்கிறோமே; அங்கே வரும் மூடு-சாத்து என்னும் பொருள்படும் வினைச்சொல்; தொல்காப்பியர் குறிப்பது பெயர்ச்சொல். அதற்குப் 'பெண் ஆடு'- 'ஆடுகளில் பெண்' என்பது பொருள். இச்சொல் சங்க இலக்கியங்களி லிருந்து இன்றுவரை எழுதப்பட்ட எந்த இலக்கியத்திலும் இடம்பெற வில்லை. இதனைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள், சங்ககாலத்திற்கு முன்னரே இது வழக்கொழிந்து போய்விட்டது என முடிவு செய்து விட்டனர். ஆனால் மக்கள் நாவில் இன்றும் அழியாமல் இச்சொல் வாழ்ந்து வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் ஈரோடு உள்ளிட்ட பல பகுதிகளில் 'கருத்தமூடு' 'சிவத்தமூடு' என்று பெண் ஆடுகளை நிறஞ்சுட்டிக் குறிப்பிடுவதை இன்றும் கேட்கலாம். ஆண் குட்டியைக் 'கடாக்குட்டி' என்றும் பெண் குட்டியை 'மூட்டுக்குட்டி' என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பஞ்சப்பட்டிப் பகுதியில் வழங்கி வருகின்றனர். தமிழகத்தின் வேறு சில பகுதிகளிலும் இந்த வழக்கு இன்றும் நிலவுகிறது. எழுத்துத் தமிழில் இடம்பெறாத இந்தச்சொல் பேச்சுத்தமிழில் 'பெண் ஆடு' என்னும் பொருளில் அழிந்துபடாமல் வழங்கிவருவதைக் காண்கிறோம். இப்படி எழுத்துத் தமிழில் இடம்பெறாத ஏராளமான சொற்கள் பேச்சுத்தமிழில் வாழ்ந்து வருகின்றன.

நமது பண்டைய இலக்கியங்களில் 'அல்லங்காடி' என்னும் ஒரு தொடர் இடம்பெற்றுள்ளது. இத்தொடரின் முதலில் அமைந்துள்ள 'அல்' என்னும் சொல்லுக்கு என்ன பொருள்? என்று ஒரு தமிழரைக் கேட்டால் பொருளறியாமல் விழிப்பது இயல்பு. அந்தத் தமிழரே 'அல்லும் பகலும் அறுபது நாழிகையும்' என்று தமிழ்மக்களின் நாவில் வழங்கும் தொடரைப் பலமுறை கேட்டிருப்பார். அத்தொடரில் 'அல்' என்னும் சொல் 'இரவு' என்னும் பொருளில் வருவதையும் இரவும் பகலும் சேர்ந்து ஒரு நாள் அறுபது நாழிகையாக நம் முன்னோர்களால் பகுக்கப் பட்டிருக்கிறது என்பதையும் அறிந்து கொள்கிறோம். அருஞ்சொல்லாகக் கருதப்படும் 'அல்' எளியோர் நாவில் நிலவி வருகிறது.

'கயந்தலை' என்பது ஒரு சொல். இதற்கு 'மென்மையான தலை'' என்பது நேர்ப்பொருள். இச்சொல் கலித்தொகையில் 'துடியடிக்கயந் தலை' என யானைக் கன்றைத் குறித்து வருகிறது. குமரிமாவட்டத்தார் குழந்தைகளைக் குறிக்கும்போது 'கன்றும் கயந்தலையுமாய் ஐந்தாறு பிள்ளைகள்' என்று இன்றும் வழங்கி வருகின்றனர். கலித்தொகை குறிப்பிடும் 'கயந்தலை' இன்றும் இறந்து படவில்லை என்பது தெரிகிறது.

வடக்கிலிருந்து வீசும் காற்று வாடை; தெற்கிலிருந்து தவழ்வது தென்றல்; இவற்றை நாம் அறிவோம். கிழக்கிலிருந்து வரும் காற்று 'கொண்டல்' என்பதும் மேற்கிலிருந்து வீசுவது 'கோடை' என்பதும் பலருக்குத் தெரியாதவை. பழந்தமிழ் நூல்களில் இடம் பெறுபவை. சற்று இளைப்பாறக் கடற்கரைப் பகுதிக்குச் செல்வோம். அங்கே கிழக்குக் கடலில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பரதவர்களின் பேச்சை உற்றுக் கேட்டால் இந்தக் கொண்டலும் கோடையும் பலமுறை நடமாடுவதை எளிதில் அறியலாம்.

திருச்சிராப்பள்ளி நகரத்தின் தெப்பக்குளம் பகுதி! காய் வாங்க செல்கிறோம். காய் விற்கும் பெண்ணிடம் ''வெண்டைக்காய் பிஞ்சாக இல்லைபோலிருக்கிறதே'' என்றுவினவுகிறோம். என்னங்க நீங்க?

''தவப்பிஞ்சுங்க தவப்பிஞ்சுங்க'' எனக் கூறிக் காயின் முனையை ஒடித்துக் காட்டுகிறாள். இது என்ன தவப்பிஞ்சு? தவம் செய்து தோன்றிய பிஞ்சா இது? இல்லை. மிக இளைய பிஞ்சாக இருப்பது என்பதையே 'தவப் பிஞ்சு' என்கின்றனர். இலக்கணங்களில் மிகுதிப்பொருள் தரும் உரிச் சொற்களாகச் சால, உறு, தவ, நனி, கூர், கழி ஆகியவற்றைப் பள்ளிகளி லேயே படித்திருக்கிறோம். அவற்றுள் ஒன்றாகிய 'தவ' என்னும் உரிச் சொல்லே மிகுதிப்பொருள் தருவதாய்த் 'தவப்பிஞ்சு' என்பதில் இடம் பெற்றிருக்கிறது. 'செய்யுளுக்கு உரியன' என நன்னூலார் குறிப்பிடும் உரிச்சொற்கள் சில மக்கள் நாவில் இன்றும் வழங்கி வருகின்றன.

வாழ்ந்துவரும் ஒரு மொழிக்குப் புதியபுதிய சொல்லாக்கங்களை அறிஞர்கள் மட்டுமா உருவாக்குகிறார்கள்? எளிய மக்களால் உருவாக்கப்பட்ட ஏராளமான சொற்கள் பேச்சுத்தமிழை அணிசெய்து கொண்டிருக்கின்றன. முகத்துக்குப் பூசிக்கொள்ளும் 'Snow' பார்ப்பதற்கு வெண்ணையைப் போன்றிருக்கும், ஆதலால் அதனை 'முகவெண் ணெய்' என்பர் செட்டி நாட்டு ஆச்சிமார்கள்.

'வைத்தூற்றி' என்னும் சொல்லைக் கேள்விப்பட்டிருக்கீறீர்களா? ஆங்கிலத்தில் Funnel;என்று சொல்கிறார்களே, அதனைத்தான் குமரி மாவட்டத்து மக்கள் 'வைத்தூற்றி' என்கிறார்கள். அதனை ஒரு குப்பியின் வாய்ப்பகுதியில் வைத்து அதன் வழியாக அந்தக் குப்பிக்குள் ஒரு நீர்மப்பொருளை ஊற்றுகிறோம். வைத்து ஊற்றுவதற்குப் பயன்படும் அதனை வைத்தூற்றி என்றழைப்பது எவ்வளவு பொருத்தம்!

''வாழைத்தண்டு விளக்கு'' என்பது எது தெரியுமா? படித்தவர்கள் 'குழல் விளக்கு' என்று சொல்கிறோமே, அதைத்தான் வடிவத்தின் அடிப்படையில் 'வாழைத்தண்டுவிளக்கு' என்கின்றனர் படிக்காத எளிய மக்கள்!

இப்படிப் பலப்பல புதிய சொற்களைப் பேச்சுத்தமிழில் காணலாம்.

மக்களின் வழக்கில் 'Button' பொத்தான் ஆகிறது. 'Bottle', போத்தல் ஆகிறது. 'Towel', 'துவாலை' ஆகிறது. பிறமொழிச் சொற்களைத் தமிழ் மயப்படுத்தி வழங்கும் இத்தகைய போக்கிற்குப் பேச்சுத்தமிழில் பஞ்சமில்லை.

இலக்கியங்களில் இடம்பெறாத ஏராளமான சொற்கள், பொருள் விளக்கம் வேண்டி நிற்கும் அரியசொற்கள், உரிச்சொற்கள், எளிய மக்களால் உருவாக்கப் பெற்ற சொற்கள் எனத் தமிழ் மொழியின் சொல்வளத்தைத் தாங்கி நிற்கும் பேச்சுமொழியைப் புறக்கணிக்காது போற்றுவோம்.

■

4

# தனிமனிதனும் சமூகமும்

மக்களுக்கு நன்கு அறிமுகமான புகழ் வாய்ந்த ஒருவர். எழுபது அகவையை எட்டிவிட்டவர்; என்றாலும் இளமை மாறாத எழிலுடைய வர். புகழ்பெற்ற அவரை ஓர் இதழின் சார்பில் நேர்காண்கிறோம். ''அய்யா, எழுபது வயதைத் தாண்டிய பின்னரும் முடிநரைக்காமல் தோல் திரைக்காமல் இளமையோடு இருப்பதன் காரணம் என்ன?'' என்று கேட்கிறோம். அதற்கு அவர், நான் காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிடுகிறேன். ஒருமணி நேரம் உடற்பயிற்சி செய்கிறேன்; என் காலை உணவு இரண்டு இட்டளி, ஒரு முட்டை; பகல் பதினொன்றரை மணியளவில் பழச்சாறு; இப்படி என் உணவுவகை. நான் புகைப்ப தில்லை; குடிப்பதில்லை; இவையே என் இளமைக்குக் காரணம்'' என்கிறார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்ன?

தனிமனிதரின் வாழ்வியல் நெறியே, உடற்பயிற்சி, உணவுப் பழக்கம், ஒழுங்குமுறை ஆகியவையே இளமைக்குக் காரணம் என்பது தான்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இதே கேள்வி ஒரு பெரியவரை நோக்கிக் கேட்கப்படுகிறது.

பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர் அவர். சோழநாட்டுக்கு முதல் முறை வருகிறார். ஆனாலும் தலைமுறை தலைமுறையாகச் சோழநாட்டு மக்கள் அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவரின் புலமைமீது அவர்களுக்கு நிறைந்த மதிப்பு. தங்கள் நாட்டு அரசனின் பேரன்புக்கு உரியவர் அவர். புலவரைப் பார்த்ததும் அந்த மக்களுக்குப் பெருவியப்பு ஏற்படுகிறது.

''அய்யா, எங்கள் முன்னோர்களே உங்கள் பெருமையை எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நூறு அகவையை எய்தியிருப்பீர்கள் என்று எண்ணுகிறோம். இவ்வளவு வயதாகியும் ஒரு முடி கூட நரைக்கவில்லையே; இளமை கொலுவிருக்க எழிலோடு விளங்குகிறீர்களே இது எப்படி இயன்றது?'' என்று கேட்கின்றார்கள்.

அதற்கு அவர் மூன்று காரணங்களை முன்வைக்கிறார். முதற் காரணம், என் குடும்பம் சிறந்தது என்பது. குடும்பத்தின் ஆணிவேராக வும் அச்சாணியாகவும் இருக்கிற என் மனைவி மாண்புமிகு மனைவி. எங்கள் பிள்ளைகளோ அறிவும் பண்பும் நிரம்பியவர்கள். ஏவலர்களோ குறிப்பறிந்து செயல்படும் ஆற்றல் மிக்கவர்கள். என்வீட்டில் கவலைக்கு எள்ளளவும் இடமில்லை. ஆக என் குடும்பம் நல்லது.

இரண்டாம் காரணம் என்குடும்பத்தைப் போலப்பல குடும்பங் களை உள்ளடக்கிய என் ஊர் சிறப்பு மிக்கது. சான்றோர் பலரைக் கொண்டிருப்பது; எப்படிப்பட்ட சான்றோர்? கல்வி, கேள்விகளால் நிறைந்த சான்றோர்; படிந்து கிடக்கும் நெற்பயிர் போல அறிவு முற்றி ஐம்புலன் அடக்கிய சான்றோர்கள்; 'வாழ்தல் வேண்டிப் பொய்கூறோம்; மெய் கூறுவோம்' எனும் கொள்கைச் சான்றோர். ஆக என் ஊர் நல்லது.

மூன்றாம் காரணம் என் ஊரைப்போலப் பல ஊர்களை உள்ளடக்கிய நாடு சிறந்தது. நாட்டை ஆளும் அரசன் 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பதை என்றும் மறவாதவன். 'அறநெறி தவறாமல் ஆளுபவன் முறை செய்து மக்களைக் காப்பாற்றுவதால் அவன் ஆட்சியில் எள்ளளவு துன்பமும் எவருக்கும் ஏற்பட்டதில்லை. ஆக, என் நாடு நலமாக உள்ளது.

என் நாடு நலமாக இருப்பதால் ஊர் நலமாக இருக்கிறது. ஊர் நலமாக இருப்பதால் குடும்பம் நலமாக இருக்கிறது. குடும்பமும் நலமாக இருப்பதால் நான் நலமாக இருக்கிறேன். தனிமனிதனாகிய என்னுடைய நலமென்பது குடும்பநலன், ஊர்நலன், நாட்டுநலன் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நலத்தைச் சார்ந்திருக்கின்றது. இவையே என் இளமைக்குக் காரணம் என்கிறார்.

அந்தப் பாண்டிநாட்டுப் புலவரின் பெயர் பிசிராந்தையார். அவரின் குரல் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் ஒரு பெரியவரைப் பேட்டி கண்டோம். தனிமனிதப் பழக்க வழக்கங்களே அவரின் இளமைக்குக் காரணம் என்கிறார். பிசிராந்தையாரோ குடும்பம், ஊர், நாடு ஆகியவற்றின் ஒட்டுமொத்த நன்மையே தன் இளமைக்குக் காரணம் என்கிறார்.

தனிமனித ஒழுக்கம் பாராட்டப்பட வேண்டியதுதான். அந்தத் தனிமனிதன் சமூகத்தின் ஒரு துளி. தனிமனிதன் சமூக அமைப்பின்மீது ஏற்படுத்துகிற தாக்கத்தைக் காட்டிலும் சமூக அமைப்பு தனிமனிதன் மீது செலுத்தும் ஆட்சியின் வலு அதிகம். சமூக அமைப்பின் நலத்தில் தனிமனிதனின் நலம் அடங்கியிருக்கிறது என்பதைத்தான் பிசிராந்தையார் உணர்த்துகிறார்.

■

# 5

## "யானை இறங்குகை"

*சங்க இலக்கியம் திணை இலக்கியம்! அகப்பொருள், புறப்பொருள் எனப் பொருளைப் பகுத்துக் குறிஞ்சி, முல்லை, மருதம், வெட்சி, வஞ்சி, உழிஞை முதலிய திணைகளை வகுத்து அந்தத் திணைகளினடிப்படையில் எழுப்பப்பட்ட எழிலார்ந்த மாளிகையே சங்க இலக்கியம்!*

*சங்க இலக்கியம் சமைத்த புலவர்கள் ஏறத்தாழ 470 பேர். அந்தப் புலவர்களில் அதிகமான பாடல்களைப் பாடியவர் கபிலர். 'வாய் மொழிக் கபிலன்', 'விளங்கு புகழ்க் கபிலன்', 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்றெல்லாம் புலவர்களால் போற்றப்பட்டவர் கபிலர். அவர் பாடல்களில் ஒன்று மலைத்தேனாய் இனிக்கும் குறிஞ்சிப்பாட்டு!*

*அதிலிருந்து ஓர் உவமை ஓவியம்*

*மலைசார்ந்த பகுதி!*
*கபிலர் நடந்து செல்கிறார்*
*ஓர் இடம்,*
*ஓங்கி வளர்ந்த மூங்கில் மரங்கள்!*
*அவற்றினருகே ஓர் ஆண் யானை*
*வெள்ளை வெளேரென்ற மருப்புகள் - தந்தங்கள்!*
*நீண்ட துதிக்கை!*
*தின்பதற்காக மூங்கிலை வளைத்துக் கொடுத்த*
*துதிக்கை!*
*களைத்துப் போன துதிக்கை!*
*அந்த துதிக்கையைத் தன் தந்தங்களின் மீது*
*கிடத்தி 'சற்றே இளைப்பாறும் பிள்ளாய்'*
*என்பதைப் போலப் போட்டிருக்கிறது யானை!*

*யானை, அதன் வெண்மையான மருப்பு*
*அதன் மீது வளைந்த நிலையில் படுத்திருக்கும் துதிக்கை!*
*கபிலரின் நெஞ்சில் இந்தக் காட்சி படிந்து விடுகிறது.*

மலையின் வேறொரு பகுதிக்குச் செல்கிறார் கபிலர்.

*அங்கே வயல்கள்! தினைப் புனங்கள்!*
*அவற்றின் வளமான விளைச்சல்!*
*பெரிய பெரிய தினைக் கதிர்கள்.*
*பஞ்சு போன்ற மெல்லிய இழைகள் படிந்திருக்கும் கதிர்கள்!*
*இப்போதுதான் வெளிவந்தவை அல்ல - சற்று முற்றிய கதிர்கள்!*
*தலைசாய்ந்து வளைந்த நிலையில் காட்சியளிக்கின்றன.*
*வயலில் நிற்கும் வளைந்த தினைக்கதிர்!*
*தந்தத்தில் கிடக்கும் வளைந்த துதிக்கை!*
*இரண்டும் அடிபருத்தும் நுனி சிறுத்தும் அமைந்துள்ளன.*
*இரண்டும் வளைந்த வடிவின!*
*தினைக்கதிர்க்கு யானையின் துதிக்கை உவமையாகிறது.*

குறிஞ்சியின் கருப்பொருள்களின் விலங்காக அமைவது யானை. உணவாக அமைவது தினை. குறிஞ்சி பாடுவதில் வல்லவராகிய கபிலர் இரண்டையும் இணைத்துக் காட்டுகிறார். இதோ அவர் குரல்

*''நெல்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை*
*முத்துஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப*
*துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்*
*நற்கோள் சிறுதினை. (கு. 35 - 38)*

■

# 6

## வினையிடை நின்ற சான்றோர்

தலைவி ஒருத்தி

உடல் வளத்தோடு இருந்தவள் இப்போது வாடிப் போய் விட்டாள்.

தலைவி மெலிந்து போவதைக் கண்டு வீட்டார் நலிந்து போய் விட்டனர்

அவளுக்கு உள்ள நோய் யாது? என்பதை அறியும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்

குறிகேட்கின்றனர். வெறியாட்டு எடுக்கின்றனர்

தெய்வங்களைப் பலவாறு வணங்குகின்றனர், பயனில்லை.

வருத்தம் மேலிட்ட நிலையில் செய்வதறியாது திகைக்கின்றனர்.

முன்னர் தினைப்புனங்காவல் செய்யச் சென்றபோது மற்றவர் அறியாமல் களவொழுக்கத்தில் தலைவனோடு கலந்து போனவள் தலைவி.

இப்போது வெளியே அனுப்பப்படாமல் வீட்டிலேயே இருந்தாக வேண்டிய நிலை.

இரவுப் பொழுதில் உயிரைப் பணயம் வைத்து பல இடர்ப்பாடு களைக் கடந்து தலைவன் தலைவியைச் சந்தித்தாக வேண்டிய நிலை.

பலநாள் சந்திக்க இயலாமல் திரும்பிப் போகிற அவலம் தலைவனுக்கு!

இச்சூழலில் பெற்றோர்களிடம் இதை அறிவித்தால் பழி நேருமோ எனத் தலைவி அழுகிறாள்.

தலைவியின் நோய்க்கான காரணம் அறியாது வருந்துகின்ற பெற்றோர் ஒருபுறம்!

களவுக்காதல் கற்பு மணமாக நிறைவேற முடியாமல் போய்விடுமோ எனத் துன்புறுகின்ற தலைவி மறுபுறம்.

இந்த இடத்தில் தான் இணைப்புப் பாலமாகத் தோழி வருகின்றாள்.

இவளோ தலைவியின் வளர்ப்புத் தாயாகிய செவிலியின் மகள்!

தலைவியோடு உடலும் உயிரும்போல ஒன்றிப் பழகி அவள் காதலை நன்கு அறிந்தவள்.

அந்தத் தோழி நினைக்கிறாள்.

தலைவி தலைவன் காதலைப் பெற்றோர்க்கு எடுத்துரைத்து இல்வாழ்வில் இணையச் செய்வதே நல்லறம் என்று.

அந்த அறச்செயலை - அறத்தொடு நிற்றலைத் திறம்பட மேற்கொள்கிறாள்.

இருதரப்பாரின் இடைநின்று அவள் செயல் பட்டாக வேண்டும்.

ஒரு பக்கத்தில் தலைவி! அவளின் பெருமைக்கு ஊறு நேராமல் காதலைப் பெற்றோர்க்குச் சொல்லியாக வேண்டும். சொல்லவில்லையெனில் தலைவிக்கு என்ன ஆகுமோ என்ற அச்சமும் வருத்தமும் அதிகமாகின்றன.

மறுபக்கத்தில் பெற்றோர்.

காதலைக் கேள்விப்பட்டதும் இதுவரை ஏன் மறைத்தீர்கள் என எரிந்து விழலாம். கூடாது காதல் எனக் கொதித்து எழலாம்.

நினைக்கும் போதே நெஞ்சில் நடுக்கம்!

தன்நிலை எவ்வளவு இடர்ப்பாடானது என்பதைத் தோழி சொல்கிறாள்.

இரண்டு பேரரசர்கள்!

அவர்களிடையே பகைமை முற்றிவிட்டது. இருவரும் களிறு, தேர், புரவி காலாட்படையோடு போர்க்களத்திலே எதிரெதிரே அணிவகுத்து நிற்கிறார்கள். அவர்களிடையே அவர்களின் பகைமையைத் தணித்து அமைதிப்படுத்தும் சான்றோர்!

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்னும் அச்சம் மிகுந்த போர்க்களத்தில் நிற்கும் சான்றோர்!

அந்தச் சான்றோரைப் போன்று பெற்றோர்க்கும் தலைவிக்கு மிடையே அச்சத்தோடு நிற்கிறேன் என்கிறாள் தோழி. குறிஞ்சிப்பாட்டுத் தோழிக் கூற்று இதோ.

''இகல் மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலேன்'' (கு.பா. 27 - 29).

■

7.

# "நீர் செத்து அயின்ற தோகை"

புலவர்கள் தாங்கள் கூற விரும்பும் பொருளை வெளிப்படையாகக் கூறாமல் உய்த்துணரும் வகையில் கூறுவதுண்டு. உய்த்து உணர்வதற்கான தடயங்கள் பாடல்களில் அமைந்திருக்கும். அவ்வாறு அமைக்கப்படும் ஒன்றே உள்ளுறை உவமம் ஆகும். வெளிப்படையாகத் தோன்றும் கருத்துகளின் உள்ளே தாங்கள் கூறக் கருதிய வேறு பொருளை அமைத்து இருப்பார்கள். **வெளிப்படக் கூறியிருப்பதை உவமமாகக் கொண்டு உள்ளே அமைந்துள்ள பொருளை உய்த்துணர்வதே உள்ளுறை உவமம் ஆகும்.** அகப்பொருள் பாடல்களுக்கே சிறப்பாக உரியது எனக் கருதப்படும் இதனை ஒல்காப் புகழ்த் தொல்காப்பியர்

''உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்'' (அகத் - 51)

என்று அகத்திணையியலில் பேசுவார்.

குறிஞ்சிப் பாட்டில் ஒரு வருணனை.

தலைவனின் நாடு வர்ணிக்கப்படுகின்றது. இயற்கை வளம் மிகுந்த மலைநாடு அது! மலைப்பகுதியில் ஒரு பாறை. பழுத்த மிளகுகள் உதிர்ந்து கிடக்கும் பாறை! பாறையின் பக்கத்தே ஆழமான நீர்ச் சுனை! சுனையின் கரையில் மாமரம்! பலாமரம்! அவற்றின் முதிர்ந்த கனிகள் சுனைநீரில் உதிர்ந்து கிடக்கின்றன.

இவற்றோடு கிழிந்த தேனடையில் இருந்து தேனும் கலந்து விழுகிறது.

எப்படி இந்தச் சுனைநீர்! நீரா அது?

தேறலாக - மதுவாக அது மாறிவிட்டது.

அந்தச் சுனையில் நீர் குடிக்க மயிலொன்று வருகின்றது.

இயல்பான நீரெனக் கருதித் தேறலைக் குடித்து மயங்கித் தளர்ந்து ஆடுகிறது.

''பழுமிளகு உக்கபாறை நெடுஞ்சுனை
முழுமுதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தென
புள்ளெறி பிரசமொடு ஈண்டி பலவின்
நெகிழ்ந்து உகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத்து அயின்ற தோகை! ''... 187 - 191.

இந்த வருணனையில் பாறை - அதன் பக்கத்தே அமைந்துள்ள சுனை - அதில் மாங்கனியாலும் பலாப்பழத்தாலும் உருவான தேறல் - அத்தேறலை உண்ட மயில் ஆகியன இடம் பெறுகின்றன.

தலைவி தலைவனொடு கொண்ட களவுக் காதலைத் தோழி செவிலித் தாய்க்குப் புலப்படுத்தும் பாட்டு குறிஞ்சிப்பாட்டு. அந்தப் பின்புலத்தில் இந்த வருணனையை உள்ளுறை உவமமாக விளக்குவார் கள் உரையாசிரியர்கள்.

மிளகு உதிர்ந்து கிடக்கும் பாறை மக்கள் வாழும் நிலமாகவும் - நெடிய சுனை தலைவன் பிறந்த சிறந்த குடும்பமாகவும் - மாங்கனி யாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல் தாய் தந்தையால் உருவான தலைவனாகவும் அதனைப் பருகிய மயில் தலைவனைச் சேர்ந்த தலைவியாகவும் உய்த்துணர்ந்து அறியும் வகையில் உவமிக்கப் பட்டுள்ளனர்.

தேறலை உண்ட மயிலைக் காட்டித் தலைவனொடு தலைவி கொண்ட உறவைச் சொல்லாமல் சொல்லி விடுகிறாள் தோழி! ஒப்பீட்டு அடிப்படையில் உணர்ந்து கொள்ளும் நுட்பம் இது.

■

# 8

# பள்ளிப்பிள்ளைகள்

*எதிர்பாராத நிலையில் ஓர் அறிவிப்பு!*

*'இன்றைக்குப் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை'*

*இதைக்கேட்டதும் பிள்ளைகளுக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி!*

*பள்ளிக்கு விடுமுறை என்றதும் கொள்ளை மகிழ்ச்சி!*

*பள்ளிக் கூடத்தைப் பற்றி அவர்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள பதிவு எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொள்கிறோம்.*

*புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 37 ஆண்டுகள் புதுவை மாநிலத்தின் பல பகுதிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர்.*

*அதுவும் தொடக்கப் பள்ளிகளில் - சிறுவர்களை வார்த்தெடுக்கும் சிற்பியாக - பாடியும் படம் வரைந்தும் பாடம் நடத்தும் நல்லாசிரியராக!*

*அவர் காட்டும் ஒரு பள்ளிக் காட்சி!*

*பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பும் குழந்தைகள்!*

*கூட்டம் கூட்டமாகப் பள்ளியிலிருந்து வெளிவருகிறார்கள்-*

*குருவிக் கூட்டம் போல!*

*அவர்கள் முகத்திலே 'அப்பாடா, விடு பெற்றோம்' என்னும் விடுதலை உணர்வு!*

*அடைபட்டுக் கிடந்து வெளிப்படும்போது தோன்றும் அக மகிழ்ச்சி!*

*பாரதிதாசன் பாடுகிறார்!*

*''குழந்தைகள் பள்ளி விட்டு வந்தார்கள்! குருவிக் கூட்டம்*
*இழந்த நல் உரிமை தன்னை எய்தியே மகிழ்வதைப் போல்''*

பல்லாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பாரதிதாசனுக்குப் பள்ளிக்கூடம் உரிமை வாய்ந்த இடமாகத் தோன்றவில்லை. ஆதலால் பள்ளியை விட்டு வீடு திரும்பும் குழந்தைகள் இழந்த உரிமையை மீண்டும் எய்தி மகிழும் குருவிக் கூட்டமாகத் தோன்றுகின்றனர்!

இதே பாடலில் இன்னொரு உவமை.

பள்ளியிலிருந்து எப்போது திரும்புவார்கள் என்று பிள்ளைகளின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறாள் ஒரு தாய்!

வருகிற பிள்ளைகளைக் கண்டதும் எழுந்தோடி இரண்டு கைகளாலும் அவர்களை ஏந்திக் கொள்கிறாள்.

இந்தக் காட்சி எப்படியிருக்கிறது?

ஆற்றில் 'எப்போது தண்ணீர் வரும் எப்போது தண்ணீர் வரும்' என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் உழவன் புதுவெள்ள வருகையைக் கண்டு பூரித்துப் போவான்.

வரும் வெள்ளம் வாழ்க்கைப் பயிர்க்கு வளஞ்சேர்க்கும் என்று வரவேற்று மகிழ்வான்.

அந்த உழவனைப்போல இந்தத்தாய் பிள்ளைகளை வரவேற் கிறாளாம்.

''வழிந்தோடும் புதுவெள்ளத்தை வரவேற்கும் உழவரைப்போல்
எழுந்தோடி மக்கள் தம்மை ஏந்தினாள் இருகையாலும்''

ஒரேபாடலில் இரண்டு உவமைகள். இரண்டும் வெவ்வேறு களங்களில். இவர்தான் பாரதிதாசன்.

■

9

# அவள் வாத்திச்சி

மனைவியிடமிருந்து கணவன் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. அவற்றுள் ஒன்று!

ஒரு வீடு; கணவன், மனைவி; அவர்களுக்குப் பிறந்த அழகிய குழந்தை!

'இளகிய பொன் உருக்கின் சிற்றுடல்! நீலக்கண்கள்!

ஒளிவிடும் பவளச் செவ்வாய், ஒருபிடிக் கரும்பின் கைகால்.

அழகிய தமிழே உயிர் பெற்றதோ என்னுமாறு அமைந்த எழிலோவியம்!

அந்தப் பச்சிளங்குழந்தையைக் கைகளில் தூக்குவது எப்படி என்று கணவனுக்குத் தெரியவில்லை.

'பிள்ளையைத் தூக்கும் வல்லமையை எனக்குச் சொல்லிக்கொடு' என்று மனைவியிடம் கேட்கிறான் அந்த நல்ல கணவன்.

அவள் சொல்கிறாள்; 'தலைவரே, நம் குழந்தையின் உடம்பு 'இறுகாத அமிழ்தின் இளகல் உடம்பு; ஆதலால் 'உறுத்தாமல் தூக்க ஒருதிறம் வேண்டும் நவில்வேன் அதனை நன்றாகக் கேட்க'. அவன் மாணாக்கனாகிறான். அவள் வாத்திச்சி.

தொடங்குகிறாள் பாடத்தை.

குளநீர்த் தாமரை குழந்தையின் இளந்தலை
அம்மலர்த் தண்டே அழகிய மெல்லுடல்

அழகிய உவமைகள் அடுக்குகிறாள். கணவனை நோக்கி

தண்டுமடல் மலர்த்தலை தாங்குமா அத்தான்?

என்று வினவுகிறாள்.

ஆம். மெல்லிய தண்டு, அதன் உச்சியில் கனமான தாமரை மொட்டு, தண்டை மட்டும் கையால் பிடித்துத் தூக்கும்போது மொட்டு முறிந்து போகலாம். குழந்தையின் உடலில் மட்டும் கைபோட்டுத் தூக்கினால் தலை என்னாவது? துணுக்குற்றுத் தெளிவு பெறுகிறான் கணவன்.

தொடர்கிறாள் மனைவி.

குழந்தையின் தலையை ஒரு கை தாங்க உடலை மறுகை தாங்கத் தூக்க வேண்டும். 'தலை உடல் இரண்டையும் ஒருங்கு தாங்கித்தூக்க வேண்டும்' அதற்கும் மேலே ஏனோதானோ என்றில்லாமல் 'மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் தூக்க வேண்டும்' என்கிறாள். எத்தகைய விழிப்புணர்ச்சி?

வறுமைமிக்க ஒரு குடும்பம்! எப்போதாவது சுடுசோறு - அரிசிச்சோறு சாப்பிடும் குடும்பம். இன்று தான் அடுப்பில் பானையேற்றி அரிசி போட்டிருக்கிறாள் அந்தக் குடும்பத் தலைவி! உலை கொதித்துச் சோறாகிவிட்டது. சோற்றுப் பானையை அடுப்பிலிருந்து இறக்கியாக வேண்டும். சிறிது கை தவறினால்.... பானை உடையும். பருக்கைகள் மண்ணாகும். வேறு உணவுக்கு எங்கே போவது?

ஆதலால் அந்த வறியவள் கவனம் சிதையாமல் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு உலை அமிழ்தை இறக்கி வைக்கிறாள். அவளை நினைவுபடுத்தித் தலைவி தலைவனுக்குக் கற்பிக்கிறாள்.

"உலை அமிழ்தை வறியவள் ஒருத்தி தூக்கல் போல்
தவறாது தூக்குவது தலையாகிய கடன்
தெரிந்ததா அத்தான்"

கணவன் மட்டுமா கற்றுக் கொள்கிறான், குழந்தைகளைத் தூக்க - நாமுந்தான் தெரிந்து கொள்கிறோம்.

■

10

# கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்

புரட்சிக்கவிஞர் என்று பாரதிதாசன் பெரிதும் போற்றப்படு வதற்குக் காரணமாய் அமைந்த கவிதை 'புரட்சிக்கவி'. அந்தக் கவிதையில் தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் தனித்துக் குறிப்பிடத்தக்க நிலவு வருணனை!

நிலவு கவிஞர்களின் கற்பனைக்கு நிறைந்த உணவு வழங்கும் அமுதசுரபி! கற்பனை ஊற்றெடுக்கக் கவிஞன் பாடுகிறான்!

*நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே*
*நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தை!*
*கோல முழுதும் காட்டிவிட்டால் காதற்*
*கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்*
*சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!*
*சொக்க வெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ?*
*காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்*
*கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ?*

இவ்வாறு நிலவின் எழிலை நீளப் பாடிக் கொண்டே செல்கிறான் கவிஞன். என்றாலும் அவனுக்கு நிறைவு ஏற்படவில்லை.

*நிலவே, உனைக்காணும் போதினிலே என்னுள்ளத்தே*
*ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு*
*நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடு வதில்லை*

என்கிறான். என்ன கவிஞரே! இவ்வளவு பாடிய பிறகு இப்படிச் 'சொல்கிறீர்' என்று கேட்கத் தோன்றுகிறது.

கவிஞனின் உள்ளத்தே ஊற்றெடுக்கும் இன்பப் பெருக்கிற்கு ஏது உவமை என வியக்கிறோம். ஈது உவமை என்கிறார் பாரதிதாசன்.

*ஒவ்வொரு நாளும் உழைக்கிற மக்கள்!*
*ஒருநாள் உழைப்பில்லை என்றால் உண்ணமுடியாத வறுமை!*
*சேமிப்புக்குச் சிறிதும் இடமில்லாத கொடுமை!*
*உழைத்துழைத்து ஓடாய்ப்போன அந்த நித்தியதரித்திரர்கள் குடிக்கச் சிறிது கூழாவது கிடைக்குமா என்று பானையைத் தேடுகிறார்கள்!*
*அப்போது அவர்கள் கண்ணெதிரே வெள்ளை வெளேரென்று பானை நிறைய அரிசிச்சோறு!*
*எப்படியிருக்கும் அவர்கள் மனநிலை? எய்தும் இன்பத்திற்கு எல்லை ஏது?*
*சிறிதேனும் கூழ்கிடைக்குமா என்று தேடும்போது பானை நிறைய வெண்சோறு!*
*அதைப்பார்த்து வயிறு காய்ந்த மக்கள் அடையும் இன்பம் அழகிய நிலவே! உனைப்பார்த்து நான் அடையும் இன்பம் போன்றதோ என்று பாடுகிறான் பாவலன்.*

*நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்*
*தினைத்துணையும் உணவின்றிப் பசித்த மக்கள்*
*சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆரக்*
*கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்*
*கவின் நிலவே! உனைக்காணும் இன்பந்தானோ!*

*வறியவர்களைக் களமாகக் கொண்டு வளமான உவமை!*
*வானையும் மண்ணையும் இணைக்கும் அழகே அழகு!*

■

11

# கொடுமை கண்டு கொதிக்கும் வானம்

ஒரு நாள்

மேலைத்திசையில் கதிர் மறையும் மாலைப்பொழுது!

சாய்வு நாற்காலியில் சிந்தனை வயப்பட்டவராகப் பாரதிதாசன் அமர்ந்திருந்தார்.

கையில் கவிதை எழுதுவதற்கான ஏடு இருக்கிறது. எழுதுகோல் இருக்கிறது.

எதை எழுதுவது என்பதுதான் சிந்தனை.

இயற்கைப் பொருள்கள் அனைத்தும் திரண்டுவந்து 'என்னை எழுது, என்னை எழுது' என்று கேட்கின்றன.

அவற்றில் முதல் இடம் பெறுவது வானம்.

எழுதுகிறார் பாரதிதாசன்.

வானத்தை மனிதநேயம் மிக்கதாக - மண்மீது நடக்கும் கொடுமையைக் கண்டு மனங்கொதிப்பதாக அவர் படைத்துக்காட்டும் அழகு ஆழ்ந்து சிந்திக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது.

கண் சிமிட்டும் விண்மீன்களைக் களமாகக் கொண்டு பாரதிதாசன் கற்பனை அமைகிறது. காலந்தோறும் கவிஞர்களின் கற்பனைக்கு விருந்து படைப்பவையாக விண்மீன்கள் விளங்குகின்றன.

வானத்து மீன்களை வெள்ளைப் பூனைக்குட்டிகளாகக் காண்பான் அகநானூற்றுப் புலவன். புடைசூழும் தோழியராக, பூக்களின் கூட்டமாக, சிதறிய தயிர்த் துளிகளாக, கோலமிடவைத்த புள்ளிகளாக அன்று முதல் இன்று வரை வானத்து மீன்களைக் கண்டு வருகின்றனர் கவிஞர்கள்.

பாரதிதாசனோ அவற்றைக் கொப்புளங்களாகக் காண்கிறார்.

வானத்துமேனியில் வந்திருக்கும் கொப்புளங்கள்!

இந்தக் கொப்புளக் கற்பனை தமிழிலக்கியத்திற்கு ஒன்றும் புதிதன்று.

சீதையைப் பிரிந்த நிலையில், அவளைத்தேடிச் செல்லும் வழியில் ஒருநாள் நிலவைப் பார்க்கிறான் இராமன். நிலவுக்கதிர்கள் அவனுக்குச் குளிர்ச்சியளிக்கவில்லை. நிலவு ஊழித்தீயாகி நெருப்பைக் கொட்டு வதாய் உணர்கிறான். விண்மீன்களைப் பார்க்கிறான். அவை வெப்பக் கொப்புளங்களாய்த் தெரிகின்றன. நிலவின் நெருப்புக்கதிர்களால் வானத்தில் கொப்புளங்கள் தோன்றியதாகக் கருதுகிறான்.

''...இந்து என்று உதித்த ஊழித்தீ
வெப்புடை விரிகதிர் வெதுப்ப மெய் எலாம்
கொப்புளம் பொடித்ததோ கொதிக்கும் வானமே'' (அயோமுகி 100)

என்று கேட்கிறான் இராமன். இந்தக் கம்ப நாடனின் கற்பனையை அடியொற்றிப் புகழேந்திப் புலவரும் பாடுகிறார்.

நளன்மீது காதல்கொண்டு அவனை அடையப் பெறா நிலையில் கலங்கித் தவிக்கிறாள் தமயந்தி. இரவுப்பொழுதில் வானத்தைப் பார்க் கிறாள். நிலவு கொதிக்கிறது. அதன் வெப்பக்கதிர் பட்டுக் கொப்புளங்கள் தோன்றுகின்றன. உடனே தன் தோழியரை நோக்கி ''நீங்கள் மீன் பொதிந்தவானம் என்று சொல்வது பொய். திங்கள் சுடர்பட்டுக் கொப்புளங் கொண்ட வானம் அது'' என்கிறாள்.

காதலுற்றார்க்குப் பிரிந்திருக்கும் துன்பத்தால் நிலவு நெருப்பாகத் தோன்றுகிறது. அந்த நெருப்பின் தாக்கத்தால் விண்மீன்கள் கொப்புளங் கள் ஆகின்றன. கம்பன், புகழேந்தி கற்பனை இது.

தமிழ்மரபில் ஆழங்கால் பட்ட பாரதிதாசன் கொப்புளக் கற்பனையை முன்னோரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். இவருக்கும் விண்மீன்கள் கொப்புளங்கள்தான். ஆனால் கொப்புளத் தோற்றத்திற் கான காரணந்தான் வேறுபடுகிறது. இரவில் நம் கண்ணுக்குத் தோற்றமளிக்கும் விண்மீன்கள் பகலில் தெரிவதில்லை. பகலில் இல்லாத அவை இரவில் தோன்றுகின்றன என்கிறான் பாவலன். எதனால், அவை தோன்றுகின்றன? விரிந்த வானத்தை, நிறைந்த மனிதநேயமிக்க ஓர்உயிர்ப்பொருளாகக் காண்கிறான். உலகைக் காணவும் சிந்திக்கவும் கொதிப்படையவுமான ஒரு பொருளாக அது அமைந்துவிடுகின்றது.

வானம் மேலிருந்தவாறே நிலவுலகைப் பகற்பொழுதில் பார்த்துக்கொண்டிருக்கிறது. உழைக்கிற மக்கள் ஒரு புறம், உழைப்பின் பலனைப் பெறுகிற செல்வர்கள் ஒருபுறம். உயர்ந்த மாடமாளிகைகளை

எழுப்பும் மனிதர்கள் ஒண்டுவதற்குக் குடிசைகூட இல்லாத கொடுமை! அவர்கள் ஒன்றுபட்டு உரிமைக்குரல் கொடுத்தால் வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சுவது போல நடவடிக்கைகள்! ஒடுக்குமுறைகள்! மண்ணுலகில் நடக்கும் இந்தக் கொடுமையைப் பகற்பொழுதெல்லாம் கண்டுகண்டு வானம் கொதிப்படைகிறது. அதன் விளைவாக வானத்தின் மேனியெல்லாம் அம்மைக் கொப்புளங்கள்! அவையே இரவில் விண்மீன்களாக நமக்குத் தெரிகின்றன.

*மண்மீதில் உழைப்பா ரெல்லாம்*
*வறியராம் உரிமை கேட்டால்*
*புண்மீதில் அம்பு பாய்ச்சும்*
*புலையர் செல்வராம் இதைத்தன்*
*கண்மீதில் பகலில் எல்லாம்*
*கண்டுகண்டு அந்திக்குப்பின்*
*விண்மீனாய்க் கொப்புளித்த*
*விரிவானம் பாராய் தம்பி*

என்று பாடுவார் பாரதிதாசன்.

விண்ணை மண்ணுக்குக் கொண்டுவந்து இரண்டையும் இணைக்கும் கற்பனை இது. மனித நேயமிக்கதாக, மண்ணுலகக் கொடுமை கண்டு கொதிப்பதாக வானத்தைக் காட்டுவதன் பின்னே உள்ள சிந்தனை யாது? மனிதர்களே! இந்தக் கொடுமை பொறுத்துக் கொள்ள முடியாதது. உடனடியாக ஒழிக்கப்படவேண்டியது என்பது தான்.

உடையார் இல்லார் என்னும் ஏற்றத்தாழ்வு இந்த உலகத்தில் இருக்கிறது. உழைப்பவர்கள் தங்கள் உழைப்பின் பயனைப்பெற முடிவதில்லை. காலங்காலமாய்ப் பாடுபடுபவர்கள் வறுமைத்தீயில் வாடுவதற்குக் காரணம் என்ன? சிலர் சொல்கிறார்கள். இதுவிதி, இது முன் வினைப்பயன், இது கடவுளின் ஆணை என்று. 'இது பாரதிதாச னுக்கு உடன்பாடில்லை'.

*நடவு செய்த தோழர் கூலி நாலணாவை ஏற்பதும்*
*உடலுழைப்பிலாத செல்வர் உலகை ஆண்டு உலாவலும்*
*கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்டமீதிலே*
*கடவுளென்ற கட்டறுத்துத் தொழிலுளாரை ஏவுவோம்'*

என்று வழிகாட்டுகிறார். நாட்டில் திருடர்கள் எப்படி உருவாகிறார்கள்? செல்வம் ஓரிடத்தில் சேர்வதன் விளைவால்தான்.

*பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்*
*பொதுவுடைமையோன் திருட்டைக் களைவிக்கின்றான்.*

என்பது பாரதிதாசனின் தெளிவான சிந்தனை. இந்த நிலையை எவ்வாறு மாற்றுவது? இல்லாதவர்கள் ஒன்றுபட்டு எழுச்சிக்குரல் எழுப்புவதன் மூலமே இங்கு 'இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை' என்னும் நல்ல நிலையை எல்லார்க்கும் எல்லாம் என்னும் இனிய நிலையை உருவாக்க முடியும் என்னும் சிறந்த சிந்தனையைப் பல்லாண்டுகளுக்கு முன்னரே நமக்கு வழங்கியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

■

12

# ஏடும் எழுதுவோரும்

பாரதிதாசனைப் புரட்சிக்கவிஞர், கவியரசர், பாவேந்தர் என்று நாம் போற்றுகிறோம். அவர் தன்னிகரற்ற கவிஞர் என்பது உண்மைதான். அதற்கு அப்பால் அவர்க்கு இதழாசிரியர், நாடக ஆசிரியர், திரைத் துறையாளர், கதையாசிரியர், கட்டுரையாசிரியர் முதலிய பல முகங்கள் உண்டு. அவற்றுள் ஒரு முகமாகிய இதழாசிரியர் என்ற நிலையில் இதழ் தொடர்பாக அவர் குறிப்பிடும் சில கருத்துகளை இப்போது காண்போம்: பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு 1935ஆம் ஆண்டு புதுவையிலிருந்து வெளிவந்த இதழ் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' என்பதாகும். இந்த இதழ் விளம்பரங்கள் உட்பட முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்டு வெளிவந்தது. இந்தியாவில் வெளியிடப் பட்ட கவிதை இதழ்களில் இதுவே முதல் இதழாக இருக்கும் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து.

ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தின் மூன்றாவது இதழில் 'பத்திரிகைப் பெண்' என்னும் தலைப்பில் பாரதிதாசன் ஓர் பாடல் எழுதினார்.

> 'ஊரினை நாட்டை இந்த
> உலகினை ஒன்று சேர்க்கப்
> பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த
> பத்திரிகைப் பெண்ணே!'

என்று உலகை ஒன்றிணைக்க - உலக ஒற்றுமையை உருவாக்கப் பிறப்பெடுத்ததுதான் பத்திரிகை என்று பேசுகிறார்.

'ஏடுபெருக்கு' என்பது பாரதிதாசனின் ஆத்திசூடி. நாள், கிழமை, திங்கள்தோறும் தமிழ்த்தாள்கள் மிகுதியாக வெளிவர வேண்டுமென்பது அவர் வேட்கை.

'ஓங்கிடநாம் உயர்முறையில்
நாள்தோறும் கிழமைதொறும்
திங்கள்தோறும்
மாங்காட்டுக் குயிலினம்போல்
பறந்திட வேண்டும் தமிழ்த்தாள்
வண்ணம் பாடி'.

என்பது அவர் பாடல்.

'நறுமலர் இதழ்ப்பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்'

'ஏற்றமுறச் செய்வதுவும்
மாற்றமுற வைப்பதுவும்
ஏடே யாகும்'.

என்று இதழ்களின் இன்றியமையாமையை எடுத்துரைப்பார்.

இந்த இதழ்கள் தோட்டி முதல் தொண்டைமான் வரை அனைவரும் படிக்கும் வகையில் அமைய வேண்டும் என்பது அவரின் ஆராக் காதல்.

'தெருப்பெருக் கிடுவோருக்கும்
செகம் காக்கும் பெரியோர்க்கும் - கை
இருப்பில் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும்'.

என்பது அவர் விருப்பம்.

எழுத்தாளர்கள், ஏடு நடத்துவோர் நடுநிலைமையோடும் நல்லொழுக்கத்தோடும் மொழியறிவோடும் விளங்க வேண்டுமென்பது அவர் எதிர்பார்ப்பு.

அவ்வாறு இல்லை என்பதை வேதனையோடும் வேகத்தோடும் பாடுவார்.

'ஆங்கிலத்தில் புலவரெனில் அரசினரின்
அலுவலிலே அமர்ந்திருப்பார்
பாங்குறு செந்தமிழ்ப் புலமை படைத் தாரேல்
பள்ளியிலே அமர்ந்திருப்பார்
தீங்குற்ற இசைப்புலமை சிறிதிருந்தால்
படத்தொழில் சேர்ந்திருப்பார்
ஈங்கிவற்றில் ஏதுமிலார் தமிழினிலே
ஏடெழுதிப் பிழைக்க வந்தார்.

''நடுநிலைமை இருப்பதில்லை நல்லொழுக்கம்
சிறிதுமில்லை தமிழை மாய்க்கும்
கெடுநினைப்பே மிகவுடையார் கீழ்மையிலே
உடல் வளர்ப்பார் பொருள் படைத்தோன்
அடிநத்த நாணுகிலார் அறமொன்றும்
கூறுகிலார் ஏழையோரின்
மடிபறிக்கும் திறனுடையார்''

என்று நிலைகெட்ட எழுத்தாளர்கள் பற்றி நெஞ்சம் பொறுக்காது பாடுகிறார்.

தமிழ் எழுத்தாளர்கள் தமிழ் இலக்கணத்தை இலக்கியத்தை நன்கு அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

'இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான் ஏடெழுதல் கேடுநல்கும்'
'சின்னபிழை ஏடெழுதும் கணக்காயன் செய்திடினும்
திருநாட்டின் பால்
மன்னிவிடும் ஆதலினால் ஏடெழுதும் வாழ்க்கையிலே
விழிப்பு வேண்டும்.

என்று எழுத்தாளருக்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியைப் புலப்படுத்துகிறார்.

ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தில் இதழாசிரியர் என்ற நிலையில் அந்த இதழில் எழுதுவோர்களுக்கு, எதை எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் என்பது பற்றி அவர் விடுக்கும் வேண்டுகோளைப் பார்ப்போம்:

1. எக்கொள்கை பற்றியும் எழுதுக: எண்ணங்களைக் கவிதையால் அமைத்தல் வேண்டும்.

2. அனைவரும் பாட்டுக்களைப் படித்துச்சுவையறிதல் வேண்டும்; தமிழ்க் கவிஞர்கள் பெருகுதல் வேண்டும். இதனால் தமிழர் வாழ்வு உயர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எளிய நடையில், புதிய வகையில், சுவையோடு கவிதை தந்தார்கள்; இதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்கட்குப் பின் அவ்வகையிற் கவிதை வரைதல் வேண்டும் என முயல்பவர்கள், பலர் உண்டு.

3. பாரதி கவிதா மண்டல் சிறப்புறுதல் வேண்டும் பெருகுதல் வேண்டும். இயற்கையழகு, தமிழ் நாடகம், இவைபற்றிக் கவிதை புனைந்து உதவுக. தேசியம் பாடுக. பெண்கள் முன்னேற்றம் பாடுக. பெண்கள் பெறும் கொடுமையைப் பாடுக. பிற மொழியில் உள்ள பாட்டுகளைத் தமிழ்ப் பாட்டுகளாக்கித் தருக. உங்கள் உள்ளத்தில் ததும்பி

வரும் இனிய தமிழ்க் கவிதைகளைத் தொகுத்துக் காட்டுவதுதான் - தமிழுக்குத் தொண்டு செய்வதுதான் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் மேற்போட்டுக் கொண்ட வேலை.

65 ஆண்டுகளுக்கு முன் இதழில் எழுதுபவர்களுக்குப் பாரதிதாசன் விடுத்த இந்த வேண்டுகோள் இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது.

■

# 13

# உலகை நோக்கிய இலக்கியம்

*அறிவாளி என்பவன் யார்?*

*பொய்யுரைப்போன் பயங்காளி - பிறர்*
*பூமி சுரண்டிடுவோன் பெருச்சாளி*
*வையகமக்கள் எல்லோரும் நலம்*
*வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி*

உலக மக்கள் அனைவரும் நன்றாக, மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்று எண்ணுகிறவன் - அதற்காகப் பாடுபடுகிறவனே அறிவாளி என்பது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கருத்து.

'உலகம் உண்ண உண் உடுத்த உடுப்பாய்' என்று அறிவுறுத்தும் பாரதிதாசனின் உலக நன்மை நோக்கிய சிந்தனைகளை இங்குக் காண்போம்.

இன்று சித்திரை முதல்நாள். புத்தாண்டு என்ற மகிழ்ச்சியோடு பலரும் கொண்டாடும் நாள் இது.

''தமிழர்களே! தமிழர் திருநாள் இது! உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் வேண்டும். ஒன்றுபடவேண்டும்... தமிழ் வாழவேண்டும்; தமிழினம் தன் இயற்கை நிலையை எய்தவேண்டும்'' என்ற வேண்டுகோளொடு ஒரு பொங்கற் புதுநாளில் பாரதிதாசன் முன்வைக்கும் சிந்தனையைப் பார்ப்போம் (குயில் 14.1.1959)

'உலகுக்கோர் ஐந்தொழுக்கம்' என்னுந் தலைப்பில் உலகம் முன்னேறுவதற்கான ஒழுக்க நெறிகள் ஐந்தைக் குறிப்பிடுகிறார்.

1. ஓர் இனம் மற்றோர் இனத்தை மாய்க்காலாது

2. ஒருமொழி மற்றொரு மொழியை மாய்க்கலாகாது.

3. ஒருநாடு மற்றொரு நாட்டைச் சுரண்டும் பான்மையைக் கட்டோடு ஒழித்தல் வேண்டும்.

4. உள்நாட்டின் அமைதியைக் காக்கும் அளவுக்குமேல் பெரும் படையை, விலையேறப்பெற்ற அழிப்புக் கருவிகளை எந்த நாடும் வைத்திருத்தல் கூடாது.

5. அங்கங்குள்ள சான்றோரைக் கொண்ட ஓர் உலகப்பெருமன்றம் மேற்சொன்ன நான்கு திட்டங்களைச் சிதறாமல் மேற்பார்வை பார்த்து வர வேண்டும்.

இவ்வைந்து ஒழுக்க நெறிகளில் நின்றாலன்றி உலகம் முன்னேற முடியாது.

பொங்கற் புதுநாளில் பாரதிதாசன் முன்வைத்த இந்தச் சிந்தனை இந்தப் புத்தாண்டு நாளிலும் பொருந்துவதாக உள்ளது.

உலகம் முழுவதும் ஒரு பொதுவாட்சியின் கீழ் - பொதுமை ஆட்சியின் கீழ் வரவேண்டும் என்பது பாரதிதாசன் பேரவா. அதனை வலியுறுத்தும் வகையில் அவர் இயற்றிய நூல் 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்பது.

*நவில் இனப் பற்றும் நாட்டுப் பற்றும்*
*வையப் பற்றை வளர்க்கும் நோக்கத்தன*
*இல்லை யாயின் இன்று இவ்வுலகில்*
*தொல்லை அணுக்குண்டு தொகுகொலைக் கருவி*
*பொல்லா நச்சுப் புகைச்சல் இவற்றை*
*அகற்றல் எப்படி? அமைதி யாங்ஙனம்?*
*உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று*
*நிலவுதல் கருதி நிகழ்த்திய இந்நூல்.*

என்று நூலின் பாயிரப் பகுதியில் பேசுகிறார்.

உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று நிலவுதல் வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கில் நூலை உருவாக்கினேன்; உலகப்பற்று இருந்தால் தான் அணுக்குண்டு முதலிய கொலைக் கருவிகளை அழிக்க முடியும் என்கிறார் பாரதிதாசன்.

★ அனைவரும் உறவினர் என்று தொடங்கும் ஆத்திசூடி உனக்கும் பிறர்க்கும் உள்ள தொலைவை இல்லாமல் செய், 'சேய்மைமாற்று' விரிந்துயர்ந்த இந்த உலகம் உனது வீடு 'நீணிலம் உன்னிலம் என்று பேசுகிறது. ஆதலால் 'வையம் வாழ வாழ்' என்று அறிவுறுத்தி நிறைவு பெறுகிறது.

★ மதம், சாதி, பிறர் ஆட்சி ஆகிய அடிமைத்தனத்தை நீக்கி நல்வாழ்வை நிலை நிறுத்த வேண்டும். 'தளையினைக் களைந்து

வாழ்'. 'தாழ்வு அடிமைநிலை' ஆதலால் 'கோனாட்சி வீழ்த்து' 'ஆட்சியைப் பொதுமை செய்' என்று நெறிப்படுத்துகிறார்.

★ விடுதலை என்பது எப்படிப்பட்டது? ''விடுதலை உயிர்க்கு உயிர்'' என்கிறார் பாரதிதாசன்.

★ பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்' என்று பாடிய பாரதிதாசன் இந்த ஆத்திசூடியில் ''உடைமைபொதுவே'' என்கிறார். நிலையியல் பொருள், இயங்கியல் பொருள், மக்கள் உழைப்பின் பயன் ஆகிய உடைமை அனைத்தும் உலகமக்கட்குப் பொது என்பது கருத்து.

★ இப்போது சிலர் தமக்கு வேண்டியது போக மிகுதியாய் உள்ள வற்றைப் பிறர்க்குக் கொடுக்கின்றனர். அவர்களை அன்புள்ளம் கொண்டவர்கள் என்று நாம் பாராட்டுகிறோம். பாரதிதாசன் அவர்களை எப்படிப் பார்க்கிறார்? இப்படிக் கொடுப்பவர்கள் முன்னொரு காலத்தில் பிறர்க்குரிய பொருளை வாணிகத்தாலும் வஞ்சத்தாலும் பறித்தவர்களே; ''கொடுத்தோன் பறித்தோன்'' என்கிறார். ''உடையாரின் பெருஞ்செல்வம் இல்லாருடைமை'' என்பது அவர் கருத்து.

★ 'சூழ்நிலைநோக்கு' என அறிவுறுத்தும் பாரதிதாசன் 'காற்றினைத் தூய்மைசெய்' 'தெருவெலாம் மரம் வளர்' பொழுதென இரவுகாண்' பொதுவிடங்களில் மலம் சிறுநீர் கழிக்காதே, மற்றவர்களுக்குத் துன்பந்தரும் என்பதை 'மெய்க்கழிவு அயற்கின்னா' என்று சுற்றுச் சூழல் சிந்தனையை விதைக்கிறார்.

★ 'தூய நீராடு' 'புதுச்சுவையுணவு காண்' 'மோத்தலில் கூர்மைகொள்' 'நெடுவான் உலவு' நேர்பயில் ஆழ்கடல் என்று அறிவுறுத்துவதோடு ஓவியம் பயில், 'சைகையோடு ஆடல்தேர்' 'சொற்பெருக்காற்றல் கொள் தேன்எனப்பாடு' என்று பல கலைகளிலும் பயிற்சி பெறவேண்டும் என்பது அவர் வேண்டுகோள்.

★ 'நால்வகைப்பிறவி பொய்' 'பேயில்லை மதமலால்' எனச் சாதி மத மறுப்புக் குரல் கொடுக்கும் பாரதிதாசன், இறப்பின் பின் எதுவுமில்லை இறப்பே இறுதியானது என்பதை 'வீடெனல் சாதல், 'சாதல் இறுதி' எனத் தெளிவு படுத்துகிறார்.

★ 'துன்பம் இன்பத்தின் வேர்' 'தோல்வி ஊக்கந்தரும்' ஆதலால் துவண்டு போகாதே என்று நம்பிக்கைக் குரல் கொடுக்கிறார்.

★ விதவை மறுமணத்திற்குத் தனது படைப்புகளில் விரிவாக இடமளிக்கும் பாரதிதாசன் 'கைம்மை அகற்று' வாழாட்கு வாழ்வு சேர்' என ஆத்திசூடியிலும் பேசுகிறார். குழந்தை மணம் கூடாது

என்பதைப் 'பூப்பின் மணங்கொள்' பருவமடைந்த பின்னரே திருமணம் செய்தல் வேண்டும் என்கிறார்.

**இறுதியில் சிறு ஒப்பீடு**

தையலாகிய ஔவையார் 'தையல் சொல் கேளேல்' பெண் பேச்சை, மனைவி பேச்சைக் கேட்டு நடக்காதே என்கிறாள்.

பாரதிப்புலவன் 'தையலை உயர்வுசெய்' பெண்ணைப் பெருமைப்படுத்து என்கிறான். பாரதிதாசனோ 'பெண்ணொடு ஆண் நிகர்' என்று பெண்ணுக்கு முதன்மையிடம் தந்து அவளொடு ஆண் சமமானவன்' 'கல்வி, மணம்,சொத்துரிமை ஆகியவற்றில் இருவரும் நிகராவார்' என்கிறார். காலத்திற்கேற்ற வளர்ச்சிக் குரலை இங்கே கேட்க முடிகிறது.

நவில் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் வையப்பற்றை வளர்க்கும் என்பதற்கு - மண்ணில் நன்கு வேரூன்றிய மரங்களே விண்ணை நோக்கிக் கிளைக்கைகளை விரிக்க முடியும் என்பதற்குப் பாரதிதாசனின் உலகு நோக்கிய இந்தச் சிந்தனைகளே சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

சுருக்கமாகச் சொன்னால் பாவேந்தர் பாரதிதாசனின் பன் முகச்சிந்தனைகளைச் சுருங்கிய வடிவில் விளங்க வைக்கும் சிறந்த இலக்கியம் 'பாரதிதாசன் ஆத்திசூடி'.

■

14

# பேசுந்தமிழ்

தமிழ்மொழியில், உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இருவகை வழக்குகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே நிலை பெற்றுவிட்டன.... 'வழக்காறல்ல செய்யுளாறே' (கிளவியாக்கம்) என்றாங்கு இருவகை வழக்குகளையும் பகுத்தறிந்து எவ்வழக்கில் ஒரு குறிப்பிட்ட கூறு இடம் பெற்றிருக்கிறது என்பதைத் தனித்துத்தெளிவாகக் குறிப்பிடும் போக்கைத் தொல்காப்பியத்திற்குள்ளேயே பல இடங்களில் காணலாம். பனம்பாரனாரும் தம் சிறப்புப் பாயிரத்தில் 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' எனக் குறித்திருப்பது இருவகை வழக்குகளும் அன்றே நிலைபெற்றமையைப் புலப்படுத்தும்.

உலகவழக்கு என்பதைப் பேச்சுவழக்கு என எளிமைப்படுத்த லாம். செய்யுள் வழக்கு என்பதை நூல் வழக்கு அல்லது இலக்கிய வழக்கு என்பர்.

உலகவழக்கு, மொழியின் ஒலிநிலையைச் சார்ந்து இயல்வது. செய்யுள் வழக்கு மொழியின் வரிநிலையைப் பெரிதும் சார்ந்தமைவது. ஆதலால் இதனை 'எழுத்து வழக்கு' எனக் குறிப்பிடுவதும் உண்டு. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழ் எழுதப்பெற்றதை எழுத்துக்களின் வடிவம் பற்றித் தொல்காப்பியர் (நூன் மரபு...) குறிப்பிடுவதிலிருந்து தெளியலாம். ஆதலால் 'செய்யுள் வழக்கு' என்பதை 'இலக்கிய இலக்கணம் முதலிய நூல்களில் இடம் பெற்றி ருக்கும் எழுத்து வழக்கு' எனக் கொள்வது பொருந்தும். ஒரு மொழியின் வரிநிலை காலந்தோறும் வேறுபடும் இயல்பினது. ஒலிநிலையோ அத்தகு மாற்றங்களுக்கு அதிக இடம் தராது. தொல்காப்பியர் தமிழ் ஒலிகளின் பிறப்புப்பற்றிக் குறிப்பிடும் கருத்துகள் (பிறப்பியல்) பேரளவு இன்றும் ஏற்புடையனவாக இருப்பது நோக்கத்தக்கது. ஒலிவடிவம்

ஓரளவே வேறுபட்டிருக்க, வரிவடிவம் பேரளவு வேறுபட்டிருப்பதை வரலாறு காட்டுகிறது.

பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலும் பேச்சுவழக்கே தொன்மையானது. எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் கூட அவர்கள் மொழிகளைப் பேசிவருவதும் பள்ளியில் எழுதக் கற்றுக் கொள்ளுமுன்னரே குழந்தைகள், தங்கள் மொழியைப் பேசத் தெரிந்து கொள்வதும் நினைக்கத்தக்கன. ஒரு குழந்தையைப் பேச்சுவழக்கு எனக் கொண்டால் அக்குழந்தையின் படத்தை எழுத்துவழக்கு எனலாம். படத்தில் சில இடங்கள் செம்மை செய்யப்படுவதைப்போல பேச்சு வழக்கைச் செம்மைசெய்ததே எழுத்து வழக்கு எனல் பொருந்தும்.

பேச்சு வழக்கு சுற்றுச் சூழ்நிலைகளின் தாக்கத்தால் எளிதாக இயல்பாகத் தனிப் பயிற்சியின்றிக் குழந்தைகளால் அறிந்து கொள்ள இயல்வது. எழுத்து வழக்கு தனி முயற்சியினாலும் பயிற்சியினாலுமே படிப்படியாக அறிந்து கொள்ள முடிவது.

பேச்சு வழக்கே ஒரு மொழியின் உயிர்வழக்கு. கணவன் மனைவியிடமும் தாய் பிள்ளைகளிடமுமென வீட்டளவிலும் நாட்டளவிலும் அன்றாடம் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக் கொள்ளப் பயன்படுவதே ஒரு மொழியின் உயிர்ப்பண்பு. அப்பண்பை இழந்ததால்தான், இலக்கிய இலக்கண வளம் பெற்றிருந்த போதும் சமசுக்கிருதத்தைச் 'செத்தமொழி' எனக் குறிப்பாராயினர். தமிழர்கள், பேச்சுவழக்கின் உயிர்நிலைத் தன்மையை உணர்ந்தே மொழி (மொழியப்படுவது) கிளவி (கிளத்தப்படுவது) சொல் (சொல்லப் படுவது) எனத் தம் மொழியில் அடிப்படைக் குறியீடுகளை அமைத் துள்ளனர்.

இரு வகை வழக்குகள் இருப்பதும் பேச்சு வழக்கினை 'வழக்கு' என்றே முன்னோர் குறித்துச் செல்வதும் 'வழக்குஞ் செய்யுளும்' எனப் பனம்பாரனார் வழக்கிற்கு முதலிடம் தருவதும் எண்ணத்தக்கன.

ஆங்கிலத்தில் 'Language' என வழங்கப்படும் சொல்லும் 'நாக்கு' எனப் பொருள்படும் 'lingua' என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து உருவானது என்பதும், 'Tongue' எனும் நாக்கைக் குறிக்கும் சொல்லே மொழியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதும் நோக்கத்தக்கன. நாவினால் பேசப்படுவதே - பேச்சு வழக்கில் நிலைபெற்றிருப்பதே ஒரு மொழியின் உயிரோட்டப்பண்பு என்பதை இவை உணர்த்தும். கற்றோர் எனக் கருதப்படுவோர் பேச்சு வழக்கில் இடம் பெற்றுள்ள கொச்சைத் தன்மையைப் பெரிதுபடுத்தி அதன் உயிர்நிலைப் பணியை மறந்துவிடல் கூடாது.

பேச்சு வழக்கு எழுத்து வழக்கையும் எழுத்து வழக்கு பேச்சு வழக்கையும் ஊடுருவுந் தன்மையன. இன்றைய சிறுகதை, புதினம் முதலிய புத்திலக்கியங்களில் பேச்சு வழக்கு ஆட்சியையும் மேடைப் பேச்சு வானொலி ஆகியவற்றில் எழுத்து வழக்கின் ஆட்சியையும் காணலாம்.

இனித் தமிழொடு தொடர்புபடுத்திப் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகியவற்றைப் பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழ் எனக் கொள்வோம்.

தொல்காப்பியர் பண்டைத் தமிழகத்தில் வழங்கிவந்த இருவகைத் தமிழையும் நுணித்தறிந்தே இலக்கணஞ் செய்தார். எழுத்துத் தமிழை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியத்தை அணுகுதல் உண்மையை அறிய உதவாது. தொல்காப்பியர் குறிப்பிடும் மொழிக் கூறுகள் சில சங்க இலக்கியம் முதல் இன்றைய புத்திலக்கியங்கள்வரை எவற்றிலும் இடம் பெறவில்லை. ஆதலால் இவை சங்காலத்திற்கு முன்பே இறந்துவிட்டன என்னும் முடிவுக்கு ஆய்வாளர் வந்துவிடு கின்றனர். ஆனால் இன்றைய பேச்சுத் தமிழில் அக்கூறுகள் இடம் பெற்றுள்ளன. ஆதலால் தொல்காப்பியம் முதலிய நூல்களைச் சரிவர நாம் புரிந்து கொள்வதற்கே பேச்சுத் தமிழ் பற்றிய அறிவு இன்றியமை யாதது என்பதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இன்றைய பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டால் பேச்சுத்தமிழில் இடம்பெற்றுள்ள ஏராளமான சொற்கள் எழுத்துத் தமிழில் இடம்பெறவில்லை. மீன்பிடி தொழில் எனும் ஒரு தொழிலில் ஈடுபட்டவர்களுடைய பேச்சைக் கூர்ந்து நோக்கினால் போதும். வலைகளையும் தோணிகளையும் மீன்களையும் குறிக்கும் நூற்றுக்கணக்கான சொற்கள்! இவை எழுத்துத் தமிழில் ஏறாதவை. இப்படிப் பற்பல தொழில்களில் ஈடுபட்டோர் வழங்கும் ஆயிரக்கணக்கான சொற்களை இன்றைய எழுத்துத் தமிழ் அறியாது, பண்டைய எழுத்துத் தமிழில் இடம் பெறாத சொற்கள் ஏராளமாக இருந்திருக்கக்கூடும். மரம், செடி, கொடி, பறவை வகைகளைக் குறிக்கும் சொற்கள்தாம் எத்தனை! எத்தனை! செய்யுளீட்டச் சொல்லாகத் தொல்காப்பியர் குறிக்கும் திசைச் சொற்களின் விளைநிலம் பேச்சுத் தமிழ் அல்லவா? தமிழின் சொல்வளத்தில் பெரும்பகுதி பேச்சுத் தமிழில் அல்லவா புதையுண்டு கிடக்கிறது.

பண்டைய இலக்கியங்களில் இடம் பெற்று இன்று மறைந்து போனவையாகக் கருதப்படும் பல அரிய சொற்களைப் பேச்சுத் தமிழ் இன்றும் கட்டிக் காத்து வருகின்றது. வாடை (வடகாற்று) தென்றல் (தென்காற்று) ஆகியவற்றை இன்றைய எழுத்துத் தமிழ் அறியும். கோடை

(மேல் காற்று) கொண்டல் (கீழ்க்காற்று) ஆகியவற்றை அறியாது. பண்டைய இலக்கியங்களில் இடம்பெற்ற அவை, மீனவரிடையே இன்றும் வாழ்ந்து வருகின்றன. 'செய்யுட்கு உரியன' என நன்னூலார் குறிக்கும் உரிச்சொற்கள் கூடப் பேச்சுத் தமிழில் நடைபயில்கின்றன.

பிற மொழிச் சொற்களுக்கு அகர முதலியைப் பார்த்தும் வேர்ச் சொற்களைக் கண்டும் தமிழாக்கந் தருகின்றனர் புலவர். ஆனால் படிக்காத நாட்டுப்புறத் தமிழர்களின் பேச்சுத் தமிழில் எளிய இயல்பான தமிழாக்கங்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன. 'Tube light' 'வாழைத்தண்டு விளக்கு' ஆக ஒளிர்வதையும் 'Snow' 'முகவெண்ணெய்' ஆகி மணப்பதையும் பேச்சுத் தமிழ் காட்டும்.

பேச்சுத் தமிழாகிய பேசுந் தமிழில் இலைமறை காய்போல இருந்துவரும் இத்தகு கூறுகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் காணலாம்.

(தமிழியக்கம் 2 பிப்ரவரி - மார்ச்சு 1980)

■

15

# ஏகார வினா

ஒரு துணிக்கடையில் அமர்ந்திருந்தேன். கடை உரிமையாளர் எனக்குப் பழக்கமானவர். இருவரும் உரையாடிக் கொண்டு இருந்தோம். திடுமென ஒருவர் வந்தார். கடையின் முன்பு அழகாகத் தொங்கவிடப் பட்டிருந்த ஒரு பச்சை நிறச் சேலையைக் காட்டி 'என் மனைவி தேர்ந்தெடுத்தது இந்தச் சேலை தானே?'' என்று கேட்டார்.

'ஆமாம், அந்தச் சேலையைத்தான் வந்து வாங்கிக் கொள்வதாகச் சொன்னாங்க' என்கிறார் கடைக்காரர். சற்று முன்பு இரு பெண்டிர் வந்ததும் அவர்களில் ஓர் அம்மையார் அந்தச் சேலையின் விலையைக் கேட்டதும், சிறிது நேரத்தில் வந்து வாங்கிக் கொள்வதாகச் சொன்னதும் எனக்கு நினைவுக்கு வருகின்றது. கடைக்குப் பக்கத்தில் குடியிருப்பார்கள் போலிருக்கிறது. ஓரளவு பணம கொடுத்துத் தவணை முறையில் அந்த வாடிக்கைக்காரர் சேலையை வாங்கிச் செல்கிறார்.

அவர் சென்றபின் என்மனம் வேறெதிலும் செல்லவில்லை. வந்தவுடன் கடைக்காரை நோக்கி ''என் மனைவி தேர்ந்தெடுத்தது இந்தச் சேலைதானே'' என்று கேட்டாரே! அந்தச் சொற்றொடர்தான், அதிலும் குறிப்பாக அச்சொற்றொடரின் இறுதியில் அமைந்த ஏகாரம் தான் என் நினைவில் சுழன்றது. அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கும்போதே படகு போன்ற மகிழுந்து ஒன்றில் வந்த, ஒரு திரைப்பட நடிகர் கடைக்குள் நுழைகிறார். கடைக்காரர் மகிழ்ச்சியோடு அவரை வரவேற்று இருக்கை அளிக்கிறார். வளர்ந்துவரும் அந்த இளம் நடிகர் வந்த செய்தி வேகமாகப் பரவிக் கடையின் முன்னர் ஐம்பது அறுபது பேர் கூடிவிடுகின்றனர். நிலைமையை உணர்ந்த நடிகர் விரைவில் வாணிகத்தை முடித்து விடை பெற்றுக்கொள்கிறார். அவர் புறப்பட்ட வுடன் கூட்டம் சிறிதுசிறிதாகக் கலைகிறது. கூட்டத்திலிருந்த ஒருவர் இன்னொருவரைப் பார்த்து ஒரு படத்தின் பெயரைச் சொல்லி ''அந்தப்

படத்தில் நடித்த நடிகர் இவர் தானே'' என்று வினவுகிறார். 'ஆமாம்' என்பது அதற்கு இன்னொருவர் அளித்த விடை.

''என் மனைவி தேர்ந்தெடுத்தது இந்தச் சேலைதானே''
''அந்தப் படத்தில் நடித்த நடிகர் இவர் தானே''

ஆகிய இரண்டு கூற்றுக்களையும் எண்ணிப்பார்த்தேன். இரண்டும் வினாக்கள். இரண்டிலும் வினாப்பொருளைத் தந்து நிற்பது எது ?

'இந்தச் சேலை த்தானா ?'
'இவர் தானா?'

எனும் கூற்றுகளில் ஆகாரம் வினாப் பொருளைத் தந்து நிற்பதைப் போலவே முன்னிரு கூற்றுகளிலும் ஏகாரம் வினாப் பொருளைத் தந்து நிற்பது எனக்கு வியப்பாகத் தோன்றியது.

ஒரு திருடனைப் பிடித்து ''நீதானே திருடினாய்'' என்று கேட்கும் போது அவன் ''இல்லை'' என்றோ ''ஆமாம்'' என்றோ மறுமொழி தருவான். இங்கும் ''நீதானே'' என்பதில் அமைந்துள்ள ஏகாரம் வினாப் பொருளில் வருகின்றது. இத்தகு வழக்கு இன்றைய தமிழிலும் பரந்து பட்டுள்ளது. ஆயினும் 'தான்' எனும் தற்சுட்டுப் பெயரையொட்டியே ஏகாரம் பெரும்பாலும் வினாப் பொருளில் வருவது எண்ணத்தக்கது.

பரந்துபட்டுள்ள இவ்வழக்கு நம் பார்வையில் படாததால்தான், நாம் 'ஏகார வினா வழக்கழிந்தது' என்று எண்ணியும் சொல்லியும் எழுதியும் வருகிறோம். இலக்கணப் புலவர் த. சரவணத்தமிழனார் ''சில நற்கூறுகளைப் புதுவதாகவும், துணிச்சலாகவும் கையாண்டு இன்றைய தேவையை உணர்ந்து'' எழுதியுள்ள 'தமிழ் நூல்' எனும் புத்திலக்கண நூலில் ''ஆ ஓ இறுதி எ யா முதல்வினா'' (நூற்பா 8) என வினா எழுத்துக் களைக் குறிப்பிடுகிறார். ஏகார வினாவெழுத்து இங்கே கைவிடப்படு கிறது. மொழி முதல் எகர வினாவின் திரிபு (எது ஏது ஃ என் ஏன்) என நன்று மொழிந்த ஆசிரியர் ''ஏ 'ஆ' வினாவிலேயே அடங்கிற்றுப்போலும்'' எனக் கொண்டு ஏகார வினா வழக்கழிந்ததாகக் கருதுகிறார். அவர் கருத்தைத்தான் நம்மில் பலரும் இதுவரை கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழர்தம் நாவில் ஏகார வினா இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஒரு மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்வதற்கும், இலக்கணம் செய்வதற்கும் அம்மொழியின் பேச்சு வழக்கு பற்றிய அறிவு மிகமிக இன்றியமையாதது என்பதைத் தானே இது காட்டுகின்றது. ''வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்'' எனத் தொல்காப்பியன் வழக்கிற்கு முதன்மை தந்ததைத் தானே பனம்பாரனார் சுட்டுகிறார்.

(வளர்கலைமன்ற ஆண்டுமலர் 1981)

■

# 16

## 'உகரச்சுட்டு'

'உந்தப் புலுடா எல்லாம் உவளிலை பலிக்காது' இந்தச் சொற்றொடரின் பொருள் புரிகிறதா? எப்படிப் புரியப் போகிறது?

இலங்கைத் தமிழல்லவா இது!

எழுத்தாளர் செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' என்னும் புதினத்தில் இடம்பெறும் சொற்றொடர் இது. ஒரு கதைமாந்தர் இன்னொரு கதைமாந்தருடன் உரையாடும்போது இவ்வாறு பேசுவதைக் காண்கிறோம்.

'புலுடா' என்பதை நாம் 'கதை விடுதல்' 'பொய் கூறுதல்' எனக் கொள்ளலாம். 'உந்த' 'உவளிலை' என்பனவற்றிற்கு என்ன பொருள்? நாம் கேட்டறியாத சொற்களாக இருக்கின்றனவே என்ற மயக்கம் தோன்றுகிறதா?

'அந்த' 'அவள்', 'இந்த' 'இவள்' ஆகியவை நமக்கு நன்கு தெரிந்தவை. 'அந்த' 'அவள்' சேய்மையைப் சுட்டி நிற்பதையும் 'இந்த' 'இவள்' அண்மையைச் சுட்டி நிற்பதையும் அறிவோம்.

'அ இ உ அம் மூன்றாம் சுட்டு' (நூன்மரபு 31) என்பது தொல்காப்பியம். அ - சேய்மையையும் இ - அண்மையையும் உ - இடைமையையும் சுட்டி வருமென்பது இந்நூற்பாவிற்குரிய விளக்கம். இடைமைச் சுட்டாகிய உகரம்தான் 'உந்த' 'உவளிலை' என்னுஞ் சொற்களின் முதலில் வருவது. 'உவளிலை' என்பது 'உவளிடம்' எனப் பொருள்படும். இப்போது 'உந்தப் புலுடா எல்லாம் உவளிலை பலிக்காது' என்னுஞ் சொற் றொடர் 'உந்தப் பொய்யெல்லாம் உவளிடம் பலிக்காது' எனப் பொருள் தருதலை உணரலாம்.

'அந்தப் பொய்யெல்லாம் அவளிடம் பலிக்காது' என்னுஞ் சொற்றொடர் சேய்மைப் பொருளைச் சுட்டி நிற்பதைப் போல 'உந்தப் பொய்யெல்லாம் உவளிடம் பலிக்காது' என்பது இடைமைப் பொருளைச் சுட்டி நிற்கிறது. தமிழ்நாட்டுத் தமிழர்களின் இருவகை வழக்குகளிலும் இந்த இடைமைச் சுட்டு இக்காலத்தில் பயிலாததன் விளைவு இந்த 'உந்த' 'உவள்' புதுமையாகக் காட்சி தருகின்றன. உவன், உது, உங்கை (உங்கு) போன்ற பிற சுட்டடிச் சொற்களும் இப்புதினத்தில் இடம் பெற்றுள்ளன. வடக்கு கிழக்கு மாநில இலங்கைத் தமிழர்தம் பேச்சு வழக்கில் இடைமைச் சுட்டடிச் சொற்கள் பல பயின்று வருவதை எளிதாக அறியலாம்.

'உகரச் சுட்டு இன்றைய தமிழ் நாட்டுத் தமிழின் இருவகை வழக்குகளிலும் இடம் பெறவில்லை. ஆனால் பண்டைத் தமிழில் உது (நற்றிணை 96) உவன் (பரி 12) உப்பால் (சிலம்பு 1 - 66) எனச் சிறுபான்மை பயின்று வந்துள்ளது. தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் (19 ஆம் நூற்றாண்டு) ஈறாக வந்த இலக்கண நூல்கள் பலவற்றிலும் அகர இகரத்தோடு இணைத்தே உகரச் சுட்டும் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இருபதாம் நூற்றாண்டு மொழி மாற்றங்களையும் கருத்தில் கொண்டு இலக்கணப் புலவர் த.சரவணத்தமிழனால் அண்மையில் (1972) இயற்றப்பெற்றுள்ள 'தமிழ் நூல்' எனும் இலக்கண நூல் ''இடைப்பால் சுட்டும் உகரச் சுட்டு வழக்கழிந்தது'' எனக் குறிப்பிட்டு ''அ இ முதல் சேய்மை அண்மைச் சுட்டு'' எனும் புது நூற்பாவைத் தருகின்றது. ஈண்டு உகரச்சுட்டு இலக்கணத்தினின்று முழுவதுமாக விலக்கப் படுவதைக் காண்கிறோம்.

மொழிக்கூறு தமிழ்நாட்டுத் தமிழில் இடம் பெறவில்லையென்ற வுடனேயே அது இறந்துபட்டது எனும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இங்கு வழக்கழிந்ததாகக் கருதப்படும் உகரச்சுட்டு இலங்கையில் வாழ்ந்து வருகின்றது. ஆதலால் இன்று தமிழுக்கு இலக்கணங்காண முற்படும்போது இலங்கைத் தமிழையும் கருத்தில் கொள்ள வேண்டியது இன்றயமையாதது. 'இல்' விகுதி ஒப்புமைப் பொருளில் வழங்கி வருதல், 'வல்லின 'ற' கரம் அடைப்பொலியாகவே ஒலிக்கப்பெறுதல் போன்ற பல சிறப்பியல்புகளை இலங்கைத் தமிழ் இன்றும் பெற்றிருக் கின்றது. இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தொன்று தொட்டுத் தமிழ் வழங்கும் பகுதிகளாகவே அமைந்திருப்பதும் தமிழின் தொன்மைக் கூறுகள் சில அங்கு நிலவுவதற்கான வாய்ப்பை உறுதி செய்கின்றது.

இந்திய மொழிகளில் தமிழ்மொழி ஒன்றே இந்தியத்துணைக் கண்டத்திற்குப் புறத்தேயுள்ள அயல் நாடுகளிலும் ஆட்சி மொழியாகவும்

(சிங்கப்பூர்) தேசிய மொழியாகவும் (இலங்கை, மலேசிய) வழங்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது. பிறந்த இடத்து மறைந்துபோன சில பண்புகள் புகுந்தவிடத்து நிலைபெறுதலும் உண்டு. ஆதலால் சிங்கப்பூர், மலேசியா முதலிய வெளிநாட்டுப் பகுதிகளின் தமிழ் வழக்கும் தமிழ் மொழிக்குப் புத்திலக்கணம் செய்யும்போது நினைவில் கொள்ள வேண்டியது எனலாம்.

*(தமிழியக்கம் 7 சனவரி 1981 )*

■

# 17

# மூடு

'வழக்கும் செய்யுளும்' கண்டு இலக்கணம் வகுத்த தொல் காப்பியர் மரபியலில் (நூற்பா 3) குறிப்பிடும் பெண்பாற் பெயர்களில் ஒன்று 'மூடு' என்பது. அப்பெயர் ஆட்டினத்துக்கே உரியது ; பிற உயிர்கள் அப்பெயர் பெறா என்பதை.

'மூடும் கடமையும் யாடல பெறாஅ'

எனும் நூற்பா (மரபியல் 65) வரையறுத்து மொழியும்.

தொல்காப்பியர் குறிப்பிடும் வரையறைகள் சில 'பழையன கழிதல்' என்றபடி வழக்கொழிந்தன. அவ்வாறு மறைந்து போனவற்றுள் இம் 'மூடு' என்னும் பெண்பாற் பெயரும் ஒன்றாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியர் மரபியலில் 'மூடுங் கடமையும் யாடல பெறா' (தொல் பொருள் 619) என்புழி மூடு, கடமையாட்டின் பெண்பாலைக் குறிக்கும் என்ற விதியும் பிற்காலத்து இலக்கிய ஆட்சியில் காணப்பெறாதது[1] என்றும் ''அப்பர் மோத்தை, மூடு, பாட்டி, சேவல் (குதிரையின் ஆண்) ஆகிய ஐந்து சொற்கள் தொல்காப்பியரால் கூறப்பட்டு சங்க இலக்கியத் திலும் அதன் பின்னும் காணாது அறவே வீழ்ந்து பட்டுள்ளன''[2] என்றும் ஆய்வாளர் குறிப்பிடுவர். ஆக, சங்க இலக்கியத்திலேயே காணப் பெறாத மரபியற் சொற்களுள் 'மூடு' என்பதும் ஒன்று என அறிகிறோம்.

தொல்காப்பியம் சங்க இலக்கியக் காலத்திற்குச் சற்று முந்தியது என்னும் முடிவுக்குவர 'மூடு' முதலிய மரபியல் சொற்கள் சில சங்க இலக்கியத்தில் காணப்படாமையும் ஒரு காரணமாக அமைகிறது.[3]

சங்ககால மக்கள் வழக்கைச் சங்காலச் செய்யுள் வழக்காகிய இலக்கிய மொழியைக்கொண்டே அறிந்தாக வேண்டிய - அறியும் பழக்கத்திற்கு ஆளாகிய நாம் சங்க இலக்கியத்தில் வழங்கப் பெறாத ஒரு சொல்லைச் சங்ககாலத்திலேயே வழக்கொழிந்த சொல்லாகக் கருது

கிறோம். இலக்கியத்தில் பயிலாத பல சொற்கள் மக்கள் நாவில் பயில்வதை இன்றும் காணலாம். சங்க இலக்கியத்து இடம் பெறாத பல சொற்கள் சங்ககால மக்கள் வழக்கில் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆகவே காலத்தால் முற்பட்ட தொல்காப்பியர் குறிப்பிடும் சில வரையறைகள் சங்க இலக்கியத்தில் காணப்படாமையாலேயே அவை அக்காலத்திலேயே வழக்கொழிந்துவிட்டன என்று முடிவு செய்தல் ஏற்புடையதன்று. மேலும் செய்யுள் வழக்குக்கு மட்டுமன்றி உலக வழக்குக்கும் இலக்கணம் செய்தவர் தொல்காப்பியர் என்பது நினைக்கத் தக்கது. உலக வழக்கிலும் தொன்று தொடங்கி இன்றும் வழங்கும் மொழிக் கூறுகள் பல உள்ளன.

'சங்க இலக்கியத்திலும் அதன் பின்னும் காணாத அறவே வீழ்ந்து பட்ட' தாகக் கருதப்படும் பெண்பாற் பெயர்ச் சொல்லாகிய 'மூடு' இன்றும் வீழ்ந்து படாது மக்கள் நாவில் இடம் பெற்றிருக்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை வட்டத்தைச் சார்ந்த பஞ்சப்பட்டிப் பகுதியினர் ஆட்டின் பெண் குட்டியை ' மூட்டுக்குட்டி' (மூடு > மூட்டு) என வழங்குவதை இன்றுங் கேட்கலாம். சங்க இலக்கியந் தொடங்கி இன்று வரை செய்யுள் வழக்கில் இடம் பெறாததாகக் கருதப்படும் ஒரு சொல் தொல்காப்பியர் காலந்தொடங்கி இன்று வரை உலக வழக்கில் நிலவி வருகிறது. தொல்காப்பியக் கல்விக்கு இன்றைய உலக வழக்குப் பற்றிய தெளிவான அறிவும் இன்றியமையாதது என்பதை இஃது உணர்த்துகிறது. தொல்காப்பியர் உலக வழக்குக்கு முதன்மை கொடுத்தே தம் நூலை உருவாக்கினார் என்பார்போல் ''வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்'' என உலக வழக்குக்கு முதன்மை கொடுத்துப் பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் பாடியதிறம் உன்னற்பாலது.

**அடிக்குறிப்புக்கள் :**

1. டாக்டர் ந. சுப்பிரமணியன் சி. கிருஷ்ணமூர்த்தி 'தொல்காப்பியரும் பண்டைத்தமிழ் எழுத்துக்களும்', கல்வெட்டுக் கருத்தரங்கு சென்னை 1966
2. இராசம் இராமமூர்த்தி 'மரபியல் - ஒய் ஆய்வு', வையை வியாழவட்டக் கருத்தரங்க மலர் 2, மதுரைப் பல்கலைக்கழகம் 1975
3. சான்றெண் ஒன்றைக்காண்க.

*(இ.ப.த.ம. 8ஆம் கருத்தரங்கு 1976)*

# 18

## 'தவ'

'தவ' என்னும் உரிச்சொல்லே இக்குறிப்புரையின் கரு. கருவுக்கு உருக்கொடுப்பதன் முன் உரிச்சொல் பற்றித் தெளிவோம்.

தொல்காப்பியர் குறிப்பிடும் உரிச்சொற்களில் 'இலம்பாடு, சீர்த்தி, செழுமை வெம்மை' முதலிய பெயர்ச் சொற்களும் நம்பு, படர், புலம்பு முதலிய வினையடிகளும் உறு, தவ, நனி முதலிய பெயர் - வினையடை களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு வேறுபட்டு நிற்கும் உரிச்சொற் களை 'தாது சொற்கள்' (தெய்வச்சிலையார் உரியியல் 1 உரை ) எனவும், 'வேர்ச்சொற்கள்' (தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு பக் 112, 1973) எனவும் 'பெயரடை வினையடைச் சொற்கள்' (K. Zvelebil, Tamil Culture VIII p45, 1959) எனவும் ஆய்வாளர் வேறுபட்டு விளக்குவர். சில உரிச்சொற்களை மட்டும் கருத்தில் கொண்டு தரப்பட்ட பகுதி விளக்கங்களாகிய இவை நிறைவும் முழுமையுமுடையன அல்ல.

தொல்காப்பியர் தரும் உரிச்சொற்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது பொருள் வெளிப்படையாக விளங்காத சில அருஞ்சொற்களையே (வெளிப்படவாரா உரிச்சொல், உரி). உரிச்சொற் களாக அவர் கருதியுள்ளமை புலப்படுகிறது. சொல்லுக்குப் பொருள் கூறும் பணியே உரியியலில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சொல்லும் அதன் பொருளுமே உரியியலின் உயிர்நிலையாக அமைந்துள்ளன.

உரிச்சொற்கள் பலவும் அருஞ்சொற்களாதல் பற்றியே 'செய்யுட் குரியன உரிச்சொல்' (நன்னூல் உரியியல் 1) என்றும் 'உரிச்சொல் என்பது செய்யுட்கேயுரிய சொல்' (ஞா. தேவநேயன், தமிழ் வரலாறு பக். 131, 1967) என்றும் பிறர் குறித்தனர். சொல்லுக்குப் பொருள் கூறும் பிங்கலம் முதலிய நிகண்டுகள் 'உரிச்சொல்' (உரியியல் 19) என்றே பவணந்தியார் குறித்திருப்பதும் பிங்கல நிகண்டின் சிறப்புப் பாயிரமும் கயாதர

நிகண்டின் பாயிரமும் அந்நூற்களை 'உரிச்சொல்' என்றே குறிப்பிடுவதும் நோக்கத்தக்கன.

இங்ஙனம் அருஞ்சொற்களாக அமையும் உரிச்சொற்களில் ஒன்று 'தவ'. உரிச்சொற்களின் பொருள் கூறத் தொடங்கிய முதல் நூற்பாவிலேயே 'மிகுதிப் பொருளில் வரும் மூன்று சொற்களில் இதுவும் ஒன்றாகச் சுட்டப்படுகிறது. பெயர் வினைச் சொற்களைச் சார்ந்து உரிச்சொற்கள் தோன்றும் (தொல் பெயரியல் 5) என்பதற்கேற்ப 'புரைதவ' (கலி 8) 'தவப் பிரிக்கும்' (அகம் 327) என்றாங்கு இச்சொல் பயின்று வரும். ஒரு பொருளை உணர்த்தும் உரிச்சொற்களில் (தொல் உரியியல் 1) ஒன்றான இது முதனிலை இறுதி நிலையாகப் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த் தாமல் (தொல் உரியியல் 99) 'வேற்றுமைச் சொல்'லாகத் (தொல் எச்சவியல் 60) தொல்காப்பிய இலக்கணப்படி அமைந்துள்ளது.

எட்டுத்தொகை இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ள இச்சொல் பத்துப்பாட்டில் அருகியே வழங்குகிறது. திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங்கதை, ஆகிய நூற்களில் இடம் பெறவில்லை. கால வளர்ச்சியில் செய்யுள் வழக்கில் அருகி மறைந்த இச்சொல் இன்றும் உலக வழக்கில் உயிரோடிருக்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட இலால்குடி வட்டத்தைச் சார்ந்த காட்டூர் - இராமநாதபுரப் பகுதி, அங்கே ஒரு பெண் பனை. அதிலேறி ஒருவன் காய்களை வெட்டுகிறான். ஒரு பிஞ்சுக் குலையும் வெட்டப்பட்டு வீழ்கிறது. அதைக் கண்டு மரத்தடியில் நின்ற இன்னொருவன் 'தவப்பிஞ்சுடா தவப்பிஞ்சுடா' என்று குரல் கொடுக்கிறான். இதைக் கேட்டதும் 'தவப்பிஞ்சா? தவம் செய்து பிறப்பெடுத்ததா? என்ன இது!' என்று எண்ணத்தோன்றும். மரத்தடியில் நின்றவனிடம் 'என்னப்பா தவப்பிஞ்சு?' என்று கேட்டால் 'பாவம், ரொம்பப் பிஞ்சுங்க'' என்பான். மிகப்பிஞ்சாக இருப்பதே 'தவப்பிஞ்சு' எனத் தெளியலாம். அவரை, வெண்டை முதலியவற்றின் மிக்கிளம் பிஞ்சுகளையும் 'தவப்பிஞ்சு' எனக் குறிப்பதைக் கேட்கலாம். இங்கே 'தவ' என்பது மிகுதிப் பொருளில் வரும் உரிச்சொல்லாகும். இவ்வழக்கு இலால்குடி வட்டாரத்தின் பல ஊர்களில் நிலவுகிறது.

இவ்வாறே பழுது (தொல். உரி 28) முழுது (தொல் உரி 30) கம்பலை (தொல். உரி 53) முதலிய வேறு சில உரிச்சொற்களும் உலக வழக்கில் நிலவுகின்றன. இதனால் 'உரிச்சொல் என்பது செய்யுட்கேயுரிய சொல்' என்பது பொய்த்துப் போகிறது. மேலும் பேசுவோர்க்கே வெளிப்படையாகப் பொருள் விளங்காத வளி (காற்று - சூறாவளி) அல் (இரவு - அல்லும் பகலும்) முதலிய பல அரிய சொற்கள் பேச்சில் வழங்குகின்றன. ஆதலால்அருஞ்சொற்கள் என்றதுமே அவை செய்யுட்சொற்கள் என முடிவு கட்ட வேண்டியதில்லை. எனினும் உலக வழக்கினும் செய்யுள் வழக்கிலேயே அருஞ் சொற்கள் பெரும்பான்மை பயின்று வருவதால்

அருஞ்சொற்களாகிய - உரிச் சொற்களைச் செய்யுட்குரியனவாகக் கருதினர் போலும்! உலக வழக்கிலும் உரிச்சொற்கள் பயின்று வருவதைக் காணும்பொழுது பவணந்தியார் போல 'செய்யுட்குரியன உரிச்சொல்' எனத் தொல்காப்பியர் வரையறுக்காததன் நுட்பம் புலனாகின்றது.

*(தமிழ்ப்பொழில் சூன் - சூலை 1976)*

■

19

# ஆடவர்க்கும் பசப்பு

'பசப்பு' என்பதற்கு 'மகளிர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் நிறவேறுபாடு (Sallow Complexion of women due to love Sickness) எனத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon Vol.iV) பொருள் தருகிறது.

'பசப்பு நிறனாகும்' என்பது தொல்காப்பிய நூற்பா (உரி. 11). 'பசப்பு என்னும் சொல் நிறத்தை உணர்த்தும்' (தெய்வச்சிலையார்),'பசப்பு நிறனென்னும் பண்பு உணர்த்தும்' (நச்சினார்க்கினியர்) 'பசப்பு நிற வேறுபாடாகிய பண்பு உணர்த்தும்' (சேனாவரையர்) என உரை கூறும் உரையாசிரியர்கள் அனைவரும் 'மையில் வாண்முகம் பசப்பூரும்மே' என்னும் பாலைக்கலித் தொடரையே(7) இதற்கு எடுத்துக் காட்டாக்குவர். தலைவன் பிரிவால் தலைவியின் குற்றமற்ற ஒளி பொருந்திய முகத்தில் ஏற்படும் நிறவேறுபாடே இத்தொடரில் சுட்டப் படுகிறது.[1]

தலைவன் களவுக்காலத்தும் கற்புக்காலத்தும் பிரிந்திருக்கும் பொழுது, வருத்தமிகுதியால் தலைவியிடம் ஏற்படும் பசப்பைப் பல இலக்கியங்கள் சுட்டுகின்றன. தலைவியின் நுதல்(குறு 87, 195....., ஐங்குறு 107, 161..., அகம் 102, 171....) கண் (ஐங்குறு 34, 37... அகம் 146, 329, குறள் 1239, 1240....) தோள் (குறு 121, ஐங்குறு 28, அகம் 359, குறள் 1265...) மேனி (குறு 143, ஐங்குறு 217, அகம் 333, குறள் 1182...) முதலியவற்றில் பசப்பூர்ந்த நிலையைக் காண்கிறோம். பசப்பு மகளிரிடம் ஏற்படும் நிறவேறுபாடு என்பதைப் புறநானூறும் (96, 156) உறுதி செய்கிறது. திருக்குறளில் 'பசப்புறு பருவரல்' என்னும் ஓர் அதிகாரமே (119) பசப்பைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. அவ்வதிகாரம் முழுவதிலும் தலைவியிடம் ஏற்படும் நிறவேறுபாடே பேசப்படுகிறது. 'பசப்பாவது பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது தலைமகனைக் காணப் பெறாத வழி நிகழ்வது' என்பர் பரிமேலழகர்.

சிலப்பதிகாரத்தும் நில மடந்தையின் திசை முகம் பசந்ததாகவும் (4 - 5) மாதவியின் மேனி பசந்ததாகவும் ( 8 - 68, 13 - 68) வருங் குறிப்புகள் பசப்பை மகளிர்க்குரியதாக்குகின்றன.

இதுவரை நாம் கண்டவற்றிலிருந்து பசப்பு எனப்படுவது மகளிர்க்கு ஏற்படும் நிறவேறுபாடு என்பதும் அது தலைவனை அடையப்பெறாத நிலையில் உண்டாவது என்பதும் புலனாகின்றன.

மகளிர்க்கு ஏற்படுவதாக இலக்கியங்களில் இடம்பெறும் இப்பசப்பு ஆடவர்க்கு ஏற்படும் புதுமைச் செய்தியைப் பெருங்கதை தருகிறது.

ஒரு காட்சி!

சேவற் குயிலொன்று புன்னையந்தாது புறம்படிந்து நிறங்கரந்தது. அதன் பெடைக்குயில் தன் இணைக் குயில் இதுவென அறியமாட்டாது ஆணை அகன்று சென்றது. சேவற்குயிலோ தன் சிறகுகளை அசைத்துத் தன் இனிய குரலால் பெடையை இழுத்து ஐயம் அகற்றிப் புணர்ந்து மகிழ்ந்தது. இக்குயிற் புணர்ச்சி பெருங்கதைத் தலைவன் உதயணனின் உள்ளத்தில் மனைவி வாசவதத்தையின் நினைவை எழுப்பியது. பிரிந்த வாசவதத்தையை எண்ணிப் பேதுற்ற அவன் நிலையை

'மனைப்பெருங் கிழத்தியை நினைத்தன னாகிச்
செம்மை நெடுங்கண் வெம்மை யுறாஅத்
தெண்பனி யுறைத்தரத் திருத்துஞ் சகலத்துப்
பொன்பூத் தன்னை வம்பூம் பசப்பொடு
நாண்மலர்ப் புன்னைத் தாண்முதல் பொருந்திக்
கொடிக்குருக் கத்திக் கோலச் செந்தளிர்
பிடித்த விரலின னாகி...

எனப் படம் பிடித்துக் காட்டுகிறார் கொங்குவேள். இப் பகுதி 'திருமகள் துயிலும் பரந்த மார்பில் பொன் பூத்தாற்போன்ற பொலிவுடைய பசப்பினை உதயணன் பெற்றான்' என்று அறிவிக்கிறது.[2] இதிலிருந்து தலைவியைப் பிரிந்த ஆடவர்க்கும் அப்பிரிவாற்றா நிலையில் பசப்பு ஏற்படும் என்னும் புதுமை புலப்படுகிறது.

பண்டை இலக்கியங்களில் ஆடவர்க்குப் பசப்பு ஏற்படுவதாகக் குறிப்பிடப்படாததாலேயே அதை 'மகளிர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் வேறுபாடு' என உரைத்தனர் போலும். மகளிர் ஆடவர் என விதந்தோதாது ''காதலித்தார்க்குக் காதலிக்கப்படும் பொருளெய்தாக்கால் அவர் நிறம் வேறுபடுதல்'' எனப் பசப்புக்கு விளக்கங்கூறும் மணக்குடவர் திறம் (குறள் 119 ஆம் அதிகார உரை) போற்றற்குரியது.

**சான்றெண் விளக்கம்**

1. இந்நிறவேறுபாடு 'பயப்பு' (குறு 219, 264...) 'பசலை' (அகம் 45, 52...) என்னுஞ் சொற்களாலும் இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது.

2. இப்பெருங்கதைப் பகுதி பசப்பின் நிறம் பொன்னின் நிறத்தை ஒத்தது என்கிறது. கொன்றை மலர் ( ஐங்குறு 500...) பீர்க்கம் பூ (நற்றிணை 197) முதலிய பொன்வண்ணப் பொருள்கள் பசப்புக்கு உவமையாவதும் 'பொன் னிறத்தின் பெயர் பசப்பு' என நாமதீப நிகண்டு (788) நவில்வதும் நோக்கத் தக்கன. தமிழ்ப் பேரகராதியில் பசலை, பயப்பு என்னும் சொற்களுக்குப் 'பொன்னிறம்' எனத் தரப்பட்டுள்ள பொருள் பசப்பு என்னும் சொல்லுக்கு ஏனோ தரப்படவில்லை.

*(கொங்கு பிப்பிரவரி 1976)*

■

# 20

## 'பிறந்தவன்' 'பிறந்தவள்'

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளின் முன் நடந்த நிகழ்ச்சி இது.

அப்போது நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் தமிழாசிரியர்க்கும் ஆங்கில ஆசிரியர்க்கும் ஒரு சிறு சொற்போர்! நண்பகல் இடைவேளையின் போது நடந்தது. தென்னங் கீற்றால் வேயப்பட்டு மூங்கிற் பிளாச்சுகளால் பக்கங்கள் அடைக்கப் பட்ட ஆசிரிய அறையில் இருவரும் பேசிக் கொள்கிறார்கள். நாங்கள் நான்கைந்து மாணவர்கள் அறையின் வெளியே நின்று மூங்கிற் பிளாச்சுகளின் இடைவெளி வழியே அவர்களைப் பார்த்தவாறே கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆங்கில ஆசிரியர் ''எங்கள் ஆங்கிலத்தில் உள்ள சொல்வளத்தை வேறு எந்த மொழியிலும் காண இயலாது'' என்கிறார்.

''என்னய்யா உங்கள் ஆங்கிலம்? நீங்கள் தமிழர் தானே?'' என்கிறார் தமிழாசிரியர்.

''மன்னிக்க வேண்டும்! பல ஆண்டுகள் ஆங்கிலப் பாடம் நடத்தி நடத்தி அப்படி ஓர் உணர்வு ஏற்பட்டுவிட்டது''

''அது சரி, ஆங்கிலத்தைப் போல வேறெந்த மொழியிலும் சொல்வளம் இல்லையென்கிறீரே, உமக்கு எத்தனை மொழிகள் தெரியும்?''

''ஏதோ எனக்குத் தெரிந்த தமிழ், இந்தியை வைத்து சொல் கிறேன்''.

ஆங்கில ஆசிரியர்க்கு இந்தியும் தெரியும் என்பதை வெளியே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நாங்கள் தெரிந்து கொள்

கிறோம். 'தமிழ் சொல்வளம் குறைந்தது' எனும் ஆங்கில ஆசிரியர் கருத்தைத் தமிழாசிரியரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''என்னய்யா, தமிழில் உமக்கு என்னய்யா தெரியும்?''

''வேகப்படாதீங்க, சொல்றதை அமைதியாய் கேளுங்க''

''அமைதியென்னய்யா அமைதி? உங்கள் ஆங்கிலந்தான் சொல் வளமில்லாத மொழி''

''உங்கள் கூற்றை ஒரு சான்று காட்டி விளக்க முடியுமா ?'' ஆங்கில ஆசிரியர் கேட்கிறார். தமிழாசிரியர் சிறிது நேரச் சிந்தனைக்குப் பிறகு தம் நாற்காலியை மேசைக்கு மிக அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு கருவியொடு களத்திலே இறங்கும் மறவனைப் போல் பேசத் தொடங்கு கிறார்.

''ஒரு சான்று என்னய்யா? ஒன்பது சான்று காட்டுவேன்'' ''ஒன்பது வேண்டாம் ஒன்றே போதும்.''

''அது சரி, தனக்கு மூத்தவனை 'அண்ணன்' என்றும் இளைய வனைத் 'தம்பி' என்றும் தமிழில் சொல்கிறோம். ஆங்கிலத்தில் எப்படிச் சொல்வது?''

''அண்ணனை 'elder brother' என்றும் தம்பியை 'Younger brother' என்றும் சொல்கிறோம்.

''தமிழில் ஒரே சொல்லில் உறவைக் குறிப்பிடுவதைப் போல ஆங்கிலத்தில் ஒரே சொல்லில் குறிப்பிட முடியுமா? 'elder brother' என்று அடை கொடுத்துத்தானே சொல்ல வேண்டியிருக்கிறது''

ஆங்கில ஆசிரியர்க்குச் சிறிது தளர்ச்சி! குழம்பிய சிந்தனையோடு உட்கார்ந்திருக்கிறார். வெளியே நிற்கும் மாணவர்களாகிய நாங்கள் 'ஆங்கில ஆசிரியர் வகையாக மாட்டிக் கொண்டார்' என்னும் செய்தியை ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து மெய்ப்பாடுகளின் மூலமாகவே பரிமாறிக் கொள்கிறோம். சிறிது நேரங்கழித்து ஆங்கில ஆசிரியர் பேசத் தொடங்குகிறார்.

''நீர் கேட்கிறது சரி, இப்போது தமிழுக்கு வருவோம். ஆங்கிலத்தில் 'brother' "sister' என்னும் சொற்களுக்குத் தமிழில் சரியான சொற்கள் இருக்கின்றனவா?'' தமிழாசிரியர்க்குச் சிறிது தளர்ச்சி! 'என்ன சொல்வது' என அவர் மனம் தேடியலைவதைக் கண்கள் காட்டுகின்றன. ஆங்கில ஆசிரியரே பேச்சைத் தொடங்குகிறார்.

''சகோதரன், சகோதரி ஆகிய சொற்களை நாம் கையாண்டு வருகிறோம். ஆனால் அவை தமிழல்ல'' என்பதோடு அவற்றை விளக்க வும் தொடங்கிவிடுகிறார். ''உதரம் என்றால் வயிறு. அதில் உதிப்பவன்

உதரன், உதிப்பவள் உதரி. சக + உதரன் தான் சகோதரன், சக + உதரி தான் சகோதரி. இவை சமஸ்கிருதம்'' என்கிறார்.

ஆங்கில ஆசிரியர்க்கு இந்தியொடு வேறு மொழியும் தெரியும் போலிருக்கிறது என்னும் வியப்பு எங்கள் முகங்களில் படர்கிறது.

சிந்தனையோடு இருந்த தமிழாசிரியர் திடுமெனப் பேசத் தொடங்குகிறார்.

''புறநானூற்றிலே கூட 'உற்றுழி உதவியும்' என்று தொடங்குகிற பாட்டிலே 'பிறப்பு ஓரன்ன உடன் வயிற்றுள்ளும்' என்று வருகிறது. 'உடன் வயிறு' என்பது போலவே 'உடன் பிறந்தான்' உடன் பிறந்தாள்' என்பன 'brother' 'sister' ஆகியவற்றை குறிக்கத் தமிழில் வழங்கு கின்றனவே'' என்கிறார் தமிழாசிரியர். ஏதோ ஓர் இக்கட்டிலிருந்து விடுபட்டது போன்ற ஒரு நெகிழ்ச்சி அவர் முகத்தில் தென்படுகிறது.

உடனே ஆங்கில ஆசிரியர் 'brother' என ஆங்கிலத்தில் ஒரு சொல்லில் குறிப்பிடுவதை 'உடன் பிறந்தான் என அடை கொடுத்துத் தானே தமிழில் குறிப்பிடுகிறோம். ஆங்கிலத்தைப்போல ஒரு சொல்லில் குறிப்பிடுவதில்லையே'' என்கிறார்.

தமிழாசிரியர்க்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. சிந்தனை வயப்பட்டவராயிருந்த அவர் ''ஆமா நீங்கள் சொல்வதும் சரிதான். ஒவ்வொரு கோணத்திலே பார்த்தால் ஒவ்வொரு மொழியிலும் ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்கிறது'' என்கிறார். அவர் பேசி முடிக்கவும் பிற்பகல் வகுப்புகள் தொடங்க மணியடிக்கவும் சரியாயிருக்கின்றது. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் வகுப்பறை நோக்கி விரைகிறோம்.

இந்த நிகழ்ச்சி நடந்த ஏழெட்டு ஆண்டுகள் கழிந்தபின் ஒரு நாள்! தைப் பொங்கல் கதவைத் தட்டுகிற காலம். ஒரு 'வில் வண்டி'யில் 'பொங்கல் சீர்'ப்பொருட்களை ஏற்றிக் கொண்டு பக்கத்து ஊரிலுள்ள என் தங்கையின் வீட்டுக்குச் செல்கிறேன். சீர்ப் பொருட்களையெல்லாம் வண்டியிலிருந்து இறக்கி வீட்டினுள் வைத்துவிட்டுத் திண்ணையில் கிடந்த கயிற்றுக்கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறேன். சிறிது நேரத்தில் பக்கத்து வீட்டைச் சார்ந்த நடுவயதுப் பெண்ணொருத்தி என் தங்கையைப் பெயர் சொல்லி விளித்தவாறே'' ஒன் மூத்த பொறந்தவன் பொங்கல் சீர் கொண்டு வந்திருக்கிறார் போல் இருக்கு'' என்று கேட் கிறாள். அவள் கூற்றைச் சுற்றியே என் சிந்தனை சுழன்று கொண் டிருக்கிறது. 'மூத்த பொறந்தவன்' என்று அண்ணனையல்லவா குறிப்பிடு கிறாள்! 'Elder Brother' என்று ஆங்கிலத்தில் குறிப்பது போலவே அமைந்திருக்கிறதே' எதையோ கண்டுபிடித்து விட்டது போன்ற உணர்வு! தங்கை வீட்டு விருந்தை உண்டபின் விடைபெற்று ஊர்க்குத் திரும்பு

கிறேன். வீட்டுக்கு வந்து வண்டியிலிருந்து மாடுகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கும்போது ''ஒன் பொறந்தவ நல்லா இருக்கா'' என்று ஒரு குரல். என் உறவுப் பெண்ணொருத்தி கேட்கிறாள். மாடுகளைப் பட்டியில் கட்டிவிட்டு வந்த பிறகும் என் சிந்தனையைக் கட்டிக் கொண்டிருக்கிறது அவள் கூற்று. 'பிறந்தவள்' என்பதைத் தான் அவள் பொறந்தவ' எனக் குறிப்பிடுகிறாள். இது 'sister' என ஆங்கிலத்தில் சொல்வதற்குச் சரியான தமிழ்ச் சொல்லாயிற்றே! அப்புறத்தான் தெரிய வருகிறது 'பிறந்தவன்' என்று அண்ணனையோ தம்பியையோ குறிப்பிடும் வழக்கமும் பேச்சுத் தமிழில் இடம் பெற்றிருப்பது.

என் சிந்தனை ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் செல்கிறது. தமிழாசிரியர்க்கும் ஆங்கில ஆசிரியர்க்கும் நடந்த உரையாடல் நினைவில் படர்கிறது. "Brother' என்பதற்குப் 'பிறந்தவன்' என்றும் "Sister' என்பதற்குப் 'பிறந்தவள்' என்றும் சரியான தமிழ்ச் சொற்கள் வழங்கி வருகின்றனவே, இவற்றைத் தமிழாசிரியர் ஆங்கில ஆசிரியரிடம் சொல்லியிருக்கலாமே, அன்றாடத் தமிழ்ப்பேச்சில் அமைந்து கிடக்கும் இந்தச் சொற்கள் எப்படித் தமிழாசிரியர்க்குத் தெரியாமல் போயின? என்றெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். 'பேச்சுத்தமிழ் கொச்சையானது' என்னும் கருத்தோட்டமே அதனைக் கூர்ந்து நோக்காமல் அவரைத் தடுத்திருக்கும் போலும் என அமைதி கொள்கிறேன்.

இன்றும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் 'பிறந்தவன்' 'பிறந்தவள்' பேச்சுத் தமிழில் ஆட்சி செய்வதைக் கூர்ந்து நோக்குவார் அறிந்து மகிழலாம்.

(வளர்கலை மன்றம், ஆண்டுமலர் 1980)

■

21

# இசையோடு

நெற்றியில் பொட்டு, காதிலே கடுக்கண், கையிலே தொங்கு பை, வெள்ளைப் பற்களை வெளிக்காட்டும் வாய், கரகரத்த குரல்; எளிமை படிந்த தோற்றம்

இவரா பேசப் போகிறார்?

அறுபது அகவையை நெருங்கிக் கொண்டிருப்பவர் போல் தோற்றமளிக்கும் இவர் பேச்சை மாணவர்கள் அமைதியுடன் கேட்பார்களா? ஆரவாரம் செய்வார்களே என்றெல்லாம் நாங்கள் எண்ணினோம்.

அது, 1970 ஆம் ஆண்டின் தொடக்கம்

அவர் மேடையில் பேசுகிறார்; பேசுகிறாரா? பாடுகிறார்! ஆடுகிறார்!

மாணவர்கள் தேனுண்ட வண்டாகின்றனர். கல்லூரிக் கலையரங்கம் அமைதியோடு அவர் குரலை மாந்திக் கொண்டிருக்கின்றது.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையை, அதன் துயரச்சூழல் பளிச்சிடுமாறு விளக்கிக் கொண்டிருக்கிறார்.

''கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி''

இத்தாழிசை இசை வடிவமாக மாரடித்து மகளிர் பாடும் பாடலைப் போலக் கண்ணீர்க் கோலமாகின்றது. இசை நுட்பம் அறியாத எல்லோரும் அதன் உருக்கத்தை உணர்கின்றனர். இரண்டாம் வரிசையில் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த ஆங்கிலப் பேராசிரியர் பாட்டோடு ஒன்றிவிடுகிறார். கண்ணாடி அணிந்திருக்கும் அவரின் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருக்கிறது. இசையின் ஆற்றல் அவையை

ஆள்கிறது. இசையால் அவையை ஆண்ட அவர், பேச்சை முடிக்கிறார். முதல் நாள் சொற்பொழிவு முடிகிறது. பல்லைக்கழக விரிவியல் சொற்பொழிவு அது. இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும். இரண்டாம் நாளும் அவர் பேசப்போகிறார் என்னும் செய்தி நெஞ்சங்களில் மல்லிகை மலர்களைக் கொட்டுகின்றது. 'இவரால் பேசமுடியுமா? என்ற வினா மாறி இவரைப் போலப் பேசமுடியுமா?' எனும் வியப்பு விரிகிறது. இரண்டாம் நாளும் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் இசை நுணுக்கங்களைப் பற்றிய அவரின் சொற்பொழிவு தொடர்கிறது.

காணாத பலவற்றைக் கண்ட களிப்பு எல்லா முகங்களிலும் எழுதப்படுகிறது. அவர் இசைத்துக் காட்டிய வரிகள் மாணவர் நெஞ்சைப் பிடித்து நாவினில் ஏறிக் குளியலறைகளிலும் வகுப்பறைகளிலும் பலநாட்கள் உலா வருகின்றன.

வெம்மையைச் சுமந்து செல்லும் காரைக்குடி அழகப்பா கல்லூரி வட்டாரக் காற்று அவர் இசையால் இனிமையைச் சொரியும் புதுப்பிறப்பெடுக்கிறது.

அவர் தாம்,

''இசையெனப் படுவது இயம்பும் காலை
ஒத்துணர் ஒலியின் நீட்சிய தாகும்''

என இசைக்கு இலக்கணம் கண்டவர்.

அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' நூல்வடிவம் பெற ஏடு, எழுத்துப்படி ஆகியவற்றை ஒப்பு நோக்கிப் புதிய படியெடுத்து ஆராய்ந்து அச்சுக்கேற்ற வண்ணம் அழகுறச் செப்பம் செய்து தந்தவர்.

இசைத் தமிழை நாடெங்கும் பரப்ப வேண்டும், அதுவும் இளந்தலைமுறையிடத்து அதனை எடுத்துச் செல்லவேண்டும் என்பதில் அவருக்குத் தணியாத ஆர்வம். தமிழகத்தின் உயர்நிலைப் பள்ளிகள் பலவும் அவர் இசைமழையால் குளிர்ச்சி பெற்றன. கல்லூரி அரங்கங்கள் அவரின் இசைத்தேனால் நிரம்பி வழிந்தன. கோயில் மண்டபங்களில் எல்லாம் இசையோடு தமிழ் முழங்கியது. புலவர்க்கே எட்டாத அரங்கேற்றுகாதை அவர்க்கு மட்டும் நெருக்கமாயிருந்தது. திருவையாற்று அரசர் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இசையாசிரியராக இருந்த அவர் இயற்றமிழ்ப் புலவர்க்கெல்லாம் அரங்கேற்று காதையைக் கற்பித்து வந்தார்.

ஆராய்ச்சிக் கூட்டங்களில் அவர் அளித்துவந்த விளக்கங்களைக் கேட்ட அறிஞர் மு.வ. அந்த விளக்கங்கள் யாவும் எழுத்து வடிவில் நிலைக்க வேண்டும் என்னும் வேட்கை கொண்டு அதனை அவரிடம் தெரிவிக்கின்றனர். அதன் முதற்பயனாக 'முதல் ஐந்திசைப் பண்கள்'

என்னும் நூல் முகிழ்க்கிறது. 'யாழ் நூல்' இயற்றிய விபுலானந்த அடிகளிடம் 'நெருங்கி இசைத்தமிழின் அடிப்படை நுட்பங்கள் பலவற்றினை நேரே கேட்கும் வாய்ப்புப் பெற்ற' வராகிய அவர்,

''முதன் முதலாகத் தமிழ் மக்கள் இசையை உணர்ந்தது குழற்கருவி வாயிலாகவே.

தமிழ்நாட்டில் முல்லை நில மக்களே குழற்கருவியையும் யாழ்க்கருவியையும் முதன் முதலாக ஆக்கினர்.

முதல் ஐந்திசைப் பண்ணின் இசைநிரல் 1.தாரம், 2. குரல், 3. துத்தம், 4. உழை, 5. இளி

முதற்பண்ணாகிய தாரப்பண், ஆசான் எனவும் ஆசான்றிறம் எனவும் காந்தாரம் எனவும் பலபெயர் கொண்டு இக்காலம் மோகனம் என்ற பெயரால் வழக்கில் உள்ளது.

இரண்டாவதாகிய குரற்பண், செந்நிறம், செந்துருதி, செந்துருத்தி, என்று பலபெயர் கொண்டு இக்காலம் மத்யமாவதி என்ற பெயருடன் வழக்கில் உள்ளது.

மூன்றாவதாகிய துத்தப்பண், இந்தளம், வடுகு எனும் பெயர் களைக் கொண்டு இக்காலம் இந்தோளம் எனும் பெயரால் வழக்கில் உள்ளது.

நான்காவதாகிய உழைப்பண், சாதாணி எனப்பட்டு இக்காலம் சுத்தசாவேரி என வழக்கில் உள்ளது.

ஐந்தாவதாகிய இளிப்பண் தனாசி என்னும் பெயர் கொண்டு இக்காலம் சுத்ததன்யாசி அல்லது உதய ரவிச்சந்திரிகா என இரண்டு பெயருடன் வழக்கில் உள்ளது''

என்பன போன்ற பல செய்திகளை முதல் ஐந்திசைப் பண்களில் குறிப்பிட்டுள்ளார்.

மாணவ மாணவியர் கேட்கும் வினாவிற்கு விடையிறுத்தல் முறையில் ஆசிரியர்கட்கும் பயன்படும் வகையில் அவர் இயற்றிய 'இசைத்தமிழ்ப் பயிற்சி நூல்' தமிழிலக்கிய இலக்கணங்களில் குறிப்பாகத் தொல்காப்பிய, சங்க இலக்கியங்களில் அவருக்கிருந்த புலமையையும் ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டும்.

'இசைப்பு இசையாகும்' என்னும் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாவையும் அதற்குச் சேனாவரையர் தரும் உரையையும் எடுத்துக் காட்டுவதும், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு பகுதிகளைத் தம் முன்மொழிவுக்கு அரணாகக் கொள்வதும் அவரின் நுண்மாண் நுழைபுலத்தை நுவல்வனவாம்.

எளிய மக்களின் பாடல்களில் அமைந்துள்ள பழந்தமிழ் இசைமரபை அவர் விளக்கும்போது, மக்கள் இசையின் சிறப்பு நமக்கு அறிமுகமாகிறது.

காவிரிக்கரையின் திருவையாற்றில், ஆண்டுதோறும் தியாக ராசர்க்கு வழிபாட்டு இசை நிகழச்சி! தெலுங்கு மொழியின் தேரோட்டம்! 'வளமான தமிழிசைக்கு வாழ்வில்லையே!' என்னும் ஏக்கம் அவரை வாட்டுகின்றது. அவ்வாட்டத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம்.

தமிழ்த் திருவையாற்றில் தமிழிசை முழங்க வேண்டாமா? எங்களுக்குள் இப்படி ஒரு வினா எழுகிறது. ஆண்டுதோறும் தமிழிசை விழா நடத்துவதாய் முடிவு செய்கிறோம்.

தியாகராசர் விழாவிற்கு முன்பே சிறிய அளவில் தமிழிசை விழா தொடங்குகிறது. அரசர் கல்லூரிக்கு மேற்புறத்தில் அமைந்த படித்துறை மண்டபத்தில் முதல் விழா. அதில் அவர் தான் சிறப்புரையாற்றுகிறார்.

தமக்குப் பொருளைத்திரட்ட இசையைப் பயன்படுத்திக் கொள்ளாதவர் அவர். தமிழின் வளத்தைக்காட்ட, தமிழுக்குச் சிறப்பைச் சேர்க்க இசையைப் பயன்படுத்தியவர். முதலாண்டு சிறிய அளவில் தொடங்கிய தமிழிசை விழா அடுத்த ஆண்டு தமிழியக்கத் தோழர்களால் விரிவாக்கப் படுகிறது. படித்துறை மண்டபக்களம் அரசர் கல்லூரி அரங்கிற்கு மாறுகிறது.

நாளடைவில் ஐயாற்றுப் பொது மக்களின் தமிழிசை ஆர்வம் பெருகுகிறது. அதன் விளைவாக ஆண்டு தோறும் பெரிய அளவில் பொங்கலையொட்டித் தமிழிசை விழா நடைபெறுகிறது. இவ்வாறு திருவையாற்றில் தமிழிசை முழங்கக் கால்கோளிட்ட பெருமை அவருக்குரியது.

வழிச்செலவுக்குப் பணம் கிடைக்குமா எனும் ஐயப்பாட்டுக் குரிய சூழ்நிலையிலும் தமிழின் பெருமையை உணர்த்தத் தவறாத அந்த எளிய பெரிய உள்ளத்தை இன்று நினைத்தாலும் நெஞ்சு சிலிர்க்கிறது.

செல்லுமிடமெல்லாம் தாம் வழிபடும் தெய்வ உருவையும் மணி முதலிய பொருள்களையும் தம் கைப் பையில் சுமந்து செல்வது அவர் இயல்பு.

திருத்தொண்டர் மாக்கதையைத் தொடர்ந்து பல இடங்களில் விளக்கியவர் அவர். சைவ இலக்கியங்களில் அவர்க்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு.

பழுத்த சைவராகிய அவர் தமிழிசையைப் பரப்புவதற்காகவும் மொழிப்பற்றை வளர்ப்பதற்காகவும் இறைமறுப்பாளர்களாகிய எங்களோடும் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்.

தனித்தமிழ் இயக்கத்தில் அவர்க்கிருந்த ஈடுபாடு அளவிடற் கரியது.

சங்கீதம் ப. சந்தரேசன் எனும் அவரின் பெயர் ஏழிசைத் தலைமகனாக, பண்ணாராய்ச்சி வித்தகராக மாறுகிறது.

பழந்தமிழ் இசைக்குறியீடுகளெல்லாம் எவ்வாறு வடசொற் களாயின என்பதையெல்லாம் ஆங்காங்கே அவர் விளக்கிச் சொல்லத் தவறுவதில்லை.

மொழித்தலைவர் தேவநேயப்பாவாணர் மீது அவர்க்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

தம் படைப்புகளில் ஆங்காங்கே குறிப்புகளைத் தந்து செல்வது அவர் மரபு.

ஐந்திசைகளில் முதலிசையாகிய தாரம் என்பதுபற்றி விளக்கும் போது,

''இச் சொல்லின் பகுதி - தார்; விகுதி - அம், தார் எனும் சொல் முதன்முதலில் வரும் பொருளைக் குறிக்கும் என்பது பழந்தமிழ் வழக்கு. அதாவது புறப்பொருள் வெண்பாமாலையுள், தமருட் தலையாதல் ''தார்தாங்கி நிற்றல்'' என்ற இடத்தும் குறளில், ''தார்தாங்கிச் செல்லும் தானை தலைவந்த போர் தாங்கும் தன்மை யறிந்து'' என்ற இடத்தும் தார் என்பது முதலில் வரும் தூசிப்படையைக் குறிப்பதைக் காணலாம்'', எனவும் மூன்றாம் இசையாகிய துத்தம் பற்றி.

''இவ்விசை சூழலில் நின்ற ஐந்து துளைகளில் நடுநின்ற துளை வழி எழுவதால், முன் இரண்டு துளையும் பின் இரண்டு துளையும் இருக்க நடுநின்ற இத்துளை ஆற்றிடைக் குறைபோன்று அமையப் பெற்றதால், இதற்குத் துத்தம் எனவே பெயரமைக்கப்பெற்றது. துத்தம், துந்தம், துருத்தி என்பன ஒரு பொருட்கிளவி எனப்படும்'' எனவும் குறிப்பிடும் பகுதிகள் பாவாணரின் சொல்லாய்வுப் பாங்கினை நினைவுறுத்துவன.

தெலுங்கு, வடமொழி, இந்தி, ஆங்கில இசைகளையும் பயின்ற அவர் அப்பயிற்சியைத் தமிழிசையின் மேன்மையை உணர்த்துவதற் காகவே பயன்படுத்திக் கொண்டார். சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், ஞானசம்பந்தம் முதலிய இதழ்களில் தமது ஆராய்ச்சிக் கருத்துகளை வெளியிட்டுவந்த இவர் 'நித்திலம்' என்னும் ஓர் இதழ்க்கு ஆசிரியராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இறுதிக் காலத்தில் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற்புலத்தில் 'இளங்கோவடிகளின் இசைத்திறன்' பற்றி இவர் மேற்கொண்டிருந்த ஆய்வு முற்றுப் பெறாததைப்போலவே, அவர்

வெளியிட விழைந்த 1. ஓரேழ் பாலை. 2. இரண்டாம் ஐந்திசை நிரல், 3. இரண்டாம் ஏழிசை நிரல், 4. பரிபாடல் இசை முறை, 5. பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை, 6. இசைத்தமிழ்ப் பயிற்சி நூல் (6 வரிசைகள்) 7. இசைத்தமிழ் அகரமுதலி 8. வேனிற் காதை - இசைப் பகுதி விளக்கம். 9. சேக்கிழார் கண்ட இசைத்தமிழ் 10. சமயக் குரவர்கள் கைக்கொண்ட இசைத்தமிழ் 11. பெரும் பண்கள் பதினாறு, 12. நூற்று மூன்று பண்கள். 13, தாள நூல் (ஆறு மடலங்கள்) 14. கழக இலக்கியங்களில் உள்ள இசைத்தமிழ்க் குறிப்புகள் 15. இசைத் தமிழ் வரலாறு 16.இசைத் தமிழ் - தமிழிசைப் பாடல்கள் 17. கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட தென்னிந்திய இசை நூல்களின் கருத்துகள் ஆகிய நூல்களும் நமக்குக் கிடைக்காமற் போயின.

மண்ணில் நல்ல வண்ணம் 67 ஆண்டுகள் வாழ்ந்த அவர் 9.6.1981 அன்று மறைந்தார் எனினும் நம் நெஞ்சில் நிறைந்தார்.

(தமிழியக்கம் நவம்பர் 1981)

■

22

# இப்படியும் ஒரு முகம்

ஏறத்தாழப் பதினைந்தாண்டுகளுக்கு முன் கேரளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் திருவனந்தபுரத்தில் திராவிட மொழிகளின் இலக்கணக் கொள்கைபற்றிய கருத்தரங்கொன்று நடந்தது. திராவிட மொழிகள் பற்றிய கருத்தரங்கெனினும் தமிழ், மலையாளம் பற்றிய கருத்துக்களே அதிக அளவில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கருத்தரங்க நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே அமைந்திருந்தன. தென் மாநிலங் களின் மொழித்துறை, மொழியியல் துறை அறிஞர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அப்போதுதான் முனைவர்பட்ட ஆராய்ச்சியைத் தொடங்கியிருந்த நானும் அக்கருத்தரங்கில் கலந்துகொண்டேன். பேராசிரியர்கள் தெ.பொ.மீ.,வி. ஐ.சுப்பிரமணியம், அகத்தியலிங்கம் முதலிய தமிழர்கள் கருத்தரங்க நிகழ்ச்சிகளில் அதிக அளவு பங்கு கொண்டனர். தமிழ்ப் பற்றாளர்களாகிய வேறுசில பேராசிரியர்களும் கலந்துகொண்டனர். தொல்காப்பியம் நன்னூல் ஆகிய தமிழிலக்கணங்களும் 'லீலாதிலகம்' 'கேரள பாணினீயம்' ஆகிய மலையாள இலக்கணங்களும் அதிக அளவில் பேசப்பட்டன.

பெண்பால் விகுதியாகிய இகரம் வடமொழி 'ஸ்திரீ'யின் திரிபா? அன்றா? என்பது பற்றியெல்லாம் காரசாரமாகப் பேசிக் கொண்டனர். நான், கருத்தரங்க நடப்புகள் ஆங்கிலத்தில் அமைந்திருந்ததாலும். ஆய்வுலகின் தொடக்க நிலை மாணவனாக இருந்ததாலும் வாயை மூடிக் கொண்டு காதுகளை நன்கு திறந்து வைத்துக்கொண்டேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வடமொழித் துறையில் பணியாற்றிய ஒருவர் அக் கருத்தரங்கில் ஒரு கட்டுரை படித்தார். கட்டுரை, திராவிட மொழிகளின் இலக்கணங்களில் சொற்பொருளியல்

(Semantics) தொடர்பான செய்திகளைப் பற்றி அமைந்திருந்தது. 'சொற்பொருளியல்' என்பது சொல்லுக்கும் அதனால் குறிக்கப்படும் பொருளுக்குமுள்ள தொடர்பு பற்றியும் காலந்தோறும் பொருள் மாறுபடுவது பற்றியும் பேசும் ஓர் ஆய்வுத்துறை எனலாம். இது தொடர்பான செய்திகள் திராவிட மொழிகளின் இலக்கணங் களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பது பற்றிக் குறிப்பிட்ட கட்டுரையாளர் 'இந்தியாவிலேயே முதன் முதல் சொல்லுக்கும் பொளுக்குமுள்ள தொடர்பு பற்றிக் கேரள பாணினீயம் தான் குறிப்பிடுகிறது' என்றார்.

கேரள பாணினீயம் என்பது இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை வாழ்ந்த ஏ.ஆர். இராசராசவர்மா என்பவரால் இயற்றப்பட்ட ஓர் இலக்கண நூல். மலையாள மொழியின் இலக்கண அமைப்பை விளக்கும் இந்நூலின் முதற்பதிப்பு 1896இல் வெளிவந்தது. மிகவும் விளக்கமான திருந்திய பதிப்பு 1917இல் ஆசிரியராலேயே கொணரப் பட்டது. வடமொழிப் பாணினீயத்தைத் தழுவிப் பெயர் பெற்ற இந்நூலையே கட்டுரையாளர் குறிப்பிட்டார்.

இச்செய்தியைக் கேட்டதும் எனக்கு வியப்பேற்பட்டது. 'தொல்காப்பியச் சொல்லதிகார உரியியல், சொல்லுக்கும் பொருளுக்கு முள்ள தொடர்புபற்றித்தானே பேசுகிறது. கிறித்து பிறப்பதற்கு முந்திய தொல்காப்பியம் இதுபற்றிப் பேசுகிறதே, அப்படி இருக்க அண்மையில் இயற்றப்பட்ட கேரள பாணினீயம் தான் சொற்பொருளியல் பற்றி முதன் முதல் பேசுவதாக இவர் குறிப்பிடுகிறாரே, இது தவறல்லவா? என்று எண்ணினேன். அங்குக் குழுமியிருந்த தமிழ்ப் பேராசிரியர் எவரும் இது பற்றிக் கட்டுரையாளரிடம் கேட்க மாட்டார்களா என்ற தவிப்பும் கேட்கவில்லையே என்ற ஏக்கமும் என்னுள் கிளர்ந்தன. அக்கட்டுரை தொடர்பான வேறு சில செய்திகளைப் பற்றியே கருத்தறிவித்துக் கொண்டிருந்தனர். இறுதியாக ஒருவர் எழுந்தார். முதியவரும் குள்ளமான வருமாகக் காட்சி தந்த அவர் கட்டுரையாளரை நோக்கி 'நீங்கள் தொல் காப்பியத்தைப் பாருங்கள். அதிலுள்ள உரியியல் சொற்பொருளியல் செய்திகளைக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் கிறித்துவின் பிறப்போடு ஒட்டிய காலப்பகுதியைச் சார்ந்தது'' என்று தெளிவாகக் குறிப்பிட்டார். அவர் பேசும்போது அவையினர் அனைவரும் அவருக்குச் செவிசாய்த்த முறை சிறப்பாக இருந்தது. கட்டுரையாளரும் அவர் கருத்தை ஏற்றுக் கொண்டார். என் நெஞ்சம் குளிர்ந்தது. தமிழ்ப் பற்றாளர்களாகிய பேராசிரியர்கள் பலர் வாய் மூடியிருக்கவும் 'தமிழுக்குப் பகைவர்' என்று நாம் கருதிக்கொண்டிருந்த அந்த முதியவர் மலையாளிகளிடையே தமிழ் இலக்கணச் சிறப்பை எடுத்துச் சொன்னாரே என்று வியந்து மகிழந்தேன். மனத்திற்குள்ளேயே பாராட்டினேன்.

## 1974இன் நடுப்பகுதி

இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஆறாவது கருத்தரங்கு புதுச்சேரியில் நடந்து முடிந்தது. கருத்தரங்கு முடிந்த மறுநாள் பாவேந்தர் நினைவு நூலகத்திற்குச் சென்றேன். நூலகராகப் பணியாற்றும் தமக்கையார் வசந்தா தண்டபாணி அவர்கள் - பாவேந்தரின் இரண்டாம் மகளார் - அன்போடு வரவேற்று அங்குள்ள கருத்துக் குறிப்பேடு ஒன்றைக் காட்டினார். அக் குறிப்பேட்டில் நூலகத்திற்கு வருகை தந்த முகாமையாளர்கள் தங்கள் கருத்துகளைக் குறித்திருந்தனர். சற்றுமுன் நூலகத்திற்கு வந்து சென்ற ஒருவர் எழுதியிருந்ததைச் சுட்டிக்காட்டிப் படித்துப்பாருங்கள் என்றார் தமக்கையார். படித்துப் பார்த்தேன். ஒரு பக்க அளவுக்கு நிறையவே எழுதியிருந்தார். வெறுஞ் சொற்குப்பையாய் இல்லாமல் கருத்து மணிகளாய் எழுதியிருந்தார். நெஞ்சந் திறந்து பாவேந்தரின் படைப்பாற்றலை மொழிப்புலமையைப் புகழ்ந்திருந்தார். எனக்கு வியப்பாயிருந்தது. இதை எழுதியவர்தாம் பாவேந்தரின் ''தெள்ளு தமிழில் இசைத்தேனைப் பிழிந்தெடுத்துத் தின்னும் தமிழ் மறவர் யாம்'' எனும் பாவேந்தரின் பாடலைக் கிண்டல் செய்து புதுவையிலேயே பேசியவர் எனக் கேள்விப்பட்டிருந்தேன். இவரைத் தாக்குத் தாக்கென்று தாக்கிப் பாவேந்தர் நிறையவே எழுதியிருக்கிறார். பாவேந்தரின் படுதாக்குதலுக்கு ஆளான இவரா இவ்வாறு எழுதினார் என்னும் வியப்பு ஏற்பட்டது. யார் இவர்? இவர்தாம் திருவனந்தபுரக் கருத்தரங்கில் தொல்காப்பிய உரியியலைச் சுட்டிக் காட்டிய முதியவர்! ஏதோ ஒரு மரபுக்காகப் பாவேந்தரைப் பற்றி அவ்வாறு எழுதியிருப்பாரோ என்று கருதினேன்.

பின்னர்தான் தெரிந்தது, அவர் ஒப்புக்காக எழுதவில்லை; உண்மையாகவே எழுதியுள்ளார் என்பது

அவரின் 'பாட்டிலே புரட்சி' எனும் ஒரு நூலில் 'தெள்ளு தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத் தின்னும் தமிழ் மறவர்' எனும் பாடலடியைப் புகழ்ந்து எழுதிய ஒரு கட்டுரையைக் கண்டேன். பின்னர் 'விடுதலைக்குப் பின் இந்திய இலக்கியம்' எனும் 'சாகித்திய அக்காதெமியின் ஆங்கில நூல் ஒன்று என் பார்வைக்கு வந்தது. அந்நூலில் தமிழ் இலக்கியம் பற்றி அந்த முதியவர் எழுதியிருந்தார். அமைதியாகப் படித்தேன், பாவேந்தரைப் பற்றி அவர் எழுதியிருந்த பகுதி பெரிதும் உண்மையை உணர்த்துவதாக இருந்தது. ஓரிடத்தில் ''காதல், மகளிர் நிலை, தமிழ், தமிழர், இளையோர் நலன், மக்களாட்சி முதலியன பாரதிதாசன் தொடர்ச்சியாக எடுத்தாண்ட கருப்பொருள் களாகும். குமுகாயத்தில் அவை மாந்தனுக்கு உரிய தகுதியான இடத்தைக் கொடுப்பன. இவற்றில் பாரதியின் செல்வாக்கு மிக்கிருந்தது எனக் கொள்ளலாம். ஆனால் பாரதிதாசன் உலகளாவிய பரந்த நோக்கிலும்

எடுத்தாளும் விரிந்த கருப்பொருள்களிலும் நெறிப்படுத்தும் ஆற்றலிலும் பாப்புனையும் திறத்திலும் பாரதியையும் விஞ்சி நிற்கிறார் (His Constant themes are love, place of women, Tamil. Tamilians, children and democracy which gives man his rightful place. The inspiration, here also, may be traced to Bharathi but Bharathidasan goes beyond his master in his depth of force, in the breadth of his vision, in the length of his range and in the height of his poetry p. 314) என்று பாரதியாரினும் பாவேந்தர் சிறந்து நிற்பதைச் சுட்டியிருந்தார். இந்த நூல் 1973இல் வெளியானது. ஆதலால் 1974இல் புதுவை நூலகக் குறிப் பேட்டில் அவர் எழுதியிருந்தது ஒப்புக்காக இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.

யார் அந்த முதியவர்?

அவர்தாம் தமிழ்ப் பகைவர் என்று நாம் ‘வரையறை’ செய்து வைத்திருக்கும் தெ.பொ.மீ.

அண்மையில் மறைந்த அவருக்கு இப்படியும் ஒரு முகம் இருந்தது என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?.

■

23

## நண்பகல் ஞாயிறு

ஒரு பெரியவர், ஒவ்வொரு தமிழனும் நெஞ்சில் நிறுத்த வேண்டியவர், அயல் நாடுகளில் தமிழின் நிலையைப் பற்றி வருத்தத் தோடு நினைவு கூர்ந்தபின் இப்படிச் சொன்னார்:

''இந்திய மொழி என்றால் சமஸ்கிருதம் என்றும் இந்தியக் கலைகள் என்றால் வடகலைகள் என்றும் இந்தியநாடு என்றால் சிந்து கங்கைப் பெருவெளி என்றும் இந்தியப் பேரூர்கள் என்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்றும் நினைக்கும் அளவிற்கு இந்தியாவின் வடபிரிவினது பெருமையையே இதுகாறும் மாறுபட உணர்ந்து ள்ளனர்'' தமிழகத்தில் இருந்தபடியே அவர் இவ்வாறு குறிப்பிட்டாரா? இல்லை தமிழகத்தில் பிறக்காத - இந்தியாவின் எப்பகுதியையும் சாராத அந்தப் பெரியவர் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றையும் கண்டுணர்ந்த பின்னரே இக்கருத்தறிவித்தார். எப்படி இந்த நிலைமை ஏற்பட்டது? எண்ணிப் பார்க்கிறார் அவர். எண்ணச் செய்கிறார் நம்மை.

''இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின்! Discovery of India என்றும், History of Indian Literature என்றும் பலபடப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் பார்மின்! மார்க்ஸ் முல்லர், வின்றர்னிட்ஸ் போன்றவர்கள் முதலாகப் பலரும், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே, தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக்கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக்கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே அடிப்படை

யாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின் இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதும் மக்கள் மனத்தில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது.''

எப்படி இந்தக் கணிப்பு? 1951இல் அவர் பேசிய பேச்சு இது. 1981இல் அக்கூற்றை எண்ணிப் பார்க்கிறோம். அவர் குறிப்பிட்ட அந்த அவலநிலை இடைப்பட்ட முப்பதாண்டுகளில் முழுமையாக மாறிவிட்டதா? இல்லையே. 'உலகச் செய்யுளியல் கலைக்களஞ்சியம்' ஒன்று வெளிவந்துள்ளது. அதில் இந்திய மொழிகளின் செய்யுளியல் பற்றி அறிஞர் கே.ஆர்.சீனிவாச (அய்யங்கா)ர் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் தமிழ்ச் செய்யுளியல் பற்றிப் பேசப்படவேயில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வரும் செய்யுளியல் வளம் இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே இருந்தபோதும் தமிழ்ச் செய்யுளியல் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டுள்ளது. இன்னொரு செய்தியைப் பார்ப்போம். தில்லி இலக்கியக்கழகம் (சாகித்திய அக்காடெமி) 'இந்திய இலக்கியம்' எனும் பெயரில் இருமாத ஆங்கில இதழ் ஒன்றை நடத்துகிறது. ஒவ்வோர் ஆண்டும் இறுதியில் வரும்(நவம்பர் - திசம்பர்) இதழில் அவ்வாண்டில் இந்திய மொழிகள் பலவற்றிலும் வெளிவந்த இலக்கிய முயற்சிகள் பற்றிய மதிப்பீடுகள் இடம் பெறுவது இயல்பு. சென்ற ஆண்டு வெளிவந்த இறுதி இதழில் 1980 ஆம் ஆண்டுத் தமிழ் இலக்கிய வெளியீடுகள் பற்றிய மதிப்பீடு எதுவும் இடம் பெறவில்லை. தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படாத மொழிகளின் இலக்கிய முயற்சிகளையும் வெளிப்படுத்தும் பரந்த மனப்பான்மையுடையோர் தமிழுக்கு வரும்போது மட்டும் 'பறந்த' மனப்பான்மையுடையவர்களாகி விடுகின்றனர்.

''இந்திய நாட்டில் இந்தியக் கலைஞரால் யாக்கப்பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களிலும் தமிழுக்குத் தகுந்த இடமும் புகழும் அளிக்கப்படவில்லை. இந்தியக் குடியரசின் முதல் அமைச்சர் உயர்திரு. நேரு தாமும் தம் நூல்களில் தென்னாட்டிற்குச் சிறிதளவே இடம் ஈந்துள்ளார். ''இந்திய வரலாறு தென்னாட்டில் முதல் உறைவிடம் காணும்'' என்றும் ''தென்னாட்டில் மிகு பழைமை வாய்ந்த பொருள் களும் மக்களும் உண்டு'' என்று மட்டும் கூறி மேலே செல்லுகின்றார்கள் இந்நூலாசிரியர்கள். இம்மொழியின் சிறப்பியல்பை, இம்மக்கள் உலகிற்கு ஈந்த இலக்கியத்தின் தனித்தன்மையை அவர்களுடைய பனுவல்களைப் புரட்டிப் பார்க்கினும் காண்டல் அரிது.'' என்று முப்பதாண்டுகளுக்கு முன்பு 'அவர்' மொழிந்தாரே அந்த நிலைமை இன்றும் இருக்கிறது என்பதைத்தானே நடப்புகள் சொல்கின்றன.

வானொலியைக் கேட்கிறோம். தில்லிச் செய்தியும் மாநிலச் செய்திகளும் செவியில் விழுகின்றன. அவற்றில் தமிழ் ஒலிகள் படாதபாடு படுகின்றன. 'நாடகம்' 'நாட்டகம்'' ஆகிறது. சகரம் (c) ஷகரம் (s) ஆகவும் மொழிமுதல் பகரம் (p) 'b' ஆகவும் மாறுகின்றன. ஆனால் வடமொழிச் சொற்கள் அவற்றிற்குரிய ஒலிப்பு மாறாமல் தமிழ்ச் செய்தியறிக்கையில் பலுக்கப்படுகின்றன. 'அறிவியல்' எனுஞ்சொல் இன்று தொடக்கப்பள்ளியிலிருந்து அறிமுகமாகும் சொல்லாக இருந்த போதும் அதைப் பயன்படுத்தமாட்டார்கள். 'விஞ்ஞானம்' எனும் சொல்லையாவது பயன்படுத்துகிறார்களா? பயன்படுத்துகிறார்கள். எப்படி? விஞ்ஞானம் என்று ஒலிக்காது 'விக்ஞானம்' என்றே உச்சரிக்கின்றனர். 'அகிலபாரத' என்பதை 'அக்கிலபா (B)ரத' என்று உச்சரிப்பதையும் கேட்கிறோம். வடமொழிச் சொற்களை அவற்றிற்குரிய ஒலிப்புத்தவறாமல் தமிழில் செய்திகளை வாசிக்கும்போதும் ஒலிப்பதில் தான் எத்துணை ஈடுபாடு! அந்த ஈடுபாடு தமிழ்ச் சொற்களை ஒலிக்கும்போது சிறிதளவாவது இருப்பதில்லையே! தமிழ்ச் சொற்களை எப்படி வேண்டுமானாலும் உச்சரிக்கலாம், எவன் கேட்கப்போகிறான் என்னும் துணிவு! இந்திய வானொலியார் தொடர்ந்து தமிழைக் கொலை செய்து வரும் திருப்பணியை மேற்கொண்டிருப்பதை முப்பத்திரண்டு ஆண்டுகட்கு முன்பே 'அவர்' கண்டு காட்டினார்.

''நான் தமிழ்நாட்டை விட்டுத் தோக்கியோவை அடைந்து இரண்டு கிழமைகளாயின. பின், நண்பரொருவர் என்னை விருந்துக்கு அழைத்தார். அவ்விருந்தில் எனக்குப் பெருமகிழ்வூட்ட எண்ணி, ஜப்பானிய உணவை வழங்காது,தமிழ் உணவாகிய சோறும் கறியும் வழங்கினார். உண்ணும் பொழுது, அவர் தம் வானொலிப் பெட்டியை அணுகி, அதனை இயக்கினார். உடனே புது டில்லியிலிருந்து தமிழ்ப் பாட்டு கேட்டது. நான், 'இவ்வளவு தொலைவிலும் நாவுக்கும் செவிக்கும் தமிழ் விருந்து கிடைத்ததே' என எண்ணி மகிழ்ந்தேன். ஆயினும், புது டில்லியிலிருந்து வந்த தமிழ்ச் செய்தியும் இசையும், வடமொழி ஒலிப்புடையனவாகவே இருந்தன. தமிழில் இல்லாத ஒலிப்புக்களையும் தோற்றங்களையும் இந்திய வானொலி நிலையத்திலிருந்து இடைவிடாது பரப்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் ஒலிபரப்பு, தமிழ் ஒலிப்புடையதாகவே அமையுமாறு தமிழர் கடைப்பிடியாய் நிற்றல், நம் மொழியின் பாதுகாப்பிற்கு ஓர் அடிப்படையாகும்.''

சப்பான் நாட்டுத் தலைநகரில் இருக்கும் போதும் தமிழ்த் தூய்மை நாடும் 'அவர்' யார்? தமிழை வாணிகப் பொருளாக்கியே பிழைப்பு நடத்தும் தமிழக அரசியல் தலைவர்களில் ஒருவரா? இல்லை. அவர் ஒரு

துறவி. எப்படிப்பட்ட துறவி? தாம் இறப்பதற்குமுன், உடல் நலங்குன்றிய போதும் திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டு ''கண் பஞ்சடைந்து போகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன. ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடு இருக்கிறது'' என்று நெஞ்சில் தமிழேந்திய நீடு தோன்றினிய துறவி.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் தான் அவர்க்கு எவ்வளவு ஈடுபாடு!

''மேல் நாட்டவரிடையே வழக்காற்றிலிருக்கும் களவியல் ஒழுக்கமுறை, பிற்றை ஞான்று பிறந்த மேல்நாட்டு வழக்கம் என்று பெரிதும் போற்றுவர். அன்னார் நம் அகத்துறை இலக்கியங்களை ஆராய்ந்தறிந்தவராயின் அகத்துறை இலக்கியங்களில் எல்லாம் உலகிலேயே ஒப்பற்று விளங்குவது, தமிழில் உள்ள அகத்துறை இலக்கியமே என்று உணர்வது உறுதி'' துறவிக்குள்ள தமிழ்ப்பற்று 'சுட்டியொருவர் பெயர் கொளப் பெறாத' அகத்திணை இலக்கியப் பெருமையைப் பேசச் செய்கிறது.

''உள்ளதை உள்ளவாறே கூறுதல் சங்ககாலத்துத் தமிழர் பண்பின் வேறொரு சிறந்த இயல்பாகும். தமிழ்நாட்டுச் சங்க இலக்கியத்திற்கும், இந்தோ ஐரோப்பிய மொழிகளின் இலக்கியத்திற்கும் உள்ள பெரியதொரு வேற்றுமை யாதெனின், இந்தோ ஐரோப்பிய மொழிகளி லுள்ள இலக்கியங்கள் கற்பனையில் மலிந்து, வாழ்க்கையுடன் ஒட்டிய வரம்பைக் கடந்து செல்லும் இயல்புடையன. நாட்டின் சிறப்பியல்பு களைச் செய்யுளில் விரித்துக் கூறப்புகுந்த தமிழ்ப் புலவர் சந்தேசம் என்னும் முறையில் பறவைகளையும் முகில்களையும் தூதுபோக்கினார் அல்லர். மக்களையே மக்களைக் கொண்டு ஆற்றுப் படுத்தும் அரும்பெரும் முறையையே பயன்படுத்தியுள்ளனர். தமிழ்நாட்டு மலைகளும் ஆறுகளும் தேவகணங்களுடனோ பிறவுலகங்களுடனோ தொடர்புடையவனாகக் கூறப்பட்டிருப்பதைச் சங்க இலக்கியத்திற் காண்பது அரிது. தமிழ்நாட்டு அரசரோ பிறரோ தேவகுல அவதாரங்கள் எனக் கூறியுள்ளதுமில்லை. பழந்தமிழ்ப் புலவர் யாண்டும் மெய்யுணர் வாளர் (Realists) ஆகவே காட்சியளிக்கின்றனர் என்பது தேற்றம்.''

''தமிழ்ப் புலவரோ, தம் புலமைத் திறனைக் காட்டுதற்கு, முதற்பொருளாக மக்களையும் துணைப் பொருளாக இயற்கையையும் எடுத்துக் கொண்டனர். இயற்கையைத் தானும், தமிழ்ப் புலவர் கையாண்ட முறையில், வேறு எம்மொழிப் புலவரும் கையாண்டிலர். தமிழரின் இயற்கை ஈடுபாட்டை பற்றி ஆராயுந்தொறும், எந்நாளும் புதிய கருத்துக்களையும் வியத்தற்குரிய உண்மைகளையும் கண்டு

வருகின்றேன். மொழிபெயர்ப்பு வல்லுநர் தாமும், பின்வரும் அடிகளை வேற்று மொழியில் எவ்வாறு பெயர்த்துரைப்பார்?

''செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப'' (பத்து : முல்லை 93 - 96)

மலராயினும், இலையாயினும், மரம்செடி கொடி எதுவாயினும் தமிழர் தம் வாழ்க்கையில் பயன்படுத்திய முறையை நுணுகி ஆராயுமிடத்து, வேறு எந்த மக்கட் குழுவினரும் இவ்வாறு அமைத்துப் பயன்படுத்தியுள்ளனர் எனத் தோன்றவில்லை.''

இவ்வாறு தமிழ்ப் புலவர்களின் திறத்தை, தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பிறமொழிப் புலவர்களுடனும் இலக்கியங்களுடனும் உறழ்ந்து உயர்வு காட்டும் அவர் தமிழ்மொழி மட்டுமே அறிந்தவரா? அல்லர். ''அவர் பாண்டித்தியம் பெற்ற மொழிகளாவன: ஆங்கிலம், இத்தாலியன், லத்தீன், பிரஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன். ஓரளவு பேசவும் ஆய்வுகளுக்கு உபயோகமாகவும் அறிந்த மொழிகளாவன : ஹீப்ரு, கிரீக், சமஸ்கிருதம், போர்ச்சுக்கீஸ், ருஷ்யன், மலாய், சிங்களம்'' எனப் பிற ஆய்வாளர் குறிப்பிடும் வகையில் பன்மொழி அறிந்த நன்னெறிப் புலவர் அவர். அதனால்தான் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாகப் பன்மொழிக்காவிலும் நுழைந்து தென்மொழிக் காவிலே திளைத்தார்.

''இந்தோனேஷியா மொழியில் வழங்கும் சொற்கள் பல, அம் மக்கள் தமிழ் நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பைக் குறிப்பன. எடுத்துக்காட்டாக, 'கப்பல்' என்பதைக் 'கபல்' என்கின்றனர். அவர் வழங்கும் வேறுசில தமிழ்ச்சொற்கள் 'வாடை' சுக்கு', 'இஞ்சி', 'கஞ்சி', 'கொத்துமல்லி', 'குதிரை', 'கூடை', 'பெட்டி', 'பிட்டு' போன்றவை. 'தாலி' என்ற சொல்லைக் 'கொடி' என்ற பொருளிலும் பயன்படுத்திக் கொள்கின்றனர். 'அம்மா,' 'அக்கா', 'மாமா', 'தம்பி' போன்ற உறவுச் சொற்களும் அங்குப் பேச்சு வழக்கில் உள''

இவ்வாறு உலகின் பல பகுதிகளில் வழங்கும் மொழிகளுடனும் வாழும் மக்களுடனும் தமிழும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும் தொடர்பு கொண்டிருப்பதை உலகம் 'தமிழ்கூறு நல்லுலக' மாகக் காட்சியளிப்பதைக் தம் இறுதிக்காலம் வரை இடையறவின்றி எடுத்துக்காட்டியவர் அவர்.

''தமிழ்'' என்ற சொல்லைத் 'தமின் என்று ழகரத்தின் இடத்தில் 'ன' கர ஒலி கொடுத்துப் பயன்படுத்துகின்றார்கள் தை மக்கள். ஆனால் தை

மொழியில் 'தமின்' என்ற சொல் 'கொடுமையான மகன்' எனப் பொருள்படும். பல்லவர் சோழர் காலத்தில் செல்வாக்குப் படைத்த பல்லவ சோழ மன்னர்களின் அரண்மனை முறைகளையும் சடங்குகளையும் கடைப்பிடித்த தை மக்கள், பிற்காலத்தில் 'தமிழ்' என்னும் சொல்லுக்கு இத்தகைய பொருளைக் கொடுப்பதற்குக் காரணம் யாது? பிற்காலச் சோழரின் படைகள் ஈழம் முதலிய வெளிநாடுகளின் மீது படையெடுத்தது காரணமாக, அந்நாடுகளில் பெருந்துன்பம் நிகழ்ந்தது. அதனால் ஈழத்தில் வாழ்ந்த புத்த பிக்குகள் தங்கள் நாட்டை விட்டு, புத்தமதக் கோட்பாடுகளைப் பேணிவரும் தை நாட்டின் கண் சென்று அடைக்கலம் புகுந்தார்கள். அங்ஙனம் சென்ற பௌத்தர்கள், தென்னாட்டுத் தமிழ் மன்னர்களால் தங்கள் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவினை அறிவித்தார்கள். அதனால் பண்டு உயர்சொல்லாய் வழங்கிய 'தமிழ்' எனும் சொல் இப்பொழுது இழிவுச் சொல்லாய் வழக்கில் திரிந்து வழங்குகின்றது. நான் இப்பொருள் மாற்றத்தை உறுதிப் படுத்தும் பொருட்டு வானூர்தி நிலையத்தில் பணியாற்றும் பாமரன் ஒருவனை அணுகி 'அப்பா, தமின்' என்ற சொல்லுக்குப் பொருள் யாது?'' என்று வினவினேன். அதற்கு அவன் சிறிதும் தயங்காது, ''By Tamin I mean a balck Indain who is cruel and hard,'' என்று விடையிறுத்தான்''

தாய்லாந்து எனப்படும் தை நாட்டுத் 'தமின்', வரலாற்றடிப் படையான புதிய சிந்தனையை அவர்க்கு அளிக்கிறது. அந்த அறிவுப் பொறியின் ஒளியில் நாம் தெளிவு பெறுகிறோம். அவர் கண்ட உலகநாடுகள் ஒன்றா? இரண்டா? பலப்பல. அமெரிக்கா, கனடா, செர்மனி, இத்தாலி, உருசியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், நேப்பிள்சு, இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் முதலிய பல நாடுகளைக் கண்ணாலும் கருத்தாலும் கண்டவர் அவர். அவர் மேற்கொண்ட உலகப் பயணங்கள் ஒன்றா? இரண்டா? 1950 முதல் 1971 முடிய உலகத்தமிழ்த் தூதராக மட்டும் அவர் மேற்கொண்ட பயணங்கள் ஏழு - இவற்றின் முன்னும் பின்னும் சமயப்பொருட்டும் பணி நிமித்தமும் அவர் மேற்கொண்ட பயணங்கள் பல. உலக மக்களொடும் மொழிகளொடும் அவர் கொண்ட தொடர்பு வளர வளரத் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் அத்துறவிக்கிருந்த காதல் பெருகுவதாயிற்று. செல்லுமிடமெல்லாம் தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் பணிகளிலேயே ஈடுபட்டார்.

''தமிழ்மொழிதான் இந்திய மொழிகளில் முதன் முதலில் அச்சினைக் கண்ட மொழி'' எனப் பெருமிதத்தோடு குறிப்பிட்டு ''1554 இல் இலிஸ்பன் மாநகரில் இலத்தீன் எழுத்துக்களைக் கொண்டு தமிழ்ச் செபங்களை ஒலி பெயர்த்த நூல் ஒன்றினை அச்சிட்டனர். அதில் ஒரு வரி

தமிழ் ஒலி வடிவைக் காட்ட, மற்றொரு வரி போர்த்துக்கீசிய மொழியின் பொருளைக்குறிக்க மூன்றாவது வரி தமிழ்ச் சொல்லிற்கு நேராகிய போர்த்துக்கீசியச் சொல்லைத் தருகின்றது. இவ்வாறு மும்மூன்று வரிகளாகவும் இரு நிறங்களிலும் அச்சிடப்பெற்ற அழகிய அந்நூல் ஐரோப்பிய அச்சுக்கலைக்கே அணியாய் விளங்குகின்றது'' என்கிறார். 1578இல் கொல்லத்தில் அச்சிடப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' எங்கிருக்கிறது என்பது அறிஞர்களுக்கே தெரியாத நிலையில் அமெரிக்க நாட்டுக் கார்வர்டு பல்கலைக்கழகத்தில் அவ்வேடு இருப்பதை உலகுக்குணர்த்தியவர் அவர்.

1579இல் கொச்சி அம்பலக்காட்டில் அச்சான 'கிரிசித்தியாணி வணக்கம்' பாரிசு நூலகத்தில் இருப்பதைக் கண்டு காட்டியவர் அவர். அவரே 1586இல் புன்னைக் காயலில் பதிப்பிக்கப் பெற்ற 'அடியார் வரலாறு' என்னும் நூலினை வத்திக்கான் நூலகத்தில் கண்டெடுத்தவர்.

இலங்கையின் நெடுந்தீவில் 2.8.1913இல் பிறந்த அவர் , முப்பது ஆண்டுகளின் முன்னரே ''இன்று நம் தமிழ் நாட்டிற்கு வேண்டியவர் யார்?'' என்று ஒரு கேள்வியை முன் வைத்து அதற்கான மறுமொழி யையும் அளித்தார். ''ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய ஆராய்ச்சியாளர் பலரே'' இவ்வராய்ச்சியாளர் என்ன செய்ய வேண்டும்? ''நான் உலகின் பல நாடுகட்குச் சென்றதன் பயனாகவும், பிற மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒருவாறு கற்றறிந்ததன் பயனாகவும், தமிழிலக்கியம், தமிழ்ப்பண்பு, தமிழ்க்கலை, தமிழ் வரலாறு முதலியவற்றை உலகில் எவ்வளவிற்குப் பரப்ப வேண்டு மென்று ஒரு சிறிது உணர்ந்துள்ளேன். ஹோமரின் ஓடிசியையும், வெர்ஜிலின் இலியதையும் மக்கள் போற்றுவது போல் இளங்கோவடி களின் சிலப்பதிகாரத்தை ஒப்புயர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளை உலகம் போற்றுமாறு நாம் செய்தல் வேண்டும். கொன்பூசியஸ், செனக்கா முதலாய நீதிநூல் ஆசிரியர்களை உலக மாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ, அங்ஙனமே திருவள்ளுவரையும் அவர்கள் அறிந்து படிக்குமாறு நாம் செய்வித்தல் வேண்டும். சாபோ, எலிசபெத்து, பிரௌனிங், ஷேக்ஸ்பியர் முதலானோரின் காதற்பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவதே போல, நம் அகத்துறை இலக்கிய நூல்களையும் , அன்னார் படித்து இன்புறும் புதியநாள் உதிக்க வேண்டும். உலக இலக்கியத்திரட்டு (World Classics) என்னும் பெருந்தொகை நூல்களில் நம் இலக்கிய நூல்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும். மேற்றிசைக் கண்ணும், கீழ்த்திசைக் கண்ணுமுள்ள பல்கலைக்கழகங்கள், தமிழ்க்கலைகளின் தனித்தன்மை யை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல் வேண்டும்.''

எதைச் செய்விக்க வேண்டுமென்று அன்று சொன்னாரோ அதையே தாம் கண்மூடிய 1.9.1980 ஆகிய இறுதிக்காலம் வரை செய்தும் செய்வித்தும் வந்தவர் அவர். ஏறத்தாழ 68 ஆண்டுகள் உயிர்வாழ்ந்த அவர் முப்பதாண்டுகளுக்குமேல் உலகத்தமிழ்த் தூதுவராகவே வாழ்ந்தார். ''தமிழ்த் தூதிற்கென வேற்று நாடு செல்வோர் திருவள்ளுவர் கூறும் மூன்று பண்புகளில் முதன்மை சான்றவராய் இருத்தல் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகும்.

''அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு''

இயற்கையாகிய அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கேதுவாய் இம் மூன்றன் செறிவு உடையவன், அவ்வினைக்குச் செல்லுதல் வேண்டும், அவ்வண்ணம், அப்பண்பு அமையப்பெற்ற தூதர், அவ்வேற்று நாடுகளில், அவ்வேற்று மொழியை நன்றாகப் பேச அறிந்த மேடைக்கலை வல்லுநராய் இருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. வேற்று நாட்டினரிடை அவர் முறையில், அவர் பழக்க வழக்கங்களின் படியே, அவர் பேசுவது போல அவர் மொழியைப் பேசி, அவர் உண்பது போல அவர் உணவை உண்டு, அவருடன் பழகுதல் வேண்டும்'' என்பது 1950 வாக்கில் அவர் வகுத்துக் காட்டிய இலக்கணம். அவ்விலக்கணத்திற்கான தலைசிறந்த இலக்கியமாகத் திகழ்ந்த பெருமை அவருக்கே உண்டு.

அவரின் உலகளாவிய தமிழ்க் காதலைத் 'தமிழ்த்தூது' 'ஒன்றே உலகம்' போன்ற நூல்களும் உயர்ந்த தமிழாராய்ச்சியைத் 'திருவள்ளுவர்', Landscape and poetry, Tamil Culture and Civilization, போன்ற நூல்களும் உலகுக்கு உணர்த்தி நிற்பன. 'Tamil Studies Abroad - A Symposium' 'A Reference Guide to Tamil Studies' Research in Tamil Studies - Retrospect and prospect'போன்ற நூல்கள் உலகத் தமிழாராய்ச்சியாளர்களுக்குத் தோன்றாத் துணையாக அமையுந்தரத்தன. சங்க இலக்கியம் முதல் மு.வ.வின் புதினங்கள் வரையான பொருள்கள் பற்றி இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைகளும் எழுதியுள்ள அவர், படைப்புகள் பலவற்றிலும் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகோடு ஒப்பிட்டு அவற்றின் உயர்வுகளைப் புலப்படுத்தியிருப்பதைக் காணலாம். 'இந்திய மேற்கத்தியக் கல்வி ஒப்பீடு' 'தென் கிழக்காசியாவின் கலை பண்பாட்டு ஆராய்ச்சி' போன்று அவர் மேற்கொண்ட ஆய்வுகள் பலவும் அவரை ஒப்பியல் அறிஞராக உலகின் முன் நிறுத்துவன. அவர்தம் படைப்பு ஒவ்வொன்றும் அநனதன்

துறையில் எடுத்துக்காட்டாக அமைந்திருப்பதே அவர் ஆராய்ச்சியின் தனித்தன்மையை உணர்த்தப் போதுமானது. அதைக் காட்டிலும் தம் ஆராய்ச்சி மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்னும் அடிப்படையில் நிலைத்து நின்றார் என்பதே அவர்தம் தனிச்சிறப்பு.

ஆராய்ச்சி அறிஞர்களாக இருக்கும் பலர் அமைப்பாளர்களாகச் சிறப்பதில்லை. அவரோ 22 அகவை இளைஞராக இருக்கும் போதே சமயக்கல்வி பயில இத்தாலி நாட்டிற்குச் சென்றவர். உரோம் நகரில் திருமறைக்கல்வி பயின்று 'முனைவர்' பட்டமும் பெற்றவர். பட்டம் பெறுவதற்கான பணிகளை மட்டுமா அங்குச் செய்தார்? இல்லை. அப்போது அங்கு வாழ்ந்த ஏழு தமிழர்களையும் இணைத்து 'வீரமாமுனிவர் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினார் அதனால் வாத்திகன் வானொலி நிலையம் பல முறை தமிழில் ஒலிபரப்பும் வாய்ப்பும் ஏற்பட்டது.

1952இல் தெள்ளுற்ற தமிழமுதின் சிறப்பு உலகெலாம் பரவும் வகை செய்வதற்காக 'தமிழ்ப் பண்பாடு' (Tamil culture) என அவர் தொடங்கிய ஆங்கில இதழ் ஆற்றிய பணி நிலைத்த சிறப்புக்குரியது.

இப்போது திருச்சியில் இயங்கும் 'தமிழ் இலக்கியக் கழகம்' தூத்துக்குடியில் தோற்றுவிக்கப் பட்டதாகும். இதனை உரோச்சு ஆண்டகையின் துணையோடு தோற்றுவித்தவர் அவர்.

1964ஆம் ஆண்டின் தொடக்கம். புது தில்லியின் கீழைத்தேய ஆராய்ச்சியாளர்களின் 26ஆவது அனைத்துலக மாநாடு கூடுகிறது. அம்மாநாட்டில் கலந்து கொண்ட அவர், பில்லியோசா (பிரான்சு) பரோ (இங்கிலாந்து) எமனோ (அமெரிக்கா) குய்ப்பர் (ஆலந்து) கமில் சுவலபெல் (செக்கோசுலவேகியா) ஆகிய அயல்நாட்டுத் தமிழறிஞர்களோடு கலந்து பேசி 'உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்' என்னும் அமைப்பைச் சனவரி 7ஆம் நாள் பெற்றெடுக்கிறார். அவ்வமைப்பு இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்த வேண்டும் என்று முடிவு செய்கிறது. அவ்வமைப்பின் தாயாக இருந்து அதனைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்த பெருமை அவர்க்குண்டு. தாம் இந்தியவியல் பேராசிரியராகப் பணியாற்றிய மலேசியப் பல்கலைக்கழகத்தில் மலேசிய அரசின் துணையோடு முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை 1966-இல் திறம்பட நடத்தி வழிகாட்டிய பெருமையும் அவருக்குண்டு. அவரின் தலைமையும் வழிகாட்டுதலும் அம்மாநாட்டின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தன என்பதைக் குறிப்பிட்டு 'இந்தியவியல் துறையின் நற்பேறே அவரைத் தலைவராகப் பெற்றிருப்பது' என்று

மாநாட்டைத் தொடங்கி வைத்த மலேசியத் தலைமையமைச்சர் துங்கு அப்துல் ரஃமான் மனந்திறந்து பாராட்டினார். சென்னையில் நடந்த இரண்டாம் மாநாட்டிலும், பாரிசில் நடந்த மூன்றாம் மாநாட்டிலும் யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காம் மாநாட்டிலும் தொண்டராகவும் அறிஞராகவும் அவர் கலந்து கொண்டார். நான்காம் மாநாட்டின் தொடக்கவுரையில் ''ஐந்தாவது மாநாடு மதுரைப்பல்கலைக் கழகத்தில் நடைபெற வேண்டுமென விரும்புகிறோம்'' என்று குறிப்பிட்ட அவர் ஐந்தாம் மாநாடு நடப்பதற்கு மூன்று மாதங்களின் முன்னரே மறைந்து போனார். இல்லை இல்லை உண்மைத்தமிழர்களின் நெஞ்சில் உறைந்திருக்கிறார், நிறைந்திருக்கிறார். அவர் மிகச் சிறந்த அமைப்பாளர் என்பதை இப்படி எத்தனை எத்தனையோ நிறுவனங்கள் எதிர் காலத்திற்கு இயம்பி நிற்கும்.

இலங்கை அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழாராய்ச்சிகளைப் புறக்கணிப்பதும் தமிழர்களை ஒடுக்குவதும் அவர் மனத்தைப் புண்படுத்தின. ''தமிழ் மாவட்டங்களில் புதைபொருளா ராய்ச்சி பற்றி அரசு விரும்புவதில்லை. நம் கல்விக்கழகங்களில் தமிழர் வரலாறு பற்றிப் பாடநூல்கள் கூறுவதில்லை. எத்தனையோ முறைகளில் நம் பண்பாட்டைக் கைவிட மறைவாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன''

''இன்று இருபத்தைந்து ஆண்டுகட்குப்பின் நாம் எல்லாத் துறையிலும் ஒதுக்கப்பட்டுள்ளோம். நம் உரிமைகள் அனைத்தையும் இழந்து வாழ்கிறோம். தந்தை செல்வா, ஈழத்தனி நாட்டை தமிழ் ஈழத்தை - அக் காலத்தில் கேட்கவில்லை. ஆனால் நமக்கு இத்துணை ஆண்டு களாக இழைத்து வந்த தீமைகளால் தனிநாடு கேட்கத் தூண்டப் பட்டுளோம்.

நம்மிலக்கியம், நம் கதைகள், நம் வாழ்க்கை வாழ வேண்டு மாயின் - வளர வேண்டுமாயின் பண்பாட்டிற்கு ஏற்ற அமைதியான சூழ்நிலை வேண்டும். நம் அன்றாட வாழ்க்கைக்கும் உரிமைகட்கும் இடையறாது போராடிக் கொண்டிருக்கும் வேளையில் நம் பண்பாட்டைப் பேணற்குரிய வாய்ப்புகள் கிடையா''

இறப்பதற்கு நான்கு மாதங்களின்முன் நிகழ்த்திய 'செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவில்' அவர் கொடுத்த உரிமைக்குரல் இது. அதுதான் அவரின் அனைத்துப் பணிகளுக்கும் மணிமுடி வைப்பது போன்றது. தம்மைச் சுற்றி நடக்கும் குமுகாய நடப்புகளிலிருந்து ஒதுங்கி வாழாமல், தம்முடைய ஆராய்ச்சிகள், அமைப்புகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது எது என்பதை உணர்ந்து, குமுகாய மக்கள்

இயக்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்டு குரல் கொடுக்கும் போது தான் அவர் நண்பகல் ஞாயிறாகிறார் நமக்கெல்லாம் தோழராகிறார்.

யார் அவர்?

அவர் தாம் 'இவர் போன்றார் அவர்' என எவரையும் ஒப்புமை காட்ட முடியாத உலகத் தமிழர் - தனக்குவமையில்லாத தனிநாயகம்.

■

24

# பெருங்கதைப் பெயராய்வு

பெருங்கதை வட இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பட்ட முதற்றமிழ்க் காப்பியம். சங்க இலக்கியச் சொற்செறிவும் காப்பிய நடைநயங்களும் இணைந் தொளிர்வது. தரத்தாலும் அளவாலும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகியவற்றோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கது. சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றிற்குக் காப்பிய நயங்களில் முன்னோடியாய் அமைவது. வேறு எத்தமிழ்க்காப்பியத்தும் காண இயலா நிலையில் பலவகைக்கருவிகள், பழக்க வழக்கங்கள், கட்டட அமைப்புகள், விளையாட்டுகள் பற்றிய சமுதாயச் செய்திகளை யெல்லாம் நுட்பமாகப் பேசும் காப்பியம் இது. இச்சமயக்காப்பியம் காயமே இது பொய்யடா என்னாது வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலை வற்புறுத்துகிறது. புலவர்க்குப் புலவராகிய அடியார்க்கு நல்லாரே. 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச் சங்கத்து .... பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை.[1] எனப் பாராட்டியுள்ளார். கொங்குவேளிர் இயற்றிய - தமிழ்த் தாத்தா உ.வே. சா. அவர்கள் 1924 -இல் முதற்பதிப்பாகத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய - ஆறு காண்டங்களும் நூற்றியைம்பது காதைகளும் கொண்டதாகக் கருதப்பெறும் இக்காப்பியம் இன்று முழுமையாகக் கிடைக்காத ஐந்து காண்டங்களையும் தொண்ணூற் றொன்பது காதைகளையும் அடக்கியுள்ளது. நவில்தொறும் நயம் பிலிற்றும் இக்காப்பியம் நவிலாமையாலேயே - படித்தால் புரியாது என்னும் பழமை அச்சத்தாலேயே குடத்துள் விளக்காயிருக்கிறது.

காப்பியத்திற்குப் 'பெருங்கதை' என்று இன்று வழங்கப்படும் பெயர் பதிப்பாசிரியர் உ.வே.சா. அவர்கட்குக் கிடைத்த பழஞ் சுவடிகளில் இருந்ததா? உ.வே.சா. பெயர் மாற்றம் செய்தாரா?

நூற்பெயர்களில் எப்பெயர் பலரும் அறிந்த பெயராக இருந்தது? நூலாசிரியர் இட்டுக்குறித்த பெயர் எது? என்னும் வினாக்களின் விடை விளக்கமே இக்கட்டுரை.

நூலை அருமையாகப் பதிப்பித்த உ.வே. சா. அவர்கள் தம் முதற்பதிப்பு இரண்டாம் பதிப்பு முகவுரைகளில்[2] பதிப்பிற்கு அடிப்படையாக அமைந்த தமக்குக் கிடைத்த இரண்டு பழஞ்சுவடி களிலும்[3] கொங்குவேண் மாக்கதை. என்று வரைந்திருந்த ஒரு சீட்டை மேலே பெற்றிருந்தன என்று குறிப்பிடுகின்றார். முதற்சுவடியைப் பிரித்துப் பார்த்தபொழுது வழக்கமாக நூற்பெயர் குறிக்கப்பட்டிருக்கும் முதல் ஏடும் அதையுள்ளிட்ட எண்பது ஏடுகளும் காணப்படவில்லை என்கிறார். இதனால் பழஞ்சுவடி வழி அறிவிக்கப்பெறும் நூற்பெயர் 'கொங்குவேண் மாக்கதை' என்பதே, பிற அல்ல என்பது தேற்றம்.

பழங்சுவடிகளோடிருந்த பெயர், நூல் வடிவில் காப்பியம் வெளி வந்தபோது 'பெருங்கதை' என மாற்றப்பட்டுள்ளது. மாற்றியதைப் பற்றிய எக்குறிப்பும் முகவுரையிலோ பிற பகுதிகளிலோ வெளிப்படை யாக இல்லை.

'கொங்குவேண் மாக்கதை' எனும் காப்பியப்பெயர் பழஞ்சுவடி களின் முதலில் கோக்கப்பட்டிருந்த சீட்டுக்களில் மட்டும்தான் இடம் பெற்றிருந்ததா? வேறெங்கும் குறிப்பிடப்படவில்லையா? அதனால் தான் உ.வே. சா.பெயர் மாற்றம் செய்தாரா? எனப் பார்ப்போம். முதற்சுவடியோடிருந்த 'கொங்கு வேண்மாக்கதை' என்றெழுதிய சீட்டைக் கண்டதும், சாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்துப்பாயிரம் ஏழாம் நூற்பா உரையில் "சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற்றோடு சேர்த்து அச்செய்யுட்களோடு ஒன்றாக்குவர்" என்றெழுதிய பகுதி உ.வே. சா. அவர்கட்கு உடனே நினைவு வந்ததாம். இதனால் சுவடியைப் பார்ப்பதற்கு முன்பே உ.வே.சா. அவர்கட்கு அறிமுகமாயிருந்த நூலின் ஒரே பெயர் 'கொங்கு வேண்மாக்கதை'யே எனலாம். மேலும் அவரே தம் முகவுரையில் 'மாக்கதை' என்னும் பெயர் பெருந்தேவனார் பாரதம் கம்பராமாயணம் என்பனபோல ஆக்கியோர் பெயருடன் சார்ந்து கொங்குவேண்மாக்கதை எனவும்... பழைய உரைகளில் வழங்கும்... என்கிறார். தனிப்பாடலொன்றும் "உருத்தக்க கொங்குவேண்மாக் கதை"[4] என நூற்பெயர் சுட்டும். "கொங்குவேண்மாக்கதை குறிப்புரை கண்டேன்" என்னும் இளம் பூரணச் உரைச் சிறப்புப்பாயிரம். இவற்றால் ஏட்டுச் சுவடிச் சீட்டில் இடம் பெற்றிருந்த நூற்பெயர் முன்னோரால் குறிப்பிடப்பட்டு வழங்கி வந்ததே என்றறியலாம்.

'கொங்குவேண்மாக்கதை' என்னும் ஒரு பெயர்தான் நூலிற்கு வழங்கி வந்ததா? எனின் அன்று. பழஞ்சுவடிகளை எழுதிய காலத்தும்

அதையொட்டியும் நன்கு தெரிந்திருந்த பெயர் 'அது' எனக் கொள்ளலாம். நூற்குரிய பிற பெயர்களாகக் கதை, மாக்கதை, பெருங்கதை, உதயணன் கதை ஆகியவற்றை உரையாசிரியர்கள் வழித் தாம் அறிந்ததாக முகவுரை[5]யில் உ.வே.சா. குறிப்பிடுவார். நிரலே இப்பெயர்களை நோக்குவாம்.

அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் பத்து இடங்களில் பெருங்கதையிலிருந்து மேற்கோள் காட்டுவார். அவற்றுள் எட்டு இடங்களில் நூற்பெயர் 'கதை' என்றே குறிப்பிடப்படுகின்றது.[6] அவ்வெட்டு மேற்கோள்களில் மூன்றே இன்று பெருங்கதையில் உள்ளன.[7] ஏனைய ஐந்தும் மூலத்திலிருந்து மறைந்துபோன பகுதிகளில் இருந்திருக்க வேண்டும். அடியார்க்கு நல்லார், உரைப்பாயிரத் தொடக்கத்திலேயே 'உதயணன் கதை' என நூற்பெயர் சுட்டி அதன் பின்னரே 'கதை' எனக் குறிப்பிடுவதால் எளிமை கருதிச் சுருக்கிக் கூறியிருப்பார் எனலாம். மேலும் 'கதை' எனப் பெயரிய தமிழ்க் காப்பியம் பிறிதின்மையால் அது பெருங்கதையொன்றையே குறிக்கு மெனக் கருதியிருப்பார்.ஆக, அடியார்க்கு நல்லாரால் மட்டும் குறிக்கப் பெறும் 'கதை' நூலின் முழுப்பெயரன்று, சுருக்கப்பெயரே.

'மாக்கதை' என்பது பெரும்பாலும் நூலாசிரியர் பெயரோடு இணைத்துக் 'கொங்கு வேண்மாக்கதை' என்றே வழங்கப் படுகின்றது.[8] இதுவரை கிடைத்த சான்றுகளில் தனித்து இடம் பெறுவதாகத் தெரிய வில்லை. எனவே 'மாக்கதை' என்பது இணைப்பெயராக வருவதே. நூலின் தனிப்பெயரன்று எனத் துணியலாம்.

உ.வே.சா. இட்டு வழங்கியதும் இன்று நூற்பெயராகப் பலர்க்கும் தெரிந்திருப்பதும் 'பெருங்கதை' என்பது. இப்பெயர் அடியார்க்கு நல்லாரால் மட்டுமே அதுவும் ஒரே ஓர் இடத்தில் சிலம்பின் உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. வேனிற்காதையின் 23 - 6 வரிகளின் உரையில் 'விருத்தி' என்பதை விளக்குங்காலை பெருங்கதை உஞ்சைக் காண்டம் 'நருமதை சம்பந்தம்' என்ற காதையின் 44 -8 வரிகளை[9] எடுத்துக்காட்டி, எனப் பெருங்கதையுட் கூறினமையானும் கொள்க என்பர் அடியார்க்குநல்லார். இவ்வோர் இடமேயன்றி வேறெவ் விடத்தும் எவராலும் 'பெருங்கதை' என்ற நூற்பெயர் குறிப்பிடப்பட வில்லை.

எஞ்சி நிற்பது ''உதயணன் கதை''. இப்பெயர், பல உரையாசிரியர் களாலும் வேறு எப்பெயரினும் அதிகமாகக் குறிப்பிடப் படுகின்றது. தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் செய்யுளியலின் 'ஞகாரை முதலா னகாரை யீற்றுப்புள்ளி யிறுதி யியைபெனப் படுமே' என்ற நூற்பா (24) உரையில் ''னகர வீற்றானிற்றுப் பொருளுமியைந்து சொல்லுமியைந்து வந்தன... கொங்கு வேளிராற் செய்யப்பட்ட

உதயணன் கதையும் போல்வன'' என நூற்பெயர் காட்டுவார்.[10] அடியார்க்கு நல்லார் 'காப்பியம்' என்ற சொல் பற்றிச் சிலப்பதிகார உரைப்பாயிர இரண்டாம்பத்தியில் பேசுங்கால் ''கூத்தியரிருக்கையும் சுற்றியதாகக் காப்பிய வாசனை கலந்தவை சொல்லி (4.3.41 - 2) எனும் பெருங்கதைப் பகுதியை எடுத்துக் காட்டி.... ''செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும் ....கூறினமையானும்'' எனத்தான் காட்டும் முதன் மேற்கோளிலேயே உதயணன் கதை என்று நூற்பெயர் சுட்டுவார். மேலும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் (நூற்பா 53, 69 விசேடவுரை) வீரசோழிய உரையாசிரியர் (யாப்புப் படலம் 9ஆம் நூற்பா உரை) தக்கயாகப்பரணி உரையாசிரியர் (தாழிசை 33, 137, 258... உரை) முதலிய பலர் காட்டும் மேற்கோட் பகுதிகளிலெல்லாம் 'உதயணன் கதை' என்றே நூற்பெயர் குறிப்பிடப் படுகின்றது. இதனால் வேறு எப்பெயரிலும் பலரும் அறியப் பரவலாகத் தெரிந்திருந்த' நூற்கு வழங்கி வந்த பெயர் 'உதயணன் கதை'யே என்பது உறுதியாகின்றது.

ஏட்டுச்சுவடிகளின் மேல் சீட்டில் எழுதியிருந்த பெயரை விலக்கிய உ.வே.சா. முறைப்படி, பலராலும் குறிப்பிடப்பட்ட கதையுள்ளடக்கத் தையும் காட்டுகின்ற 'உதயணன் கதை' என்னும் பெயரை நூலிற்கு இடுவதை விடுத்து ஒரே ஓர் இடத்தில் மட்டும் குறிப்பிடப்பட்ட - கதைப் பொருண்மையைக் காட்டாத 'பெருங்கதை' என்னும் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளார். தற்சார்பின்றி நோக்கின் ஏட்டுச்சுவடியோடு இருந்த பெயரையோ பரவலாகத் தெரிந்த பெயரையோ இடுதல் முறை. மாறாகப் 'பெருங்கதை'யைத் தேர்ந்தெடுத்ததேன்? பெயர் மாற்றியதைப் பற்றி எதுவும் பேசாததைப் போலவே மாற்றியதற்கான காரணங்களைப் பற்றியும் உ.வே.சா. எதுவும் உரைத்திலர். 'பெருங்கதை' யைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் எதுவாக இருக்கும் எனப்பார்க்கலாம்.

பெயர்மாற்றக் காரணத்தையறியப் பெருங்கதையின் முதனூல் பற்றிய உ.வே.சா. வின் கருத்துத் துணை செய்யும். குணாட்டியர் பைசாச மொழியில் இயற்றிய பிருகத்கதாவை ஆதாரமாகக் கொண்டு கங்கதேசத்தரசன் துர்விநீதன் வட மொழியில் செய்த 'பிருகத்கதா' வே பெருங்கதையின் முதனூல் எனக்கொள்வார்.[11] 'பெருங்கதை' என்பது இந்நூலுக்கு முதனூலால் வந்த பெயராகும் என்ற முகவுரைப்பகுதி கூர்ந்து நோக்கற்குரியது. இதனால் 'பிருகத்கதா' என்னும் முதனூற் பெயரே 'பெருங்கதை' என்னும் நூற்பெயர்க்குக் காரணமானது என்னும் உ.வோ.சா. கருத்தை உணரலாம். 'மாக்கதையும், பெருங்கதையும்' ஒரு பொருண்மைய எனினும் மாக்கதைக்கும் பிருகத்கதாவிற்கும் இல்லாத ஒலித்தொடர்பு பெருங்கதைக்கும் பிருகத்கதாவிற்கும் உள்ளது. இந்தக் கருத்துகளைப் பின்புலமாகக் கொண்டு நோக்கினால் முதனூல் பற்றிய தம் கருத்தை உறுதிப்படுத்தும் சான்றுகளில் பெயரீடும் ஒன்றாக

அமையும் எனக்கருதியே 'பெருங்கதை' என்னும் பெயரை உ.வே.சா. தேர்ந்தெடுத்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இம்முடிவுக்கு அரண் செய்யும் வகையில் உ.வே. சா.விற்குப் பின்வந்த சிலரும் 'பெருங்கதை'ப் பெயர்க்கும் முதனூலுக்குமுள்ள தொடர்பைப் பேசுவர். கலைக்களஞ்சியம் 'பெருங்கதை' பற்றி விளக்கும்போது 'பிருகத்கதா' என்ற சொற்றொடர் தமிழில் பெருங்கதை, மாக்கதை என்று பொருள்படும்'' என்கிறது.[12]

இங்கே பெருங்கதை எனும் நூற்பெயரே 'பிருகத்கதா' என்பதன் தமிழாக்கம் என்னும் கருத்திற்கு உ.வே.சா. வின் பெயரீடு இடந்தருகிறது. மேலும் அறிஞர் கா.சு. பிள்ளை அவர்கள் ''ஆரியத்திற்பைசாச மொழியில் குணாட்டியர் என்னும் புலவர் கி.பி. முதல் நூற்றாண்டில் கோசாம்பி நகரத்தில் அரசாண்ட உதயணன் என்னும் வீரனைப் பற்றி இயற்றிய பெருங்கதையைத் தழுவி இந்நூல் இயற்றப் பட்டமையால் இதற்குப் பெருங்கதை யென்ற பெயர் வழங்கலாயிற்று''[13] என்று எழுதுவதும் நூற்பெயரே முதனூலைக் காட்டி நிற்கும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது. 'பெருங்கதை என்பது 'பிருகத்கதா' என்னும், வடமொழிப் பெயரோடு இசைந்து 'பெரியகதை' எனப் பொருள்படும்'' என்று தெ.பொ.மீ கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[14]

இனி நூற்குரிய பெயர்களில் கொங்குவேள் இட்டுக்குறித்தது; தொன்மையானது எது எனக் காண்போம். பொதுவாகக் காப்பியங் களுக்குரிய சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டல கேசி, இராமகாதை, திருத்தொண்டர் புராணம், யசோதர காவியம், சூளாமணி முதலிய பெயர்களை நோக்கினால் கதை மாந்தர்களோடு தொடர்புடையனவாய்ப் பலவும் அமைந்திருக்கின்றன. ''சிலப்பதி காரம்'' என்னும் பெயருங்கூடக் கதைமாந்தர் தம் அணியைச் சுட்டி நிற்கின்றது. இந்த மரபுப்படி நோக்கும்போது 'உதயணன் கதை' என்பதே தொன்மையான பெயர் என்று தெரிகின்றது. அடியார்க்கு நல்லார், பேராசிரியர், தக்கயாகப் பரணி உரையாசிரியர் என வழிவழிப் பலரும் 'உதயணன் கதை' என்றே குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. அதோடு ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாக எண்ணப் படுவதும், பெருங்கதையை அப்படியே தழுவிச் சற்று முன்னும் பின்னும் கூட்டிச் செய்யப் பட்டதுமான உதயண குமார காவியத்தின் பெயரையும் இத்தொடர்பில் எண்ணிப் பார்க்கலாம். மேலும் காப்பியங்கள் சில காலப் போக்கில் பெற்ற பெயர் மாற்றத்தைக் கருத்திருத்திப் பார்த்தால் 'உதயணன் கதை'யே கொங்குவேள் இட்ட பெயர் என்ற முடிவு கிடைக்கிறது. 'இராம காதை' எனக் கம்பர் இட்ட பெயர் 'கம்பராமாயணம்' என மாறியதைப் போல் 'உதயணன் கதை' 'கொங்கு வேண்மாக்கதை' ஆகியது எனவும் 'சீவக சிந்தாமணி' 'சிந்தாமணி'' என்று குறிப்பிடப்படுவதைப்போல் 'உதயணன் கதை' 'பெருங்கதை'

என்று குறிப்பிடப்பட்டது எனவும் கொள்ளலாம். 'திருத்தொண்டர் புராணம்' எனச் சேக்கிழார் இட்ட பெயர் 'பெரியபுராணம்' ஆகியது. இவற்றை ஒப்ப 'உதயணன் கதை' 'பெருங்கதை' ஆனது எனவும் கொள்ளலாம்.

பழஞ்சுவடிகளோடிருந்த நூற்பெயரை உ.வே. சா. மாற்றினாரென்பதும் மாற்றியதைப் பற்றி எதுவும் கூறவில்லை என்பதும் 'உதயணன் கதை' பலரறிந்த பெயராயிருந்தும் அதைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதும் 'பெருங்கதை'யை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதும், காப்பியத்திற்குக் கொங்குவேள் இட்ட பெயர் 'உதயணன் கதை' என்பதும் இக்கட்டுரையில் கூறப்பட்டன.

## குறிப்புகள்

1. சிலப்பதிகார உரைப்பாயிரம் - இரண்டாம் பத்தி.
2. முதற்பதிப்பு முகவுரை 19.2.1924 -இல் எழுதப்பட்டது. இரண்டாம் பதிப்பு முகவுரை 24.12.1933- இல் எழுதப்பட்டது. முதற்பதிப்பினும் இரண்டாம் பதிப்பு விரிவும் தெளிவும் பெற்றுள்ளது. பின் 1953 -இல் வெளிவந்த மூன்றாம் பதிப்பிலும் 1967 -இல் வெளியான நான்காம் பதிப்பிலும் இரண்டாம் பதிப்பிற்கு உ.வே.சா. எழுதிய முகவுரை அப்படியே இடம் பெற்றுள்ளது.
3. உ.வே.சா பத்துப்பாட்டுச் சுவடிகளைத் தேடியபோது, இரண்டு பெருங்கதைச் சுவடிகளும் முறையே திருநெல்வேலி, திருநெல்வேலியைச் சார்ந்த வண்ணார்பேட்டை ஆகிய இடங்களில் முன்பின்னாகக் கிடைத்தன. முதற் சுவடியில் மறைந்துபோயிருந்த சில பகுதிகள் இரண்டாம் சுவடியில் இல்லாமையால் முதற் சுவடியைப் பார்த்தே இரண்டாவது எழுதப்பட்டது என்றும், முதற் சுவடியில் சிதைந்த பகுதிகளில் சில இரண்டாவதில் எழுதப்பட்டிருந்தமையால் முதற்சுவடி அதிகமாய்ப் பழுதுபடுவதற்கு முன்னரே அதைப்பார்த்து இரண்டாவது எழுதப்பட்டது என்றும் உ.வே. சா. கருதுவர். முதற் சுவடியைப் பார்த்துத்தான் இரண்டாவது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.
4. ஒருவர் தம்மைக் குறிப்பால் இகழ்ந்துரைத்துக் கொண்ட பழைய செய்யுள் :

   *திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்*<br>
   *விருத்தக் கவித்திறமும் வேண்டேம் - உருத்தக்க*<br>
   *கொங்குவேண்மாக்கதையும் கூறேம் குறளணுகேம்*<br>
   *எங்கெழிலென் ஞாயி றெமக்கு.*

   சீவக சிந்தாமணியின் 'நூலாசிரியர் வரலாறு' எனும் பகுதியில் உ.வே.சா. இவ்வெண்பாவைக் காட்டுவார்.
5. இரண்டாம் பதிப்பிற்கெழுதிய முகவுரையில் இரண்டு இடங்களில் கூறுவார்.

6. உரைப்பாயிரப்பிற்பகுதி கதை 4.27-34, கதை 4.72-6, கதை 5.1-6, கதை 8.8-13, கதை 9.1-4, கதை 9.15 - 212, கதை 9 .15 - 215. எண்களில் முதல் எண் சிலப்பதிகாரக்காதையையும் பிற்பாடல் வரிகளையும் குறிப்பன.

7. சிலம்பு — பெருங்கதை

| | |
|---|---|
| சிலம்பு | பெருங்கதை |
| உரைப்பாயிரப்பிற்பகுதி | - 4.3- 51-5 |
| 4.27-34 | - 1.43.145-6 |
| 9.15-212 | - 1.52-16 |

பெருங்கதை எண்களில் முதல் எண் காண்டத்தையும் இரண்டாவது காதையையும் இறுதி வரிகளையும் சுட்டுவன.

8 இலக்கணக் கொத்துப்பாயிரம் 7- ஆம் நூற்பா உரையிலும் 4 -ஆம் சான்றெண் விளக்கத்தில் இடம் பெற்றுள்ள தனிப்பாடலிலும் காணலாம்.

9. ''பன்னாட் கழிந்த பின்னர் முன்னாள்
எண்மெய்ப் பாட்டினுள் இரக்க மெய்ந்நிறீஇ
ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுள்
தலையத னும்பர்த் தான் குறிக்கொண்ட
பாவை நோக்கத் தாரணங் கெய்தி'' (பெருங்கதை 1.35- 44-8)

10. உ.வே.சா. தம் இரண்டாம் பதிப்பு முகவுரையில், பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையில் 'உதயணன் கதை' என்ற நூற்பெயரைக் குறித்ததாகக் காட்டுவார். அவர் பார்த்த பேராசிரியர் உரைப்பதிப்பு எதுவெனத் தெரியவில்லை. கழகப்பதிப்பு (1959) பேராசிரியர் உரையைப் பார்த்தால் 'கொங்குவேளிரால் செய்யப்பட்ட தொடர்நிலை செய்யுளும் போல்வன' என்றே காணப்படுகின்றது. நூற்பெயர்க்குறிப்பு இல்லை.

11. இரண்டாம் பதிப்பின் முகவுரை. உ.வே.சா. 1935 -இல் பெருங்கதை மூலத்தை மட்டும் தனியே பதிப்பித்தபோது அதற்கு எழுதிய முகவுரை இரண்டிலும் குறிப்பிடுவர்.

12. கலைக்களஞ்சியம் தொகுதி 7.

13. இலக்கிய வரலாறு - இரண்டாம் பாகம் - பக்கம் 295 நான்காம் பதிப்பு 1953.

14. A History of Tamil Literature. TPM p. 83

*(இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்*
*இரண்டாம் கருத்தரங்கு 1970 திருச்சி)*

■

25

# பெருங்கதையின் தனிநிலைகள்

01. பெருங்கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுக்குப் பின்னும் சீவகசிந்தாமணிக்கு முன்னும் எழுந்த காப்பியம். இன்று, முதலும் முடிவும் மறைந்து இடையுங் குறைந்து காணப்படுவது. இந்தச் சிதைந்த நிலையிலுங் கூட இதன் மொத்தவரிகள் 16213. சிலம்பு மணிமேகலை ஆகியவற்றிலும் ஏறத்தாழ மும்மடங்கு அளவாற் பெரியது. இந்த அளவுப் பெருமையே பின்னெழுந்த பெருங் காப்பியங்களுக்குத் தூண்டுகோலமாய் அமைந்திருக்கலாம்.

1.0 சிலம்பிலும் மணிமேகலையிலும் கதை நிகழ்ச்சிகள் சில தமிழகத்தின் புறத்தே நிகழ்ந்தாலும் அவற்றின் மையக்கதை நிகழ்ச்சிகளெல்லாம் பண்டைத்தமிழகத்தையே களமாகக் கொண்டுள்ளன. பெருங்கதையில்தான் முதன் முதல் காப்பியக் கதைக்களம் முழுக்க முழுக்கப் புறநாடாக - வடநாடாக - அமைகின்றது. கதை நிகழிடம் அதற்குக் காரணமாயினும் அவ்விடத்தை முழுக்களமாகப் பாடிய முதன்மை கொங்குவேளுக்குரியது.

1.1 பெருங்கதையின் தலைவன் உதயணன். இவனும் இன்னொரு கதைமாந்தனான பிரச்சோதனனும் கி.மு. ஏழாம் நூற்றாண்டு இந்தியவரலாற்றில் இடம் பெற்றவர்கள்.[1] மேலும் பெருங்கதையின் களமாக அமையும் நாடு நகரங்களின் பெயர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய இந்திய நாட்டுப்பட்த்தில் குறிப்பிடப் பட்டவை.[2] இவ்வரலாற்றுச் செய்திகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் தோன்றிய பெருங்கதையில் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன. 'பெருங்கதையின் முதனூல் இது' என எதையும் சுட்ட இயலா நிலையில் இவ்வரலாற்றியைபு பெருங் கதைக்கே உரியதாகிறது. புதிய கதைக் களத்தில் பா[illegible]கையில் அமைந்துள்ள இப்பொருத்தம் நோக்கத்தக்கதாம்.

2.0 தமிழ்க்காப்பிய வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மகளிரை முறைப்படி திருமணம் செய்து கொள்ளும் காப்பியத் தலைமை முதன் முதல் பெருங்கதையிலேயே அமைந்துள்ளது. உதயணன் வாசவதத்தை, பதுமாவதி, விரிசிகை, மானனீகை ஆகிய நால்வரை மணக்கிறான். பின் தோன்றிய சிந்தாமணிக்கு இப்பன்மணமுறை முன்மாதிரியாகும். எனினும் தமிழ்ப் பண்பாட்டுக்கு இது பொருந்துமா எனும் கேள்வி எழும். பெருங்கதைத்தலைவன் ஒரு வடநாட்டு அரசன் என்னும் பின்னணியில் நோக்கினால் இந்தக் கேள்விக்கும் இடமிராது.

3.0 தமிழ்க்காப்பியங்களில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ மகளிர் வண்ணனை பெருங்கதையில்தான் முதன் முதல் இடம் பெறுகிறது. உஞ்சைக்காண்டம், 'நீராட்டரவம்' எனும் காதையில் ஏழுபருவ மகளிரும் நீராடுதல் விளக்கமாகக் குறிப்பிடப்படுகிறது. இலாவண காண்டம் 'நகர்வலம் வந்தது' எனும் காதை, உதயணனும், வாசவதத்தையும் நகர்வலம் வரும்போது உதயணனைக் கண்டு பேதை, பெதும்பை, தெரிவை மகளிர் காமுற்றதாகவும் அவரெல் லாம் உத்தம மகளிரல்லாதாரெனவும் தெரிவிக்கிறது. இச்செய்திகள் உலா இலக்கியத்தோற்றத்துக்குத் துணை செய்திருக்கலாம்.

4.0 ஏறத்தாழ நூறு கதைமாந்தர்கள் பெருங்கதையில் இடம் பெறு கின்றனர். மையக் கதைமாந்தரில் ஒருவரின் மற்றவரைப் பிரித்தறியும் வகையில் பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது. அதிலும் 'யூகி'யையொத்த சூழ்ச்சிவல்ல கதை மாந்தனைப் பிற காப்பியங் களில் காணல் அரிது. 'மௌரியர் காலச் சாணக்கியனைவிட மாபெரும் பாத்திரமாக யூகி உருவாக்கப்பட்டிருக்கிறான்'' என்பார் தெ.பொ.மீ.[3]

5.0 பெருங்கதையில் அரசியல், அமைச்சியல், போர்முறை, வாணிகம், சமூக நிலை, எந்திரத்தொழில், கல்விநிலை, சமயநிலை முதலிய செய்திகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ''பெருங்கதையின்கண் அமைந்த பல சிறந்த செய்திகளையும் முறைகளையும் வேறு எந்த நூலிலும் காண்டல் அரிது''[4] பிற தமிழ் இலக்கியங்களில் காண இயலாத புதுமைப் பொறியொன்று பெருங்கதையில் இடம் பெறுகிறது. பிரச்சோதனன் உதயணனைப் பிடிக்கப் பல வீரர்களையுள்ளடக்கிய யானைப்பொறியொன்றைப் பயன்படுத்து கிறான். இது கிரேக்க வரலாற்றில் 'உலிசிசு' பயன்படுத்திய குதிரைப் பொறியை ஒத்துள்ளது நோக்கற்பாலது.

6.0 பெருங்கதை காலத்தாற் பிற்பட்டதெனினும் சிலம்பைக்காட்டிலும் நடையால் சங்க இலக்கிய நெருக்கமும் சொற்செறிவும் கொண்டது.

சிலம்பில் காண இயலாத சங்க இலக்கியச் சொற்களாகிய அடியுறை (புறம் 198) அணவரும் (அகம் 1) இறடி (குறுந் 214) இறும்பு (மலைபடு 407) உருப்பம் (அகம் 181) மலிர (நற். 17) மாழாந்து (பொருந 95) முதலியன பெருங்கதையில் இடம் பெறுகின்றன. 'தமிழ்ச்சேரி' 3.4.11, தொல் - புள்ளி 90 - இளம், நச்சர்உரை) 'தன் ஞாழ்' (3,5,17, தொல் -தொகை 4 - இளம், நச்சர்உரை) ஆகிய தொல்காப்பிய இலக்கணந் தழுவிய தொடர்களும் வருகின்றன.

7.0 சிலம்பும் மணிமேகலையும் கதைத் தொடர்ச்சியாகிய பொருள் தொடர்ச்சி மட்டும் கொண்டிருக்கப் பெருங்கதையோ பொருள் தொடர்ச்சியோடு சொற்றொடர்ச்சியும் கொண்டுள்ளது. ஒரு காதையின் இறுதி அடுத்த காதையின் தொடக்கமாகவும் ஒரு காண்டத்தின் இறுதி அடுத்த காண்டத்தின் தொடக்கமாகவும் அமைந்துள்ள இந்த அந்தாதி அமைப்பு தமிழ்க் காப்பியங்களில் பெருங்கதையில் தான் முதன் முதல் அமைந்துள்ளளது.

8.0 பெருங்கதை, கதையால் வட நாட்டுச் சார்பினதாயினும் பயன் பாட்டால் தமிழர்க்குரியது. தமிழர்க்கு நூலியற்றும் கொங்குவேள் காப்பியத்தைச் சிதையாமல் இயன்ற அளவு தமிழ் மரபைத் தழுவிச் செல்கிறார்.

8.1 வடசொற்களைத் தமிழ் முறைப்படி பதுமாவதி, தக்கணை, பொக்கரணி, மோக்கம், விலாவணை என வழங்குவதோடு இடபகன் என்னும் பெயரை 'ஏற்றுப் பெயரண்ணல்' எனத் தமிழாக்கியும் தருகிறார் கொங்குவேள்.

8.2 உஞ்சைக் காண்டத்தில் 'மருதநிலங்கடந்தது', 'முல்லை நிலங் கடந்தது', 'குறிஞ்சிநிலங்கடந்தது', 'நருமதை கடந்தது', 'பாலை நிலங்கடந்தது' ஆகிய காதைகள் இடம் பெறுகின்றன. உதயணன் வாசவதத்தை முதலியோர் உஞ்சை நகரிலிருந்து வருகிற வழியாகிய வடநாட்டு நிலப்பகுதியைத் தமிழ் கூறும் ஐந்திணையமைப்பைத் தழுவிப் பாடுவது குறிப்பிடத்தக்கது. நெய்தற்கடலைப்பாடும் வாய்ப்பின்மையைக் கதைக்களத்தால் உணர்ந்த கொங்குவேள் நருமதையாற்றைப்பாடி நிறைவு செய்கிறார்.

9.0 உதயணனைத் 'தமிழியல் வழக்கினன்' (4.17.67) என்று குறிப்பிடுவ தோடு அவனும் வாசவதத்தையும் தென்கடலிட்ட முளை வடகடல் நுகத்துளை வந்து பொருந்தியதைப்போல (1.32.17-18) தமிழ்க் களவு முறையில் ஒருவரையொருவர் கண்டு நெஞ்சங்கலந்ததாகப் பாடுகின்றார் கொங்குவேள். இவ்வாறு தமிழியப் படுத்தும் கொங்குவேளின் நெறியே பின் வந்த திருத்தக்கத் தேவர், கம்பர் முதலியோர்க்கு உதவியிருக்கக்கூடும்.

9.1 தமிழ் இலக்கியவுலகில் நூற்றுக்கணக்கான சொற்களை அறிமுகப் படுத்திய பெருமை பெருங்கதைக்குண்டு. ஒப்பனை (2.15.40) கச்சம் (2.16.43) கத்திரிகை (4.14.7) கார்முகம் (3.20.55) குப்பாயம் (1.58.24) கொட்டாரம் (3.14.19) கோமாள் (3.8.53) திருமணம் (1.47.227) நீதி (3.1.27) பொத்தகம் (1.34.26) விமானம் (2.8.194) முதலிய சொற்களை எடுத்துக்காட்டலாம்.

9.2 பழஞ்சொற்கள் பல பெருங்கதையில் புதுப்பொருளில் பயின்று வருகின்றன. காட்டாக, அரி (1.40.18, தவளை), அலகை (2.2.75, அளவு) இகுப்பம் (2.20.34, தாழ்வு),கவறு (1.38.144 கைமரம்), சுட்டி (1.42.73 மணப்பொடி) பாண்டில் (2.19.43, வட்டக்காசு), மாத்திரை (2.9.251 குளிகை ; (3.17.157, ஒரு காதணி), மேதை (3.17.49, பொற்றலைக்கையாந்தரை) வீடு (1.54.87, மனை) முதலியவற்றைச் சுட்டலாம்.

9.3 சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றினும் பெருங்கதையில் 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் (அஞ்சுபு 1- 12, 104 ; அடக்குபு 3.19 174...), துணைவினைவடிவங்கள் (வீசிட 2.12.93; புறப்படல் செல்லா 1.42.236; இவர்தர 2.11.82; சொரிதந்து 1 40 154...) அதிகமாகப்பயின்றுள்ளன. யகரமெய் ஆய்தத்திற்கு எதுகையாய் வருகின்றது (1.33.109; 1.56.161). வயின் எனும் இடைச்சொல் பெரும்பான்மை பெயரோடும் (தமர்வயின் 1.35.191...) மிகச் சிறுபான்மை வினையோடும் (வேண்டுவயின் 2.8.193) வருகின்றது.

10.0 சிந்தாமணி, சொல், தொடர், கருத்து, கதையமைப்பு ஆகிய பல நிலைகளில் பெருங்கதைக்குப்பெரிதும் கடன்பட்டிருக்கிறது. சான்றுகாட்டுதல் மிகை. எனினும் உ.வே.சா குறிப்பிடும் ஒரு செய்தியை உரைத்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

10.1 உ.வே.சா தம் சிந்தாமணி மூன்றாம் பதிப்பு முகவுரையில் கூறுவதாவது:

''இராமாயணத்தைக் கம்பர் அரங்கேற்றுகையில் 'அள்ளிமீதுலகை வீசும்' (விபீடணன் அடைக்கலப்படம் 133 ) என்னும் பாடலிலுள்ள 'வெள்ளிவெண்கடலின்' என்ற பகுதியைக் கேட்ட புலவர் ஒருவர் 'இது சிந்தாமணிப் பிரயோகமாயிருக்கிறது' என்று சொல்லியபோது கம்பர் 'சிந்தாமணியிலிருந்து ஓர் அகப்பை முகந்து கொண்டேன்' என்று விடைபகர்ந்தனர் என்பது பழைய பிரதியொன்றில் எழுதிய குறிப்பால் தெரியவருகிறது.'' இக்குறிப்பு 'வெள்ளி வெண்' என்னும் சொல்லாட்சி சிந்தாமணிக்குரியது என்று கம்பர் உள்ளிட்ட புலவர்கருதினர் என்பதைக் காட்டுகிறது. ஆனால் பெருங்கதையில் 'வெள்ளிவெண்டிங்கள்' (1.40.13) 'வெள்ளிவெண்மாடம்' (1.54.18)

எனுந்தொடர்களில் அச்சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. சிந்தாமணியிலும் 'வெள்ளி வெண்டிங்கள்' (1565) எனும் பெருங்கதைத் தொடரே பயின்று வருவதும் குறிப்பிடத்தக்கது. கம்பர் சிந்தாமணியிலிருந்து முகந்து கொண்டதாக் கூறப்படுவது சிந்தாமணி பெருங்கதையிலிருந்து முகந்து கொண்டதாகத் தெரிகிறது.

10.2 சிந்தாமணியிலிருந்து 'பெண்ணருங்கலம்' (198) எனுந்தொடரைச் சூளாமணி (இரதநூபுரச் சருக்கம் 110) கடன் கொண்டதாக தா.ஏ.ஞானமூர்த்தி குறிப்பிடுவார்.[5] இத்தொடரும் பெருங்கதையில் (4.6.28) இடம் பெறுவதே.

இவ்விரு சிறு குறிப்புகளும் உணர்த்தும் பேருண்மை, பின் வந்த காப்பியங்கள் பெருங்கதைக்குக் கடன் பட்டுள்ளன என்பதே.

சான்றெண் விளக்கம் :


1. A Survey of Indian History - P.23 K.M. Panikkar, Third Impression, Bombay, 1947.
2. An Historical Atlas of Indian Peninsula - PP.6, 7 - C. Collin Davies, Second Edition, London 1963
3. A History of Tamil Literature - P. 85, Annamalai University, 1965.
4. தமிழ்க் காப்பியங்கள் பக். 265 கி.வா. ஜகந்நாதன், இரண்டாம் பதிப்பு, சென்னை 1971.
5. A Critical study of Civakacintamani, P. 332, First edition. Coimbatore 1966.

26

# இளங்கோவின் புதுநெறி

## பழமையைத் தழுவல்

### அ] மாதவி வார்ப்பு:

*மருதம் வளஞ்சான்ற வயல்களைக் கொண்ட நிலம் . அங்கு ஆண்டின் பெரும்பகுதி உழைப்பிலும் சிறுபகுதி ஓய்விலும் கழியும். பயிரிட்டுப் பயன்பெறும் உழைப்புமிக்க காலம் ஒன்று. உழைப்பின் பயனை நுகரும் ஓய்வுமிக்க காலம் மற்றொன்று. வளமும் ஓய்வும் வாய்ந்த இடத்தில் கலைகள் சிறத்தலும் களியாட்டம் நடத்தலும் இயல்பு. மருத நிலத்தே கலைகள் செழித்தன. பரத்தமை நிலை பெற்றது.[1] பரத்தையை மருதத்துக் குரியவளாகச் சங்க இலக்கியங் காட்டுவதும் ஈண்டு கருதத்தக்கது.*

*பருந்தும் நிழலும் போலப் பரத்தையரொடு கலைகள் பிணைந்து பிறங்கின. கிரேக்கப்பரத்தையர் கலைத்தேர்ச்சி நிறைந்து விளங்கினர் என்பதும் அவருள் இசைப்பரத்தையர் (*Auletrides of Flute Player*). என ஒரு பிரிவினரே இருந்தனர் என்பதும் குறிப்பிட்டத்தக்கன. கூத்துக்கலையும் பரத்தமைத் தொழிலும் இணைந்து நிலவிய போக்கு இந்தியாவிற்கு உரியதாக அறிஞர் கருதுவர்.[2] துணங்கைக் கூத்தால் தலைவரை வயப்படுத்திய பரத்தையரைச் சங்க இலக்கியம் (குறு 364...) காட்டும்.[3]*

*சிலப்பதிகார மாதவி மடந்தை மருதவளஞ்சான்ற சோழ நாட்டினள். கணிகையர் குலத்தில் பிறந்தவள், எண்ணெண்கலையும் இசைந்த கலையரசி.*

### ஆ] கோவலன் மாதவி உறவு:

*சங்க இலக்கியம் பரத்தையரை 'வதுவை' செய்து வாழ்ந்த தலைவர்களைக் காட்டுகிறது (அகம் 36, 46.... ஐங் 61 கலி. 16, 18...)*

தலைவன் தலைவியோடு கொண்ட முறைமணம் 'வதுவை' எனுஞ் சொல்லால் குறிக்கப்படுவதும் (அகம் 86, 136 நற் 393). உரையாசிரியர் வதுவை எனுஞ்சொற்கு 'மணம்' என்று பொருளுரைப்பதும் ஈண்டு எண்ணத்தக்கன. பரத்தையை வதுவையயர்ந்து தனக்கே உரித்தாக்கிக் கொள்ளுதல் பண்டைக்கால நடைமுறை என்பதை உணர்கிறோம். பின்வந்த நம்பியகப் பொருள்,

*ஒருவன் தனக்கே உரிமை பூண்டு*
*வருகுலப் பரத்தையர் மகளி ராகி*
*காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர் (113)*

என இலக்கணம் மொழிவதற்கான இலக்கியம் பண்டே நிலவிற்று. பரத்தையோடு நெடிது தங்கித் தலைவியை நீடித்துப் பிரிந்த தலைவர் களையும் காண்கிறோம். (ஐங்.36, 40, 46; குறு. 203, 231; நற். 180)

கோவலன் மாதவியைத் தனக்கே உரியவளாகக் கொண்டதும் அவள் அவனுக்கே உரிமைபூண்டு வாழ்ந்ததும் கண்ணகியைவிட்டுப் பல ஆண்டுகள் மாதவியிடம் அவன் தங்கியதும் புதுமையல்ல, பண்டை மரபினவே.

### புதுமையைப் படைத்தல் :

'ஒருமனைவி முறை'யும் பரத்தமையும் தனிச் சொத்துரிமை நிலையில் தோன்றியன. மனைவியின் நீங்கிப் புறம்போய் இன்பம் காணும் வாயிலாக அமைந்த பரத்தை ஈன்றெடுக்கும் மகவுக்குத் தந்தைவழிச் சொத்துரிமையோ கொடிவழி உறவுமுறை உரிமையோ இல. மேலும் உடற்பொலிவைப் பேணிக்கொள்ளும் பரத்தையர் உடற்பொலிவு குன்றுதற்குக் காரணமான மகப்பேற்றினைப் பெரிதும் விரும்பார். தலைவியைப் 'புதல்வன்தாய்' (அகம் 6. ஐங் 90 கு. 3, 45) என அவள் மகப் பெற்று பொலிவு குன்றியதைச் சுட்டிப்பழிக்கும் பரத்தையரைக் காண்கிறோம். தான் மகப் பெற்றதால் 'தீம்பால்படுதல்' அஞ்சித் தலைவன் தன்னைப் புறக்கணிப்பதாய்த் தலைவியே கவலைப்படும் நிலையில் (அகம் .26) பரத்தை மகப்பயந்தால் என்னாவாள் என்று கூற வேண்டுவதில்லை. புதல்வனைப் பெறுவதால் பொலிவு குன்றுவதும் தலைவன் புறக்கணிப்பதும் ஒருபுறமிருப்பப் புதல்வரைப் பெறினும் அப்புதல்வர்தம் எதிர்காலம் இருட்காலம் என்பது குமுகாய நிலை. இந்நிலையில் பரத்தையர்க்கு மகப்பேறு மகிழ்ச்சிப் பேறாக இராது.

இந்தப் பின்புலத்துணையொடு சங்க இலக்கியத்துள் நுழைந்தால் பரத்தையர் மகவு பெற்றதற்கான எக்குறிப்பையும் எவ்விடத்தும் காணமுடியவில்லை. தலைவி மகவு பெற்ற குறிப்புகள் கிடக்கின்றன.

தலைவியின் குழந்தையைக் கொஞ்சும் பரத்தை (அகம் 16) எதிர்ப்படுகிறாளேயன்றிப் பெற்றமகனைப் பேணுபவளைக் காணோம். நற்றிணைத் தலைவியொருத்தி 'சிறுவரைப் பெற்றுச் சிறத்தல் பரத்தைக்கு அரிதினும் அரிது' (330) என்கிறாள். ஐங்குறுநூறு மகப்பெற்றுப் பயன்தராப் பரத்தையரைப் பூத்துப் பயன்படாக் கரும்பொடும் மகப்பயந்து பயன்படும் குலமகளிரைக் காய்த்துப் பயன்படும் நெல்லொடும் சார்த்திக் காண்கிறது.[4] மகப்பயந்து பயன்படும் மாட்சி பரத்தைக்கு இல்லை என்பதை ஐங்குறுநூற்று 57ஆம் பாடலின் உரையும் உணர்த்தும். இவற்றால் மகப்பேற்றினைப் பரத்தைக்கும் உரியதாகச் சங்க இலக்கியம் காட்டவில்லை எனத் தெளியலாம். பரத்தையர் எல்லாரும் எக்காலும் மகப்பெறாது இருந்திருப்பர் என்பதில்லை. சித்திராபதி மகள்தானே மாதவி! எனினும் பரத்தையர் மகப்பெறுவதைக் கூறாதொழிவது சங்ககால இலக்கிய நெறியாக இருந்திருக்கும் போலும்.

மாதவியின் படைப்பிலும் கோவலன் அவளொடு கொண்ட தொடர்பிலும் மரபைத் தழுவிச் செல்லும் இளங்கோ, கணிகையர் குல மாதவிக்கு மகள் பிறப்பதாகக் காட்டுதல் புதுநெறி வகுத்ததாகும். அம்மகட் பிறப்பை

> ''மாந்தளிர்மேனி மாதவி மடந்தை
> பால்வாய்க் குழவி பயந்தனளெடுத்து'' (2.15.22-23)

என மாடலமறையோன் வாயிலாகக் காப்பியத்தில் வெளிப்படுத்துவதும் தன் குலதெய்வத்தின் பெயரையே அக்குழந்தைக்கு இடுக எனக் கோவலனே குறிப்பிடுவதும் பெற்றோர் இருவரும் குழந்தைக்குப் பெயரிடுநாளில் செம்பொன் மாரி பொழிவதும் அப்புதுநெறியைத் துலக்கிக் காட்டுகின்றன. குலப்பிறப்பாட்டியாகிய கண்ணகிக்குக் குழந்தையில்லை என்னும் பகைப்புலத்தில் நோக்கும்பொழுது அப்புதுநெறி இன்னும் பொலிகின்றது. பிறந்த குழந்தை துறவியாகிச் சிறப்பது, அப்புதுநெறியைப் போற்றத்தகு நெறியாக்குகின்றது.

**சான்றெண் விளக்கம் :**

1. மருதவளம் மிகுந்த தஞ்சை மாவட்ட வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால் கலையும் பரத்தமையும் இணைந்த நிலைமை (இசை வேளாளர், மேளக்காரர்) எளிதில் புலனாகும்.
2. Dr. Fernando Henriques - Prostitution and Society - A survey ; Vol I primitive, Classical; and Oriental London 1962.
3. 'கூத்து' எனுஞ் சொல்லொடு தொடர்புடைய 'கூத்தி' கூத்தியாள் ''கூத்திக் கள்ளான்' எனும சொற்கள் பேச்சு வழக்கில் முறையிகந்த பாலுறவு கொள்வாரைக் குறித்தல் நோக்கத்தக்கது.

4. பாடல் 4 இன் பழைய உரை :

''பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையு முடைய ஊரன் என்றது, மகப்பயந்து பயன்படு குலமகளிரையும் அஃதில்லாத பொது மகளிரையும் ஒப்பக் கருதி ஒழுகுவான் என்றாளாம்.''

*(இ.ப.த.ம.9ஆம் கருத்தரங்கு 1977)*

■

27

# பாரதிதாசனின் 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது'

0.1. பாரதிதாசன் பழுத்த சைவக் குடும்பத்தைச் சார்ந்தவர். தம் இளமைக் காலத்தில் சமயச் சடங்குகளில் திளைத்தவர். ''அமாவாசை, கிருத்திகை போன்ற நாட்களிலும் சடங்கு முறையோடு நடந்து வந்தார். தம் குடும்பத்தினரும் தம்மைப் போலவே அணுப்பிசகாமல் ஒழுக வேண்டும் எனவும் வற்புறுத்திச் செயல்படுத்தினார். பிள்ளையார் விழாவுக்குத் தாமே மண்கொணர்ந்து பிள்ளையார் உருவம் அமைத்து வழிபாடு நடத்தினார். மற்றெல்லாரும் ஒப்புக்கு நோன்பிருக்கும் போது ஈரத்துணியோடு உண்ணாமலே இருந்து வந்தார்.... மாரியம்மன் விழாவாயிருந்தாலும் அதற்கான பாடலை எழுதி அரங்கேற்றி அச்சிட்டு வழங்குவார். தாமே இசையோடு பாடுவார். திருமண வாழ்த்து, அழைப்பிதழ் எழுதும்படி எவரேனும் கோரினால், விநாயகர் காப்பு, சரசுவதி, இலக்குமி வாழ்த்து முதலியவை எழுதிவிட்டே அழைப்புச் செய்தியைப் போடுவார்,''(1) பாரதிதாசனே

*முப்பதாண்டு முடியும் வரைக்கும் நான்*
*எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?*
*கடவுள் இதோ என்று மக்கட்குக் காட்டிச்*
*சுடச்சுட அவன் அருள் துய்ப்பீர்' என்னும் (2)*

எனத் தம் தொடக்கக்கால இறையீடுபாட்டைச் சுட்டுவார்.

0.2. முருகன், கண்ணன், விநாயகன், சிவன் முதலிய பல தெய்வங்களைப் பாரதிதாசன் பாடியுள்ளார். எனினும் அவர் மனம் பெரிதும் பற்றியிருந்தது முருகனையே. ''பாரதிதாசன் எனக்கு நண்பரா வதற்கு முன் சிறந்த சிவபக்தராக இருந்தார். சுப்பிரமணியர் மேல்

அவருக்குப் பக்தி நிறைய இருந்தது. அவர் என்னிடம் பக்திப் பாடல்களைப் பாடிக்காட்டினார். ''(3) எனப் பெரியார் ஈ.வெ.இரா கூறுவது நோக்கத்தக்கது. சுப்புரத்தினம், பாரதிதாசனாக ஆவதற்கு முன் சுப்பிரமணியதாசனாக இருந்திருக்கிறார்(4). இங்ஙனம் சுப்பிரமணியர் மீது பாரதிதாசன் கொண்டிருந்த ஈடுபாட்டின் விளைவாக எழுந்த நூலே 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது'.

*1.0.* இந்நூல் ''இது புதுவை சர்க்கார் பாடசாலை உபாத்தியாயர் கனகசுப்புரத்தின முதலியாரவர்களால் இயற்றப்பட்டு ஷெயூர் 'வேல்நிலையம்' உடையவர் காசி - லக்ஷ்மணப்ரசாதால் வெளியிடப் பட்டது.'' எனும் குறிப்போடு, 1926 இல் நாற்பது பக்க அளவில் இரண்டணா விலையில் வெளியானது.(5). 'பிள்ளையார் சுழி', 'வேலுமயிலுந்துணை' ஆகியவற்றோடு தொடங்கும் இந்நூல் ''செந்தமிழ்ப்புலவரும், புதுவை தமிழ்ச் சங்கத்தின் உதவியக்கிராசனரும், கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதரும், தமிழ் மகவுப் பத்திராதிபரும், கண்ணப்பர் கலம்பக ஆசிரியரும் ஆகிய திருவாளர்.வீ. துரைசாமி முதலியாரவர்கள்'' இயற்றிய இரு கட்டளைக் கலித்துறைப் பாடல் களைச் சிறப்புக் கவியாகப் பெற்றுள்ளது.

*தெய்வப் பிடிவள்ளி காந்தனற் சேந்தன் றிருவடிக்கு*
*மெய்வைத்த சீர்ச்சுப்பு ரத்தினப்பேர் கொளும் வேளிசைத்த*
*மையற்ற பாவி னினிமை கற்றார்கள் வழூஉக்கவிகள்*
*பொய்யுற் றெழுது மவர்க்கினிப் புத்தி புகட்டுவரே.*

*வேலேந்து சேவகன் மாமயி லாசல மேவுபிரான்*
*காலேந்து மித்துதி யோதினுங் கேட்பினுங் காணுநலம்*
*மாலேந்து சிந்தை மயக்கறு நல்ல மகிழ்வு வரும்*
*நூலேந்து சீர்தெரிந் தாசற லாநசைஇ நோக்குமினே.*

இச்சிறப்புக் கவிப்பாடல்கள், நூலில் அமைந்துள்ள பாடல்களின் இயல்பையும் அப்பாடல்களைப் படித்தாலும், படிக்கக் கேட்டாலும் எய்தும் பயனையும் சுட்டுகின்றன.

*1.1.* புதுச்சேரியிலிருந்து வடமேற்கில் ஏறத்தாழ இருபது கல் தொலைவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது 'தென்மயிலம்' எனப்படும் மயிலம். அவ்வூரிலுள்ள மலைக் கோவிலின் தெய்வமான சுப்பிரமணியர் ஆண்டுதோறும் மாசிமகத்தன்று புதுவைக் கடற்கரைக்கு எழுந்தருளுவார். அப்போது நிகழும் மாசிமக விழாவின் பொருட்டுப் பாரதிதாசன் இயற்றிய பாக்கள் அவராலும் பிறராலும் பண்ணுடன் பாடப்பெறும் (6). அங்ஙனம் பாடப்பெற்று மாசிமகவிழாப் பந்தலில் அரங்கேறிய நூலே 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது (7).

'மாசிமகோத்ஸவ மாமிந்த நாள் எங்கள் மயிலாசனனே வந்தனன்,'' ''பாசிமயில் மிசை மாசிமகத்தன்று நேசியருடன் நீ வந்தனை'' என நூலினகத்தே இடம்பெறும் பகுதிகள் நோக்கத்தக்கன.

2.0. ஒட்டுமொத்தமாக நூலினகத்தே இடம் பெற்றுள்ள பாடல்கள் முப்பது. எனினும் 'நூல்' என ஆசிரியரே தலைப்பட்டு அதன்பின் குறித்தவை இருபது. அவ்விருபது பாடல்களும் பாடல்பெறும் தலைவனாகிய முருகன் தொடர்பானவை. ஏனைய பத்துப் பாடல்களும் நூலின் முற்பகுதியில் அமைந்துள்ளன. அவற்றை இருவகைப் படுத்தலாம். விநாயகர்காப்பு, விநாயகர்துதி, சிவபெருமான் துதி, உமைதுதி, திருமால் துதி, சரஸ்வதி துதி, அவையடக்க வெண்பா ஆகிய ஏழையும் ஒருவகையாகவும் நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, மயில மலைச்சிறப்பு ஆகிய மூன்றையும் இன்னொரு வகையாகவும் கொள்ள லாம். முருகனைப் பற்றிய இருபது பாடல்களையும் பின்வருமாறு பகுக்கலாம்.

அ) ஆசிரியர் தம்மைத் தலைவியாகக் கருதி முருகனைத் தலை வனாக்கிப் பாடுபவை (2, 6, 11)

ஆ) தம் நெஞ்சை நோக்கிக் கூறுபவை (4, 9, 10, 15)

இ) முருகனை விளித்து அருள் வேண்டிப் பாடுபவை (1, 3, 5, 7, 8, 12, 14, 16,)

ஈ) முருகனின் வேலையும் மயிலையும் புகழ்பவை (18, 19)

உ) படர்க்கை நிலையில் முருகனின் பெருமையைப் பேசுபவை (13, 17)

ஊ) பொதுநிலையில் முருகன், அவன்வேல், உலகு முதலியவற்றை வாழ்த்துவது (20).

3.0 இனி, நூலில் குறிப்பிடப்படும் தெய்வங்கள், அத்தெய்வங் களின் தோற்றம், பண்பு ஆகியன, தெய்வங்களின் செயல்கள், தெய்வங் களுக்குத் தாம் படைப்பவை, தெய்வங்களிடம் தாம் வேண்டுபவை, வழிபாட்டால் அடையலாகும் பயன் ஆகிய செய்திகளைப் பாகுபடுத்திக் காணலாம்.

3.1. சிறப்பாக முருகனும், பொதுவாக விநாயகர், சிவபெருமான், உமை, திருமால், சரசுவதி ஆகிய தெய்வங்களும், பெயரளவில் வள்ளி, தெய்வானை, நான்முகன் ஆகியோரும் நூலில் குறிப்பிடப்படுகின்றனர்.

3.2. 'கயமுகமுறு பெருமாள்' 'உமையவள் தரு முதன் மகன்' என விநாயகரும், 'நதியொடும் பிறையணிந்திடு பரம்பொருள்' 'தோலுடையான் ஆடரவே தானணிவான்' 'இப்புவிக்கும் எப்புவிக்கும்

எப்பொருட்கும் அப்பன் வித்து' 'வேதனுக்கும் மாயனுக்குமே கிடைக்கிலாதவஸ்து' எனச் சிவபெருமானும், 'புவன நாயகியுமை பார்வதியுபகாரி அமலி, நிருமலி, காமாக்ஷி, மீனாக்ஷி, சிவபெருமானிடையினிலே படர்கொடி' 'இமமலை மாதவமணி, 'பரை' என உமையும், 'பாலாழி மேலினிது கண்துயிலும்மாதவன்' 'மார்பிலணி வண் துளபமாலை உடையோன்' எனத் திருமாலும், 'நான்முகன் மனை, 'கவிதையின் உரு' எனச் சரசுவதியும் தோற்றமும் பண்பும் துலங்கச் சுட்டப்படுகின்றனர். நூலின் தலைவனாகிய முருகனோ 'கந்தன், காங்கேயன்' 'தமிழ்த்தேன் குலவு மலர்வாயன்', 'குகன், ஷண்முகன், குமாரன், பாலசுப்பிரமண்யன், மயிலவன் எனப் பல பெயர்களால் சுட்டப்பட்டு 'அறுபொரியின் வடிவு', 'குஞ்சரியோர் பாகம் குறவள்ளியோர் பாகம்', 'குளிர் வதன மீராறு', 'புனையும் கடப்பந்தார்', 'சகலவுயிர்க்கும் வேர்', 'சதுர் மறை முடிவு', 'அரனருள் மகன் அரியின் மருகன்' எனப் பலவாறு புகழொளியில் புலப்படுத்தப்படுகிறான். ஒரு பாடல் முழுமையும் (13) முருகனின் பல பண்புகளையும் காட்டும் வருணனையாகவே அமைந்துள்ளது.

3.3. நூலில் இடம் பெறும் தெய்வங்களின் புராணப் பின்னணியில் அமைந்த செயல்கள் பலவும் குறிப்பிடப்படுகின்றன. 'குமரன் அழ ஒரு கனியை அரனைவலமிடுவதில் உணும் அரிமகிழ் மருகோன், மலை மதகரி இடர்புரியுமோர் மதியிலி அசுரனை ஒருநொடி மடிய அமரர் துயர்களையும் அடல் 'வீரன்' என விநாயகன் செயலாற்றல் வெளிப்படுத்தப் படுகிறது. அமரர் தம் பகை கெடும் திரிபுரம் பொடிபடும் பரமனம்பகம் விரிந்தாலே' எனச் சிவபெருமான் புரமெரி செய்தி புகலப்படுகிறது. ஞானசம்பந்தனுக்குப் பாலும் முருகனுக்கு வேலும் கொடுத்த உமையின் பெருமை 'முனம் சிறு பாலனங்கழவே கறந்தமுதே தரும் கருணாலையம்', 'அசுரரின் வேரழிய மயில் வாகனனிடம் வேலுதவிய தாய்' என உரைக்கப்படுகிறது. திருமால் 'இச்சகத்தினைக் களிப்பினில் படைத்தளித்தழிக்கும் எழிலோன்', 'முதலை வாய்க் கரிக்கிரங்கி வந்து மெய்ப்பதம் கொடுத்தோன்', 'பாஞ்சாலிக்கு ஆடை அளித்தோன்', 'வித்தை கற்குமிச்சை சுப்புரத்தினத்துக் களித்த பெருமாள்' எனப் பலவாறு போற்றப்படுகிறார். 'ஞானந்தரும் இறைவி' யாகச் சரசுவதி இலங்குகிறாள். 'அங்கையிலே பரை தந்த சக்தி வாங்கி' அசுரரை அழித்தவனாகிய முருகன் பாட்டுடைத் தலைவனாதலால் அவனின் பல செயல்களும் விரிவாகக் குறிப்பிடப் படுகின்றன. 'குறுமுனிக் கினிதருள்செயும் பாலசுப்ரமண்யன்', 'அருணகிரிக்கருள் புரிந்த பாலசுப்ரமண்யன்' 'ஆக்கியழித்தருள் முதல்', 'கீரன் துயரம் நீக்கத் தண்ணிய கேடில் பூம்பதம் தந்த புண்ணியன்', 'சூரன் கிளையோடன்று

தீர்த்தருள் மூர்த்தி', 'முக்கணனுக்கினிகிற் ப்ரணவப்பொருள் ஒதும் நாதி, 'ஆதி', 'பிரமனை ஜயித்தகந்தா', 'போதன்தனை ஓதுஞ் சிறை போகும்படி ஏவுங்குருநாதன்', 'சாயும் கிழவனென வனத்திலோர் தினத்தில் தனிவள்ளி தோளே தரச் செய்யும் வேளே', 'மாக்கடல் நீர் தீப்படக் கைவேல் விடுங் கந்தனே' எனப் பலவாறு புகழப்படுகிறான். சூரனை அழித்த செயலும், கீரனைக்காத்த செய்தியும், நான்முகனைவென்ற சிறப்பும், மாறுவேடத்தில் குறத்தியை மணந்ததிறனும் பன்முறை சுட்டப்பட்டுள்ளன. இவற்றால் பாரதிதாசனுக்குப் பக்திஇலக்கியத்தில் இருந்த ஈடுபாடும் புராணச் செய்திகளிலிருந்த புலமையும் புலனாகின்றன.

3.4. பாரதிதாசன் விநாயகரை நோக்கி

'மலியவல் பொரியொடு பயறுகள்
மதுநிகர் கனிவகை அனுதினம்
வரையென நிறைய உனதுதிரு அடிமேலே
மனமகிழ இடுவன்'

எனத்தாம் படைப்பவற்றை முன்கூறிப் பின்னர் அதற்கு ஈடாகத் தமக்குப் பாட்டாற்றலைத் தர வேண்டுமென்கிறார்.

வருபுதையலினிதி யெனமலை
வழியருவியென வெனதுகவி
வளமொடு புதியன வெனவிரி புவிமேலே
பொலிதர அவை புகழ்பெற மிகு
புலவரெவ வரு மினிதென நனி
புவியினர் உளமதிலொளிதர அருள்வாயே.

என வேண்டுவதைக் காணலாம். சுரசுவதியிடமும்,

'வானமிருந்திழியும் மழைபோல கொட்டும்
வாக்குத் தருக மலர்க்குழலாளே'

என இரக்கிறார். ஆனால் பாட்டுடைத் தலைவன் முருகனிடம் வேறுவகை வேண்டுதல்களை முன்வைக்கிறார்.

ஆழ்கடல் புவிமே லெமக்கினிதான பாரத பூமியை
அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய் - வானில்
எட்டவே உரிமைக் கொடிதூ க்குவாய்....
வறுமை நோய்கள் அச்சமுதலாம்
வழிமறிக்கு மிக்கலி தவிர்த்தினி
வரவிடாதே எமது நாட்டிற் கெடுதலை - ஈக
வாழ்க்கையில் நல்வாழ்க்கையாகும் விடுதலை'

எனப் பாரத விடுதலைக்கு முருகனைத் துணைநிற்க வேண்டுகிறார். பெண்டிரிடமிருந்தும் நோய்கள் முதலியவற்றிடமிருந்தும் தம்மை விலக்கி,

*'மலரே நிகர்த்த பதநீழலுக்குள்*
*வகையே சுகிக்க அருள் தாராய்'*
*'பொன்னடியைத் தந்தருளப்பா'*
*'ஈக நற்போதம் உற்சாகம் ஐயா விரைவாய்'*
*'நலியினா லுருகா திருக்கும்*
*நிலையருள் முருகா'*
*(முதுமை) 'வருவதன் முன்னே - நின் பார்வை*
*வசத்திலாக் கென்னை'*

என வேண்டுவதையும் காணலாம். இவற்றால் இறைவனடி சேர்தலில் அவர்க்கிருந்த ஈடுபாட்டை அறியமுடிகிறது.

3.5. உலகோர் நாள்தோறும் விநாயகரின் எழில் மலரடியை உளமதில் நினைத்தால் அவர்தம் 'உறுவினை எவைகளுமிலையென இனிதாம்' எனவும், சிவனை வழிபட்டால் 'உயர் நலம் மருவிடும், நிறைகலை குடி புக வரும், அறிவு பெருகிவிடும், உலகு புகழ் பரவும், ஆரும் மெச்சுவார். பகைவர் பேர் நினைத்திடார். நிதி குபேரனுக்கு மேல் நிறையும்' எனவும் வழிபாட்டுப் பயனைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் பாரதிதாசன்.

4.0. முன்னோர் மொழிமுறையைப் பின்பற்றித் தம்மைத் தலைவியாகவும் முருகனைத் தலைவனாகவும் கொண்டு பாடுதலையும், உலகியல்பைச் சுட்டியும் பெண்களைப் பழித்தும் நிலையாமையைப் பாடுதலையும், பாடல்களின் இறுதியில் ஆசிரியர் தம் இயற்பெயரைச் சுட்டிச் செல்வதையும் காணலாம்.

4.1 முருகன் ஏற்கனவே இருவரை மணந்தவன் எனத் தெரிந்தும் இத்தலைவி விரும்புகிறாள். காமம் மீக்கூர்ந்த நிலையிலும், களவுத் தொடர்பை நினைவுபடுத்தியும், கற்பு வாழ்வில் பிரிவைச் சுட்டியும் பேசுகிறாள். தோழியிடம்

*'மனமிருந்தால் வரலாம் மயில்வாகனன்*
*வந்தெனக் கின்பம் தரலாம்...*
*அந்நாள் முதலிந் நாளாய்*
*அவன் மோகமே கூர்வாளாய்*
*மின்னலிடையைத் தூளாய்*
*வீசுதென் குறைகேளாய்'*

எனத் தன் குறையைச் சொல்கிறாள். அவளிடமே,

தாளமுடிவதில்லை முருகன்மேல்
தையலெனக்குள்ள காதலை - மத
வேளின் கணைபட்டுக் காதலை
வாதனை தீரமணப்பதின்றி யின்னும்
சோதனை செய்திட வேண்டுமோ - இந்த
மாது பிறன்கையைத் தீண்டுமோ

எனக் களவு உறவின் உறுதியைச்சுட்டிக் 'குகனைக் கொண்டுவா' எனத் தூது போக்குகிறாள். குகனை மணந்து கொண்ட பின்னும் அவன் பிரிகிறான். பிரிந்த அவனிடம்

'நாட்டிலிருந்திடு சீமாட்டிகள் என்றனைப் போல்
வீட்டினதிபதியைக் கோட்டு மலைமங்கை யரிடம்
கூட்டியனுப்பிவிட்டுக் கூகூவென்றழு வாரோ
கேட்டிலிருந் தென்னை மீட்டிட விரைந்து போய்
மயிலேறிவரச் செய்குவாய் எழில்
மதுகரமே குமரனை நீ'

என வண்டினைத் தூது விடுகிறாள். பண்டை அடியார் முதல் பாரதியார் வரை பலரும் பாடிய 'நாயகன் நாயகி' உறவுமுறைதான் இது.

4.2. நிலையாமையைச் சுட்டிக்காட்டி இறைவன் திருவடியைச் சேர்தலே ஏற்றது எனப் பாடுவதைக் காண்போம்.

'உலகமுஞ் சடவுடம்பெவை களுங் கணமறைந்
தழிவுறுஞ் சிறிது நம்பாதீர் - தொகை
நகையுடை பொருள் நிலம்மனை மகளுறவினர்
பரிகரி முதலிவை களிலொரு பயனிலை',

'நீச தந்திரமே புரிந்திடு மானிடந்தனிலே கிடந்தலையாது'
'நாழிகை யரை யேனும் சகியேன் நச்சுப் பொய்கையன்றோ
இப்பூமி'
'உலகம் கனவெனில் அதிலும் கலகம் மலையெனப் பயிலும்'
'மனமே குரங்கெனத் திரியும்
தினமே பவத்தொழில் புரியும்'

என உலக, உள்ள இயல்பைச் சுட்டி

'தொகைப்பொருள் உடன் வருமோ
தூய்மைப்படவே நீ செயும் ஓர் நற்றவமே வருமோ'

என வினவுகிறார். பெண்ணைப் பழித்து

'மாதெனும் பெரு மேதி வந்தினி
மேலும் வஞ்சனையால் நெருங்குமுன்'

என்னை அடிதந்து ஆட்கொள்ள வேண்டுமெனப் பெண்ணாகிய உமையிடமே வேண்டுகின்றார். இந்தப் பாடுமுறையும் மாணிக்கவாசகர், அருணகிரியார் முதிலிய அடியாரிடம் காணக் கூடியதே.

4.3. திருஞானசம்பந்தர், பதிகங்களின் இறுதியில் தம் பெயரையும் இணைத்துப் பாடுவதைப் போலப் பாரதிதாசனும் பாடல்களின் இறுதியில் 'சுப்புரத்தினம்' எனும் தம் இயற்பெயரை இணைத்துப் பாடுவதைக் காணலாம். மொத்தமுள்ள முப்பது பாடல்களில் இருபத்திரண்டு பாடல்களில் அவர் பெயர் இடம் பெற்றுள்ளது.

'சுப்புரத்தினம் நாளும் வேண்டும் அம்மை மீனாக்ஷியே'
'ஒப்புரைத் தனன் கனக சுப்புரத்தினம்'
'தாஸன் சுப்புரத்தினம் புகலும் பச்சை மயில்'

எனப் பொதுப்படப் பெயர் சுட்டுவது சிறுபான்மை. தம்மையும் தம் பாட்டையும் புகழும் அடைகளோடு பெயர்சுட்டுவதே பெரும்பான்மை. காட்டாக

'தெள்ளுதமிழ்ச் சுப்புரத்தினம்'
'தேனையொத்த சுப்புரத்தினத்தினற் பதத்தினுக்கு'
'சுப்புரத்தினம்சொல் நறுங்கவிக் கிரங்கி'
'சுப்புரத்தினத்தின் நற்றமிழ்ப்பண் செப்பி'
'சுப்புரத்தின நற்கவி மட்டுக் கலந் துண்ணுவாய்'

முதலிய பகுதிகளைச் சுட்டலாம்.

4.3.1. திருமால் வணக்கப்பாடலில் 'வித்தை கற்குமிச்சை சுப்புரத்தினத்திற்களித்த பெருமாளே' எனப் பெயர்சுட்டி வரும் பகுதிக்கும் அவர் வாழ்க்கைக்கும் ஏதும் தொடர்பிருக்குமோ என்ற எண்ணம் எழுகின்றது.

5.0. பாடல்களில் அமைந்துள்ள சொல்லாட்சி, ஓசைநயம், உவமைகள், கற்பனை, வருணனை, நகைச்சுவை ஆகியவற்றை அறியலாம்.

5.1. விலாசவிழி, அதிராக இடி, மழைமுத்துமாலை, அமுதச் செந்தமிழ், பாசிமயில், கட்டுடல் மட்கலம், மயலார் தடக்கண் மடவார், புயல்வேழம் முதலிய அழகிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன. கொந்திடும், தார், நளிர், பணி (அணி), பொதும்பர், முந்திரி (சிற்றளவு), வெற்பு முதலிய அருஞ்சொற்களும்; உச்சரி, ஏலாது, ஒக்கவே, கெடுதலை, சகியேன், சள்ளை, சீமாட்டி, சேதி, ஞாயம், நாலாவிதத்தும், நிச்சயம், போச்சுது, மனது, மாச மாசம், மெச்சுவார், வீசுது, வேணும் முதலிய எளிய வழக்குச் சொற்களும்; அசலம், அதிபதி, அந்தகன்,

அவுஷாதி, ஆபரணாதி, சிந்தாகுலம், சுதோகதி, சுரோணிதம், சோதரர், சோபிதம், ததி, தபோதனர், தரிசனம், நர்த்தனம், நிகேதனம், நிருமலி, பிரக்ஞை, மகிபா, மகோத்ஸவ, மிஷ்டன், மேதி, வஸ்து, வாலிபம், விக்கினம், விகசிதம், விமோசனம், விஷயாதி, ஐயித்த, ஷண்முகன், ஸாஜ்வல்யன் முதலிய ஏராளமான பிறமொழிச் சொற்களும் பயின்று வருகின்றன. சில பிறமொழிச் சொற்களைத் தமிழியல்புக்கேற்ப மாற்றாமல் ப்ரசித்தம், ப்ரணவப் பொருள், ப்ரவாகனிலோசனன், ரத்னமணிமாலை, ரவி, ரக்ஷித்திடல் என மொழி முதலில் வாரா எழுத்துக்களில் வருமாறு கையாண்டுள்ளார்.

'பராபரன் மயூரன் பார்வதி குமாரன்
தராதலாதாரன் ஜெயவீரன் உதாரன்'

என அடி முழுமையும் பிறசொற்கள் அடுக்கி வருமாறும் பாடியுள்ளமை ஆசிரியர் பாடலியற்றிய காலக்கட்டத்தை எண்ணச் செய்கிறது.

5.2. தென் மயிலாசல நாட்டின் நீர்வளத்தைப் பாடும் பாவலர்,

'மலைவிட்டு நீங்கிப் பொன்னலை கொட்டி மூங்கிலின்
குலமுற்றும் வாங்கிப்பன் மலரிட்டு வேங்கையின்
தலைமுட்டு நதி வெள்ளமே - ஏரி
குளங் குட்டை யவையுள்ளுமே - இரு
நிலமுற்றும் குதிகொள்ளுமே...'

எனத் துள்ளும் புதுப்புனலை ஓசை நயத்தால் அள்ளிக்காட்டுகிறார்.

'வள்ளி தந்திரம் கற்ற வள்ளி வனத்திலன்று புள்ளி
மயில் வாகனன் நள்ளிருளில் உள்ளமயங்கித்
துள்ளிவர மருந்தே உள்ளிச் செய்தாளது போல்
எள்ளத்தனை யிருந்தால் சள்ளைக்கு வழியுண்டோ'

எனத் தலைவி வள்ளியைச் சாடுவதிலும் அவளாற்றல் தனக்கு வாய்க்க வில்லையே என வாடுவதிலும் அமைந்துள்ள எதுகைத்தொடை நயம் இசையினிமை சேர்க்கிறது. முப்பது பாடல்களில் மூன்றே நேரிசை வெண்பாக்கள். ஏனைய இருபத்தேழும் இசைப்பாடல்களே. பாடுவதற் காகவே இயற்றப்பெற்றன. ஆதலால் பாடல்களில் ஓசை நயமும் ஓட்ட நடையும் இணைந்து செல்கின்றன.

5.2.1. அசாவேரி, அடாணா, ஆனந்தபைரவி, இந்துஸ்தான் பியாக், இந்துஸ்தானி, உசேனி, சகானா, சங்கராபரணம், செஞ்சுருட்டி, தேசிகதோடி, தேசிகம், பைரவி ஆகிய இராகங்களும் அடசாப்பு, ஆதி, ஏகம், ரூபகம் ஆகிய தாளங்களும் பாடல்களுக்குக் குறிக்கப்பட்டுள்ளன. 'தேவகி மைந்தனான கண்ணனைத் தேடுவோம் என்ற மெட்டு',

'பாலாபிஷேகப் பழநி மலையப்பன் என்ற மெட்டு, நன்னபியாரமா என்ற மெட்டு' என்பன போன்ற மெட்டுக்குறிப்புகளும் சில பாடல்களுக்குத் தரப்பட்டுள்ளன. ''சுப்பிரமணியர் துதியமுது என்ற நூலிலுள்ள கீர்த்தனைகள் கீர்த்தனாசிரியர்கட்கும் வழிகாட்டும் சிறப்புடையன'' (8) எனும் பாராட்டு இவண் நோக்கத்தக்கது.

5.3 பொருளைத் தெளிவாகக் காட்டுதற்கும் பொலிவைக் கூட்டுதற்கும் பல உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காட்டாக

'சுப்புரத்தினம் ஓது நற்கவிப்பொருள் போலும் நெல்'
'தொழுபக்தர் முருகா என்றழுகைக் கண்ணெழு மோசை
சுரமொத்த கரதாளம் நிரையொத்த திடிமேளம்'
'ஏறுமயில்கார்கடல் என்னும் வன்னம் துன்னும் அதில்
இலங்கு கண் மீனென மின்னும் மின்னும் மின்னும்
ஆறுகதிர் போல் முகம் மன்னும்'
'குளிர் வானிடையே குவி தாரகை போல்
ஒளிர் தோகையிலே சுடர் காசுகளார் (மயில்)'

போன்ற பல உவமைகளைச் சுட்டலாம்.

5.4. இந்திர போகத்தைக் கற்பனை செய்கிறார் பாவலர்

'கற்பக நீழற்குளிர் ஓர்பால் - அரம்பையாதி
பொற்புடையார் நற்களி ஓர்பால் - சுரர்மனிதர்
ஒத்தெவரும் சொற்புகழ் ஓர்பால் - தினம் புசிக்கும்
புத்தமுதத் திற்சுவை ஓர்பால் - மிகவே துலங்க
ஐராவதன் பிடிதனில் அமர்வுற அமரரும் முனிவரும்
கைதாம் தொழுதிட ஒருகுடை அழகுடன் நிழலிட அனையதோர்
இந்திர போகம்'

என இந்திரவுலகத்து இருப்பவை என மரபுவழிச் சொல்லப்படுபவற்றைக் காட்சி வகைப்படுத்துகிறார். நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பைப் பாடும்போது பாவலரின் கற்பனையாற்றல் சிறகு விரிக்கிறது. நகரத்தின் மதிலையும் அகழியையும்

'அட்டதிசை யோடி விண்முகட்டினையுமோதிரவி
வட்டமுமிடாது யுகமுற்றினும் விழாதபடி இட்டநகர் மாலையெனக்
கட்டு மதிலும் அதனைச் சுற்றியகழும்'

என நகரத்திற்கு மாலையாக்குகிறார் பாவலர்.

5.5. புதுவை நகரும், பெண்ணும், இயற்கை எழிலும், வேலும், மயிலும், முருகனும் பலவாறு வருணிக்கப்படுதலைக் காணலாம்.

'புரைதரு தெருவரிசை யொடமர்
புனிதமொழி யரிவையர் களுறை
புதுவை'

எனப் புதுவையின் தெருவையும்

'அணிவயிர வலகு தலைமிசை எழில்முடி
மணியென ஒளிவிழி மரகதமலை நிகர்'

மயிலையும் வருணித்தல் குறிப்பிடத்தக்கன.

5.6. நகைச்சுவை தோன்றப் பாடுவதில் பாரதிதாசனுக்குத் தனியிடமுண்டு. (9) பிற்காலத்தில் அவர் பாடல்களில் ஓங்கிற்கும் நகைச்சுவையின் வித்தை

'நோய்களும் பலகோடியுண்டதி
னால் வருந்திடு போதுவந்தவு
ஷாதிதந்துமொர் சோதிடன் குண
மாகுமென்றதிலேபணங்குறை
யாது தந்தொரு நாள்கடந்தபின்
ஓலை வந்தது மேலிருந்தென
ஓடிவந்தெம தூ தருந்தம
தூர் வரும்படி கூவுமுன்பெனை ஆதரி

எனும் பகுதியிற் காணலாம். 'ஒருநாள் கடந்தபின்' 'தமதூர் வரும்படி' எனும் தொடர்கள் எண்ண எண்ணச் சுவை பயப்பன.

6.0. 'சாதியிருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே' எனப் பிற்காலத்தில் முழக்கமிட்ட பாரதிதாசன் செங்குந்த முதலியார் பிரிவைச் சார்ந்தவர். செங்குந்த முதலியார்களுக்கு மயிலமலை முருகனிடம் அதிக ஈடுபாடு உண்டாம். இதனை நாம் உய்த்துணரும் வகையில்

சமயம் வருதல் மெய் எனதுறவினர் சரவணபவ ஓம் எனச்
சாற்றினர் பகை நாற்புறம் வளைத்தே நொறுக்கிடுவோ மினிக்
கையில் அவனருள் உண்டு கண்டாய்
கந்தன் படைச்செங்குந்தர் களாய்த்
துயர் ஒழித்தெழுவோ மினிமேல்
பயமிலை குலம் உய்யும் உய்யும் உய்யும்.

எனும் பாடற்பகுதியை அமைத்துள்ளார். 'எனதுறவினர்' 'செங்குந்தர்கள்' 'குலம்' என இப்பகுதியில் இடம் பெறுந்தொடர்கள் இதனை உணர்த்தும். எனினும் 'யாவருமொரு சோதரர்' எனுமுணர்ச்சி அப்போதே பாரதிதாசனுக்கு இருந்தது என்பதை உமை வணக்கப்பாடலால்

உணரலாம். முந்திய போக்குக் கருகிப் பிந்திய போக்குப் பெருகிய நிலையைப் பின்வந்த படைப்புகள் காட்டுகின்றன.

7.0. பாரதிதாசனின் பிற்காலப் போக்குகள் முளைகாட்டும் இடங்களையும் இந்நூலில் காணமுடிகின்றது.

7.1 தமிழின் வெற்றிக்காகத் தந்நேரிலா வகையில் உரத்துப் பாடிய பாரதிதாசன், தமிழைத் தெள்ளுதமிழ், அமுதச்செந்தமிழ், தெளிதமிழ், இனிமைத்தமிழ் என அடையிணைத்து மகிழ்ந்ததோடு 'வெல்க இனிமைத் தமிழின் வீறு' எனும் தொடரால் இந்நூலை முடிக்கின்றார். சுப்பிரமணியர் துதியமுது தமிழின் வெற்றி விழைவில் முடிகின்றது. அம்முடிவே பின்வந்த படைப்புகளில் கிளைத்துப் படர்ந்து நீக்கமற நிறைந்து விடுகின்றது.

7.2. 'பாரதிதாசன் கவிதைகள்' (முதற்றொகுதி) காட்டும் மயில் 'ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகளை'த் தோகையில் கொண்டது. இந்நூலில் இடம் பெற்ற மயிலும் 'ஒளிர்தோகையிலே சுடர் காசுகள்' நிறையப் பெற்றது.

7.3. 'அனைவரும் உறவினர்' எனப் 'பாரதிதாசன் ஆத்திசூடி' தொடங்குகிறது. அதன் வித்தை 'யாவருமொருசோதரர்' எனத் துதியமுதில் காண்கிறோம்.

7.4. பிற்காலப் படைப்புகளில் பரவலாக இடம் பெறும் 'கொந்திடும்' (புரட்சிக்கவி) 'ஏலாது' (அழகின் சிரிப்பு...) மணிவாக்கு (முதற்றொகுதி...) ஏழ்கடல் (சக்திப்பாடல்) போன்ற சொல்லாட்சி களைத் துதியமுதிலும் காண்கிறோம்.

7.5. இசைப்பாடல்களாலான துதியமுதில் பல இடங்களில் இசைக்காகச் சொல்லைச் சிதைத்துப் போடும் 'வகையுளி' அமைப்பைக் காணலாம். பாரதிதாசனின் பிற்கால இசைப்பாடல்களிலும் இதைப் பரவலாகக் காணமுடியும். காட்டாக

'பாப்புனைதற்கான - அநு
பவம் பலபுகல்வான்'

எனும் புரட்சிக்கவிப் பகுதியைச் சுட்டலாம்.

8.0. பாரதிதாசன் நிறை நூலறிவினர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் முன்னோர் மொழியையும் மொழிந்த பொருளையும் அவர் பொன்னே போல் போற்றியிருப்பதைத் துதியமுது புலப்படுத்துகிறது.

8.1. கடல்மேல் வரும் கதிரவனைப் போல மயில் மேல் முருகனை வரவேண்டிடும்

'சீர்கடப்பந்தார் குலுங்க மயில் மேலே அலை
சீறுகடல் மேலுதித்த வெயில் போலேவர
இதுவேளை குகப்
பெருமாளே'

எனும் பகுதி திருமுருகாற்றுப்படையின் தொடக்கத்தை நினைவூட்டு கிறது.

8.2. மயிலாசல நகரின் கோபுரங்கள் மீது கொடிகள் அசைவதை

'மின்னுமணிக் கோபுரங்களின் சிகர மீதணிந்த
பொன்னுடை நிகேதனங்கள் விண்ணகரின் மாதர்தமை
இந்நகரில் வாருமென ஆடியழைக்கும் அவரை ஓடியிழுக்கும்'

எனப்பாடுவது சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய இலக்கியங்களில் இடம் பெறும் கொடியசைவுத் தற்குறிப் பேற்றங்களை அடியொற்றியதே.

8.3. மாணிக்கவாசகரின் திருவெம்பாவை (9, 16) குலசேகராழ் வாரின் ஊனேறு பதிகம் ஆகியவற்றை மனத்துட்கொண்டு 'மயிலம் சுற்றிவருவார் குடியில் உதிப்பேனோ' எனப் பாரதிதாசன் பாடுவது நோக்கத்தக்கது.

8.4. தென்மயிலாசல நாட்டின் சிறப்பைப்பாடும் பாரதிதாசன், கடலில் நீருண்ட முகில் மலையில் மழைபொழிய, அது அருவியாகி, ஆறாகிப் பலவளம் திரட்டிப் பாய்வதாகவும், கண்ட உழவர் உழுது, வித்தி, நட்டு, ஓம்பிப் பயன்பெறுவதாகவும் ஒரேபாட்டில் குறிப்பிட் டுள்ளார். திருத்தக்கதேவர் நாமகள் இலம்பகத்தின் தொடக்கத்தில் ஏமாங்கத நாட்டின் வளத்தை இயம்பும் பகுதி இதனொடு ஒப்பிடற் குரியது.

8.5. துதியமுதுப் பாடல்

'சயமுரசடி பட அமரர்கள் சயசயவெனுமொலி திசையுறப்
புயவலி யசுரரை எதிர்கொடு புகையொடு கனலெழ இருபுடை'

எனச் சூரனொடு செய்த போரைச் சொல்லிச் செல்கிறது. இப்பகுதி, கலிங்கத்துப்பரணியின் 'போர் பாடியது' பாரதிதாசனின் நினைவில் படிந்திருக்குமோ என எண்ணச் செய்கிறது.

8.6. சித்தர் பாடல்களில் பாரதிதாசனுக்கு அதிக ஈடுபாடு உண்டு. (10) 'கட்டுடல் மட்கலம்' எனும் துதியமுதுத்தொடர், கடு வெளிச் சித்திரின் 'நந்தனவத்திலோர் ஆண்டி'யை மனக்கண்முன் கொணர்கிறது.

*8.7.* துதியமுதைப் பொறுத்தவரையில் பாடும் முறையிலும் பொருளிலும் அருணகிரிநாதரின் ஆட்சியே மேலோங்கியுள்ளது. பாரதிதாசன் வெளிப்படையாகவே

*'நினதொரு புகழ்தனை மொழிந்த*
*அருணகிரிக்கருள் புரிந்த பாலசுப்ரமண்யனே'*

என அருணகிரிநாதரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். 'மருவே செறித்த குழலார் மயக்கி' எனத் தொடங்கும் அருணகிரி நாதரின் சுவாமி மலைப்பாடலைப் பின்பற்றித் துதியமுதின் மூன்றாம் பாடல் அமைந்துள்ளது. 'கைத்தல நிறை கனி' எனத் தொடங்கும் திருப்புகழ் விநாயகர் வணக்கப்பாடலை அடியொற்றி

*'மலியவல் பொரியொடு பயறுகள்*
*மதுநிகர் கனிவகை யனுதினம்'*

படைப்பதாக விநாயகரை வணங்குகிறார் பாரதிதாசன். துதியமுதின் பதினாறாம் பாடல், பிறப்பிலிருந்து பல பருவம் எய்தி இறப்பது வரையான வாழ்க்கைத் துன்பங்களை அடுக்கிக் கூறி அவற்றினின்று விலக்கித் தன்னை ஆட்கொள்ள வேண்டுவதாக அமைந்துள்ளது. இது, 'கருவடைந்து பத்துற்ற திங்கள்' எனத் தொடங்கும் அருணகிரிநாதரின் திருப்பரங்குன்றப் பாடலைப் பெரிதும் தழுவியமைந்தது. துதியமுதில் 'வண்ணம்' எனத் தெளிவாகச் சுட்டப்பட்ட இசைப்பாடல்கள் ஆறு. சிறப்பாக அவற்றிலும், பொதுவாகப் பிற இசைப் பாடல்களிலும் அருணகிரியின் சந்த ஆட்சியைக் கேட்க முடிகிறது. சுருங்கக்கூறின், குமரகுருபரரிடம் பாரதிதாசனுக்கிருந்த ஈடுபாட்டை எதிர்பாராத முத்தம் காட்டுவது போலவே அருணகிரிநாதர் பாரதிதாசனிடம் செலுத்திய ஆட்சியைத் துதியமுது காட்டுகிறது.

*8.8.* 'சிந்துக்குத் தந்தை' எனப் பாரதியைப் பாராட்டிய பாரதிதாசன், பாரதியைப் போலவே அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தைப் பின்பற்றிப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். துதியமுதிலும் 'காவடிச்சிந்தில் பாளைவாய்க்கமுகில் என்ற மெட்டு' எனக்குறித்துப் பாரத நாட்டுக்கு விடுதலை வேண்டும் பாடலைப் பாடியுள்ளார்.

*8.9.* தியாகராசரின் தெலுங்குக் கீர்த்தனைகளைத் தம் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' என்னும் இதழில் தமிழாக்கி வெளியிட்டவர் பாரதிதாசன். துதியமுதிலும் 'நன்னபியாராமா' என்னும் தியாகராசரின் கீர்த்தனை மெட்டைப் பின்பற்றி ஒரு பாட்டுப் பாடியுள்ளார்.

8.10. சரசுவதி வணக்கப் பாடலில்

'வெள்ளைக் கமலமிசை நடிப்பவளே - இசை
வீணைதனிலமுதம் வடிப்பவளே'

எனும் பாரதிதாசன் குரலில்

'வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்'

எனும் பாரதிக்குரலின் பதிவைக் கேட்கிறோம்.

9.0. துதியமுதில் இடம்பெற்றுள்ள பாடல்களை நுணுகி நோக்கும்பொழுது கூறியது கூறலைக் காணலாம். சூரனை அழித்ததும் கீரனைக் காத்ததும் பிரமனைவென்றதுமாகிய முருகனின் செயல்கள் பலமுறை சொல்லப்படுகின்றன. ஓர் உவமையே, 'வெயிலிலே துடித்த புழுகாகி', 'வெயிலில் வாடும் புழுவாய் மிகவும் துடிக்கிறேனே', 'வெயிலிலே புழுவென உருகினேன்' என மூன்று பாடல்களில் இடம் பெறுகின்றது. ஆசிரியரின் கூற்றாகவும், பிற அடியாரின் கூற்றாகவும், ஆசிரியரே முருகனை முன்வைத்துப் பேசுவதாகவும், படர்க்கை நிலையில் பாடுவதாகவும், தலைவி, தோழியையும் வண்டையும் நோக்கிப் பேசுவதாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. இக்கூற்றுப் பன்மை, வகைமை சான்றதெனினும் நூலின் ஒருமைத்தன்மையைக் குலைக்கிறது எனலாம். மேலும் 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' எனப் பெயரிய இந்நூலில் மயிலம் பற்றிய குறிப்பையே முருகனைப் பற்றிய முதற்பாடலில் காணமுடியவில்லை. ஆசிரியர், தம் பெயரைக் குறித்துச் சொல்லும்முறையும் அனைத்துப் பாடல்களிலும் இடம்பெற வில்லை. எல்லாப் பாடல்களுக்கும் தலைப்புக் கொடுக்கப் பட்டிருக்க, இடையில் இருபாடல்கள் (12, 17) மட்டும் ஏனோ தலைப்பின்றி அமைந்துள்ளன.

9.1. இச்செய்திகளை ஒருங்கு நோக்கும்பொழுது இந்நூலி லுள்ள பாடல்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் எழுதப்பட்டவைதாமா என்ற ஐயம்எழுகின்றது. பல நேரங்களில் இயற்றி அரங்கேற்றப்பட்ட தனிப்பாடல்கள் பின்னர்த் தொகுக்கப்பட்டு நூலுருவம் தரப்பட்டுள்ளன. நூலுருவம் தரும் நோக்குடனேயே தெய்வ வணக்கப் பாடல்கள் முதலியன முற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன எனலாம்.

10.0. முடிவாக, பக்தி இலக்கியத் தோய்வும் இசையீடுபாடும் புராண அறிவும் மிக்க ஒரு பழம்புலவரின் நூலாகவே இது காட்சி யளிக்கின்றது. எனினும் முருகனை நோக்கிப் பாரதநாட்டின் விடுதலை வேண்டுவதாக அமைந்த ஒரு பாடல் தனித்துத் தெரிகிறது. துதியமுது, பாரதி மறைந்து ஐந்தாண்டுகள் கழித்து அச்சேறியுள்ளது. ஆதலால்

*பாரதிதாசன் பாரதியின் செல்வாக்கிற்கு உள்ளாவதற்கு முன்னர் எழுதிய தெய்வப் பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றிருக்கலாம்.*

*'சுப்பிரமணிய பாரதி தோன்றியென்*
*பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார். (11)*

*எனக் குறிப்பிடும் பாரதிதாசன் பாரத விடுதலையைப் பாடியிருப்பதும் சரசுவதி வணக்கப் பாடலில் பாரதியை எதிரொலிப்பதும் பாரதிச் செல்வாக்கின் விளைவாகலாம். ஆக, பாரதிதாசன் சுப்பிரமணியக் கடவுளின் தாசனாக ஊறிய நிலையையும் சுப்பிரமணிய பாரதியின் தாசனாக உருவாகும் நிலையையும் துதியமுது காட்டுகிறது எனலாம்.*

*10.1. பாரதிதாசன் 1922 ஆம் ஆண்டிலேயே 'கே.எஸ். பாரதி தாசன்' என்னும் புனைபெயரில் புதுவை 'தேசசேவகன்' இதழில் பாடல்கள் எழுதியதாக அறிகிறோம். (12) எனினும் 1926 இல் வெளியான இந்நூலில் ஆசிரியர் பெயர் 'கனகசுப்புரத்தின முதலியார்' எனக் குறிக்கப்பட்டிருப்பது எண்ணத்தக்கது. 'சுப்புரத்தினம்' என்பது ஏற்கனவே முருகனடியாரிடம் நன்கு அறிமுகமான பெயராக இருப்பதும் அதுவே நூலினகத்தே பாடல்களில் பலமுறை சுட்டப்பட்டிருப்பதும் நோக்கி அவ்வாறு ஆசிரியர் பெயரைக் குறித்திருக்கலாம்.*

**சான்றெண் விளக்கம்**

1. மன்னர் மன்னன், பாரதிதாசன் குயில், குரல் 1 இசை 7, 10.11.67
2. 'கவிஞரும் காதலும்' எனும் புலவர் ந. இராமநாதனின் நூலுக்கு விடுத்த 'வாழ்த்து', 1960, தஞ்சை.
3. 1.5.'67 அன்று வேலூர் நகரமன்றத்தில் பாரதிதாசன் படத்தைக் திறந்து வைத்துப் பெரியார் ஆற்றிய உரை - விடுதலை நாளிதழ்.
4. 'தாஸன் சுப்புரத்தினம் ஓதும் பண்பாடி', 'உன் தாஸன் சுப்புரத்நம்' என 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுதுப் பாடல்களில் வருந்தொடர்கள் காண்க.
5. இந்நூலைக் கொடுத்துதவிய புதுவை முதுகண்ணனார்க்கு நன்றியன். இந்நூல் 'ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' எனப் பெயர் மாற்றப்பட்டுப் 'பாரதிதாசன் குயில்' (10.12.67) இதழில் முழுமையாக வெளியிடப்பட்டது.
6. 'மாசி மகத்தின் கண்ணே மாமயிலே வேல்முருகன்
   வாசப் புதுவை வரும் போழ்து - நேசர்கள்
   பண்ணும் விழாவில் பாரதிதாசன் பாடல்
   பண்ணுடன் பாடப் படும்'

   - பாரதிதாசனொடு ஒன்றாக ஆசிரியப் பணியாற்றிய மு. மாணிக்கம் என்பார் 'பாவேந்தர் பாரதிதாசன்' என வெண்பாவிலேயே எழுதிய வரலாற்று நூலில் இடம் பெறுவது, 1964, புதுவை.

7. மன்னர் மன்னன், பாரதிதாசன் குயில், குரல்1, இசை 7, 10.11.67.
8. ப. முத்தையா - கவிஞர் வாழ்க்கைக் குறிப்பு - புரட்சிக்கவிஞர் (தொகுப்பு நூல், 1946, சென்னை.
9. 'தற்காலக் கவிஞர்களுக்குள் நகைச்சுவையின் பல அம்சங்களிலும் பொலிவு காட்டியவர் பாரதிதாசன் ஒருவரே' - சாலை இளந்திரையன், புதிய தமிழ்க்கவிதை ப. 102, 1966, சென்னை.
10. 1930 இல் வெளியான பாரதிதாசனின் 'தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு' எனும் நூலில் குதம்பைச் சித்தரின் பாடல் மெட்டைப் பின்பற்றிச் சமத்துவப்பாட்டையும், பீருமுகம்மது எனும் சித்தரின் பாடல் மெட்டைப் பின்பற்றிச் 'சேசு பொழிந்த தெள்ளமுது' - ஐயும் இயற்றியுள்ளதைக் காணலாம்.
11. 'கவிஞரும் காதலும்' எனும் புலவர் ந. இராமநாதனின் நூலுக்கு விடுத்த 'வாழ்த்து', 1960, தஞ்சை.
12. மன்னர் மன்னன், பாரதிதாசன் குயில், குரல்1, இசை, 10.9.67.

■

# 28

## பாவேந்தரின் வரலாறு பற்றி...

சூழ்நிலை :

இன்றைய தமிழகத்தின் தமிழ் உணர்ச்சி, சீர்திருத்த வேட்கை, விடுதலை ஆர்வம் ஆகியவற்றிற்கு அடிப்படை அமைத்த சிலரில் பாரதி தாசன் ஒருவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பாட்டிலக்கிய வரலாற்றில் அவரின் சுவடுகளே ஆழமாகப் பதிந்துள்ளன. தமக்குப் பின்னே ஒரு பாட்டுக்குயில்களின் பட்டாளத்தை உருவாக்கிய பெருமை யும் அவருக்குரியது. அவரின் பாடல்களைப் பட்டி தொட்டிகளி லெல்லாம் பரப்பிய பெருமைக்குரியவர்கள் இன்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கிறார்கள். படக்காட்சியிலிருந்து பல்கலைக் கழகப் பாடநூல் வரை பாரதிதாசன் பாடல்கள் இன்று இடம்பெறுகின்றன. சென்னை, அண்ணாமலை, மதுரை, கேரளம் முதலிய பல்கலைக் கழகங்களில் 'முனைவர்' முதலிய பட்டங்களுக்கான ஆய்வுப் பொருளாகப் பாரதிதாசன் படைப்புகள் அமைந்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் முழுமையும் செம்மையுமுடைய 'பாரதிதாசன் வரலாறு' உடனடியாக வெளியிடப்படுதல் காலத்தாற் செய்யவேண்டிய கட்டாயப் பணியாகும்.

வெளிவந்தவை :

இது வரை வெளியாகியுள்ள 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே' (முல்லை முத்தையா), 'புரட்சிக்கவிஞர் பாரதி தாசன்' (கலைச் செல்வன்), 'கவிஞரின் கதை' (மணி), 'பாவேந்தர் பாரதிதாசன்' (மு. மணிக்கம்), 'புரட்சிப்பாவலர் பாரதிதாசன்' (பெருஞ்சித்திரன்) முதலிய வரலாற்று நூல்கள் அளவால் சிறியன. அவரின் வரலாறொன்றையே செம்மையாக நுவல்வது அவற்றின் நோக்கமன்று அங்கொன்றும் இங்கொன்றுமான உதிரிச் செய்திகளிடையே அவரின் பாட்டாற்றலைப் புலப்படுத்துவதும் அவற்றின் நோக்கமாகும். ஆதலால்

அவற்றை முழுமையுடைய வரலாற்று நூல்களாகக் கொள்வதற்கில்லை. அவையேயன்றிப் பாவேந்தரின் வரலாற்றுச் செய்திகள் சில கட்டுரைகளாவும் வெளிவந்துள்ளன. கவிஞர் மலர் (குயில் நிலையம்) சுடர் - பாரதிதாசன் மலர் (தில்லித் தமிழ்ச் சங்கம்) 'பாரதிதாசனின் பண்புகள்' (நா. இராசவேல்) என்றாங்கு வெளிவந்தனவும், பாவேந்தரின் மகனார் மன்னர்மன்னனும், மகளார் வசந்தா அம்மையாரும் இதழ்களில் எழுதிய துணுக்குச் செய்திகளும் கட்டுரை என்னும் எல்லையினின்று சில செய்திகளைச் சொல்லுகின்றன அவ்வளவே.

**வேறுபாடுகள் :**

மேற்சுட்டிய வரலாற்றுப் படைப்புகள் எல்லாம் தந்நிறைவு உடையன அல்ல என்பதோடு அவை வெளியிடும் செய்திகளிலும் வேறுபாடுகள் தென்படுகின்றன.

பாவேந்தர் என்று பிறந்தார்? 17-4-1891 இலா? 29-4-1891 இலா? ''பாரதிதாசன் கவிதைகள்'' முதற்பதிப்பிலும் (1938) இரண்டாம் பதிப்பிலும் (1940) கவிஞர் மலரிலும் (குயில் நிலையம் 1946) 17-4-1891 பிறந்த நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்போது வெளிவரும் ''பாரதிதாசன் கவிதைகள்'' பதிப்புகளிலும் பிற வெளியீடுகளிலும் 29-4-1891 பிறந்த நாளாகக் குறிக்கப்படுகிறது. முன் குறித்த நாள் பிழையாக இருந்ததால் மாற்றப்பட்டிருக்கும் போலும்! மாற்றத்திற்கான அடிப்படைச் சான்று அளிக்கப்பட வேண்டுமல்லவா?

பாவேந்தரின் தந்தையார் பெயரே (கனகசபை) பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் வரலாற்றில் அவர் தம் அன்னையின் பெயர் இடம் பெற வேண்டுமன்றோ? அன்னையார் பெயர் யாது? 'மகாலட்சுமி'யா, 'இலட்சுமி யா'? மிகச் சில இடங்களிலேயே குறிப்பிடப் பெறும் அன்னையார் பெயரிலும் இந்த வேறுபாடு! 'புரட்சிப் பாவலர் பாரதிதாசன்' (பெருஞ்சித்திரன்), 'பாரதிதாசன் பாடல்களில் இயற்கை' (பி. டாக்டர் நசிம்தீன்) 'பாடுங் குயில்கள்' (ஏழாம் வகுப்புத் துணைப்பாடம்) ஆகிய நூல்களில் 'மகாலட்சுமி' என்றும், சக்தி (சித்திர பானு மலர் 7 கார்த்திகை இதழ் 3) இதழிலும், கவிஞர் மலரிலும் (குயில் நிலையம்) 'இலட்சுமி' என்றும் காணப்படுகின்றது. உண்மையான பெயர் வரலாற்றில் இடம்பெற வேண்டுமல்லவா?

பாவேந்தர்க்கு இருபத்தொன்பதாம் அகவையில் திருமணம் நடந்ததா? முப்பதாம் அகவையில் திருமணம் நடந்ததா? இதிலும் வேறுபாடு! 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' (கலைச் செல்வன்) எனும் நூலில் இருபத்தொன்பதில் திருமணம் நடந்ததாகவும், 'புரட்சிக் கவிஞர்' (தொகுப்பு -பா. முத்தையா) எனும் நூலில் முப்பதில் திருமணம் நிகழ்ந்ததாகவும்குறிக்கப்பட்டுள்ளது.

பாவேந்தர் தம் பணிக்காலம் முடியுமுன்னே ஆசிரிய அலுவலிலிருந்து விலகிக் கொண்டாரா? அன்றி, பணிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றாரா? ''புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப எண்ணிய காரணத்தாலும் அவற்றை எழுத வேண்டிய பணி மிகுதியாக இருந்ததாலும்'' தம் பணிக்காலம் முடியு முன்னே ஆசிரியப் பணியிலிருந்து விலகிக் கொண்டதாக ஒரு குறிப்பு (பாடுங் குயில்கள் - ஏழாம் வகுப்புத் துணைப் பாடம் ) காணப்படுகிறது. ஆனால் பாவேந்தரே

'முப்பத் தேழாண் டலுவல் பார்த்தேன்
ஓய்வு பெற்றேன் ஊதியப் பேற்றுடன்'

('கவிஞரும் காதலும்' என்ற புலவர் ந.இராமநாதனது நூலின் வாழ்த்துப் பகுதி') எனவும்,

'எட்டுப் பதினொன்று நாற்பத்தா றிட்ட எழிலுறுநாள்
விட்டுப் பிரிந்ததென் ஆசிரியப்பணி மேலும் எனைக்
கட்டுப் படுத்துவ தொன்றில்லை! திங்கட் கடைசி தொறும்
தட்டாது வந்திடும் ஐம்பான்வெண் பொற்காசு சம்பளமே

(பாரதிதாசன் குயில் 10-8-1967) எனவும் கூறியுள்ளார். இவற்றிலிருந்து பாவேந்தர் ஆசிரியப் பணியை விடவில்லை. ஆசிரியப் பணி இவரைவிட்டுப் பிரிந்தது - அதாவது நிறை காலம் பணியாற்றி முறையான ஓய்வு பெற்றார் என்று தெளிகிறோம். மேலும், ''தமிழ் எழுதுவோர், பொதுத்தொண்டாற்ற நினைப்பவர் நிலையான தொழில் வருவாயை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.'' (மன்னர் மன்னன் - பாரதிதாசன் குயில் 10-10-1967) என்னும் கொள்கையுடையவர் பாரதிதாசன்.

ஒருவரின் வரலாற்றை மேலோட்டமாக எழுதும்போது கூட இடம் பெற்றாக வேண்டிய அடிப்படைச் செய்திகளிலேயே இத்தனை வேறுபாடுகள் எனில் ஏனைய செய்திகளைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. அதுவும் அண்மைக்காலம் வரை நம்மோடு வாழ்ந்து மறைந்த பாவேந்தரின் வரலாற்றிலா இத்தகு வேறுபாடுகள் என வியக்கிறோம்!

## எளிதில் எழுதலாம்

ஐயங்களிலிருந்து தெளிவு பெறுவதற்கும் வரலாற்று அடிப்படையில் பாவேந்தரின் வளர்ச்சி தளர்ச்சிகளை மதிப்பிடுவதற்கும் முழுமையும் செம்மையுமான வரலாறொன்று உடனடித் தேவை. இதை எழுதுவதற்கான முயற்சி பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டியது, எனினும் திட்டமிட்ட செயல் திறனால் எளிதில் நிறைவேறக் கூடியதே.

**அறிந்தவர் பலர்**

*பாரதிதாசன் எழுபத்து மூன்று ஆண்டுகள் (1891- 1964) வாழ்ந்தவர் முப்பத்தொன்பது ஆண்டுகளே (1882 - 1921) வாழ்ந்த பாரதியைக் காட்டிலும் பலரோடு பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தார். நினைவுச் சுவடுகளை நிறைய விட்டுச் சென்றவர் என்பதோடு அண்மைக் காலத்திலேயே மறைந்தவர்.ஆதலால் அவரை அறிந்தவர்கள் பலர் இன்றும் இருக்கின்றனர். அவர்களின் உறு துணையோடு இம்முயற்சி நிறைவேற்றப்பட வேண்டும்.*

**குடும்பத்தினர்**

*பாவேந்தரின் துணைவியார் பழநியம்மாள் அவர்கள் ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் தம் துணைவரொடு நல்லறம் நடத்தியவர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரின் நினைவுகளை முதலில் திரட்ட வேண்டும். புதுவை வானொலி நிலையத்தில் பணியாற்றிவரும், பாவேந்தரின் ஒரே மகனாகிய மன்னர்மன்னன் நிறைய செய்திகள் உடையவர். அவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கரூரில் வாழும் மூத்த மகளார் சரசுவதி, அவரின் கணவர் வித்துவான் கண்ணப்பர். புதுவை நினைவு நூலகத்தில் பணியாற்றும் நடுமகளார் வசந்தா, அவரின் கணவர் தண்டபாணி ஆகியோரும் இம் முயற்சிக்குப் பெருந்துணை செய்யக்கூடியவர்கள். முதலில் இக்குடும்பத் தினரை அணுகிக் கருத்துக்களைத் திரட்ட வேண்டும்.*

*பாரதிதாசனோடு அவரின் மனைவி, மக்கள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டிலும், மிகமிகக் குறைந்த காலமே பாரதியொடு தொடர்பு கொண்டிருந்த பாரதியின் மனைவி, மக்கள், தம் நினைவுகளை நூல்களாக (பாரதியார் சரித்திரம் - செல்லம்மாள் பாரதி, அமரன் கதை - தங்கம்மாள் பாரதி, என் தந்தை - சகுந்தலா பாரதி...) வெளியிட்டுள்ளதை யும் எண்ணிப் பார்க்க வேண்டும். பாவேந்தர் குடும்பத்தினரில் திரு. மன்னர் மன்னனும் திருவாட்டி வசந்தா அவர்களும் இதழ்களில் எழுதிய உதிரிச் செய்திகள் தவிர உருவான நூலொன்றும் இல்லை.*

**நண்பர்கள், மாணவர்கள்**

*பாரதிதாசனொடு நெருங்கிப் பழகிய பலரை இன்றும் பார்க்க லாம். அவரின் 'தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டை' முதலில் (1930) வெளியிட்ட பெரியவர் திரு. நோயேல் (புதுவை), முப்பது ஆண்டுகளுக்கு மேல் பாரதிதாசனொடு மகனைப்போல் பழகிய திரு. இராசவேல் (சென்னை), தொடக்கக் காலத்தில் பாரதிதாசன் பாடல் களைப் பரப்புவதே தம் உயிர்ப்பணி எனக் கொண்டிருந்த திரு முல்லை முத்தையா (சென்னை), மன்னர் மன்னனின் திருமணத் தலைமையேற்ற*

நெருங்கிய நண்பர் கோவை. அய்யாமுத்து, பாரதிதாசன் தன் இறுதிக் காலத்தில் மதித்துப் பழகிய புலவர் ந.இராமநாதன் (காரைக்குடி) போன்ற பலரொடும் தொடர்பு கொள்ள வேண்டும்.

பாரதிதாசனிடம் பாடங்கேட்ட மாணவர் பலரைப் புதுவையில் காணலாம். முதன் மாணாக்கரெனக் குறிக்கப்பட்ட புதுவை ச.சிவப்பிரகாசம் (நாடாளுமன்ற உறுப்பினர்) முதல், இறுதிக் காலத்தில் சென்னையில் துணை நின்ற பொன்னடியான் வரை பல தோழர்கள் வாயிலாகப் பல செய்திகள் பெறமுடியும்.

## அரசியல், திரைத்துறை ஈடுபாடு

பாவேந்தர், பேராயக் கட்சி, 'தன்மான இயக்கம், திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம், 'இந்திய ஒன்றியத்தில் (யூனியனில்) சேர மறுப்போர் கழகம்,' பின்னர் திராவிடர் கழகம் என நெடிய, தொடர்ச்சி யான அரசியல் ஈடுபாடு கொண்டிருந்தார். புதுவை மாநிலச் சட்ட மன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

கதை, உரையாடல் எழுதுதல், பாடல் இயற்றுதல் எனப் பல நிலையில் திரைத்துறைத் தொடர்பு கொண்டிருந்தார். இறுதிக் காலத்தில் பாண்டியன் பரிசையும், பாரதியார் வரலாற்றையும் படமாக்க முயன்றார்.

இத்தகு அரசியல் ஈடுபாட்டையும் திரைத் துறைத் தொடர்பையும் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வரலாறு எழுதத் துணை செய்யும்.

## தாளிகை உலகம்

பல தாளிகைகளைப் பாரதிதாசன் நடத்தினார். 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியின் கவிதா மண்டலம் (1935) குயில் மாத இதழ் (1947 - 48) குயில் கிழமை யிதழ் (1958-61) குயில் திங்களீரிதழ் (1962) குயில் நாளிதழ் (1948) எனப்பல தாளிகைகள் அவராலேயே வெளியிடப்பட்டன. 'புதுவை முரசு', தேசபக்தன் (வ.வே.சு ஐயர்), தேசசேவகன் (சைகோன் சின்னையா), சுதந்தரன் (வ.ரா.), ஹிந்துஸ்தான் (சென்னை), சக்தி (கோவிந்தன்), ஹநுமான் (விழுப்புரம்), குடியரசு, பகுத்தறிவு, திராவிட நாடு முதலிய ஏராளமான தாளிகைகளில் எழுத்தோவியங்கள் தீட்டினார். இன்னும் நூல் வடிவம் பெறாத, தகுதியான எழுத்தோவியங்களையும் அவற்றில் காணலாம். அத்தாளிகைகளைத் திரட்டிப் பார்க்கும் பார்வை வரலாறு வரையப் பயன்படுவதாகும்.

## உண்மையறிதல்

பாவேந்தரே வெளிப்படையாகச் சுருங்கிய அளவில் தம் வாழ்க்கை வரலாற்றைக் 'கவிஞரும் காதலும்' (புலவர் ந.இராமநாதன்) என்ற நூலின் வாழ்த்துப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாகப் பல

இடங்களில் (குடும்ப விளக்கு - விருந்தோம்பல், முதியவர் செயல்கள், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி- எமனை எலி விழுங்கிற்று...) குறிப்பிட்டுள்ளார். இவ் அகச் சான்றுகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும். இதுவரை வெளியாகியுள்ள வரலாற்றுக் குறிப்புகளை, மேற்சுட்டிய பல வழிகளில் திரட்டிய செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு நோக்குகையில் சில மாறுபாடுகள் தென்படக் கூடும். அம்மாறுபாட்டுப் புகையில் உண்மையொளியைக் காணும் நடுவு சான்ற நன் னெஞ்சு வேண்டும்.

**தக்கார் குழு**

பொருள் நெருக்கடியும் வெளியீட்டுத் தொல்லைகளும் மிகுந்த இக்காலத்தில், பேரளவில் மேற்கொள்ள வேண்டிய இவ்வரலாற்று முயற்சியில் தனிப்பட்டவர்கள் ஈடுபடுவது இடர்ப்பாடானது. ஆகவே, அவர் புகழ்பாடும் தமிழக அரசினரே இம் முயற்சியில் ஈடுபடவேண்டும். பாவேந்தரின் பாடல்களைப் பரப்புவதில் தமக்கிணையில்லாத தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் தலைமையில் தக்கார் அடங்கிய குழு ஒன்று விரைவில் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

(தமிழ்ப்பொழில், 1976, சனவரி - பிப்பிரவரி)

■

29

# பாரதிதாசனின் படைப்புக்கள் பற்றி...

0.1. பாரதிதாசன் வீட்டுப்பானைச் சட்டியும் பாட்டியற்றும் என்பது புதுமொழி. எழுச்சியும் இனிமையும் நல்கும் ஏராளமான படைப்புகளை எழுதிக் குவித்தவர் பாரதிதாசன். அவரின் எழுத்தோவியங்கள் ஏறத்தாழ ஐம்பது நூல்களாய் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில காணவும் கிடைக்காத அருமையுடையனவாய் மறைந்து விட்டன. சில நூல்களில் முன்பதிப்புகட்கும் பின்பதிப்புகட்கும் வேறுபாடுகள் தென்படுகின்றன. சில நூல்கள் முன்னர் தனி நூல்களாக வெளியிடப்பட்டும் பின்னர் தொகுதிகளில் இணைக்கப்பட்டும் தொகுதிகளாக்கப்பட்டும் வெளிவந்துள்ளன. பிற்காலத்திய படைப்புகள் சில முன்னர் நூலுருப்பெற்றும் முற்காலப் படைப்புகள் சில அவற்றுக்குப் பின்னர் நூலுருப்பெற்றும் கால வரிசை மாறியுள்ளன. இவை ஒரு புறமிருக்க, தாளிகையில் வெளியாகி இன்னும் நூலுருப்பெறாத எழுத்தோவியங்கள் ஏராளம். பாரதிதாசன் மறைந்து பதினோர் ஆண்டுகள் கடந்த பின்னருங்கூட அப்படைப்புகள் அனைத்தையும் திரட்டி நூல்களாக வெளியிடவில்லை என்பது வருந்துதற்குரிய நிலைமை. அவரை முழுமையாக அறியவும் மதிப்பிடவும அவரின் படைப்புகள் அனைத்தும் தேவை. அவற்றை முறைப்படி உலகின் முன் வைக்க வேண்டியது இன்றியமையாதது. அவை பற்றிய சில செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறது இக்கட்டுரை.

1.0. இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு ஒத்துழையாமைக் காலத்தில் அவ்வியக்கத்துக்குத் துணை செய்யும் வகையில் இருபது சிறு நூற்கள் பாரதிதாசன் எழுதியதாகவும் அவற்றுள் சில அச்சிடப்பட்டதாகவும் அறிகிறோம்.[1] அச்சிடப்பட்ட நூல்களாய்த் தெளிவாகத் தெரிய வருவன மூன்று. அவை 'சிறுவர் சிறுமியர் தேசிய

கீதம்', 'தொண்டர் படைப்பாட்டு' 'கதர் இராட்டினப் பாட்டு' ஆகியன[2] 1930க்கு முன் வெளியிடப்பட்ட முதல் இரண்டு நூல்களும் இன்று கிடைக்கவில்லை. 1930இல் வெளியான மூன்றாம் நூல் புதுவையிலுள்ள நினைவு நூலகத்தில் உள்ளது. 1926இல் வெளியான 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்னும் நூல் இன்று ஒருவர் இருவரிடமே உள்ளது.[3] இப்படியொரு நூல் அவரால் இயற்றப்பட்டது என்பதே பலர்க்குத் தெரியாது. சௌமியன் (1947). பாரதிதாசன் ஆத்திசூடி (1947) பொங்கல் வாழ்த்துக் குவியல் (1954) பாரதிதாசன் கதைகள் (1955) தேனருவி (1956) போன்ற சில நூல்கள் இன்று கிடைத்தற்கரியனவாயுள்ளன.

2.0. நூலாக வெளிவந்துள்ள படைப்புகள் சிலவற்றில் முன்பதிப்புகட்கும் பின் பதிப்புகட்கும் வேறுபாட்டைக் காண்கிறோம்.

2.1. முன் பதிப்புகளில் இருந்த சில பகுதிகள் பின் பதிப்புகளில் விடப்படுள்ளன. 1944-இல் 'குடியரசு' பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட 'பாரதிதாசன் கவிதைகள்' தொகுப்பின் இறுதியில் இடம் பெற்றிருந்த 'பிரிந்த பிரானைப் பெறமுடியும்' எங்குற்றான்? ஆகிய இரு பாடல்களும் பின்வந்த பதிப்புகளில் நீக்கப்பட்டுள்ளன. 1939இல் வெளியான 'இரணியன் இணையற்ற வீரன்' நாடகத்தில் இடம் பெற்றிருந்த இருபத்து மூன்று பாடல்களையும் 1968இல் வெளியான நான்காம் பதிப்பில் காண முடியவில்லை. குயில் மாத இதழில் (1-7-47) வெளியான 'சத்தி முத்தப் புலவர்' என்னும் நாடகம் 1965இல் வெளியான 'பாரதிதாசன் நாடகங்கள் முதல் தொகுதி'யில் முப்பது வரிகள் (பிரிவு 5) குறைந்து காணப்படுகிறது.

2.2. சில நூல்களில் முன் பதிப்புகளில் இல்லாத பகுதிகள் சில பின் பதிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. 1949ஆம் ஆண்டு வெளியான 'பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி' முதற்பதிப்பில் இடம் பெறாத பல பாக்கள் பின்வந்த இரண்டாம் பதிப்பு முதலியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளன புதிய பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன' என்று மட்டும் அறிகிற நாம் சேர்க்கப்பட்டவை எவையென அறிதல் கால அடிப்படைப் பார்வைக்குத் துணை செய்யும். பின் வந்த பதிப்புகளில் காணப்படும் 'காதல் வாழ்வு' (சிறுகாப்பியம்), 'இருசுடரும் என் வாழ்வும்,' 'தென்றல்' (இயற்கை), 'பந்துபட்ட தோள்' , 'தன்மான உலகு', 'திருமணம் (காதல்), 'கதவு பேசுமா' (கருத்துரைப் பாட்டு), 'சிறுத்தையே வெளியில்வா', தீவாளியா? (திராவிடன்) 'குழந்தைப் பள்ளிக்கூடம்', 'வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்', 'இசைபெறு திருக்குறள்' (பன்மணித்திரள்) ஆகிய பாடல்கள் பின்னர் சேர்க்கபட்டவை. 1948இல் வெளியான

'முல்லைக்காடு' தொகுப்பில் (ஞாயிறு நூற்பதிப்பகம், புதுவை) இடம் பெறாத 'நாட்டுப் பாடல்கள்' என்னும் பகுதி 1963இல் வெளியான 'முல்லைக்காடு' மறுபதிப்பில் (முத்தமிழ் நூலகப் பிரசுரம், சென்னை) இணைக்கப்பட்டுள்ளது. 'கழைக்கூத்தியின் காதல்' என்னும் நாடக நூலில்(1951) உள்ள 1,2, 3, 17, 18, 20,21 ஆகிய காட்சிகள் அனைத்தும் அந்நாடகம் குயில் மாத இதழில் (பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் 1948) வெளிவந்த போது இடம் பெறாதவை. நூலுருப் பெறும்போது ஏற்பட்ட மாற்றம் இது. 'முன்னர் வெளியிடப்பட்டதைச் சிறிது பெரிதுபடுத்தி' எழுதியதாகப் பாரதிதாசனே குறிப்பிட்டுள்ளார். (முன்னுரை 1951) எவ்வாறு பெரிது படுத்தப்பட்டது என்பதை அறிதல் பாரதிதாசனின் வளர்ச்சிப் போக்கைத் தெளிவுபடுத்தும்.

2.3. முன்பதிப்புகளில் இருந்த சில பகுதிகள் தள்ளப்பட்டுப் புதிய பகுதிகள் கொள்ளப்பட்ட நூல்களும் உள்ளன. காட்டாகப் 'புரட்சிக்கவி' யைக் குறிப்பிடலாம். 1937இல் தனி நூலாக வெளியான 'புரட்சிக்கவி'யில் உதாரன் அமுதவல்லிக்கு யாப்பிலக்கணம் கற்றுத் தரும் பகுதி மிக விரிவாக அமைந்திருந்தது.[4] பாவகை பற்றிய இலக்கணம் விளக்கப்பட்டிருந்தது.

'குறள்வெண்பா ஒன்று முக்கால் கொள்பஃறொடையோ
அறுநூ றடியாலும் ஆக்கு - நெறியாக
ஒன்றுமுக்கால் நற்றனிச் சொல் என்றாக நீண்டுவந்தால்
பன்னுகின்ற சிந்தியல் வெண்பா'

என்பது விரிவான அப்பகுதியில் இடம் பெற்ற ஒரு நேரிசை வெண்பா. இவ்வாறு விரிந்த அளவில் அமைந்த விளக்கம் நீக்கப்பட்டுப்பின் வெளியீடுகளில் சுருக்கமான முறையில்

'யாப்புமுறை உரைப்பான் - அணி
யாவும் உரைத்திடுவான்
பாப்புனை தற்கான - அநு
பவம்பல புகல்வான்'

எனச் சொல்லப்பட்டுள்ளது.

2.3.1. பாடல்களின் தலைப்பு, சொல், தொடர் ஆகியவற்றிலும் முன்பதிப்புகட்கும் பின்பதிப்புகட்கும் வேறுபாடுகள் தென்படுகின்றன. பின்னர் வெளியான 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதிப் பதிப்புகளில் காணப்படும் 'வாழ்வில் உயர்வு கொள்', 'தவிப்பதற்கோ பிள்ளை' ஆகிய பாடல் தலைப்புகள் முதற் பதிப்பில் (1938) முறையே 'சுயமரியாதை போதனை', 'கர்ப்பத்

தடை' எனக் குறிக்கப்பட்டிருந்தன. இரண்டாம் தொகுதியில் இப்போது காணப்படும் 'நம்மாதர்', 'மலையிலிருந்து', 'எந்த நாளும் உண்டு' எனும் பாடல் தலைப்புகள் முதற்பதிப்பில் (1949) முறையே 'மாதர்கள் விரத பலன்', 'சோபனக் கட்டிலில்', 'அந்தச் சுதந்திரம்' என்றிருந்தன.

புரட்சிக் கவி' யில் அமுதவல்லியின் கூற்றாக 'நாட்டின் இளவரசி நான் ஒருத்தி ஆதலினால்' என வரும் பகுதி. 'நாட்டின் இளவரசி நான் 'ஒருவள்' ஆதலினால்' என முன்பதிப்புகளில் (1938, 1940) இருந்தது. 'ஒருவள்' எனும் பெண்பாற் புதுச்சொல் பாரதிதாசனுக்கு உடன்பாடானதே. (குயில் கிழமையிதழ் 7.2.61) எனினும் 'ஒருவள்', 'ஒருத்தி' யாகியிருப்பது நோக்கத் தக்கது. முன்னர் கையாண்ட பிற மொழிச் சொற்கள் பல பின் பதிப்புகளிலும் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் சில பிறமொழிச் சொற்கள் நீக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். 'பாகிடை ஏறிய ருசியும்' என்றிருந்தது, (தமிழின் இனிமை - முதல்தொகுதி) 'பாகிடை ஏறிய சுவையும்' எனவும், 'உயர்விரதம் அநுஷ்டிப்பதால்' என்றிருந்தது (நம்மாதர் - இரண்டாம் தொகுதி) 'உயர்விரதம் மேற்கொள்வதால்' எனவும் தமிழாகியிருப்பதைச் சான்றாகக் காட்டலாம்.

இரண்டாம் தொகுதி முதற்பதிப்பில் 'திவ்ய பாரததேசமே' (கடவுளுக்கு வால் உண்டு), 'தூய பாரத தேசமே' (மலையி லிருந்து), 'அழகு பாரத தேசமே' (எந்த நாளும் உண்டு) எனப் பாடல்கள் பெற்றிருந்த முடிவுத் தொடர்கள் பின்னர் முறையே 'திருவார்ந்த என்றன் நாடே', 'தூய என் அன்னை நாடே' 'அழகு செந்தமிழ் வையமே' என மாற்றப்பட்டிருக்கின்றன.

2.3.2. இப்போது வெளிவரும் சில பதிப்புகளில் முன் பதிப்புகள் வெளியான ஆண்டுகள் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளன. பாரதி தாசன் கவிதைகள் முதல் தொகுதி 1936இல் வெளியானதாகச் சில பதிப்புகளில் (பதினாறாம் பதிப்பு 1970) குறிக்கப்பட்டுள்ளது. அது தவறு. முதற்பதிப்பு 1938இல் வெளியாயிற்று. 1974இல் வெளி யிடப்பட்ட 'காதலா கடமையா' பதிப்பில் 'முதற்பதிப்பு ஏப்ரல் 1948, இரண்டாம் பதிப்பு ஆகஸ்டு 1974' என மாதம் உட்படக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1953 இல் பாரதிதாசன் பதிப்பகத்தால் (புதுவை) வெளியிடப்பட்ட 'காதலா கடமையா'வில் முதற்பதிப்பு 1949 இரண்டாம் பதிப்பு 1953 எனக் குறிக்கப்பட்டுள்ளது. பதிப்பின் ஆண்டில் மட்டுமன்றிப் பதிப்பின் எண்ணிக்கையிலும் மாறுபாட்டைக் காண்கிறோம். முறைப்படி 1974இல் வந்துள்ள பதிப்பு மூன்றாம் பதிப்பே 'பாரதிதாசன் நாடகங்கள்' எனுந்

தொகுப்பு நூல் 1959 மார்ச்சில் முதன்முதலில் வெளியிடப்பட்டது. ஆனால் அண்மையில் வெளியான மூன்றாம் பதிப்பில் (மே 1974) 'முதற்பதிப்பு மார்ச் 1965. இரண்டாம் பதிப்பு ஜனவரி 1975 எனக் குறிக்கப்பட்டுள்ளது! பதிப்பாளர் தம் கவனக் குறைவால் பாடல்களில் பயிலும் சில சொற்களும் பின்பதிப்புகளில் பிழை யாகவே அச்சிடப்பட்டுள்ளன. 'தொன்னையுள்ளம் ஒன்றுண்டு' (உலக ஒற்றுமை), 'வேல் விழியால் என்றன் விலாப்புறத்தைக் கொந்தாதே' (புரட்சிக்கவி) என முதல் தொகுதியில் வந்த தொடர்கள் 'தென்னையுள்ளம் ஒன்றுண்டு', 'வேல் விழியால் என்றன் விலாப் புறத்தைக் கொத்தாதே' எனப் பிற்காலப் பதிப்புகளில் அச்சிடப் பட்டுள்ளன.

2.3.3 'கொய்யாக்கனிகள்' எனுந்தலைப்பில் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழில் (1934 - 35) வெளியான கதைபொதி பாட்டுத் தொடர் பின்னர் வடிவம் மாறிப் படித்த பெண்கள் எனும் உரைநடை நாடகமாக (1948) வெளிவந்துள்ளது. 'கொய்யாக்கனி கள்' கவிதா மண்டலம் இதழ்களிலேயே புதையுண்டு போனது நினைக்கத் தக்கது.

3.0. ஒரு நூலில் ஒரு முறை இடம் பெற்ற சில பாடல்கள் வேறு நூலிலும் இடம் பெறுவதைக் காண்கிறோம். 'கடவுள்', 'மாதர்', 'நம் மாதர் நிலை' எனும் பாடல்கள் முதல் தொகுதியிலும் இரண்டாம் தொகுதியிலும் இடம்பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டில் (1930) அடங்கிய 'சேசு பொழிந்த தெள்ளமுது' முதல் தொகுதியிலும் மூன்றாம் தொகுதியிலும் காணப்படுகிறது. இசையமுது இரண்டாம் தொகுதியில் (1952) உள்ள பல பாடல்கள் முன்னரே முல்லைக் காட்டில் (1948) வெளிவந்தவை.

3.1. தொடக்கக் காலத்தில் தனி நூல்களாக வெளிவந்த பல படைப்புகள் பிற்காலத்தில் தொகுதிகளில் இணைக்கப்பட்டும் தொகுதிகளாக வும் வெளியிடப்பட்டன. முதல் தொகுதியின் தொடக்கத்திலுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் புரட்சிக்கவியும் முறையே 1930, 1937 ஆம் ஆண்டுகளில் தனி நூல்களாக வெளிவந்தவை. மூன்றாந் தொகுதியில் அடங்கிய பாடல்கள் அனைத்தும் தனித்தனி நூல் களாக முன்னரே வெளிவந்தவை: தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு 1930-இலும் அகத்தியன் விட்ட புதுக்கரடியும், நல்லமுத்துக் கதையும் ஒரு நூலாக 1948 -இலும் திராவிடர் திருப்பாடல் 1948-இலும் கடற்மேற் குமிழிகள் 1948 - இலும் ஏற்றப்பாட்டு 1949-இலும் அமிழ்து எது 1951-இலும் வெளிவந்துள்ளன. 1930 -இல் வெளியான 'கதர் இராட்டினப் பாட்டு' முல்லைக் காடு

மறுபதிப்பில் (1963) இணைக்கப்பட்டு 'நாட்டுப் பாடல்கள்' எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. 'பாரதிதாசனின் நாடகங்கள்' முதல் தொகுதி (1959)யில் உள்ள கற்கண்டு.'பொறுமை கடலினும் பெரிது' ஆகிய இரண்டும் 1944 இல் ஒரு நூலாகவும் 'இன்பக்கடல், சத்திமுத்தப்புலவர்' இரண்டும் 1950இல் ஒரு நூலாகவும் வெளி வந்தன. 'தனித்தனி நூல்களாக வெளிவந்தபோது அவை பெற்றி ருந்த முன்னுரை முதலிய பகுதிகள் விடப்பட்டன என்பதோடு அவை முதலில் வெளியான ஆண்டுகளும் தொகுப்புகளில் சுட்டப்படவில்லை.

4.0. கால அடிப்படையில் பாரதிதாசன் படைப்புகளை மதிப்பிடு வதற்கு நூல்கள் வெளியிடப்பட்ட ஆண்டுகளை அடிப்படை யாகக் கொள்ளக்கூடாது. சில படைப்புகள் உடனுக்குடன் நூல் வடிவம் பெற்றன. சில முன்னரே இதழ்களில் வெளியாகி யிருப்பிலும் பிற்பட்ட காலத்தில் தான் நூலுருப் பெற்றுள்ளன. முல்லைக்காடு 1948-இல் வெளியானது. அதில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' (1935) இதழில் வெளியானவை. பாண்டியன் பரிசு (1944) அழகின் சிரிப்பு (1944) தமிழியக்கம் (1945) முதலிய நூல்களினும் காலத்தால் பிற்பட்டு முல்லைக்காடு வெளிவந்த போதும், அதிலுள்ள பாடல் கள் அவற்றிலும் காலத்தால் முற்பட்டவை. பாரதிதாசன் கவிதை கள் முதல் தொகுதியிலுள்ள சில பாடல்களினும் (எழுதாக் கவிதை, உன்னை விற்காதே கவிதா மண்டலம் வெளியீடு -7) இரண்டாம் தொகுதியில் (1949) வெளியான பாரதியார் பற்றிய சில பாடல்கள் (செந்தமிழ்நாடு, திருப்பள்ளி எழுச்சி, நாடக விமரிசனம் (கவிதா மண்டலம் வெளியீடு -6) காலத்தால் முற்பட்டவை.

5.0. 'ஸ்ரீ சுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம்' (1935) குயில் மாத இதழ் (1947 -48) குயில் கிழமையிதழ் (1958-61) குயில் திங்களிதழ் (1962)எனப் பாரதிதாசனே நடத்திய இதழ்களிலும் பிற இதழ் களிலும் பாரதிதாசன் எழுதிய பல படைப்புகள் இன்னும் நூலுருப் பெறாமல் இருக்கின்றன.

5.1. இதுவரை நூலுருப்பெறாமல் இருக்கும் பாடல்களை மட்டும் தொகுத்து வகைப்படுத்தினால் அவை மூன்று தொகுதிகளுக்குக் குறையாமல் அமையும். இந்திய விடுதலை இயக்கத் தொடர்பில் அவர் இயற்றிய பாடல்களை மட்டும் தனித் தொகுதியாக வெளியிடலாம்.

5.2. 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' என்ற தலைப்பில் 'பாரதிதாசன் குயில்' இதழில் வெளிவந்த பாரதிதாசனின் கட்டுரைகளோடு,

பாரதியாருக்கும் தமக்கும் முதலில் தொடர்பேற்பட்ட வகையை 'ரவிவர்மா பரமசிவப்பட பாரதி - கல்யாணப் பந்தலில் சந்திப்பு' என்ற தலைப்பில் 'ஹிந்துஸ்தான்' இதழில் (பாரதி மலர் 10.9.1939) பாரதிதாசன் எழுதிய கட்டுரையையும் 'பாரதியார் பற்றிய சில குறிப்புகள்' எனக் குயில் கிழமை இதழில் 20.9.60 எழுதிய கட்டுரையையும் இணைத்து ஒரு நூலாக்கலாம். பாரதியார் பாரதிதாசன் ஒப்புமை ஆய்வுக்கு இத்தொகுப்பு மிகவும் பயன்படும்.

5.3. 'அம்மியும் நகரும்' (குடிஅரசு 26.3.1933)'அன்பே சிவம் என்பது ஆத்திகர் கரடி' (குடிஅரசு 9.4.1933) 'தமிழன் யார்' (குயில் 1.6.58) 'வடநாட்டில் கல்வெட்டுகள் உண்டானமைக்கு ஏது' (குயில் 27.9.1960) 'அராபிய எண்கள் தமிழ் எண்களே' (குயில் 24.1.1961) 'சாதி ஏன்' (பாரதிதாசன் குயில் 10.2.1968)முதலிய பாரதிதாசனின் தனிக்கட்டுரைகளையும் இதழ்களில் எழுதிய சிறந்த ஆசிரிய வுரைப் பகுதிகளையும் தேர்ந்தெடுத்து நூலாக்கலாம்.

5.3.1. ஏறத்தாழ மூன்றாண்டுக்காலம் (1958 -61) 'வந்தவர் மொழியா செந்தமிழ்ச் செல்வமா' எனுந்தலைப்பில் குயில் கிழமையிதழில் பாரதிதாசன் எழுதிய சொல்லாராயச்சித் தொடர் ஒரு பெரு நூலாகும் அளவினது. அது அவரின் மொழி பற்றிய கொள்கையினையும் பரந்துபட்ட அறிவினையும் உணர்த்தவல்லது.

5.3.2. 'வள்ளுவர் உள்ளம்' என்னுந்தலைப்பில் சாங்கிய மதக்கொள்கையின் அடிப்படையில் குயில்கிழமை இதழில் எழுதி வந்த திருக்குறள் புத்துரையும் நூலாகுந்தகுதியுடையது. முதல் எண்பத்து மூன்று குறள்களுக்கு எழுதிய உரை மட்டுமே இதழில் வெளியானது. ஏனைய குறள்கட்கும் அவர் உரை எழுதியதாகவும் அவ்வுரை அவர் புதல்வரிடம் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. குறள் முழுமைக்கும் உரை இல்லையெனினும் இருக்கும் அளவையாவது நூலாகக் கொணர்வது நலம்.

5.3.3 குயில் கிழமை இதழில் வினா விடைப்பகுதி 'கேட்டலும் கிளத்தலும்' எனுந்தலைப்பில் வெளிவந்துள்ளது. அப்பகுதியில் பாரதிதாசன் அளித்த விடைகள் பல அவரின் தெளிவான கொள்கைகளை நமக்குக் காட்டுகின்றன. அவற்றைத் தேர்ந்தெடுத்து நூலாக்கலாம்.

5.3.4. 'செவ்வாயுலக யாத்திரை (புதுவை முரசு 5.1.1931) 'ஏழைகள் சிரிக்கிறார்கள் இதயம் எப்படி இருக்கிறது '(புரட்சி 11.2.1934), 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' (குயில் 8.7.58) 'புலவர் முண்டைக் கண்ணி ஆம்படையான்' (குயில் 31.3.59) 'முயற்சியே வாழ்வு சோம்பலே சாவு' (குயில் 22.9.59) 'வைகறைத் துயிலெழு'

(குயில் 4.10.60), தமிழ்ப் பற்று (பாரதிதாசன் குயில் 10.9.1967) முதலிய சிறுகதைகள் பல இன்னும் நூலுருப்பெறாமல் உள்ளன. இன்று கிடைப்பதரிதாயுள்ள 'பாரதிதாசன் கதைகள்' (1955) என்னும் நூலின் மறுபதிப்பில் இந்தக் கதைகளை இணைத்து வெளியிடலாம்.

5.4.1. குயில் மாத இதழில் 'அனைவரும் உறவினர் ' என்னும் தொடர் கதையொன்றைப் பாரதிதாசன் எழுதினார். நான்கு இதழ்களில் முப்பத்திரண்டு இயல்கள் மட்டும் வெளியாகிய அக்கதை இதழ் நின்று விட்டதால் தொடரவில்லை போலும். பிறகாலத்தில் குயில் வார இதழாக வெளிவந்த போதும் அக்கதை தொடரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கதையின் போக்கை நோக்கினால் அது மிகப் பெரிதாக விரிந்து செல்லும் அளவில் திட்டமிடப்பட்டது எனத் தெரிகிறது. பாரதியாரின் சின்னச் சங்கரன் கதை' யைப் போல இதுவும் முழுமையுறவில்லை. எனினும் இஃதொன்றே பாரதிதாசன் எழுதத் தொடங்கிய தொடர்கதை ஆதலின் இதையும் வெளியிடலாம்.

5.5. 'குலத்தில் குரங்கு (குயில் 1.1.48) 'ஆரிய பத்தினி மாரிஷை' (குயில் 15.5.48), 'கோயில் இரு கோணங்கள்' (முரசொலி பொங்கல் மலர் 1956), 'அம்மைச்சி' (குயில் 17.6.58) 'ஒரு காட்சிச் சிறு நாடகம்' (குயில் 12.8.58)' குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும் (பாரதிதாசன் குயில் 10.6.67, 10.8.67) முதலிய நாடகங்கள் சில இன்னும் நூலுருப் பெறவில்லை.

5.6. பாரதிதாசன், பாரதியார் பற்றிய திரைப்படம் எடுப்பதற்கான (கதை, உரையாடல்...) எழுத்து வேலையைத் தாம் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே முடித்து விட்டதாகவும், அதனைப் பதினைந்து நாட்கள் தொடர்ந்து நல் உறக்கமின்றி எழுதியதாகவும் அறிகிறோம்.[5] பாரதியார் பற்றிய முற்றுப்பெற்ற அப்படைப்பு இப்போது பாரதிதாசனின் புதல்வரிடம் இருப்பதாகத் தெரிகிறது. அது வெளியிடப்பட்டால் இருபாவலர்களைப் பற்றியும் மேலும் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படும்.

6.0. பாரதிதாசனின் படைப்புகள் பற்றிப் பொதுவாகப் பார்த்தோம். இப்பார்வை இனி நாம் செய்ய வேண்டியவற்றை உணர்த்தும். இப்போது கிடைக்காத நூல்களான 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் படைப்பாட்டு' ஆகியவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபடவேண்டும். 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது (1926), 'கதர் இராட்டினப்பாட்டு (1930) 'பாரதிதாசனின் ஆத்தி சூடி' (1947) முதலிய நூல்களை முன் அமைப்பு மாறாமல் அப்படியே

அச்சேற்ற வேண்டும். முற்காலப் படைப்புகள் பாரதிதாசனின் பிற்காலக் கருத்துகட்கு மாறுபட்டவை எனினும் வெளியிடப்பட வேண்டும். தொடக்கக்காலப் பாரதிதாசனைப் புரிந்து கொள்ள அவை துணை செய்யும். சில நூல்களின் பின் பதிப்புகளில் காணப்படுகின்ற மாற்றங்களில் பல பாரதிதாசனே செய்தவை. சில பதிப்பாளர்களால் செய்யப்பட்டவை. முன் வகை மாற்றங்கள் பாரதிதாசனின் இலக்கிய,சமுதாயக் கொள்கைகளின் போக்கை அறியத் துணை செய்வன. பின்வகை மாற்றங்கள் தவிர்க்க வேண்டியன. இரணியன் அல்லது இணையற்ற வீரன் (1968) பதிப்பில் இருபத்துமூன்று பாடல்கள் விடுபட்டமை பதிப்பித் தாரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. பதிப்பாண்டுகள் பிழை யாகத் தரப்பட்டால் அவ்வாண்டுகளின் துணையோடு ஆசிரிய னின் வளர்ச்சி நிலையைக் கணித்தறியும் ஆய்வாளன் ஒருவன் சரியான முடிவுக்கு வருதல் எளிதன்று; 'பதிப்பாளன் நூலைக் கெடுத்தான்' என்னும் புதுமொழி தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முன்னர் தனி நூல்களாகவும் தனிப்பாடல்களாகவும் வந்த படைப்புகள் பின்னர் தொகுதிகளாக்கப்படும்போது அப்படைப்புகள் முதன்முதல் படைப்புகள் வெளியான ஆண்டு களையும் குறிப்பிடுதல் நல்லது. சில படைப்புகள் தனி நூல்களாக வெளிவந்தபோது அவற்றுக்குப் பாரதிதாசன் எழுதிய முன்னுரைகள் தொகுதிகளாக்கப்படும் போது விடப்பட்டுள்ளன. அம்முன்னுரைகளில் அப்படைப்புகளின் உருவாக்கத்தோடு தொடர்புடைய செய்திகள் சொல்லப்ப்ட்டுள்ளன. ஒரு பக்க அளவே அமையும் அம்முன்னுரைகளையும் அப்படைப்புகளோடு இணைத்து வெளியிட வேண்டும். அம்முன்னுரைகளும் முதலில் வெளியான ஆண்டுக்குறிப்பும் பொதுவாகத் திறனாய்வாளர் கட்கும் சிறப்பாகப் பாரதிதாசனைக் கால அடிப்படையில் கணிக்கின்றவர்க்கும் பெரிதும் பயன்படும். ஒரு நூலில் இடம் பெற்ற ஒரு படைப்பே பிறிதொரு நூலிலும் இடம் பெறாதவாறு திருந்திய முறையில் பதிப்புகள் அமைதல் நலம். இதுவரை நூல்வடிவம் பெறாமலிருக்கிற எழுத்தோவியங்களைத் தொகை வகைப்படுத்திச் செம்மையான நூல்களாகக் கொணர்தல் வேண்டும். முழுமையான முறையில் பாரதிதாசனை அறிந்து கொள்ள அப்படைப்புகள் இன்றியமையாதவை.

**சான்றெண் விளக்கம்**

1. கதர் இராட்டினப்பாட்டு, முகவுரை, காசி, ஈலக்ஷ்மண் ப்ரசாத் 1930. புதுவை
2. கதர் இராட்டினப்பாட்டு, முகப்பு அட்டையின் உட்பக்கக் குறிப்புகள். 1930 புதுவை.

3. 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' 'ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' எனப்பெயர் மாற்றப்பட்டுப் 'பாரதிதாசன் குயில்' இதழில் (10.12.1967) வெளியானது.

4. 'பாரதிதாசன் குயில்' 10.5.1967, புதுவை.

5. 'நலிவுற்ற உடலில் வலிவுற்ற மனம்.' ந. இராமநாதன், பாரதிதாசன் குயில், 10.1.1968.

30

# ஆய்வு - நோக்கும் போக்கும் - சில குறிப்புகள்

ஆய்வு என்பது முடிவுறாத தொடரோட்டம். ஒருவரிடமிருந்து மற்றொருவர், மற்றொரு வரிடமிருந்து பிறிதொருவர் எனப் பற்பலர் பல காலங்களில் செய்யும் பங்களிப்பை உள்ள டக்கியது.

மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவதைப்போலத் தேடத்தேடத் துருவத்துருவப் புதியபுதிய வெளிச்சங்களைப் புதியபுதிய செய்திகளைப் புறந்தருவது ஆய்வு.

கல்வியும் ஆய்வும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பன. ஒன்றி லிருந்து ஒன்று சுழன்று வருவன.

இன்று கல்வி என்பது பேரளவு படிப்பு என்றாகி விட்டது. சிலவற்றைப்பற்றி ஆழமாக அறிவது என்பதைக் காட்டிலும் பலவற்றைப்பற்றி மேலோட்டமாகத் தெரிவது நல்லது; ஆழக் கல்வியினும் அகலக்கல்வியே மதிப்பிற்குரியது எனக் கருதப்படுகிறது. இதன் தொடர்விளைவை ஆய்விலும் நாம் காணலாம். நுண்ணாய்வு களுக்கு இன்று அதிக இடமில்லை. இருப்பவற்றைத் தொகுத்தலும் பகுத்தலுமாகிய ஆய்வின் தொடக்க நிலையே ஆய்வின் நிறைவு நிலையாக அமைந்து விடுகிறது. தேடுதல், துருவுதல், தேர்தல் என்னும் ஆய்வு அணுகல்களுக்கு அங்கே இடமில்லை. இளம்பூரணர் 'ஆராய்ச்சி' என்னும் மெய்ப்பாட்டை விளக்கும்போது ''ஆராய்ச்சி என்பது ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென ஆராய்தல். ஆராய்தல் எனினும் தெரிதல் எனினும் தேர்தல் எனினும் நாடல் எனினும் ஒக்கும்'' என்று குறிப்பிடுவது இவண் இணைத்து எண்ணத்தக்கது.

'கல்வி பலர்க்கும்' என்றானதின் தொடர்ச்சியாக ஒரு காலத்தில் சிலர்க்கென்றிருந்த ஆய்வு பலர்க்கும் உரியதாயிற்று. எவரும் எதையும் இலக்கியமாக்கலாம் என்னும் மக்கள் நாயகப் போக்கு ஆய்வுத்துறையிலும் பற்றிப் படர்ந்தது. படைப்புகளை அறிவதிலும் ஆய்வதிலும் சமூகவியல், உளவியல், மானுடவியல் முதலிய பிற துறை அறிவு பெரிதும் பயன்படும் என்னும் தெளிவு நேற்றினும் இன்று மிகுந்திருக்கின்றது. தமிழாய்வு பலதுறைகள், பல இயல்கள், பல இயங்கள் சார்ந்தாக விரிந்திருக்கிறது. தாய்மொழிக்களப் படைப்புகளின் மேல் நிகழ்த்தப்படும் ஆய்வுகளும் கூட ஆங்கில மொழியிலேயே எழுதப்பட வேண்டுமென்னும் அறிவுக்குப்புறம்பான முறை இன்று பேரளவு மாறிவிட்டது. எனினும் ஆய்வேடுகளை மதிப்பிட அயல்நாட்டுத் தேர்வாளர்களை, வடநாட்டுத் தேர்வாளர்களைக் தேடியலையும் அவலம் நீடிக்கிறது.

கல்வி என்பது அறிவூரில் செய்யும் பயணம் என்பதைக்காட்டிலும் வேலையூருக்கு நாம் சென்று சேரப் பயன்படும் கடவுச்சீட்டு என்றாகிவிட்டது. ஆய்வுகளும் ஊதிய உயர்வுக்கும் உயர்ந்த பதவிக்கும் நம்மை இழுத்துச் செல்லும் ஊர்திகள் என்ற உணர்வே மேலோங்கியிருக்கும் காலமிது. ஆய்வு என்பது அறிவுலகப் பங்களிப்பு; ஆர்க்கிமிடிஸ் 'கண்டுகொண்டேன், கண்டு கொண்டேன்' (யுரேகா, யுரேகா) எனப் பிறந்த மேனியோடு குளியலறையிலிருந்து வெளியில் வந்து கூவி மகிழ்ந்தானே அப்படிப்பட்ட ஆரா இன்பம் - சேயிழை மாட்டுச் செறிதோறும் பெறும் இன்பத்தைவிடச் சிறந்த இன்பம் எனக்கருதுவார் தொகை அருகி வருகிறது. எப்படியாயினும் ஒரு பட்டம் வேண்டும் என்னும் அவா, பேரவா எவரோ எழுதி, எவரோ பட்டம் பெறும் இழிநிலைக்கும் இட்டுச் செல்கிறது. 'இத்தனை பேருக்கு நான் ஆய்வுக் கட்டுரை எழுதிக் கொடுத்தேன், என்னால் பட்டம் பெற்றவர் இத்தனைபேர்'' எனத் தாளிகைகளில் செவ்வி கொடுப்பார் சிலர். நெறியாளர்கள் சிலரே எழுத்தாளர்களாகி ஆய்வேடுகளைச் சமைத்து அன்பளிப்புகளைப் பெறுவதுண்டு. ஆய்வை நெறிப்படுத்துவதற்கு எவ்விதப் பணிப்பளுக் குறைப்போ, பணப்பயனோ இல்லாமலிருப்பதும் இத்தகைய முறைகேடுகளுக்கு வழி வகுத்து விடுகிறது. இதனால் எவருக்கோ பிறந்த பிள்ளையை என் பிள்ளை என ஏந்திப் பட்டம், பதவி மினுக்கும் இழிநிலை!

ஈடுபாட்டோடு நோக்கினால் அழகு எங்குமிருப்பதை உணரலாம் என்பான் பாரதிதாசன். ''நகையோடு நோக்கடா எங்குமுள்ளாள்'' என்பது அவன் அழகின் சிரிப்பு. அந்த நகை, அந்த ஈடுபாடு எந்தப் படைப்பாக்கத்துக்கும் இன்றியமையாதது, ஆய்வுக்கும் அது தேவை. ஆய்வாளருக்கும் ஆய்வுப் பொருள் மீது ஒரு ஈடுபாடு தேவை. ஆய்வு செய்யவரும்

பலர் ஆய்வுப் பொருள் பற்றிய முற்சிந்தினை சிறிதும் அற்றவர்களாகவும், பற்றற்று எந்தத் தலைப்பிலும் ஆய்வு செய்ய அணியமாயிருக்கும் பக்குவத்தினராயும் இருப்பது ஒருபுறம்! வேறுசிலர் விளம்பர நோக்கில் எந்தத் தலைப்பில் ஆய்வு செய்வது எதிர்கால வளத்துக்குப் பயன்படும் என்பதைக் கருத்திற்கொண்டு ஆளுங் கட்சியைச் சார்ந்தோ, செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களைப் பற்றியோ, புகழில் மிதக்கும் கவிஞர்களை, நடிகர்களைப் பற்றியோ ஆய்வு செய்ய அவாவுகின்றனர். புதிய உண்மைகளை அறிந்து சொல்ல வேண்டும் என்பதைக்காட்டிலும் புகழும் பொருளும் பெறவேண்டுமென்பதே ஆய்வு நோக்கமாக அமைந்துவிடுகிறது. இப்படிப்பட்ட தலைப்புகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் பலவும் நயமுரைப்பவையாகவும் நலம் பாராட்டலாகவும் அமைந்திருப்பது கண்கூடு.

மு.வ.வின் புதினங்களைப் பற்றி ஆய்வுக்குப் பதிவு செய்திருந்த கல்லூரிப் பேராசிரியர் ஒருவர்க்குக் 'கரித்துண்டு' புதினத்தைத் திறனாய்ந்து கட்டுரை எழுதுமாறு முனைவர் குழு பணித்தது. அப்பேராசிரியர் தான் பணியாற்றிய கல்லூரி நூலகத்தில் அப்புதினம் கிடைக்காததால் வேறுதலைப்பில் கட்டுரை எழுதுகிறேன் என்றார். வேறு இடங்களில் தேடிப்பார்க்க முனையாத அவரின் நன்முயற்சியைப் பாராட்டிப் பட்டத்திற்கு மேற்பட்ட தகுதியுடையவர் நீங்கள் என்று ஆய்விலிருந்து விட்டுவிட்டோம்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்வதில் இன்னொரு அவலம். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பல்கலைக்கழத்தில் ஒருவர் மேற்கொண்ட ஆய்வுப் பொருளையே பல ஆண்டுகளுக்குப் பிறகு வேறு சிலர் அந்தப் பல்கலைக்கழகத்திலும் பிற பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளனர். முந்தைய ஆய்வுகளை அவர்கள் அறிந்து கொள்ள முனைந்ததாகத் தெரியவில்லை. ஆய்வாளர் தம் முயற்சி குறைவாக இருப்பதோடு நெறியாளர்களின் வழிகாட்டுதல் சரியாக அமைவதில்லை என்பதே இதற்குக் காரணம். ஒரே தலைப்பில் முதலில் நன்கு அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் மோசமாக அரைக்கும் வேலையை - கட்டித் தயிராக முன்னோர்கள் விட்டுச் சென்றதை நீர்மோராக ஆக்கும் பணியைத் தவிர்க்க வேண்டும். இதற்கு யார், யார், எங்கெங்கு, என்னென்ன தலைப்புகளில் எவ்வெப்போது ஆய்வுகள் நிகழ்த்தினர் என்னும் குறிப்புகள் அடங்கிய தொகுப்புப் பகுப்பு நோக்கு நூல்கள் தேவை. குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது இத்தகைய நோக்கு நூல் வெளிவர வேண்டும். ஆய்வுத் தொடர்பான இத்தகைய நோக்குநூல் முயற்சிகள் மிகக் குறைவாகவே நடந்துள்ளன. நோக்கு நூல்களில், செய்யப்பட்ட ஆய்வுகளோடு செய்தாக வேண்டிய ஆய்வுக் களங்கள் தலைப்புகள் பற்றிய குறிப்புகளை இணைத்து வெளியிடலாம்.

புதிய உண்மைகளைக் கண்டு காட்ட வேண்டுமென்னும் வேட்கையோடு ஆய்வுலகில் நுழைபவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பல. அவற்றுள் சிலவற்றை இங்குக் கோடிட்டுக்காட்டுதல் நல்லது. பாரதிதாசன் படைப்புகளை மையமாக வைத்து ஆய்வாளர் எதிர் கொள்ளும் சில சிக்கல்கள் சுட்டப்படுகின்றன.

'விடுதலை வேட்கை உயிரின் இயற்கை' என்னும் பெருந் தலைப்பின் கீழமைந்த 'நாய்ப்பாட்டு' ஒன்று. பட்டு மெத்தையில் தூங்கிப் பாற்சோறு முதலியவற்றைச் சாப்பிட்டு வரும் 'மெத்தை வீட்டு வெள்ளைநாய்' ஒன்றும் 'தெருவில் திரியும் கறுப்பு நாய்' ஒன்றும் உரையாடுகின்றன. அப்போது வெள்ளை நாயின் கழுத்திலிருக்கும் ஒரு வடுவைப் பார்த்த கறுப்புநாய் அதன் காரணத்தைக் கேட்கிறது. 'காதோரத்தில் வார் கொண்டு கட்டி வைப்பதால் வந்தவடு' என்று வெள்ளைநாய் விளம்புகிறது. அதனைக் கேட்ட கறுப்புநாய்

*அடிமை யாய்நீ இருப்பதேன்*
*கதிதான் கெடநீ நடப்பதா?*
*கட்டுப் பட்டுக் கிடப்பதா?*
*சதிராய் உன்னிடம் அண்டேனே*
*சதையில் ரத்தம் சுண்டேனே*

என்று கூறி அடிமை வெள்ளைநாயிடம் நிற்காமல் அஞ்சி ஓடிவிடுகிறது. நாய்களின் மூலமாகச் 'சலுகைகளோடு கூடிய அடிமைத்தனத்தைக் காட்டிலும் வறுமையோடு பொருந்திய உரிமைநிலை மேலானது' என்பதை இப்பாடலின் வழிப் பாரதிதாசன் உணர்த்துகின்றார்.

பாரதிதாசன் பற்றிய ஆய்வேடுகளில் ஒன்று இப்பாடலை ஆராய்ந்து விளக்குகையில்

*''வடவர் தாள் வணங்கி அரசியற் பயன்பெற்ற சிலர்*
*வாழ்வு வெள்ளைநாயின் நிலையகாவும், அவ்வடிமைத்*
*தனத்தை எதிர்க்கும் கருஞ்சட்டை வீரர்கள் எழுப்பும்*
*குரலும் செயலும் கறுப்புநாயின் நிலையாகவும்*
*அமைத்துத் தம் கருத்தைக் வெளியிட்டுள்ளார் கவிஞர்'' (ப 80)*

*(பாரதிதாசனின் கதைப்பாடல்கள் ஓர் ஆய்வு - முனைவர் ச.சு.இளங்கோ 1978).*

என்று மறைபொருள் விளக்கந்தருகிறது. ஆய்வாளர்க்கு இப்பாடல் 1948 - மே மாத 'மன்றம்' இதழிலிருந்து கிடைத்திருக்கிறது. ஆதலால் இப்பாடல் 1948இல் எழுதப்பட்டது என்னும் முடிவுக்கு வந்து திராவிடர் கழகம், வடவர் எதிர்ப்பு, திராவிட நாடு என்னும் பின்னணியில் மேற்சுட்டிய விளக்கம் பொருத்தமுற அளிக்கப்பட்டுள்ளது. ஆனால்

இப்பாடல், பாரதிதாசன் பேராயக்கட்சிக்காரராக இருந்து ''ஒத்துழை யாமை இயக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டு'' அதன் ஒவ்வொரு தத்துவத்தையும் விளக்கும் வகையில்'' எழுதிய பல நூல்களில் ஒன்றாகிய சிறுவர் சிறுமியர் தேசிய கீதத்தில் இடம் பெற்றுள்ளது. முன்னரே எழுதப்பெற்று 1930 வாக்கில் வெளியான அந்நூல் 'சுதந்திரம் உயிரின் இயற்கை' - நாய்ப்பாட்டு என்னுந் தலைப்பில் இடம் பெற்ற இப்பாடல் அவ்வாறே 1935இன் தொடக்கத்தில் பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு வெளியான 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழிலும் (முதல் வெளியீடு) வெளியிடப்பட்டுள்ளது. ஆதலால் திராவிடர் கழகம் தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்ட இப்பாடல் 'வடவரிடமிருந்து விடுதலை'யைப் பேசுவ தாகக் கொள்ள முடியாது. 'ஆங்கிலேயரிடமிருந்து இந்திய விடுதலை' என்னும் கருத்துப் பின்னணியில் உருவான பாடல் இது. ஆய்வாளரின் பிறழ உணர்தலுக்குக் காரணம் 1948 மே மாத மன்றம் இதழிலேயே இப்பாடல் முதலில் வெளியானது எனக்கொண்டதும் அதற்கு முன்னரே இரண்டு இடங்களில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது என்பதை அறிய வாய்ப்பில்லாது போனதுமேயாகும். பாடல் முதலில் வெளியான காலத்தைத் தெளிவாக அறிய இயலாமையால் நேர்ந்த பிழை இது.

இன்னொரு முனைவர் பட்ட ஆய்வேடு 'தன் பெண்டு, தன் பிள்ளை,' எனத் தொடங்கும் 'உலக ஒற்றுமை' எனும் பாடலை விளக்க முற்படுகிறது. அப்பாடலில் வரும் 'தொன்னையுள்ளம்' என்னுந் தொடர் பல பதிப்புகளில் 'தென்னையுள்ளம்' என்றே பிழையாக அச்சிடப் பட்டுள்ளது. ஆய்வாளர் 'தென்னை' என்பதையே மூலவடிவமாகக் கொண்டு ''தென்னையின் குறும்பை எனில் துவர்ப்புத் தன்மை கொண்டது எதற்கும் பயன்படுத்த முடியாதது. மரம் எனில் நீண்டு உயர்வது. வறும்பூத் துறக்கும் வண்டனைய பரத்தையரின் உறவைப் போன்ற நிலையில்லா நிழல் தென்னையின் நிழல். அது நல்கும் குளிரிளநீரும், கொப்பரைக்காயும் கூடக் கடிய முயற்சிக்குப் பின்னரே கிட்டவல்லது. அறிவை மயக்குறச் செய்யும் கள்ளை நல்க வல்லது.

தன்வீடு, தன் ஊர் என்ற எல்லைகளைத் தாண்டித் தன்நாடு என்று வாழ்வது உயர்வுடையதுதான். எனினும் தான் பெற்ற சுதந்திரத்தால் பிற நாடுகளின் உரிமையைத் தகர்க்க முனையும்போது மனிதன் போர்வெறி கொண்டவனாகிறான். உயிரினும் மேலான பிறநாட்டின் உரிமையைச் சிதைப்பதன் வாயிலாக அவன் கொடுங்கோலனாக மாறிவிடுகிறான். தன்செயலைச் சரியென்று காட்ட நாட்டுப்பற்றென்னும் கள்ளால் தன் மக்களின் நேர்மையை மயக்கிவிடுகிறான். எனவே அவன் உள்ளம் தென்னையைப் போன்றதாகிவிடுகிறது. (பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம் - இரா. சக்குபாய் 1990. ப. 90). எனத் திறம்பட விளக்கந்

தருகிறார். முதற்பதிப்பு முதலிய முந்தைய பதிப்புகளின் வழி மூலபாடத்தையும், 'தொன்னை, சுதந்திரத்தால்' எனவரும் மோனை அமைதியையும் கடுகு, துவரை, தொன்னை, மாம்பிஞ்சு எனவரும் உவமையடுக்கின் வடிவ விரிவு வளர்ச்சியையும் 'தொன்னையிலே நொய்க்கஞ்சித் தூக்கிக்குடியென்னும் அன்பிலார்க்கு ஆட்பட்ட தெண்ணி அழுவேனோ' என்று தொன்னை என்னும் சொல்லைப் பாரதிதாசன் பல இடங்களில் பயன்படுத்தியிருப்பதையும் ஆய்வாளர் கருத்தில் கொண்டிருந்தால் நுணுகி நோக்கி அவர் தரும் விளக்கம் பிழைபட்டதாகியிருக்காது. அச்சுப்பிழையால் நேர்ந்த பாடவேறு பாட்டையே மூலபாடமாகக் கொண்டதுதான் இப்பிறழ உணர்தலுக்குக் காரணம்.

பாரதிதாசனின் நாடகங்களை ஆய்வுக்குட் படுத்திய பிறிதொரு நூலில் 'சௌமியன்' நாடகம் பற்றிக் குறிப்பிடுகையில் ''இந்நாடகத்தின் மூலம் ஆசிரியர் ஒற்றுமையை வலியுறுத்துகிறார். 1947இல் இந்தியர் களுக்குள் ஒற்றுமை இல்லாத நிலை ஏற்பட்டது. இந்து- முஸ்லீம் பிளவு ஏற்படத் தொடங்கியது. அதனால் இந்தியர்களுக் கிடையில் ஒற்றுமையை உருவாக்கும் முயற்சியாகவும் இந்நாடகம் அமைந்திருக் கிறது'' என்கிறார். (பாரதிதாசன் நாடகங்கள் ஒரு பார்வை - சரளா இராசகோபாலன் 1987 ப. 98). ஆய்வாளர், 1947 இல் ஏற்பட்ட இந்த - முஸ்லீம் பிளவைக் கருத்திற் கொண்டு ஒற்றுமையை உருவாக்கும் முயற்சியாக இந்நாடகத்தைப் பார்ப்பது சரியாகாது. இந்நாடகத்துக்கு 1.1.47இல் பாரதிதாசன் எழுதிய முன்னுரையில் '1939 ஆம் ஆண்டு வாக்கில் இந்நாடகம் எழுதப்பட்டது' என்றும் ''மேலட்டை, முகவுரை சேர்க்குமுன் வையப் பெரும்போர் தொடங்கிவிட்டது, இந்நாள் குறைமுடித்து வெளியிடலாயிற்று'' என்றும் குறிப்பிடுகிறார். சூலை 1947 பொன்னி இதழில் சௌமியன் பற்றிய மதிப்புரையில் ''1939 ஆம் ஆண்டு கவியரசர் பாரதிதாசன் எழுதிய இந் நாடகம் தமிழருக்கு இன்றுதான் படிக்கக் கிடைக்கிறது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து சௌமியன் 1939 இல் எழுதப் பட்டது என்பதும் 1947 இல் ஏற்பட்ட இந்திய நிலமையைக் கருத்திற் கொண்டு உருவாக்கப் பட்டிருக்கலா மென்பது பொருந்தாது என்பதும் புலனாகின்றன. பாரதிதாசனின் பல நூல்கள், அவர் முதலில் எழுதிய முன்னுரைகள் இடம் பெறாமலேயே பின்னர் வெளிவந்துள்ளன. அதுவும் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வரும் அண்மைக்கால அச்சீடுகளில் இப்போக்கு அதிகம் தென்படு கின்றது. சௌமியன் நாடக முதற் பதிப்பு முன்னுரை, ஆய்வாளர் பார்வைக்குக் கிடைத்திருக்குமானால்' 1947 நடப்பினால் இந்தியர் களிடையே ஒற்றுமையை உருவாக்கும் முயற்சி' என்னும் முடிவுக்கு வந்திருக்க மாட்டார்.

மேற்சுட்டிய மூன்று குறிப்புகளின் வழி நாம் உணர்வது ஆய்வாளர்களின் பிறழ உணர்தலுக்குப்

1. படைப்புகள் எழுதப்பட்ட, முதலில் வெளியான தெளிவான காலத்தை அறியாமை.

2. பாடவேறுபாடு எது? மூலபாடம் எது? எனத் தெளியாமை.

3. ஆசிரியர் முதலில் எழுதிய முன்னுரைகள் பார்க்கப்படாமை - பின் பதிப்புகளில் அவை இடம் பெறாமை ஆகியவற்றைக் காரணங்களாகக் கூறலாம்.

இவற்றிலிருந்து ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் பாரதிதாசன் படைப்புகளுக்குத் தெளிவான காலக்குறிப்பு களைக் கொண்ட, பாடவேறுபாடுகள் குறிக்கப்பட்ட, முன்னுரைகள் முதலியவற்றை உள்ளடக்கிய, கால வரிசையிலமைந்த ஆய்வுச் செம்பதிப்பு உடனடித் தேவை என்பது புலனாகின்றது.

# 31

## மரபுக்குச் சொந்தக்காரர்கள்

செந்தமிழர் நெஞ்சப் பொய்கையின் தேன்மலராகக் கமழ்ந்து கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா மிகப்பரந்த நூலறிவும், நுண்மாண் நுழை புலமும், பாசம் மிகுந்த தாயுள்ளமும் கொண்ட தனிப்பெருந் தலைவர். உலக வரலாற்றை உணர்ந்த அவர் தமிழ்த்தேசிய இனத்தின் தன்னிகரற்ற வளமான மரபுச் செல்வங்களை, வரலாற்றுச் சிறப்புகளை நன்கு அறிந்தவர். அறியாதார்க்கு அறிவித்தவர்.

'தொல்காப்பியம் என்னும் ஒல்காப்புகழ் இலக்கணச் செல்வத் திற்குச் சொந்தக்காரர்கள் நாங்கள்' என்று நாடாளுமன்றத்தில் அறிவித்த வர். அயல் நாடுகளுக்குச் சென்ற போது ஆங்கில மொழியாக்கம் பெற்ற தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் எடுத்துச் சென்றவர். உலகத்தலைவர்களை எதிர்கொண்டபோது 'இதோ எங்கள் மரபுச் செல்வம்' எனக் கொடுத்து மகிழ்ந்தவர்.

1967இல் ஆட்சிக்கட்டிலில் முன்னேற்றக் கழகம் அமர்வதற்கு முன்னர் நடந்த விருகம்பாக்கம் மாநாடு! வேட்பாளர் பட்டியல் அந்த மாநாட்டில் தான் வெளியிடப்பட்டது. மாநாட்டில் அண்ணா பேசுகிறார் ''தமிழ்மொழி, இனம், மரபு காக்கவே தி.மு.கழக, ஆட்சி'' என்ற தலைப்பில் அப்பேச்சு வெளிவருகிறது. அதன் ஒரு பகுதி இது.

''இந்த நேரத்தில் தமிழ் மரபு பற்றியும் - வரலாறு பற்றியும் உலகத்தோடு அதற்கிருந்த தொடர்பு பற்றியும் எண்ணிப் பார்த்திட வேண்டும். தரணி புகழ வாழ்ந்திருந்த புகழ் பெற்றது தமிழ் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு அவர்கள் அரசு என்று ஒன்று ஏற்படுத்தாதற்கு முன்பு - அரச நீதிகளை வகுப்பதற்கு முன்பு - காடுகளில் அவர்கள் உலவிக் கொண்டிருந்த போது - உலகமே வியந்து உச்சிமேல்

வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம். நமது மூதாதையர் யவனம் வரை தொடர்பு கொண்டிருந்தனர். சீனம்வரை சென்று திரும்பினர். தூரக்கிழக்கு நாடுகளில் கலாச்சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தம்பி செழியனுடன் மலேசிய நாடு சென்றிருந்த போது கடாரம் என்றழைக்கப்பட்ட ஊருக்குச் சென்றோம். இப்போது அது கெட்டா மாகாணம் என்றழைக்கப்படுகிறது. அங்கே சோழநாட்டு மண்டபங்களையும் வாவிகளையும் - கோவில்களையும் - பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த சிற்பங்களையும் கண்டேன். அது முன்பு மண்மேடாகிக் கிடந்தது. இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்டு கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊரிலுள்ள திடலில் நான் பேச எழுந்த போது 10 நிமிடம் என்னால் பேச முடியவில்லை. கடல் கொந்தளித்துக் கொண்டிருந்த அந்தக்காலத்தில் கடலைக் கடந்து செல்லும் கலங்கள் நேர்த்தியாக அமைக்கப்படாத அந்தக் காலத்தில் - நீராவிக் கப்பல்கள் இல்லாத அந்தக் காலத்தில் அலைகடலைக் கிழித்துக் கொண்டு ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கடாரம் சென்று பெருமையை நிலைநாட்டியது தமிழினம். அதே தமிழினத்தைச் சார்ந்தவர்கள் தேயிலைத் தோட்டத்திலும் ரப்பர் காடுகளிலும் கூலிகளாய் இருக்கும் நிலையை நினைத்ததும், அந்தப் பெருமை மிக்கத் தமிழ் மரபிலா நாம் பிறந்தோம் என்றெண்ணினேன். 10 நிமிடம் பேச முடியவில்லை.

அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்ற வகையில் நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும். இன்னும் நம்மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக்கி நமது பொருளா தரத்தைச் சீராக்கி - உரிமைகளை நிலைநாட்டி இந்த நாட்டுத் தமிழர்களை - தமிழ்ப் பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டு களாவது ஆகும். வெறும் அரசியல் நடத்த 67-இல் ஆட்சி அமைக்க மட்டும் நம் கட்சி இருக்கிறது என்று நினைக்காமல் 67க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டு காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப்பதிய வேண்டும். தமிழ் மக்கள் - தமிழ் மரபைப் புரிந்து கொண்டு - தமிழ் வரலாற்றைப் புரிந்து கொண்டு புது வரலாற்றை - புதிய செய்திகளை புதிய பண்பை உலகுக்கு வழங்க வேண்டும்.

புதிய செய்திகளை புதிய பண்புகளை உலகுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகத் தான் நாம் பணியாற்றுகிறோம்.''

இவர்தாம் அண்ணா! ஒவ்வொரு தமிழனும் உள்ளத்தில் இருத்த வேண்டிய பேச்சு இது!

இயக்கம் எதற்காக?

வெறும் அரசியல் நடத்தவா?

ஆட்சி அமைக்க மட்டுமா?

இல்லை, இல்லை.

தமிழர்கள் தங்கள் வரலாற்றுமரபுச் செல்வங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குச் சொந்தக்காரர்கள் என்னுந்தகுதி பெற வேண்டும்.

எதற்கு? பழம் பெருமைப் போதையில் மயங்குவதற்கா? இல்லை, இல்லை.

புதிய வரலாற்றைப் படைப்பதற்கு! புதிய செய்தியை உலகத்திற்கு வழங்குவதற்கு!

அதற்காகத் தான் நாம் பணியாற்றுகிறோம் என்றார் அண்ணா.

தமிழர்கள், தாங்கள் யார்? தங்கள் மொழி இனம் பண்பாடு எத்தகையன? எத்தகைய தாக்குதல்களுக்குத் தாங்கள் உள்ளாகியிருக்கி றோம் என்பனவற்றை இந்த நூற்றாண்டில் தான் தெளிவாக உணரத் தொடங்கினர்.

தங்கட்கு எதிரானவற்றை இனங்கண்டு விலக்கவும் தங்கட்குச் சொந்தமானவற்றைக் கண்டறிந்து போற்றவும் தலைப்பட்டனர். சாதி, சமயத் தளைகளை அகற்ற முனைந்தனர். அவற்றுக்குச் சார்பானவற்றை எதிர்க்கத் துணிந்தனர்.

தீபாவளியா? அது தமிழர்க்கு எதிரானது, விலக்கத்தக்கது என்றனர்.

பொங்கலா? அது தமிழர் திருநாள், 'கொண்டாட வேண்டியது' என்றனர்.

வண்ண வண்ண வாழ்த்து மடல்கள் பறந்தன. எண்ண இனிக்கும் பொங்கல் மலர்கள் கமழ்ந்தன. இனிய சர்க்கரைப் பொங்கல் எண்ண எழுச்சிப் பொங்கலாய் விரிந்தது. பொங்கல் விழா புதுப்புது விளக்கம் பெற்றது. தமிழர்களின் தனித்தன்மையைக் காட்டும் பண்பாட்டுக் குறியீடாய்த் ''தமிழர் திருநாள்' மலர்ந்தது.

'ஏ தாழ்ந்த தமிழகமே' என விளித்து மொழி இனப் பண்பாட்டுச் சிந்தனைகளைப் பட்டி தொட்டிகளில் வாழும் ஏழை எளிய மக்களிடமும் கொண்டு சென்ற பெருமை, வேறு எந்த இயக்கத்தைக் காட்டிலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாகவே உண்டு. அறிஞர் அண்ணா அவர்களின் தலைமை இயக்கத்திற்கு ஈட்டித் தந்த பெருமை இது.

அண்ணா எழுதுகிறார்! அதுதான் அவர் தம்பிக்குத் தீட்டிய இறுதி மடல். அதுவும் 12.1.1969 காஞ்சி பொங்கல் மலரில். பொங்கல் மலர்களில் அண்ணா வரையும் தம்பிக்கு மடல்கள் தனித்தன்மை வாய்ந்தவை. எதுகை மோனைத் தொடை நயம் மிகுந்து கற்பனை வளஞ் செறிந்த கவிதை நடையில் அமைபவை. தம்பியர் தம் குடும்பத்தோடு உறவாடி விழாவின் சூழ்நிலையைப் படிப்பவர் மனத்தில் பதியச் செய்திடும் ஆற்றல் வாய்ந்தவை. அப்படி அவர் உடல் நலிவுற்ற நிலையிலும் உள்ளத்தை உருக்கும் வகையில் எழுதிய இறுதி மடலில்: ''நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா அது... உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒரு முறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கு விழாக்கள் பலப்பல நடத்தப்படினும் தமிழகத்தின் பொங்கல் புதுநாள் போன்றதொரு விழா இல்லை; நிச்சயமாக இல்லை... மற்றைய பல விழாக்கள் 'கொடுத்து வைத்தது அவ்வளவு தான். நாம் வந்த வழி அது. இங்கு துன்பம் அங்கு இன்பம் கிட்டும்' என்ற எண்ணங் களுக்கு முதலிடம் தருவன. தமிழர் திருநாளாம் பொங்கல் புதுநாள் தனித்தன்மை பெற்றது. 'உழைப்பே செல்வம்' உழைப்பே உயர்வு' உழைப்பின்றி உலகு இல்லை' என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கிறது' எனப் பொங்கல் விழா உழைப்பின் விழாவாகப் புதுப்பொலிவு பெறுகிறது. விழாவின் தனிச்சிறப்பை விளக்குவது மட்டுமா அவர் நோக்கம்? இல்லை, இல்லை.

''பழம் பெருமை பேசிப் பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதன்று நமது குறிக்கோள். செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கல் புதுநாளில் செயலார்வம் மிகுந்திருப்பது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும். பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைக்கத் தக்க முறை கண்டாக வேண்டும்.''

இதுவும் அம்மடலில் இடம் பெற்றிருப்பதே. அண்ணாவின் உள்ளார்ந்த விருப்பம் இங்கே வெளிப்படுகிறது.

'செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டும் நாள் பொங்கல் நாள்'

'அந்நாளில் இயல்பாகவே நமக்குச் செயலார்வம் மிகுந்திருக்க வேண்டும்.'

நாம் நமது செம்மையான செயலால் சமூகம் முழுமைக்கும் பயன் கிடைக்கத்தக்க முறையைக் கண்டாக வேண்டும். இறுதி மடலில் இடம் பெற்ற இப்பொங்கற்செய்தி என்றும் நம்மை நெறிப்படுத்தும் கருத்து விளக்காகும்:

''ஹொங்க ஹொங்க''
ஹொங்கர ஹொங்கர''

ஏதோ 'சங்கர சங்கர' என்பதுபோல் தோன்றுகிறதா? அதுதான் இல்லை.

''பொங்கல் பொங்கல்''
''பொங்கல் பொங்கல்''

என்னும் முழக்கங்களின் மாற்றுவடிவங்கள் தாம் இவை!

எங்கே இந்த முழக்கங்கள் கேட்கின்றன?

சப்பானில் தான்!

ஆண்டுதோறும் அங்கே புத்தாண்டு தொடங்கும் ஜனவரி 15ஆம் நாள் மாலைப் பொழுதில் இம்முழக்கங்கள் கேட்கின்றன!

நாம் பொங்கல் கொண்டாடும் அதே காலத்தில்! வீட்டைச் சுற்றிவந்து திசை தோறும் வானோங்கப் பொங்கலை வீசிப் 'பொங்கலோ பொங்கல்' என முழக்கமிடுவதையும் அம்முழக்கத்தோடு மாட்டுக்குச் சோறூட்டுவதையும் சிற்றூர்ப் பகுதிகளில் இன்றுங் காணலாம். ஜப்பானில் சோயா மொச்சைத்தோல், ஒருவகைக் கோதுமை உமி முதலிய பல பொருட்கலவையை வீட்டைச் சுற்றிலும் வீசிக்கொண்டே ''ஹொங்க ஹொங்க'' என்று முழக்கமிடுகின்றனர். சிவப்பு மொச்சை கலந்த கூழுணவை உண்டு மகிழ்கின்றனர்.

பொங்கலுக்கு முந்திய போகியன்று வேண்டாத பழைய பொருள் களுக்கு விடை கொடுக்கும் வகையில் எரிக்கும் பழக்கம் நம்மிடம் உண்டு. இதனைச் சென்னை நகர்ப் பகுதிகளில் சிறப்பாகக் காணலாம். சப்பானிலும் புத்தாண்டுக்கு முந்திய சனவரி 14ஆம் நாள் பழைய பொருள்களுக்கு எரியூட்டுகின்றனர்.

ஏதோ கதைபோலத் தோன்றுகிறதா?

இல்லை நண்பர்களே இல்லை.

சப்பானைச் சார்ந்த பேராசிரியர் சுசுமு ஓனோ தெரிவிக்கும் செய்திகள் தாம் இவை. எழுபத்தைந்து அகவையான பேராசிரியர் பல ஆண்டுகள் களஆய்வில் ஈடுபட்டுத் தமிழகத்திலும் தமிழீழத்திலும் பொங்கல் கொண்டாடப்படும் முறைகளை அறிந்து சப்பானியரின் புத்தாண்டுக் கொண்டாட்ட முறைகளை அவற்றோடு ஒப்பிட்டு ஆராய்ந்து தெரிவிக்கும் உண்மைகள் தாம் இவை.

பேராசிரியர் சுசுமு ஒனோ சப்பானிய மொழியியல் அறிஞர். சப்பானிய மொழியும் தமிழும் பலவகையில் நெருங்கிய உறவுடைய மொழிகள் என்பதை உலக அரங்கில் பலரும் அறிய நிலை நிறுத்தி வருபவர். இன்றைய ஜப்பானிய மொழியில் 'ஹ' வாக இருப்பது பழைய

ஜப்பானியத்தில் 'ப' வாக இருந்தது. ஆதலால் ஹொங்க என்பதன் முந்தைய வடிவம் 'பொங்க' என்பதுதான்.

சப்பானிய மொழி உயிரொலிகளில் முடியும் திறப்பசைகளைக் கொண்ட மொழி. ஆதலால்'பொங்கல்' என்னும் சொல்லின் இறுதியில் அமைந்த லகரமெய் மறைந்து 'பொங்க' என்று நின்றது என்கிறார் பேராசிரியர் (பொங்கல் > பொங்க > ஹொங்க).

'ஹொங்கர' என்பது 'பொங்கர' என்பதன் திரிபு என்றும் சப்பானிய மொழியில் ரகர லகர வேற்றுமை இல்லை, ஆதலால் 'பொங்கல்' என்பதே 'பொங்கர' என ஒலிக்கப்படுகிறது என்றும் அது 'பொங்கலோ' என்பதனோடு ஒத்திருக்கிறது என்றும் விளக்கமளிக்கிறார் பேராசிரியர். (பொங்கலோ பொங்கல் > ஹொங்கர ஹொங்கர)

இவற்றிலிருந்து தமிழ்ப் 'பொங்கல்' ஜப்பானில் 'ஹொங்க' 'ஹொங்கர' ஆகியிருக்கிறது என்று அறிந்து கொள்கிறோம். மொழி வழியிலும் பண்பாட்டு மரபிலும் நமக்கும் சப்பானியருக்கும் உள்ள உறவை ஒரு சப்பானிய அறிஞரே ஆய்ந்துரைக்கும் போது உள்ளம் களி கொள்கிறது.

திருவள்ளுவர் ஆண்டைத் தை முதல் நாளில் தொடங்கிப் பொங்கலிடும் நாம் தங்கள் புத்தாண்டைத் தொடங்கும் நாளில் 'பொங்கல்' முழக்கமிடும் சப்பானியரோடு இடத்தால் எட்டியிருந்தா லும் உள்ளத்தால் ஒட்டிக் கொள்கிறோம்.

இந்த உறவு ஏதோ தற்செயலாக நிகழ்ந்தா? இல்லை, இல்லை. விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா சொன்னாரே ''நமது மூதாதையர் யவனம் வரை தொடர்பு கொண்டிருந்தனர், சீனம் வரை சென்று திரும்பி னர். தூரக்கிழக்கு நாடுகளில் கலாச்சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்த னர்'' என்று. அந்தக் கூற்று சப்பானிய உறவின் அடிப்படையை விளக்கும் அறிவார்ந்த கூற்றாகும்.

முன்தோன்றிய மூத்த குடியினராகிய நாம் உலகத்தோடு கொண்டிருந்த தொடர்பு தொன்மையானது, உயர்வானது.

அந்த மரபுக்குச் சொந்தக்காரர்களாகவும் எல்லாருக்கும் எல்லாம் என்றிருப்பதான புதியதோர் பொன்னுலகைச் சமைத்தெடுக்கும் தகுதியுள்ளவர்களாகவும் நம்மை நாம் ஆக்கிக் கொள்ள இப்பொங்கற் புதுநாளில் உறுதி பூணுவோம்.

(முகம் (மாதஇதழ்) பொங்கல் மலர் 1995 பிப்ரவரி 1995)

■

32

# மடிந்தது கீழ்மைக்குணம்!

பாவேந்தர் பாரதிதாசன் எழுதுகிறார்

''அழகிய நிகழ்ச்சி ஒன்றை
அன்புள்ள சர்மா சொல்லி
எழுதுக செய்யுளாக
என்றனர். எழுதலானேன்...''

யார் இந்த 'அன்புள்ள சர்மா?''

பாவேந்தரின் நெருங்கிய நண்பர் ஓவியர் வேணுகோபால் சர்மா. அவர்தான் அஞ்சல் தலையில் இடம்பெற்ற வள்ளுவர் உருவத்தை வரைந்தவர். ஓவியர் சொன்ன நிகழ்ச்சி உள்ளத்தைக் குலுக்கும் பாடலாகிறது.

ஒரு புகைவண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அதனுள் அச்சில் வார்த்த பொற்பாவையாய் ஒருத்தி. அவள் எதிரே ஆடவச் செம்மல் ஒருவன். இன்னும் சிலர் அந்தப் பெட்டியில் அமர்ந்திருக்கிறார்கள். நிலையம் ஒன்றில் வண்டி நிற்கிறது. அங்கிருந்து புறப்படும்போது அவனும் அவளும் மட்டுமே! எஞ்சியவர்கள் இறங்கிவிடுகிறார்கள். ஓடும் வண்டியில் ஊமையர்களைப் போல் அவர்கள்!

இதழ் திறந்து எதுவும் பேசவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் உற்றுப் பார்க்கின்றனர். இருவர் முகங்களிலும் வருத்த வரைவுகள். ஏன் வருந்துகிறான்? ஏன் வருந்துகிறாள்? எண்ணங்கள் விரிகின்றன.

அறிய ஆவல்தான். ஆனாலும் பேசவில்லை.

''துடியாத தோகை யாளின்
துடியிடை துடித்தல் கண்டான்!
அடிவயிற் றின்மேல் கையை

*அணைப்பானை அவளும் கண்டாள்!*
*நொடிதோறும மங்கை துன்பம்*
*நூறுபங் காதல் கண்டான்*
*வடிகின்ற கண்ணீர் கண்டாள்*
*வல்லாளன் முகத்தில் மங்கை!''*

துன்பத்தீயில் மங்கை துடிக்கிறாள். வயிற்றை அணைத்துக் காளை வருந்துகிறான். 'ஏனம்மா துடிக்கிறாய்?' - அவன் கேட்டானில்லை. 'அழுவதன் காரணம்?' - அவள் கேட்டாளில்லை. ஊற்றெடுக்கும் துன்பத்திலும் ஊமையராய் இருவர்!

ஓடிக்கொண்டிருக்கிறது வண்டி. அவர்களின் துன்பம் கூடிக் கொண்டிருக்கிறது. ஒரு தேள் கொட்டினாலே கடுக்கும். ஓராயிரம் தேள்கள் ஒன்றாகச் சேர்ந்து கொட்டினால்? வெயிலையே தாங்கமுடியாத புழுக்கள் பற்றியெரியும் தீயில் விழுந்தால்....? அவ்வளவு துன்பம் அவர்கள் இருவர்க்கும். அதற்கு மேலும் அவர்கள் துன்பத்தை எவ்வாறு சொல்வது?

*''செந்தமிழன்னைக்குள்ள*
*தாய்மைகாணாரைக் கண்டு*
*துடிப்பார்போல் துடிதுடித்தார்...''*

பாவேந்தர் முத்திரை பதிந்து விடுகிறது.

அப்பாடா!

இதுவரை இதழ் திறவாத இருவரும் இப்போது பேசுகிறார்கள். விரிவாகவா? இல்லை, இல்லை. மிகமிகச் சுருக்கமாக.

அச்சுப் பொற்பாவையான அவள் கண்மலர் அருவிபாய்ச்ச விம்மியவாறே 'வெம்முலை பால்கட்டிற்று' என்கிறாள். அந்தச் செம்மலோ 'பசித்தீ' என்கிறான்.

ஓ! இப்போதுதான் நமக்குப் புரிகிறது - பாவேந்தர் வெளிப்படை யாகச் சொல்லாவிடடாலும் அவள் ஓர் 'இளந்தாய்' என்பது.

'என்னம்மா? குழந்தையை எங்கே தவறவிட்டாய்? சீர்வரிசை சரியில்லை என்று புகுந்தவீட்டார் ஆண்மகவைப் பறித்துக் கொண்டு அன்னையாகிய உன்னைத் துரத்திவிட்டார்களா? இல்லை, குழந்தை யைச் சாவு கொள்ளை கொண்டதா? மழலைச் செல்வத்தை இழந்ததால் தான் மார்பில் பால் கட்டிக் கொண்டதோ? தாயே! நீ படுந்துன்பம் நெஞ்சைப் பிழிகிறது... இப்படியெல்லாம் நமக்குச் சொல்லத் தோன்று கிறது. அவள் நிலை இது!

அவனோ? பத்தையும் பறக்கச் செய்யும் பசித்தீயில் வாடுகிறான்.

தாயும் மகவுமாய் அவளும் அவனும்! வேண்டாத கீழ்மைக்குணம் வெந்து மடிகிறது. பாடுகிறார் பாவேந்தர்.

> ''உணர்வெனும் உலகு சேர்ந்தார்
> ஒரு நொடிப் போதில்! கீழ்மைக்
> குணம்வெந்து மடியக் கண்டார்.
> கொடுங்கச்சு முடிய விழ்த்தாள்
> இணைமுலைக் கண்ணைக் கௌவி
> இம்மென்று பால்குடித்தான்
> தணிந்தனன் கடும்பசித்தீ
> தணிந்தனள் பால்கடுப்பே!''

பிற உயிரின் துன்பதைத் தன் துன்பம்போல் கருதுவதுதானே அறிவின்பயன். அந்த அறிவுதானே மனிதனின் அணிகலன்! அந்த இருவரும் சிறந்த மனிதர்கள். 'உணர்வென்னும் பெரும் 'பதம்' அடைந்த வர்கள். மழையைக் கொட்டித் தீர்த்த வானத்தைப்போல் மாசு தோயாத மனத்தினர்.

அந்த மனநிலையோடு இந்தப் பாடலை நாமும் படித்தால்தான் பண்பு குறையாமல் பாவேந்தர் பாடியிருக்கும் நுட்பம் புரியும்.

பறந்து செல்லும் புகைவண்டி பக்கத்தூரில் நிற்கிறது. அவன் இறங்க வேண்டிய இடம். நன்றி சொல்லிப் பிரிகின்றான். அவளும் நன்றி நவில்கின்றாள்.

> ''பிறந்தவர் வாழும் வாழ்வு
> பிறர் நன்றியின் தொகுப்பே!
> மறவாத தூய உள்ளம்
> இறவாத வாழ்வு நல்கும்''

என்னும் முத்தாய்ப்போடு பாடல் முடிகிறது. 'மற்றவர் செய்யும் நன்மை களாலேயே நம் வாழ்வு நடக்கிறது' என்னும் பொது உண்மையைப் புலப்படுத்தி, அதனை 'மறவாத தூய உள்ளம் சிறந்த வாழ்க்கையை நல்கும்' என்னும் செய்தியைத் தரும் பாவேந்தர் வடுப்படாமல் வாளின்மேல் நடக்கும் வித்தையில் வென்று விடுகிறார்.

ஒன்பது அறுசீர் விருத்தங்களாலாகி 1.7.58 குயில் கிழமை இதழில் வெளிவந்த இப்பாடலில் நினைவில் நிறுத்த வேண்டிய வரிகள்:

> ''எழுதும்இக் கருத்தை நாட்டில்
> எல்லோரும் பின்பற் றத்தான்
> எழுதினேன் என்பதில்லை
> புதுமைகண்டின்பங் கொள்க...''

33

# தமிழர்நிலையை உயர்த்தியவர்

''மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சி பற்றி இவர் எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்தன... சொல்லாராய்ச்சித் துறையில் இவர் ஒப்பற்ற தனித்திறமையுடையவர் என்றும் இவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றோம்'' என்று மறைமலையடிகளால் சான்றளிக்கப் பெற்றவர்.

''தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர். அவருடைய புலமை தெளிவும் துணிவும் மிக்கது... தமிழ் நெறியில் தமிழர் நின்று வென்றிடல் வேண்டுமென்பதில் தளராத விருப்பம் கொண்டவர்க்கெல்லாம் அவரின் புலமை நம்பிக்கை தந்து வருகின்றது'' என்று அறிஞர் அண்ணாவால் போற்றப் பெற்றவர்.

''எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து'' எனப் பாவேந்தரால் பாராட்டப் பெற்றவர்.

''அவர் பொதுவகைப் பேராசிரியர் அல்லர். மிகப்பெரும் ஆராய்ச்சியாளர், வெட்டக் வெட்டக் கிடைக்கும் தங்கச்சுரங்கம் போன்றவர்... நாங்கள் உங்கள் போன்றோர்க்கு மட்டுமே எழுதுகின் றோம்; அவர் என் போன்ற ஆசிரியனுக்கும் ஆராய்ச்சியாளனுக்கும் எழுதுகின்றார்'' என்று பேரா. மா. இராசமாணிக்கனாரால் கணிக்கப் பெற்றவர்.

இவ்வாறு பலரின் மதிப்புக்கு உரியவராகிய அவர் ''தமிழின் உண்மைத் தன்மையை எடுத்துரைத்தற்கும் காத்தற்கும் நுண்மதி, தமிழாங்கிலப்புலமை, ஆய்வுத்திறம், நடுநிலை, அஞ்சாமை, தன்னல மின்மை ஆகிய அறுதிறம் இன்றியமையாது வேண்டும்... ஓர் உண்மை

யான ஆராய்ச்சியாளன் ஒருநாளும் ஆராயாது இருக்க முடியாது. அதற்குக் கனவென்றும் நனவென்றும் ஊண்வேளை என்றும் உறக்க வேளை என்றும் இல்லை'' என்று கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாகவே தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டவர்.

அவர்தாம் இன்று 'பாவாணர் பாவாணர்' என்று பலராலும் போற்றப்படும் தேவநேயர். திருநெல்வேலி சங்கரன்கோவிலில் ஞானமுத்து பரிபூரணத் தம்மையாரின் நான்காம் மகனாக 7.2.1902இல் பிறந்தவர். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரிய ராகப் பணியாற்ற வேண்டும் என்னும் அவாவுடன் கல்வி பயின்ற அவர் தமிழ்வயமாகி மதுரைப்பண்டிதர், நெல்லைப்புலவர், சென்னை வித்துவான் ஆகிய சிறப்புகளை ஒருங்கே பெற்றுத் தமிழில் ஆழ்ந்தகன்ற புலமையராயினார்.

1919இல் தொடங்கி 1961 வரை நாற்பத்திரண்டு ஆண்டுகள் தமிழகத்தின் பல்வேறு பள்ளிகளிலும் சேலம் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பாவாணரின் ஆசிரிய - ஆய்வுப்பணிகள் நடைபெற்றன.

தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அவர் எழுதிய நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் பலவகைப்பட்டன. வாழ்வின் தொடக்கத்தில் இசைத்தமிழ்ப் பித்தராக இருந்த அவர் இசைத்தமிழ்ப் பாடல்களை இறுதிக்காலம் வரை இயற்றினார். நால்வகை இசைக்கருவிகளை இசைக்கவும் நன்றாகப்பாடவும் வல்ல பாவாணர் ஏறத்தாழ 500 இசைப் பாடல்கள் புனைந்துள்ளார். அவை சிறுவர் பாடல் திரட்டு (1925) கிறிஸ்தவக்கீர்த்தனம் (1932) செந்தமிழ்க்காஞ்சி (1937) இசைத் தமிழ்க்கலம்பகம் (1966) இசையரங்கு இன்னிசைக் கோவை (1969) என நூல்வடிவம் பெற்றும் பெறாதும் உள்ளன. இசையாய்விலும் தோய்ந்த பாவாணர் எழுதிய 'இசைத்தமிழ்ச் சரித்திரம்' (1942) எனும் நூல் அச்சேறாமல் மறைந்து போனது.

பள்ளியில் பயிலும் காலத்திலேயே இசைப்பாடலும் செய்யுளும் இயற்ற வல்லவராய்த் தேவநேசன் இருந்ததை அறிந்த ஆசிரியர் மாசிலாமணி அளித்த சான்றிதழ் ஒன்றில் 'தேவநேசக் கவிவாணன்' என இவர் பெயரைக் குறித்தார். அதுவே பின்னர் 'தேவநேயப்பாவாணன்' ஆகிப் பின்னர் இயற்பெயரைக் காட்டிலும் 'பாவாணர்' என்பதே நிலைபெறுவதாயிற்று. அவர் இயற்றிய நயம் மிகுந்த இயற்றமிழ்ப் பாடல்கள் பல பாவாணர் என்னும் பெயர் அவர்க்கு மிகவும் ஏற்றதே என்பதை எடுத்துக் காட்டுவன.

மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் அவர் எழுதிய இலக்கண நூல்கள் பல. ஆங்கிலத்தில் 'இரென் & மார்டின்'

எழுதிய இலக்கணத்தைத் தழுவிப் பாவாணர் எழுதிய 'உயர்தரக்கட்டுரை இலக்கணம்' இரண்டு பாகங்களும் 'கட்டுரை வரைவியல்' என்னும் உரைநடை இலக்கணமும் தனித்துக் குறிப்பிடத்தக்கவை.

மொழியாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும் பாவாணர்க்கு இயல்பாகவே இன்பம் அளிக்கும் செயல்கள். சொல்லாராய்ச்சி இடம் பெறாமல் அவரின் எழுத்தோ பேச்சோ அமைவதில்லை. 1931 இல் அவர் எழுதிய 'மொழியாராய்ச்சி' என்னும் கட்டுரை தொடங்கி இயற்கை யெய்து (15.1.1981) முன்னர் ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் அவர் நிகழ்த்திய இறுதிச்சொற்பொழிவு வரை ஐம்பது ஆண்டுகள் மொழி யாராய்ச்சியில் மூழ்கித் திளைத்தவர் பாவாணர்.

''என் குறிக்கோள் தமிழைத் திரவிடத்தாயாகவும் ஆரியத்தின் மூலமாகவும் உலகறிய நாட்டி அதை வடமொழிப்பிணிப்பினின்று அடியோடு மீட்பதே'' என்பதைப் பலமுறை பதிவு செய்துள்ள பாவாணர் அக்குறிக்கோளின் விளக்கமாகவே ஆய்வுப்பணிகளை மேற்கொண்டார். ஒப்பியன்மொழிநூல், திரவிடத்தாய், வடமொழிவரலாறு, தமிழ் வரலாறு முதலிய நூல்கள் தனித்துச் சுட்டத்தக்கவை.

'இந்திய வரலாறு தெற்கிலிருந்து தொடங்கப்பெற வேண்டும்; இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே இந்துமாவாரியில் மூழ்கிய குமரிக்கண்டமே மாந்தன் - தமிழன் பிறந்தகம்; அங்குத் தோன்றிய உலக முதன் மொழியே தமிழ்' என்னும் கருத்துகள் அவரின் படைப்புகள் அனைத்திலும் வலியுறுத்தப் பெறுகின்றன. இவர்க்குமுன் ஆங்கிலத்தில் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், பி.டி. சீனிவாச ஐயங்கார் முதலியோர் வெளியிட்ட கருத்துகளை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு புதியபுதிய மொழியியல், பயிரியில், உயிரியல், சான்றுகளோடு குமரிக்கண்ட முதன்மொழிக் கொள்கையை நிலைநாட்டினார். முதல்தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம், The Primary Classical Language of the World, வேர்ச்சொற் கட்டுரைகள் முதலிய பல படைப்புகள் தமிழின் முதன்மையைத் துலக்கிக் காட்டுவன.

'தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று உலகின் பிற பகுதிகளுக்குத் தமிழர் பரவினர்; அயல் நாட்டிலிருந்து வந்தவர் அல்லர்' என்பதைத் தமிழும் தமிழின் திரிபுகளாகிய திராவிட மொழிகளும் இந்திய மண்ணிற்குட்பட்ட மொழிகளாக வழங்குவதையும் தமிழ் தெற்கே போகப்போகத் திருந்திய மொழியாக வழங்குவதையும் தக்க சான்றுகளாக்கி நிறுவினார்.

நோக்குநூல்களில் குறிப்பிடத்தக்கதாகக் கருதப்பெறும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி (Tamil Lexican) உருவாகும் போது தாமாகவே அதற்குக் கருத்துதவியும் சொல்லுதவியும் செய்த

பாவாணர், அகராதி வெளிவந்த பின்னர் அதன் குறைகளைப் பலவகையாகப் பாகுபடுத்தி ஆங்கிலத்திலும் (1955) தமிழிலும் (1961) நூல் வெளியிட்டார். பின்னர் செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பொறுப்பேற்று (1974) அவர் உழைப்பில் பெரிதும் உருவாகி, அவர் மறைவிற்குப்பின் வெளிவந்ததே 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி முதன்மடலம் - முதற் பகுதி'.

இருபதிற்கும் மேற்பட்ட மொழிகளை நன்கறிந்த பாவாணர் இந்திமொழியிலும் புலமைபெற்றவர். 1937இல் இந்திமொழி பள்ளிகளில் கட்டாயப்பாடம் ஆக்கபட்டபோது பேராயக் கட்சிக்காரராக இருந்து அதனைக் கடுமையாக எதிர்த்தார். 'தேசாபிமானத்தண்டமிழ்த் தொண்டன்' எனும் புனைபெயரில் 'செந்தமிழ்க்காஞ்சி' என்னும் இந்தி எதிர்ப்புப் பாடல் நூல் எழுதினார். பிற்காலத்திலும் The Language Problem of Tamilnadu and its logical solution. (1967) 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' (1968) என்னும் நூல்களை 'இந்திஎதிர்ப்புத் தொண்டாற்றும் தனியார்க்கும் படைஞர்க்கும் பயன்படுமாறு' எழுதினார்.

பாவாணர் ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க இன்னொரு பகுதி பண்பாட்டு, நாகரிக, வரலாற்று ஆய்வுகளாகும். பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும், தமிழர்வரலாறு, தமிழர்மதம், தமிழர் திருமணம் முதலிய பல நூல்கள் இத்தொடர்பில் எண்ணத்தக்கன. பிறப்பால் கிறித்தவராகிய பாவாணர் தமிழர்மதம் சிவனியமும் (சைவம்) மாலியமும் (வைணவம்) என்பார்.

'திருக்குறள் பஜனைப்பாடல்கள்' எழுதிய பாவாணர் 'திருக்குறள் தமிழ் மரபுரை' கண்டதோடு மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை' என்னும் தலைப்பில் திருவள்ளுவரால் உலகுக்கு ஏற்ற உயரிய கூட்டுடைமை ஆட்சி எவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை விரிவாக விளக்கியுள்ளார். மேலும் இன்றைக்குப் பயன்படும் தமிழ்நாட்டு அரசின் கடமை, நடுவண் அரசின் கடமை, உலகக் கூட்டரசு முதலிய தலைப்புகளில் மனங்கொள்ள வேண்டிய புதிய செய்திகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சொற்களின் உருவாக்கத்தைக் காரண அடிப்படையில் வியப்படையுமாறு விளக்குவார் பாவாணர். கூரிய பல் போன்ற கருக்கு மட்டை உடையது பனை; கருமைப் பொருளுடைய, இருமை என்பது எருமை ஆனது; ஏர்த்தொழிற்கு உதவுவது ஏரி; நன்செய்களுள் பழமையானது பழனம்; நீரில் நாவிக்கொண்டு - கொழித்துக்கொண்டு செல்வது நாவாய்; உழைப்புக்கு ஈடாகக் கொடுக்கப்படும் கூலத்தி லிருந்து - தானியத்திலிருந்து வந்தது கூலி; உழைப்புக்காகச் சம்பும்

அளமும் - நெல்லும் உப்பும் தரப்பட்டதை உணர்த்துவதே சம்பளம்! இவ்வாறு ஏராளமான சொற்கள் பாவாணரால் விளக்கப்பெறுகின்றன.

'சொல்லுதல் என்பதைக் குறித்துவரும் அறைதல், இசைத்தல், உரைத்தல், ஓதுதல் முதலிய நாற்பது சொற்களை எடுத்துக்காட்டி அவற்றின் பொருள் வேறுபாடுகளை விளக்கும்போது அவரின் நுண்மாண் நுழைபுலம் புலனாகின்றது.

தமிழ்மொழியின் ஏட்டுவழக்கு என்னும் இருவகை வழக்குகளையும் அறிந்தவர்களில் இணையற்றவர் பாவாணர். அடிபுதையரணம், மெய்ப்பை, பொத்தகம், காழம், கிள்ளாக்கு முதலிய இலக்கிய வழக்குச் சொற்களை இன்றைய பொருள்களுக்கு ஏற்றவையாக எடுத்துக்காட்டுவார். கிள்ளுவதை நூக்குதல் என்பது வடவார்க்காட்டு வழக்கு; தொடையைக் குறங்கென்பது இராமநாதபுர வழக்கு; இளம்பிஞ்சைத் தவப்பிஞ்சு என்பது திருச்சி வழக்கு; பெருச்சாளியைப் பெருக்கான் என்பது கோவை வழக்கு! இவ்வாறு தமிழகத்தின் பலபகுதிகளிலும் மக்கள் பேசும் உலகவழக்கை ஊன்றி நோக்கியவர் பாவாணர்.

மரத்திற்குப் பல வேர்கள் இருப்பதைப் போல மொழியும் பல வேர்களைக் கொண்டது. வேர்ச்சொற்களை மிகுதியாகக் கொண்ட மொழிதமிழ். அவற்றைப் பாவாணரைப் போல விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்த பிறிதொருவரைக் காணல் அரிது. 'ரத்தம்' என்பது வடசொல் என்று நினைக்கிறோம். பாவாணர் அதனை 'அர்' என்னும் வேரிலிருந்து கிளைத்த 'அரத்தம்' என்று விளக்குவார். 'அர் அரன், சிவன்; அர் அரக்கு, செம்மெழுகு' எனச் சிவப்பு நிறம் பொருந்திய பொருள் 'அர்' என்னும் வேரிலிருந்து கிளைப்பதை எடுத்துக் காட்டுவார். மேலும் 'ரக்த' என்னும் வடசொல்லுக்கு 'ரஞ்ச் அல்லது ரஜ்' எனும் மூலத்தைக்காட்டி அதற்கு 'நிறமூட்டப்பெறு' எனும் பொருளுரைப்பதைச் சுட்டி அதன் பொருந்தாமையை விளக்குவார்.

பாவாணர் படைத்தளித்த சொல்லாக்கங்கள் பன்னூற்றுக் கணக்கின. ஆட்சித்துறைக் கலைச்சொல்லாக்கத்திற்காகத் தமிழக அரசு 1960இல் பாவாணரைப் பாராட்டிச் செப்புப்பட்டயம் வழங்கியது. திருக்கோவில்களில் தமிழ்ச்சொற்கள், தேசிய இளைஞர்படை ஏவற்சொற்கள் எனச் சமசுகிருத ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைப் பட்டியல் பட்டியலாகப் படைத்துள்ளார். பாவாணர் புதியனவாகப் புனைந்து வழங்கிய அணியம் (தயார்) ஏந்து (வசதி) காசாளர், குமுகாயம் (சமுதாயம்) தொலைக்காட்சி, தொன்மம், (புராணம்) முகவர், முகவாண்மை முதலிய பலசொற்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் விளைத்த தனித்தமிழ் இயக்கம் மறைமறையடிகளால் வடிவம் பெற்றுத் தமிழறிந் தோரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனை மிகுமக்களிடையே கொண்டுசென்று வளர்த்தெடுத்த பெருமை பாவாணர்க்கு உரியது. பாவாணரே ''தமிழின் தொன்மையை உலகுக்கு அறிவித்தார் கால்டு வெல்; தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர்; செடியாகத் தழையச்செய்தவர் மறை மலையடிகள்; நான் மரமாக வளர்த்து வரு கிறேன்'' என்று குறிப்பிடுவார். தனித்தமிழ் வளர்ச்சியை முன்னிலைப் படுத்தி உலகத்தமிழ்க்கழகம் (1968) கண்டார் பாவாணர். அவரை அடியொற்றிப்பல இயக்கங்களும் பல இதழ்களும் தனித்தமிழ்க் கொள்கையை மக்களிடம் எடுத்துச்சென்றன; செல்கின்றன. சுருங்கச் சொன்னால் ஒரு தமிழியக்கமாகவே வாழ்ந்தவர் பாவாணர்.

''இந்திய மரபுச் செல்வம்' என்னும் நூல் வரிசையில் நான்காம் தொகுதியாக வெளியிடப் பெற்ற 'பண்பாட்டுச் செல்வம்' (Cultural Heritage of India) என்னும் நூலில் ''தேவநேயப் பாவாணரின் மொழிநூல் ஆராய்ச்சிகள் இல்லையெனின் தமிழ்மொழியின் தூய்மையும் தொன்மையும் கட்டுக்கதையாகவே இருந்திருக்கும்' (But for his researches in Philology, the purity and Antiquity of Tamil might have remained a myth) என்று பி.என். வெங்கடாச்சாரி குறிப்பிடுவது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

■

34

# பாரதியார் - பாரதிதாசன் அறிமுகம்

தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடந்து பாரதிப்புலவனைப் பெற்றெடுத்தது என்று பாடுவார் பாவேந்தர் பாரதிதாசன். மேலும்

''பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடுமுழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிரமணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்?''

என்று தனது பாட்டுப் பயணத்தின் திருப்பு முனையாகப் பாரதி அமைந்ததையும் பதிவு செய்துள்ளார். (கவிஞரும் காதலும்- வாழ்த்து 1963) பாரதிமீது கொண்ட ஈடுபாட்டினால் அவர் புனைந்து கொண்ட பாரதிதாசன் என்னும் பெயரைப் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையிலும் பெருமிதத்தோடு ஏற்றுக் கொண்டிருந்தார். இயற்பெயரினும் இப்புனை பெயரே எல்லோர்க்கும் தெரிந்த பெயராக இன்றுவரை இலங்குகின்றது.

பாரதிமீது இணையற்ற ஈடுபாடு கொண்டவர் பாரதிதாசன் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் கவிஞர்களாகக் கருதத்தக்க இவ்விருவரும் எப்போது ஒருவரை ஒருவர் சந்தித்து அறிமுகமாயினர் என்பதைக் குறிப்பாக விளக்குவதே இக்கட்டுரை.

சென்னையிலிருந்து பாரதியார் புதுவைக்கு வந்த ஆண்டிலேயே பாரதிதாசன் அவரைச் சந்தித்தார் என்றே பலரும் இன்றும் எழுதி வருகின்றனர்.

''புதுவைக்குப் பாரதி வந்து சேர்ந்தபோது அவர் 26 வயது இளைஞர்.

17 ஆண்டும், ஐந்து திங்களும் நிறைந்த கட்டிளங்காளையாகச் சுப்புரத்தினம் பாரதியை முதன்முதலாகச் சந்திக்கிறார்!'' (பாட்டுப் பறவைகள் ப.6, 2000)

மேற்கூற்று பருக்கைப் பதமாக எடுத்துக் காட்டப் படுவதே. இவ்வாறு பலரும் குறிப்பிடுவது சரிதானா என்று அறிந்து கொள்ளும் கடப்பாடு நம் அனைவர்க்கும் உள்ளது.

புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்தது, அங்கே பிறந்து வளர்ந்த பாரதிதாசன் தன்னை 'ஓர் இந்தியன்' எனப் பெருமிதமாகச் சொல்லிக் கொள்வதற்குக் காரணமாக அமைந்தவை பாரதியாரின் 'இந்தியா' இதழும் 'சுதேச கீதங்கள்' எனும் பாரதியாரின் பாடல் தொகுப்புமேயாகும். பாரதியாரைக் கண்டறிவதற்கு முன்பே இவை இரண்டும் பாரதிதாசனுக்கு நன்கு அறிமுகமாயிருந்தன.

பாரதியார் 1908 ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம் புதுவை புகுந்தார். சென்னையிலிருந்து வெளியான 'இந்தியா இதழ்' செப்படம்பர் 5 ஆம் நாள் நின்றுபோனது. அக்டோபர் 10 முதல் புதுச்சேரியிலிருந்து மீண்டும் அச்சிடப்பட்டு 1910 மார்ச்சு 12வரை வெளியிடப்பட்டுள்ளது. பாரதியாரின் முதல் நூலான 'ஸ்வதேச கீதங்கள்' 1907 -இல் மூன்று பாடல் களை உள்ளடக்கியும் 1908 -இல் பதினான்கு பாடல்களை உள்ளடக்கியும் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. பாரதியார் புதுவை சென்றபின் 1909-இல் 'ஜன்மபூமி' என்ற பெயரில் தம் ஸ்வதேச கீதங்கள் என்னும் நூலுக்கு இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். (சித்திரபாரதி, 1982, சென்னை).

புதுவையிலிருந்து வெளியான 'இந்தியா' இதழ்களையும் சுதேச கீதங்களையும் பாரதிதாசன் நன்கு அறிந்திருந்தார். அவரே கூறுகிறார் :

> (இந்தியா பத்திரிகையில்) சித்திர விளக்கமும் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜீய சம்பந்தமானவை. அர்த்த புஷ்டி யுள்ளவை. பத்திரிகை வெளி வருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர்ப்பார்கள். படத்தை வெட்டி அட்டையில் ஒட்டிவிட்டுச் சுவரில் தொங்கவிட்டு வைப்பார்கள். ஒவ்வொரு படமும் இங்கிலீசுகாரனுக்கும் இந்தியனுக்கும் உள்ள சம்பந்தத்தை, இங்கிலீசுகாரனிடம் இந்தியன் அனுபவிப்பதைக் குத்தலாக எடுத்துக்காட்டுவதுதான் அந்தப் பத்திரிகையிலேயே சுவையான பகுதி. அந்தச் சித்திரம் தான் முதலில் என்னைத் தன் பரிவாரங் களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம் என்னை இன்னா னென்று எனக்குக் கூறிற்று... பாரதியாரும் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையும் சேர்ந்து பாடி வெளியிட்ட ''சுதேச கீதங்கள்'' புதுச்சேரியில் படித்தவர்களிடை உலவியிருந்தது. குவளை

(கிருஷ்ணமாச்சாரி) அந்தப் பாட்டுக்களில் சிலவற்றைக் கூவிப் பாட நான் கேட்டிருக்கிறேன். என் ஆசைக்கு ஒரு புத்தகம் கிடைத்தது ஒரு நாள்.

சுதேச கீதங்களை நான் படித்து வந்தேன். ராகத்தோடு முணுமுணுத்து வந்தேன். இந்தியா பத்திரிகையின் சித்திர விளக்கங்கள், சிறுகதைகள், ஈசுவரன் தரும ராஜாகோயில் தெருவின் விளைவுகள், குவளையின் கூச்சல் இவைகள் எல்லாம் சுதேசகீதத்தின் உட்பொருளை எனக்கு விளக்கின. அதன்பிறகு கொஞ்சம் விஷயமான உணர்வோடும் ''நான் ஓர் இந்தியன்' என்ற அகம்பாவத்தோடும் அப்பாடல்களை என்னால் பாடமுடிந்தது நாளடைவில். (ஹிந்துஸ்தான் பாரதிமலர், 10.9.1939)

இதிலிருந்து பாரதியாரைக் காணுமுன்பே அவரின் படைப்புகளில் ஈடுபாடு கொண்டிருந்தார் பாரதிதாசன் என்பதை அறியமுடிகிறது.

இனி, பாரதியரை முதன் முதலில் சந்தித்து அறிமுகமான நிகழ்ச்சியைக் காண்போம்ஃ

பாரதியார் 'வல்லூறு நாயக்கர்'' என்று தன் கட்டுரைகளில் குறிப்பிடும் வேணு நாயக்கர், அவரின் நெருங்கிய நண்பர். பாரதிதாசனின் உடற்பயிற்சியாசிரியர். அவரின் திருமணவிழாவிலேயே பாரதிதாசன் பாரதியாரை முதன்முதலில் இன்னாரென்று அறிந்தார். அதற்குமுன் ''வீதியில் அடிக்கடி பார்த்து 'இவர் ரவிவர்மாப் படத்தில் காணும் பரமசிவம் போல் இருக்கிறார்' என்று ஒப்புக் கூட்டி நினைத்த மனிதர்'' பாரதியார்தான் என்பது புலனாயிற்று. தொடர்பும் தொடங்கியது. அந்நிகழச்சியைப் பாரதிதாசனே நினைவு கூர்வதைப் பார்ப்போம்.

எனது கொட்டடி வாத்தியார் வேணு நாயக்கருக்குக் கலியாணம் வந்தது. மாலை 3 மணிக்கு கலியாணப் பந்தலில் பாட்டுக்கச்சேரி நடந்தது. பாடகரில் நானும் ஒருவன்.

கணீரென்று ஆரம்பித்தேன். ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ'' என்பதை. அப்போது என் பின்புறமாக இதற்கு முன் நான் வீதியில் பார்த்த சில உருவங்கள் உட்கார்ந்திருந்தன. அவற்றில் ஒன்று 'ரவிவர்மாப் பரமசிவம்.''

வேணுநாயக்கர் ''இன்னும் பாடு சுப்பு'' என்றார். நான் ''தொன்று நிகழ்ந்த தனைத்தும்'' என்ற பாட்டைப் பாடினேன். சபையில் இருந்தவர்கள் மொத்தம் முப்பது பேர்கள் இருக்கும். 30பேர் விழிகளில் சுமார் 25 பேர்கள் நான் பாடும்போது, அந்த ரவிவர்மாப் பரமசிவத்தையே பார்க்கிறார்கள். அந்த ரவிவர்மாப் பரம சிவத்தின் பெயர், விலாசம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.

ஆனால் அவர் ஒரு குறிப்பிடத்தக்கவராய் இருக்கலாம் என்று தோன்றிற்று.

என்னை மேலும் பாடச் சொன்னார் வேணுநாயக்கர். பாடினேன். அப்போது, வேணு நாயக்கர், ''அவுங்க ஆர் தெரியுமில்ல?'' என்று கேட்டார். தெரியாது என்று கூட நான் சொல்லி முடிக்கவில்லை. ரவிவர்மாப்படம், ''நீங்க தமிழ் வாசிச்சிருக்கிங்களோ?'' என்று கேட்டார்.

நான் : கொஞ்சம்.

படம் : உணர்ந்து பாடுகிறீர்கள்.

வேணுநாயக்கர், அப்போது, ''அவங்கதானே அந்தப் பாட்டெல் லாம் போட்டது! சுப்பிரமணிய பாரதி என்று சொல்றாங்கல்ல?'' என்று பரமசிவப் படத்தை எனக்கு அறிமுகப் படுத்தினார். (ஹிந்துஸ்தான், மேற்படி)

இதிலிருந்து பாரதியாரின் பாடல்களைத் திருமணவீட்டில் பாரதிதாசன் உணர்ந்து பாடிய முறையே இருவர்க்கும் தொடர்பு முகிழ்க்கக் காரணமாய் அமைந்ததை அறிகிறோம். வேணுநாயக்கரின் திருமணம் நடந்த காலத்தைக் தெளிவாக அறிவதற்கான சான்றுகள் கிடைக்காத நிலையில் பிற தரவுகளின் அடிப்படையில்தான் இருவரும் அறிமுகமான காலத்தைக் கணிக்க வேண்டியிருக்கிறது.

திருமண நிகழ்ச்சியில் - பாரதிதாசன் பாடிய பாரதியின் இரண்டு பாடல்களில் 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார்' என்று தொடங்குவது 1908-இல் சென்னையிலிருந்து வெளியான தொகுப்பில் உள்ளது. மற்றொன்றான 'தொன்று நிகழ்ந்த தனைத்தும்' எனத் தொடங்கும் பாடல் 1907 - 1908 -ஆம் ஆண்டுகளில் சென்னையிலிருந்து வெளியான தொகுப்பு களில் இடம் பெறாதது. 1909 மார்ச்சு மாத வாக்கில் புதுவையிலிருந்து வெளியான 'ஜன்மபூமி' தொகுப்பில் 5-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. எனவே பாரதியார் பாரதிதாசன் அறிமுகம் 1909 மார்ச்சுக்குப்பின் நடந்திருக்கும் எனலாம்.

பாரதியாரை இன்னாரென்று அறிவதற்குமுன் ''இந்தியா பத்திரிகையைத்தான் எனக்கு நன்றாய்த் தெரியும். அப்போதெல்லாம் நான் சர்க்கார் தமிழாசிரியனாகிவிட்டேன்''. (ஹிந்துஸ்தான், மேற்படி) எனவும் பாரதிதாசன் குறிப்பிடுவதிலிருந்து அவர் ஆசிரியப் பணியேற்ற பின்னரே பாரதியார் தொடர்பு ஏற்பட்டது என்று தெரிகிறது. பாரதிதாசன் 16.7.1909-இல் காரைக்காலை அடுத்த நிரவியில் உள்ள அரசினர் பள்ளியில்தான் முதன்முதல் ஆசிரியப் பொறுப்பேற்றார். (கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், 1985) ஆக அதன் பின்னரே சந்திப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

'கல்யாணப் பந்தலில் சந்திப்பு' நிகழ்ந்த காலக்கட்டத்தை ''இந்தியா பத்திரிகை நின்றுவிட்டது. அதன் பிறகு பாரதியார் சின்னைய ரத்தினசாமி நாயுடுவுடன் ஆரம்பித்து நடத்தி வந்த சூரியோதயம் நின்று விட்டது.... நின்று சுமார் ஓராண்டும் ஆயிற்று'' (ஹிந்துஸ்தான் மேற்படி) என்று பாரதிதாசனே குறிப்பிடுகிறார். 1906மே மாதம் முதல் சென்னையி லிருந்து வெளி வந்த 'இந்தியா' வார இதழ் பாரதியார் புதுவைக்குச் சென்றபின் 1908 அக்டோபர் முதல் அங்கிருந்து வெளிவந்து 1910 மார்ச்சு, 12 -ஆம் நாளிட்ட இதழோடு நின்றுவிட்டது. பாரதியார் தொடர்ந்து எழுதிவந்ததும் சைகோன் சின்னையா பொறுப்பேற்று நடத்தியதுமான 'சூரியோதயம்' இதழும் 1910 ஜூனில் மறைந்துவிட்டது. (பத்திரிகை யாளர் பாரதியார், 1989) இவ்விரண்டு இதழ்களும் நின்றபின் சுமார் ஓராண்டு கழித்துச் சந்திப்பு நிகழ்ந்தது எனப் பாரதிதாசனே குறிப்பிடுவ தால் 1911-இல் தொடர்பு தொடங்கியிருக்கலாம் எனக் கருத முடிகிறது.

''பாரதியாரோடு பத்தாண்டுகள் பழகிய நினைவுகளைக் கூறும் தொடரில் முதல் கட்டுரை இது ஆகும்'' என்னும் குறிப்போடு 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' எனுந் தொடர் 'பாரதிதாசன் குயில்' திங்கள் இதழில் (10.5.1967) தொடங்கியது. 'பாரதியாரோடு பத்தாண்டு கள்' என்னுந் தலைப்பிட்ட, பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் பாவேந்தரின் கையெழுத்துப்படி நூலொன்றும் உள்ளது. (பாரதிதாசன் இதழ்ப்பணிகள், 1990) மேலும் ''சுமார் 10 ஆண்டுகள் பாரதியாரோடு சுப்புரத்தினம் அவர்கள் நெருங்கிய பழக்கமுடையவர். இன்று பாரதிதாஸன் அவர்கள் வாயால், நமது சுப்பரமண்ய பாரதியார் அனுபவத்தைக் கேட்பவர் அடங்காத ஆச்சர்யத்தையும் உயர்ந்த கருத்துக் களையும் பெறாமற் போகார்'' (ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு, 1938) என்னுங் குறிப்பும் இருவர்க்குமிடையிலான பழக்கம் ஏறத்தாழப் பத்தாண்டுகள் கால அளவினது எனத் தெரிவிக்கின்றன. பத்தாண்டுகள் என்பது பாரதியார் புதுவையில் வாழ்ந்த 1908 முதல் 1918 வரையான கால அளவைக் குறிப்பதாகக் கருதலாகாதா எனத் தோன்றும். பாரதியார் புதுவை வந்து சில ஆண்டுகள் கழிந்த பின்னரே பாரதிதாசனுக்கு அவரொடு தொடர்பு ஏற்பட்டது என்பது முன்னர் விளக்கப்பட்டது. மேலும், ''பாரதியார் கி.பி. 1908-இல் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்சேரி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. பழக்கம் ஏற்பட்ட நேரத்தில் நான் இருபது வயதுக்காளை. சரியாகச் சொன்னால் முரட்டுக்காளை (பாவேந்தர் நினைவுகள், 1979) எனவும் 'பாரதியாரை நான் முதலில் சந்தித்தபோது எனக்கு வயது இருபதிருக்கும்'' (அரும்புகள் மொட்டுகள் மலர்கள், 1980) எனவும் அமைந்த பாரதிதாசன் கூற்றுகள் 1908 முதல் பாரதியாரொடு பழக்கம் இருந்தது எனக் கொள்வதற்கு இடந்தரவில்லை. மேலும் 29.4.1891-இல்

பிறந்த பாரதிதாசன், பாரதியாரொடு பழக்கம் ஏற்பட்டபோது தனக்கு இருபது வயது என்பதிலிருந்து 1911 -இல் தொடர்பு தொடங்கியது எனக் கருதமுடிகிறது.

பாரதியார் 1921 செம்படம்பர் 12-இல் காலமாகிறார். இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர், பாரதிதாசனின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பாரதியார் எடுத்துக்கொண்ட படமே இன்று நாடு முழுவதும் புகழ் பெற்று விளங்கும்'ஓவல்' வடிவப் பாரதிப்படம். 'சென்னை பிராட்வேயில், ரத்னா கம்பெனியில் வி.எஸ். சர்மா என்ற இளைஞர் எடுத்த முழுவுருப் படத்திலிருந்து கிடைத்த' இப்படம் ''புதுவை நண்பர் பாரதிதாசனுக்கு அனுப்ப 1921 ஜூலை மாதம் எடுத்துக் கொண்ட புகைப்படம்'' (சித்திர பாரதி, 1982). இச்செய்தி பாரதியாரொடு இறுதிக்காலம்வரை பாரதிதாசனுக்குத் தொடர்பிருந்தது என்பதைத் தெரிவிக்கிறது. ஆக, பத்தாண்டுத் தொடர்பு என்பது 1911 முதல் 1921 வரையிலான தொடர்பு எனக்கொள்ள முடிகிறது.

மேற்குறித்தவற்றிலிருந்து பாரதிதாசன் - பாரதியார் அறிமுகம் 1908-இல் நிகழவில்லை என்பதும் 1911-இன் தொடக்கத்தில் நிகழ்ந் திருக்கலாம் என்பதும் புலனாகின்றன. அக்காலத்திலிருந்து பாரதியாரின் அணுக்கத் தொண்டராகி விடுதலை இயக்க வினைப்பாடுகளில் முனைப்பாக ஈடுபடுபவராக பாரதிதாசன் மாற்றம் பெறுகிறார்.

35

# பாரதியின் 'பாப்பாப் பாட்டு'

0.1. தொல்காப்பியத்தில் பாடாண் திணையின் பாடுபொருள் பற்றிக் குறிப்பிடும்பொழுது குழவி மருங்கினும் கிழவதாகும்' என்று வருகிறது.[1] குழந்தைகளிடம் கொண்ட குற்றமற்ற காதலையும் பாடாண்திணையுள் பாடலாம் என்பதே இதன் பொருள். இதனைக் கருவாகக் கொண்டே பிள்ளைத் தமிழ் இலக்கியம் உருவாயிற்று எனக் கருதுவர்[2] இதிலிருந்து குழந்தைகளைப் பற்றிய இலக்கியக் குறிப்பு குழந்தைகளின் கோலங்கள் (அகம். 54, புறம் 374, கலி.81, நற் 58) குறும்புகள் (புறம். 104, நற்.80) அவர்களோடு தொடர்புடைய சில செய்திகள் (புறம். 160. அகம், 219, கலி. 80) அவர்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. காப்பியங் களின் இளமைப் பருவம் ஓரளவு பேசப்படுகிறது. ஆழ்வார் பாடல்களில் குழந்தைக் கண்ணனின் கோலமும், குறும்பும் சுவை கமழச் சொல்லப்படுகின்றன. பிள்ளைத் தமிழ் நூல்களில் இளமைப் பருவ விளையாட்டுகள் இடம் பெறுகின்றன. இவ்விலக்கியங்கள் எல்லாம் குழந்தைகளைப் பற்றிய செய்தி களைச் சொல்லுகின்றன, அவ்வளவே. குழந்தைகளுக்குச் சொல்லுவதே குழந்தை இலக்கியத்தின் தலை நோக்கமாகும்.

0.2 அறிவையும், துணிவையும் அழகிய பண்புகளையும் இளமையில் குழந்தைகளுக்கு எளிதாகக் கற்றுத் தருவது குழந்தை இலக்கியம். இது வாய்மொழி இலக்கியமாக மக்களின் நாவில் தொன்று தொட்டுப் பயின்று வருகிறது. பாட்டியின் கதைகளும் அன்னை யின் தாலாட்டும் இதற்கான சான்றுகள். தொல்காப்பியர் குறிப்பிடும் 'பிசி' (தொல். பொருள்.488) 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி' (தொல். பொருள். 485) ஆகியவை கூட வாய்

மொழியாக வழங்கி வந்த குழந்தை இலக்கியத்தின் கூறுகள் எனக் கருதுவார் உளர்.[3]

0.3 இப்படித் தொன்று தொட்டு நாவில் பயின்றுவரும், இவ்விலக்கியம் பிற்காலத்தில்தான் எழுத்தில் ஏறியது. பாடல் கதை எனும் பழைய கிளைகளோடு, கட்டுரை முதலிய புதிய கிளைகளையும் பெற்றது. பாடல் கிளைக்கு ஏனைய கிளைகளைவிட ஓசை நயமும், எளிதில் நெஞ்சில் பதியும் சொல் ஒழுங்கும் உள்ளன. தாலாட்டுப் பாடலின் நிலைபேற்றிற்கு இவையே காரணம் எனலாம்.

1.0 இன்று, பாடல் வடிவில் எழுத்தில் கிளைத்த குழந்தை இலக்கியமாக நமக்குக் கிடைக்கும் முதற்சான்று ஔவையாரின் ஆத்திசூடி எனலாம். அது பொருளளவில் முந்திய நீதி நூல்களைப் பெரிதும் தழுவியது. பெரியவர்களுக்குமுரியது. எனினும் சொல்லும் முறையாலும், எழுந்த நோக்கத்தாலும் குழந்தைகளுக்குரியது. பாரதிப் புலவனும் 'புதிய ஆத்திசூடி'யைப் படைத்தான். இரு ஆத்திசூடிகளுமே குழந்தைகளை நோக்கி ஆசிரியக் குரலில் கட்டளையிடுகின்றன. ஆண் குழந்தைகளை எதிரில் வைத்து இயற்றப்பட்டனவோ என்ற ஐயத்திற்கு இடமும் தருகின்றன[4] அரிய சொற்கள் பயிலப் பெறுகின்றன.[5] குழந்தைகளின் மன இயல்பினின்று ஓரளவு எட்டி நிற்கின்றன.[6] ஆத்திசூடிகளை அண்டியிருக்கும் இத்தகைய மயக்கங்களுக்கு இடமில்லா நிலையில், உடன் பழகும் தோழனின் அன்புக் குரலில், பெண் குழந்தைக்கென்று[7] தெளிவான எளிய சொற்களில், இனிய ஓசையோடு, குழந்தையின் மன இயல்பைத் தெளிந்து இயற்றப் பட்ட பாடலே பாரதியின் பாப்பாப் பாட்டு. இந்தப் பாப்பாப் பாட்டை எழுத்தில் மலர்ந்த குழந்தைப் பாடல்களின் தெளிவான தோற்றுவாயாகவும், குறிப்பிடத்தக்க படைப்பாகவும் கொள்ளலாம்.

1.1 ''நமது நாட்டில் குழந்தைகள் பாடக்கூடிய பாடல்கள் எல்லாம் பெரும்பாலும் எழுதா இலக்கியமாகவே இருந்து வந்தன. பாரதியாரின் பாப்பாப் பாட்டு இதில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.[8] ''பாரதியின் பாப்பாப் பாட்டு குழந்தை இலக்கியத்தில் தனி இடம் பெற்றுச் சிறந்துள்ளது''[9] என்று பிற ஆய்வாளர் குறிப்பிடும் கருத்துக்களும் பாப்பாப் பாட்டின் தனிச்சிறப்பை நனி விளம்பும்.

1.2. பாப்பாப் பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்த கவிமணி ''இனிச் சாப்பாடு ஏதுக்கடா; சீனிச் சக்கரை ஏதுக்கடா'' எனப் போற்றுவார். ''பாப்பாப் பாட்டைக் காட்டிலும் இனி, மேலான உபதேசம்

குழந்தைகளுக்குக் கொடுக்க முடியும் என்பது சந்தேகம்.''[10] என்று பிறரும் குறிப்பிடுவர்.

1.3 'பாப்பா' எனுஞ் சொல் 'குழந்தை' எனும் பொதுப் பொருளில் சிறுபான்மையும் 'பெண் குழந்தை' எனும் சிறப்புப் பொருளில் பெரும்பான்மையும் பயிலப் பெறுகின்றது. பேச்சில் வழங்கும் இச்சொல் எழுத்திலக்கியத்தில் ஏறியிருப்பதற்கு முதல் எடுத்துக் காட்டாக இருப்பது இப் பாப்பாப் பாட்டு, இதுவே யோகி சுந்தானந்த பாரதியாரின் 'பாப்பா பாட்டு' எனும் சிறு நூலுக்கும் அழ. வள்ளியப்பாவின் 'பாப்பாவுக்குப் பாட்டு' எனும் தொகுதிக்கும் பெயரளவிலும் முன்னோடியாக அமைந்தது எனலாம். ''பாரதியார் பாப்பாப் பாட்டுப் பாடிய பின்னர் தான் அவ்வழியைப் பின்பற்றிப் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை, அழ. வள்ளியப்பா, மனசைக் கீரன் ஆகியோர் குழந்தைப் பாடல்களை இயற்றத் தொடங்கினர்.[11]

2.0 இத்தகு பெருமைக்குரிய இந்தப் பாடல் எந்தத்தனி நிகழ்ச்சியை யும் அடியொற்றித் தோன்றாமல் கண்ணன் பாட்டு, குயில் பாட்டுப் போன்று பொதுவாகத் தோன்றியதே என்னும் கருத்துக் குரியவர் திரு. இராம.சுந்தரம்.[12] இக்கருத்து உண்மைக்கு மாறுபட்டது என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

2.1. பாரதியின் இளைய மகளான மூன்று வயதுடைய சகுந்தலா தொடர்பான ஒரு நிகழ்ச்சியே இந்தப் பாட்டு எழுதுவதற்குக் காரணமாக அமைந்திருந்தது. அந்நிகழ்ச்சி எந்நிகழ்ச்சி என்பதற்கு இருவகை விடைகள் தரப்பட்டுள்ளன.

2.1.1. திரு.தி.ஜ.ர. அவர்களின் கூற்றைக் காண்போம்.

''ஒரே ஒரு பாடல் சிறுவருக்கு மிக முக்கியமானது. சிறுவருக் காகவே அதைப் பாடியிருக்கிறார். மகள் சகுந்தலா ஒரு பாப்பாவாக இருந்தாள். அப்போது அவளை முன்னிட்டு அதைப் பாடினார்.

சகுந்தலாப் பாப்பா ஒரு நாள் பிடிவாதம் பிடித்தாள். தாய் சொன்ன சொல்லைத் தட்டினாள். வம்பு செய்தாள்.

''பாப்பா'' என்று இங்கிதமான குரலில் பாரதி அழைத்தார். பாப்பா வந்தாள்.

''இதோ பார். அம்மா சொல்வதைத் தட்டலாமா? கூடாது. அவள் சொல்வதைக்கேள். உடனே கேள்.'' என்றார் பாரதி.

''நீங்கள் எனக்கொரு பாட்டுப் பாடுங்கள். அப்போது அம்மா சொல்வதைக் கேட்கிறேன்'' என்று கொஞ்சும் குரலில் பாப்பா கூறினாள்.

புன் சிரிப்புடன் பாரதி பாடினார்.[12] இதிலிருந்து, சகுந்தலாவை முன்னிட்டு அவள் தாய் சொல்லைத் தட்டியதன் அடிப்படையில் பாப்பாப் பாட்டு இயற்றித் தரப்பட்டதை அறியலாம்.

2.1.2. இன்னொரு செய்தியைப் பார்ப்போம்.

''சகுந்தலா ஒரு நாள் மாடிப் படியிலிருந்து கீழே விழுந்து விட்டது. இதைப் பார்த்த பாரதியார் உடனே ஓடிப்போய்க் குழந்தையை எடுக்காமல்

'ஓடி விளையாடு பாப்பா - நீ

ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று பாடத் தொடங்கினார். குழந்தை அவரை நோக்கித் தவழ்ந்து சென்றாள்.'' என்று திரு.மு. வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்.[14] மாடிப்படியிலிருந்து கீழே விழுந்த குழந்தையை எடுக்காமல் பாரதி பாடத் தொடங்கியதாகக் கூறும் இந்தச் செய்தி, முன் செய்தி ஆகியவற்றில் எது உண்மை யானது?

2.1.2. எந்தப் பாப்பாவின் பொருட்டுப் பாரதி இந்தப் பாடலை இயற்றினாரோ அந்தச் சகுந்தலாப் பாப்பாவே மேற்கேட்ட வினாவுக்கு விடை சொல்வதைக் கேட்போம். ''எனக்குத் தந்தை யிடம் மிக்க சலுகை உண்டு. அதனால், ஒரு நாள் என் தாயார் சொல்லியதைக் கேளாமல் மறுத்துரைத்தேன். ''தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா[14] என்று பாடினார். 'நான் செய்ய வேண்டியதற்கெல்லாம் ஒரு பாட்டு இப்பொழுது எழுதிக் கொடு' என்று கேட்டேன். உடனே 'பாப்பாப் பாட்டு' எழுதிக் கொடுத்தார்.''[15] திருவாட்டி சகுந்தலா பாரதியின் கூற்றால் தி.ஜ.ர. அவர்களின் கருத்தே சரியானதாகிறது.

2.2. மேலும் பாரதியார், பாட்டிற்குத் தந்திருக்கின்ற தலைப்பே சகுந்தலாவின் தொடர்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது. 'பாப்பா' என்னும் சொல் சிறப்பாகப் பெண் குழந்தையைக் குறிப்பதாக இருந்தாலும் பாரதியார், தம் மகள் சகுந்தலாவைப் 'பாப்பா' என்னும் இன்னொரு செல்லப் பெயரிலேயே அழைப்பது வழக்கம். வண்ணான் துணிக்கணக்கு எழுதும்போது கூடச் சகுந்தலாவின் பெயரைப் 'பாப்பா' என்றே அவர் எழுதி யிருந்தார்.[16] மேற்கண்டவற்றால் பாப்பாப் பாட்டு சகுந்தலாப் பாட்டே; அது தாய் சொல்லைச் சகுந்தலா தட்டி நடந்த ஒரு நிகழ்ச்சியை அடியொற்றித் தோன்றியதே என்பது தெளிவு.

3.0. திரு. தொ.மு.சிதம்பரரகுநாதன் ''பாப்பாப் பாட்டிற்கான எண்ணத்தை, ஷெல்லி தன் மகனுக்கு எழுதிய 'வில்லியம்

ஷெல்லிக்கு'' (To Willam shelly) என்னும் கவிதையே பாரதியின் மனத்தில் தோற்றுவித்திருக்கக் கூடும் என்று நாம் எண்ணவும் இடமுண்டு'' என்கிறார்.[17] இவரின் ஊகத்திற்குச் சார்பான கருத்துக்களைவிட எதிரான கருத்துக்களே ஷெல்லியின் இப்பாட லில் அதிகம் இடம் பெறுகின்றன. பாடலை அமைதியாக ஒருமுறை படிப்பவர்கூட இதை உணரலாம்.

3.1. தன் இரண்டாம் மனைவி மூலம் பெற்ற, ஒரு வயது மகனை நோக்கி ஷெல்லி பேசுவதாக வரும் பாடலிது. இங்கிலாந்தி லிருந்து இரண்டாம் மனைவியொடும் மகனொடும் ஆளு வோர்க்குத் தெரியாமல் புறப்பட்டுக் கடல் வழியாக இத்தாலிக்கோ, கிரேக்கத்திற்கோ சென்றுவிடுவோம் என்று பேசும் நிலையில் பாடல் அமைந்துள்ளது. காற்றோடு கூடிய கடலில் உறுதியற்ற படகில் இருந்து கொண்டு ஷெல்லி பேசுகிறான். பாடலின் தொடக்கமே 'இனிய மகவே' என்னோடு வா. இங்குத் (இங்கிலாந்தில்) தங்கக் கூடாது, சட்டத்தின் அடிமை கள் உன்னைப் பறித்துக் கொள்வார்கள்.' என்று அமைகிறது. பாரதியின் பாப்பாப் பாட்டிலிருந்து இத்தொடக்கம் தெளிவாக வேறுபடுகிறது. சட்டத்தின் அடிமைகளாகிய முறைமன்ற நடுவர்களும் ஆளும் கொடுங்கோலர்களும், முதல் மனைவி மூலம் தான் பெற்ற குழந்தைகளைத் தன்னிடமிருந்து பிரித்து விட்ட கொடுமையையும், உடன் பயணம் செய்கின்ற இரண்டாம் மனைவியின் கருப்பையில் துயில்கின்ற மகவையும் பற்றித் தன் மகனுக்குச் சொல்லி 'கொடியவர்கள் என்றும் ஆண்டு கொண்டிருப்பார்கள் என்று அஞ்சாதே. விரைவில் இத்தாலிக்கோ, கிரேக்கத்திற்கோ செல்வோம். அங்கு ஒரு நாட்டுப் பற்றாளனின் பிறப்புரிமையைக் கோரும் நிலையில் உனக்கு நான் உருக் கொடுப்பேன்' என்கிறான்.

3.2 இதிலிருந்து தன் வாழ்வின் பட்டறிவையே ஷெல்லி தன் குழந்தைக்கு உணர்த்தும் தனிச் செய்தித் தன்னிலைப் பாடல் இதுவென அறியலாம். பாரதியின் பாப்பாப் பாட்டு ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துத் தோன்றியதெனினும் எல்லாக் குழந்தைகளுக்குமான பொதுச் செய்திப் பொதுநிலைப் பாட்டாக அமைகிறது. மேலும் இரு பாடல்களும் தோன்றிய சூழல்கள் வேறுபட்டவை. ஷெல்லியின் பாடலில் மேலோங்கி நிற்பது துயரில் விளைந்த சாடுமுணர்ச்சியே, பாரதியின் பாட்டில் மேலோங்கி நிற்பது அன்புணர்ச்சியே. பாரதி, தன் ஐந்து வயதுக் குழந்தைக்குப் பாடிய பாட்டு குழந்தை இலக்கியமாகிறது. ஷெல்லி, தன் ஒரு வயதுக்குழந்தைக்குப் பாடிய பாடல் குழந்தை

இலக்கியமாகவில்லை. ஆக, பாரதி 'ஷெல்லிதாசனாக இருந்த போதும் அவனுடைய மனத்தில் பாப்பாப் பாட்டிற்கான எண்ணத்தை ஷெல்லியின் பாடல் தோற்றுவித்திருக்க வாய்ப் பில்லை என்னும் முடிவிற்கு வரலாம்.

4.0. பாப்பாப் பாட்டில் இடம் பெறும் கருத்துக்களைக் கீழ்வரும் வகையில் பகுக்கலாம்.

4.1. **உயிர்களிடத்து அன்பு :** ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' எனப் பேரிகை கொட்டிய பாரதி, 'சின்னக் குருவி', 'வன்னப் பறவை', 'கொத்தித் திரியும் கோழி', 'எத்தித் திருடும் காக்காய்', 'பாலைப் பொழிந்து தரும் பசு' 'வாலைக் குழைத்து வரும் நாய்', 'வண்டியிழுக்கும் குதிரை', 'வயலில் உழும் மாடு', 'அண்டிப் பிழைக்கும் ஆடு' ஆகிய உயிர்களிடத்தில்' அன்பு வேணும்', அவற்றை ஆதரிக்க வேணும்' என அன்புப் பொதுமையை அறிவுறுத்துகிறான்.

4.2. **ஒற்றுமை வலிமையாம் :** 'கூடித் தொழில்செய்' என ஆத்திசூடி தந்தவன். 'கூடி விளையாடு பாப்பா' 'கூட்டி விளையாடு பாப்பா' என்கிறான். தான் பிறரோடு சேர்வது மட்டுமின்றித் தன்னோடு பிறரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என ஒற்றுமையின் பொருளை உணர்த்துகின்றான்.

4.3. **தெய்வ நம்பிக்கை :** 'அன்பு மிகுந்த தெய்வமுண்டு', 'தெய்வம் நமக்குத் துணை',' நாட்டைத் தெய்வமென்று கும்பிடு' 'தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்' என்கிறான், 'தெய்வம் நீ யென்றுணர்' என்று பேசிய பாரதி.

4.4. **மொழிப் பற்று :** 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என ஏகாரத்தால் தெளிவுபடுத்தி 'அதைத் தொழுதுபடி' எனத் தாய்மொழிப் பற்றை ஊட்டுகிறான். ''தமிழைவிட மற்றொரு மொழி சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்த முண்டாகிறது' என்று பரலி, சு. நெல்லையப்பர்க்கு மடல் எழுதியவனாயிற்றே.

4.5 **நாட்டுப்பற்று :** பாரதி, முதலில் தமிழ்திரு நாட்டைத் தாயென்று கும்பிடச் சொல்கிறான். பின்னர் வடக்கில் இமயமலை, தெற்கில் குமரி முனை, கிழக்கிலும், மேற்கிலும் கிடக்கும் கடல் எனத் தமிழகமுள்ளிட்ட இந்திய நாட்டின் எல்லையை வரையறுத்துக் காட்டுகின்றான். 'பூமியை இழந்திடேல்', 'தேசத்தைக் காத்தல் செய்' என்று ஆத்திசூடியிலும் அறிவுறுத்தியவன் அவன், தாய்நாடு 'அமிழ்தின் இனியது', 'ஆன்றோர்கள் தேசம், 'செல்வம் நிறைந்தது', 'வேதமுடையது' 'வீரர் பிறந்தது', 'அதைத் தினமும்

புகழ்ந்திடு', 'தெய்வமென்று கும்பிடு' என்று விடுதலை உணர்ச்சிக்கு அடிப்படையான நாட்டுப் பற்றை ஊட்டுகிறான்.

4.6. **தீமைகளைக் களையும் வேட்கை :** 'பிறரை வைதல் கூடாது', 'புறஞ் சொல்லலாகாது', 'துன்பத்தில் சோர்ந்துவிடலாகாது', 'சோம்பல்மிகக் கெடுதி', 'தாய் சொல்லைத் தட்டாதே', 'தேம்பியழாதே', 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்', 'பயங் கொள்ளலாகாது', 'பாதகம் செய்பவரை மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்துவிடு' எனத் தீமைகளைப் போக்கும் திடம் கொள்ளச் செய்கிறான். 'கொடுமையை எதிர்த்து நில்' என்பது அவன் ஆத்திசூடி.

4.7. பாப்பாப் பாட்டு, பாரதிப் புலவனின் அன்புக் கொள்கை, ஒற்றுமை வேட்கை, தெய்வ நம்பிக்கை, மொழிப் பற்று, நாட்டுப் பற்று, தீமைகளைக் களையும் வேட்கை ஆகிய முழுமைப் பண்புகளை உள்ளடக்கிய உயிர்வித்தாய் ஒளிர்கின்றது. பெண் குழந்தையை நோக்கிப் பாடப்பட்டிருந்தாலும் கூடக் கருத்தளவில் இப்பாடல் ஆண் குழந்தைகளுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. இங்கு, 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டவன்' பாரதி என்பது நினைவு கூரத்தக்கது. குழந்தைப் பாடலெனினும் பெரியோர்க்கும் பொருந்தும் கருத்துக்கள் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

5.0. இனி, கருத்துக்களை அறிவுறுத்தப் பாரதி அமைத்துக் கொண்ட முறைகளைக் காண்போம்.

5.1. பாட்டின் தொடக்கமே குழந்தைகளின் மன இயல்பைத் தெளிவாக அறிந்து அமைக்கப்பட்டதாக விளங்குகிறது. குழந்தைகள் விளையாட்டுணர்ச்சி மிக்கவர்கள். விளையாட்டு, உள்ள மலர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உறுதுணையாவது. பொழுதெல்லாம் விளையாடிக் கொண்டிருந்தாலும்கூட அவர்களின் ஆசை தீராது. குழந்தைகளின் இவ்வியல்பைத் தெளிவாக உணர்ந்தே 'ஓடி விளையாடு' எனப் பாட்டைத் தொடங்கி, 'கூடி விளையாடு', 'திரிந்து பறந்து வா', 'கூட்டி விளையாடு', 'மாலை முழுவதும் விளையாட்டு' என்று வழக்கப்படுத்திக் கொள்' என்று கூறிச் செல்கின்றார். மகிழ்வான உள்ளமும், வலிவான உடலும் எதையும் செயற்படுத்த இன்றியமையாதன அல்லவா?

5.2. பாரதியார் குருவி, கோழி, காக்கை, பசு, நாய், குதிரை, மாடு, ஆடு ஆகிய பறவைகளையும் விலங்குகளையும் குறிப்பிடுகின்றார். இவ்வுயிர்களில் எவ்வுயிரும் குழந்தைகள் அறிய இயலாததன்று. எல்லா உயிர்களும் குழந்தைகளின் அறிவெல்லைக்கு உட்பட்ட

வையே. அவ்வுயிர்களைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'பாலைப் பொழிந்துதரும்', 'வண்டியிழுக்கும்', 'வயலில் உழுது வரும்' எனப் பயனோடும் 'தொழிலோடும் தொடர்புபடுத்திக் காட்டுவது, சொல்லும் பொருளுக்குத் தெளிவையும், சிறப்பை யும் சேர்க்கின்றது.

5.3. பாட்டின் முதற் பகுதியில் ஒவ்வொரு குழந்தையும் பிறரின் துணையின்றித் தானே 'எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடிய ஒழுக்கங் களையே' அறிவுறுத்துகிறார். சான்றாகப் 'பொய் சொல்லக் கூடாது', 'புறஞ் சொல்லல் ஆகாது' முதலியவற்றைக் கூறலாம். அடுத்து, மொழிப் பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இவை, குழந்தைகள் வளர வளரப் புரிந்து கொள்ளக்கூடியவை. பின்னர் சாதி ஒழிப்பு இடம் பெறுகிறது. இஃது ஓரளவேனும் பிறரின் துணையோடு செய்யப்பட வேண்டியதாகும். தனி மனித ஒழுக்கத்தில் தொடங்கும் பாடல் சமுதாய மேன்மையை நோக்கி நடையிடுகின்றது. பாட்டின் இறுதி முன்கூறிய கருத்துக்களைத் தொகுத்துச் சுட்டி, இதுதான் 'வாழும் முறைமை' என அமைகின்றது. இந்த அமைப்புமுறை குழந்தையின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப அமைந்துள்ளது.

5.4. குழந்தைப் பாடல்களுக்கு மிக மிக இன்றியமையாதது ஓசை நயமே, பாடலில் கூறப்படும் கருத்துக்களைவிட அப்பாடலில் பயின்று வரும் ஓசையே குழந்தைகளை எளிதில் ஈர்க்க வல்லது. இதைத் தெளிவாக உணர்ந்த 'சிந்துக்குத் தந்தை' யான பாரதியார், பாப்பாப் பாட்டைச் 'சிந்து' யாப்பில் இயற்றியுள்ளார். சிந்து, ஓரெதுகைபெற்ற இரண்டடிகள் அளவொத்துவரும் ஓசை நயமிக்க இசைப்பாடலாகும். பாப்பாப்பாட்டு, சிந்துப்பாடலில் 'சமனிலைச் சிந்து' வகையைச் சார்ந்தது.[18]

5.5. பாப்பாப் பாட்டில் 'இந்தச் சொல் அரிய சொல், இதனிடத்தில் வேறொரு எளிய சொல்லைப் போட்டிருக்கலாம்' என்று எண்ணத் தேவையில்லாத முறையில் பெரும்பாலும் எளிய சொற்களே இடம்பெறுகின்றன. மேலும் 'வையாதே', 'கெடுதி', 'நெல்லு', 'காக்காய்', (காக்கை) 'கொள்ளு' (கொள்வாய்), 'வேணும்' (வேண்டும்) முதலிய சொற்கள் பேச்சு வடிவோடு இன்னோசை பெற்று வருகின்றன.

5.5.1. பாட்டினிடையில் 'நீ ஓய்ந்திருக்க லாகாது. நீ திரிந்து பறந்து வா' என 'நீ' என்னும் முன்னிலை ஒருமைச் சொல் பல முறை பயன் படுத்தப்பெற்றிருப்பதும், 'அந்தக் கோழி'' ''அந்தக் காக்காய்', 'அந்தப் பசு' என 'அந்த' என்னும் சுட்டுச் சொல் அடிக்கடிப் பயன்பட்டிருப்பதும் பாடுவோர், கேட்கும் குழந்தை, பாடலில்

வரும் உயிர்கள் ஆகியோரிடையே உள்ள நெருக்கத்தை அதிகமாக்குகின்றன.

5.6. குழந்தைகளை வளர்க்கும்போது இரு முறைகளில் கருத்துக்களை அறிவுறுத்துவது உலகியற்கை. 'இதை இதைச் செய்ய வேண்டும்' என நல்லவற்றை உணர்த்துவது முதல் முறை. 'இதை இதைச் செய்யக்கூடாது' எனத் தீயவற்றை விலக்குவது இரண்டாம் முறை. பாரதி இவ்விரு முறைகளிலும் கருத்துக்களை அறிவுறுத்துகிறான். எனினும் முதன்முறையைத் தழுவியே பல கருத்துக்கள் சொல்லப் பட்டுள்ளன.

5.7. குழந்தைகளின் மன இயல்பை உணர்ந்து, அறிவெல்லையை அறிந்து, வளர்ச்சி நிலையைத் தெளிந்து, ஓசைநயம், சொல் லெளிமை, சுட்டிப்பேசுதல் ஆகிய சிறப்புகள் பொருந்திவர உயர்ந்த இலக்கியமாகப் படைக்கப்பட்டிருக்கிறது இப்பாப்பாப் பாட்டு.

6.0. *பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்*
*பயங்கொள்ள லாகாது பாப்பா,*
*மோதி மிதித்து விடு பாப்பா - அவர்*
*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.*

என வரும் பாடற்பகுதி ஏனைய பகுதிகளை விடச் சற்று உரத்து ஒலிக்கின்றது. பாரதியார் குழந்தைகளிடமிருந்து அவர்களுடைய ஆற்றலுக்கு மீறிய செயலை எதிர் பார்க்கிறாரோ என்று எண்ணவும் இடம் தருகிறது.

6.1. பாட்டின் முதற்பகுதியிலும் பிற்பகுதியிலும் 'நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு' 'நீ திடங்கொண்டு போராடு' என்று 'நீ' 'நீ' என்று முன்னிலை ஒருமையில் பேசுகின்ற பாரதி இடைப் பகுதியில் வரும் இக்கண்ணியில்[19] 'நாம் பயங் கொள்ளலாகாது' என்று 'நாம்'என்னும் தன்மைப் பன்மை எழுவாயில் பேசுகிறார். குழந்தையோடு தன்னையும் இணைத்துக் கொண்டு, தன் னுணர்ச்சி கலந்த நிலையில் பாடுவதாலேயே இந்தக் கண்ணியில் 'மோதி மிதித்துவிடு' 'முகத்தில் உமிழ்ந்துவிடு' எனக் கட்டற்ற வேகம் பிறக்கிறது. அந்த வேகம், நாம் சோர்ந்து விடலாகாது' என அடுத்த கண்ணி வரை தொடர்கிறது. பாரதியார் குழந்தையின் வளரும் எதிர்காலத்தை மனத்தில் கொண்டே இப்படிப் பேசுகிறார் போலும்.

7.0 பாரதியின் பாடல்கள் சிலவற்றில், முதன் முதலில் வெளிவந்த தற்கும், பின் வந்ததற்கும் இடையே சில மாற்றங்கள் காணப்படு

கின்றன. தலைப்பு மாற்றம் பாடல், இருந்த பகுதிகளை இழந்து இல்லாத பகுதியைப் பெற்ற பாடல், இருந்தவற்றிலேயே மாற்றங் கண்ட பாடல் எனச் சில உள்ளன.[20] மாற்றம் பெற்ற பாடல்களில் குறிப்பிடத் தக்கது பாப்பாப் பாட்டு.

7.0.1. பாப்பாப் பாட்டு முதன் முதலில் சுப்ரமணிய சிவா நடத்திய 'ஞானபாநு' என்னும் தாளிகையின் 1915 பிப்ரவரி இதழில் வெளியாயிற்று.21 முப்பெரும் பாடல்கள் (1912) புதிய ஆத்திசூடி (1914) ஆகியவை வெளிவந்த பிறகே இப்பாடல் வெளியாயிற்று. முதலில் வெளியான போது இப்பாடலில் பதினான்கு கண்ணி களே இருந்தன. பின்னர் வெளிவந்த நூல்களில் பதினாறு கண்ணிகள் இடம் பெற்றுள்ளன. புதிதாக இரு கண்ணிகள் சேர்க்கப்பட்டதோடு பழைய கண்ணிகள் சிலவற்றிலும் சொல். தொடர் அளவில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. ஞானபாநு வில் வந்த பாடலைச் சில இடங்களில் திருத்தியதும், இரு கண்ணிகளைச் சேர்த்ததும் பாரதியாராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதுவர்.[22] பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைப் பார்ப்போம்.

7.1. 'வடக்கில் இமயமலை பாப்பா...', என்றும் 'வேதமுடைய திந்த நாடு...' என்றும் தொடங்கும் இரண்டு கண்ணிகளும் பின்னர் புதிதாகச் சேர்க்கப்பட்டவை. இவை பாட்டின் இறுதியில் சேர்க்கபடாமல் இடையில் நுழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இப்போதுள்ள பாட்டில் 13,14ஆம் கண்ணிகளாக இவை உள்ளன. இவ்விரண்டும் இந்திய நாட்டின் எல்லை, பெருமை ஆகியவற்றைக் கூறி, நாட்டைத் தெய்வமென்று கும்பிட வேண்டு கின்றன. பன்னிரண்டாம் கண்ணியின் இறுதி 'செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்' என்று நாட்டைப் பற்றிப் பேசுவதால் அதனை யடுத்து இவ்விரண்டு கண்ணிகளும் அந்நாட்டின் விளக்கமாகப் பொருள் அடிப்படையில் பொருத்தமுறச் சேர்க்கப்பட்டுள்ளன. 'ஞானபாநுவில்' பாட்டு வெளிவந்த போது நாட்டைப் பற்றிச் சிறிதளவு கூறப்பட்டிருந்தது. இணையற்ற நாட்டுப் பற்றாளனான பாரதி நாட்டின் எல்லையைக் குழந்தைகளுக்கு வரையறுத்துக் காட்டி அதன் பெருமையைக் கூறுவது இன்றியமையாதது எனக் கருதியே இவ்விரண்டு கண்ணிகளையும் புதிதாகச் சேர்த்திருப் பான் எனக் கொள்ளலாம்.

7.2. 'ஞானபாநு'வில் வெளிவந்த போது
'செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம் - அதைத்
தெய்வமென்று கொண்டாடு பாப்பா' என்றிருந்தது.

பின்னர்,

'செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம் அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா' என்று மாற்றப்பட்டு உள்ளது.

செல்வமுடைமைக்காக ஒரு நாட்டைத் தெய்வமென்று கொண்டாடச் சொல்வதாகக் கருத நேருமே என்றெண்ணியே அதைத் தினமும் புகழ்ந்தாலே போதும் என மாற்றியிருக்கிறான். முதலில் குறித்துள்ள இரு வரிகளின் விளக்கமாகவே புதிதாகச் சேர்க்கப்பட்ட இரு கண்ணிகளும் அமைந்துள்ளன. அவற்றின் இரண்டாவது கண்ணியின் இறுதி,

''சேதமில்லாத ஹிந்துஸ்தானம் அதைத்
'தெய்மென்று கும்பிட்டி பாப்பா' என்றுள்ளது.

'தெய்வமென்று கொண்டாடு பாப்பா' என்றிருந்த பன்னிரண்டாம் கண்ணியின் இறுதி 'தெய்வமென்று கும்பிடடி பாப்பா' எனப் புதிதாகச் சேர்க்கப்பட்ட பதினான்காம் கண்ணியின் இறுதியாக மாறி இருக்கிறது'. கொண்டாடு என்பது 'கும்பிடடி' எனப் பெற்றிருக்கும் மாற்றம் பொருள் விழுப்பமுடையது. நாட்டைப் பற்றி முதலிலேயே தெய்வென்று கொண்டாடு எனச் சொல்லி முடித்து விடுவதைவிட நாட்டின் எல்லை, பெருமை ஆகியவற்றை விளக்கி இறுதியில் அதைத் தெய்வமென்று குறிப்பிடுவது இடத்தாலும், பொருளாலும் சிறப்புடையதாக அமைகிறது.

7.3. 'சொல்லில் இனிது தமிழ்ச் சொல்லே' இது முன் வந்தது.
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' இது பின் நிகழ்ந்தது.

உயர்வு இனிமையையும் உள்ளடக்கியது, இனியவையெல்லாம் உயர்ந்தவையாகா என்னும் தெளிந்த உணர்வே இச்சீரிய மாற்றத்தைக் செய்திருக்கக் கூடும்.

7.4 அமிழ்தில் இனியதடி பாப்பா - எங்கள்

ஆரிய தேசமடி பாப்பா - என்று ஞானபாநுவில் வெளியான வரிகள் பின்னர்,

'அமிழ்தில் இனியதடி பாப்பா -நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா' என்று மாறி இருக்கிறது.

'எங்கள் தேசம்' எனப் பிரித்துக் காணும் நிலை 'நம் தேசம்' எனும் போது இணைத்துக் காணும் நிலையாய்ச் சிறக்கிறது. 1915இல் இருந்த 'ஆரிய தேசம்' பின்னர் 'ஆன்றோர்கள் தேசமாக' மாறி இருக்கிறது. 'ஆரிய என்னும் சொல்லுக்கு மேலோர் என்னும் பொருளும் உண்டு. இப்பொருளில் பாரதியே இச்சொல்லைப் பல

இடங்களில் கையாண்டிருக்கிறான். எனினும் ஆரியர்கள் என்னும் சொல் மக்கள் அளவில் திராவிடரின் வேறான ஓரினத்தாரையே குறிப்பதாயிற்று. ஆரியர் திராவிடர் பற்றிய பேச்சு நாடெங்கும் எழுவதாயிற்று. பாரதியாரிடமும் 1920ஆம் ஆண்டில் கடையத்தில் சில அன்பர்கள் இதுபற்றிப்பேசியிருக்கிறார்கள்.[23] பாரதியார் இதற்கெல்லாம் அப்பாற் பட்டவரெனினும் அப்போது மக்களி டையே பேசப்பட்ட ஆரிய திராவிடச் சிக்கலைக் கருத்திற் கொண்டு, குழந்தையின் மனத்தில், தாம் அறியமால்கூட அதற்கு இடம் தந்து விட கூடாது என்னும் நோக்கத்தினாலேயே இவ்வாறு மாற்றினார் எனக் கொள்ளலாம்.

7.5. சாதிப் பெருமை யில்லை பாப்பா - அதில்
தாழ்ச்சி உயர்ச்சி செய்தல் பாவம்
நீதி, தெளிந்த மதி, அன்பு - இவை
நிறைய வுடையவர்கள் மேலோர்

இது 'ஞானபாநு'வில் வெளிவந்தபோது இருந்த பகுதி.

பின்னர், கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டிருக்கிறது.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய வுடையவர்கள் மேலோர்

'சாதிப் பெருமை இல்லை' என்பதில் தொக்கி நிற்கின்ற 'சாதிகள் இருக்கலாம்' என்னும் கருத்திற்கும் இடமில்லா வகையில் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சாதி மரத்தை ஆணி வேரோடு அகழ்ந்தெறிகிறார் பாரதியார். தாழ்ச்சி, உயர்ச்சி செய்தல் பாவம் என்ற நிலையிலிருந்து ஒரு படி மேலேறி அவற்றை வாயால் சொல்லுவதே பாவம் என்று பேசப்படுகிறது. செயலளவில் மட்டுமன்று, சொல்லளவிலும்கூடத் தாழ்ச்சி உயரச்சிக்கு இடம் தரக்கூடாது என்ற எண்ணமே இம்மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உயர்வில் தெளிவும் அடங்கும். பாட்டில் முதலில் இடம் பெறாத 'கல்வி' பின் நுழைகிறது. 'காலை எழுந்த வுடன் படிப்பு' என்று கல்வியை முன்வைக்கும் பாவலன் மேலோர்களின் உடைமைகளாக நீதி, மதி, அன்பு ஆகியவற்றை மட்டும் கூறிக் கல்வியை விட்டு விட்டதை உணர்கிறான். உணர்ந்த தாலேயே இன்றியமையாத கல்வி இடையில் நுழைகிறது.

7.6. பாரதியின் கருத்துகளுக்கு முரண்படாமல் அரண் செய்து பெருமை சேர்க்கும் வகையில் மேற்கட்டிய இம்மாற்றங்கள் அமைந் துள்ளன. மாற்றங்களின் மொழி, நடை, பொருட் பொருத்தம்,

*கருத்து வளர்ச்சி, ஆகியவற்றை ஆழ்ந்து நோக்கும்போது பாரதியே தன் வாழ்நாளில் இறுதிப் பகுதியில் இம் மாற்றங்களைச் செய்திருக்க வேண்டும் எனலாம்.*

*8.0. சுருங்கக் கூறின், பாப்பாப் பாட்டு, எழுத்தில் மலர்ந்த குழந்தைப் பாடல்களின் தெளிவான தோற்றுவாய். பாரதியின் இளைய மகள் சகுந்தலாவொடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியை அடி யொற்றியே தோன்றியது - ஷெல்லி தன் மகனுக்கு எழுதிய பாடல் இப்பாட்டிற்கான எண்ணத்தைத் தோற்றுவித்திருக்க இயலாது - பாட்டில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் பாரதியின் முழுமை யைக் காட்டுகின்றன. அக்கருத்துக்களைச் சொல்லுகின்ற முறை பாட்டை உயர்ந்த இலக்கியமாக்குகின்றது.- பாட்டில் ஏற்பட் டுள்ள மாற்றங்கள் பாரதியின் எண்ண வளர்ச்சியைக் காட்டிப் புகழ் சேர்க்கின்றன எனலாம்.*

**சான்றெண் விளக்கம்**

1. தொல், பொருள், புறத்திணையியல் 29, தொல்காப்பியம்(மூலம்) கழக வெளியீடு 1967.
2. தொல்காப்பியம் (முழுவதும்) புலியூர்க்கேசிகன் தெளிவுரை பக். 287, மூன்றாம் பதிப்பு 1967; தொல், பொருள், 84 நச்சினார்க்கினியர் உரை.
3. 'குழந்தை இலக்கிய வரலாறு' பக் 9-12, வே.நா. கோபாலகிருஷ்ணன் (பூவண்ணன்) முதற் பதிப்பு 1965.
4. தையல் சொல் கேளேல், மெல்லினல்லாள் தோள்சேர், மைவிழியார் மனை அகல் - ஔவை; தையலை உயர்வு செய் - பாரதி.
5. ஔவியம் பேசேல், அஃகம் கருக்கேல்; அனந்தலாடேல் - ஔவை ; சௌரியம் தவறேல், மௌட்டியந்தனைக்கொல், ரோதனந்தவிர், ராஜஸம் பயில் - பாரதி.
6. இடம் பட வீடெடேல், சூது விரும்பேல், நெற்பயிர் விளை, பூமி திருத்தி உண் - ஔவை; ஐம்பொறி ஆட்சிகொள், நையப்புடை, முனையிலே முகத்து நில், விதையினைத் தெரிந்திடு - பாரதி.
7. 'தோழனடி', 'வேணுமடி' 'கும்பிடடி'...
8. 'புரட்சி கவிஞர் கவிதை வளம்' பக் 264, சாலை இளந்திரையன், முதற் பதிப்பு, 1965.
9. 'குழந்தை இலக்கிய வரலாறு' பக் 20 வே.தா. கோபாலகிருஷ்ணன் (பூவண்ணன்) முதற் பதிப்பு 1960.
10. பாப்பாப் பாட்டை நூலாக வெளியிட்ட பாரதி பிரசுராலயத்தார் அதன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளது.

11. 'பல்கோண பாரதி' பக் 102, புலவர் நக்கீரன், வள்ளி பதிப்பகம், போடி நாயக்கனூர்.
12. ஆராய்ச்சி, அக்டோபர் 1970 இதழ் 'பாரதியின் மொழித் திறன்
13. 'பாப்பாவுக்குப் பாரதி (Biography for Children) பக். 52 - 53
14. 'பைந்தமிழ்ச் சாரதி பாரதியார் பக் 50, முதற் பதிப்பு 1963.
15. 'என் தந்தை' சிவாஜி மாத இதழ், மார்ச்சு 1969 திருச்சி.
16. 'பாரதியாரின் வாழ்க்கையில்' கலைமகள் மாத இதழ் ஆகஸ்டு 67 சென்னை.
17. 'பாரதியும் ஷெல்லியும்' பக். 213 - 214, முதற் பதிப்பு, 1964.
18. யாப்பதிகாரம், பக்.87, புலவர் குழந்தை, இரண்டாம் பதிப்பு 1961.
19. 'ஒரு சிந்துப் பாட்டில் வரும் ஒவ்வொரு சிந்தும் கண்ணி எனப்படும். 'யாப்பதிகாரம்' பக். 94, புலவர் குழந்தை, இரண்டாம் பதிப்பு 1961.
20. இப்போது 'வாழிய செந்தமிழ்' என்னும் தலைப்பிலுள்ள பாடல் புதுவை 'இந்தியா' இதழ்க்கு முதலாண்டு முடிந்து இரண்டாமாண்டு தொடங்கியபோது 16.10.1909 இதழில் 'புது வருஷம்' என்ற தலைப்பில் வெளிவந்தது. சித்திர பாரதி பக் 47, ரா.அ. பந்மநாபன், முதற்பதிப்பு 1957, 'வந்தே மாதரம் என்போம்' எனத் தொடங்கும் பாடலில் இப்போதுள்ள 'புல்லடிமைத் தொழில்பேணி.... 'எனத் தொடங்கும் இறுதிக் கண்ணி' 1907 இல் முதல் வெளியீடாக வந்தபோது இடம் பெறவில்லை. முதல் வெளியீட்டில் இடம் பெற்றிருந்த

    'தேவிநம் பாரதபூமி - எங்கள் தீமைகள் யாவையும் தீர்த்தருள் செய்வாள்

    ஆவி யுடல்பொருள் மூன்றும் - அந்த அன்னை பொற்றாளினுக் கர்ப்பித மாக்கி, (வந்தே)

    என்னும் கண்ணி இப்போது இடம் பெறவில்லை - சித்திர பாரதி பக் - 30 87 ஷை எட்டையபுரம் அரசர்க்குப் பாரதி தன் கைப்பட எழுதிய முதல் நாள் சீட்டுக் கவிக்கும் இப்போது இடம் பெற்றிருக்கும் சீட்டுக் கவிக்கும் சில சொல், தொடர் வேறுபாடுகள் உள்ளன- சித்திர பாரதி, பக்.110 ஷை
21. சித்திரபாரதி, பக் 84 ஷை
22. சித்திரபாரதி, பக் 84 ஷை
23. 'புது நெறி காட்டிய பாரதி' ஆர்.கே. கண்ணன், முதற்பதிப்பு 1965, (முதலில் எழுதிய பகுதியை) ''தானே மறுபடியும் மறுபடியும் படித்துச் சிந்தித்துப் பார்த்துவிட்டு பாரதி தன்னைத்தானே திருத்திக் கொள்கிறான். சுயவிமர்சனம் தன்னியல்பாகவே வருகிறது. எந்தப் பாப்பாவும் கேட்காமலே எந்தத் தாத்தாவும் கேட்காமலே, (பாடலை) மாற்றுகிறான்.''
24. சித்திரபாரதி, பக் 120 ஷை

■

36

# உரைகளில் உதாரணம் - ஒரு குறிப்பு

பன்னூல், பல்துறை, பன்மொழிப் புலவர்களாகிய உரையாசிரியர்கள் மூலநூல்களைப் பாதுகாத்துப் பரப்பிய பெருமைக்குரியவர்கள்.

''இத்தமிழ்கூறு நல்லுலகத்தில்... உரையாசிரியர்களின் தொண்டு இந்திய விடுதலைத் தொண்டர்களின் புகழ்போலப் பரந்துவிளங்கும்'' என இக்கால உணர்வோடு புகழ்வார் அறிஞர் வ.சுப.மாணிக்கனார். (தொல்காப்பியத் திறன் ப. 35)

ஒல்காப்புகழ்த்தொல்காப்பியர் என மூலநூல் ஆசிரியர் போற்றப்படுவதைப் போன்றே உளங்கூர் கேள்வி இளம்பூரணர், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், ஆனாப்பெருமைச்சேனாவரையர் என அடைச்சிறப்பொடு உரையாசிரியர்கள் அழைக்கப் பட்டனர்.

இவ்வுரையாசிரியர்கள் ஒருவர் பிறிதொருவர் உரையைப் 'போலியுரை' என்றெல்லாம் குறிப்பிட்டுச் சாடிக் கொள்வார்களேயன்றி மூலநூலாசிரியரை எவ்வாற்றானும் குறைத்துக் கூறுதல் இலர். மூலநூலாசிரியன் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவினன்' என்னும் பெருமதிப்புடன் மூலத்தை முழு ஈடுபாட்டோடு உணர்ந்து உணர்த்தும் அணுகுமுறையுடன் உரை வரைந்துள்ளனர். மூல நூலாசிரியரின் கருத்து சரிதானா? என்னும் ஐயம் எழுமிடங்களில் கூட 'ஆசிரியர் கூறியதால் சரியாக இருக்கும்' என்னும் அழுந்திய போக்கிலேயே உரை வரைந்துள்ளனர்.

''எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல் என்று கோடும்'' எனச் சேனாவரையரும் (இடை 21)

''நண்டிற்கு மூக்குண்டோவெனின் அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்'' எனப் பேராசிரியரும் (மரபு ௭௧) வரைந்த உரைப்பகுதிகள் இதற்குச் சான்றாம். மூலநூலாசிரியர் 'குறைகளுக்கெல் லாம் அப்பாற்பட்டவர், அனைத்தையும் அறிந்தவர்' என்னும் உறைப்பில் நின்றே உரைகள் வரையப்பட்டுள்ளன.

''நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் பாஷையில் மிக்க பயிற்சியுள்ளவர்களென்பதும் மிக்க உபகாரிகளென்பதும் ஒரு சாரார் கொள்கை'' என்பார் உ.வே.சாமிநாதர் (சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் ப. 149). பழந்தமிழ் நூல்களுக்கு உரை வரைந்த உரையாசிரியர் கள் பலரும் மூலநூல்கள் உருவாகிப் பன்னூற்றாண்டுகளின் பின்னர் தோன்றியவர்கள். நீண்ட இடைவெளிக் கால வளர்ச்சியில் மொழியுற்ற மாற்றங்களை அறியும் வாய்ப்பு மிகப் பெற்றவர்கள். உரைகளில் தமிழின் முன்னைப் பழமைக் கூறுகளையும் பின்னைப் புதுமைப் பேறுகளையும் பதிவு செய்தவர்கள்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இலக்கண விதிகட்கு எடுத்துக் காட்டாகச் சுட்டும் உதாரணங்கள் சில தொல்காப்பிய மொழியிலோ, சங்க இலக்கியத்திலோ இடம்பெறவில்லை. எடுத்துக்காட்டாக, உசு, உரிஞ், பொருந், உகின், செகின், விழன், கடான், வயான் முதலிய சொற்களைச் சுட்டலாம். இவை வழி வழியாக வழங்கப்பட்ட உரை மரபிலிருந்து உரையாசிரியர்கள் பெற்றவை எனலாம். நூற்பாக்களில் இடம்பெறும் விதப்புக்கிளவிகளைச் சார்ந்து 'விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்' என்றபடி பிற்கால வழக்குகளையெல்லாம் தம் உரைகளில் உதாரணங்களாகப் பதிவுசெய்து விடுகின்றனர். இவ்வகை யில் பிற்கால இலக்கணங்களுக்கான கருத்தாங்கும் பைகளாக உரைகள் அமைந்துவிடுகின்றன. நன்னூலை 'இளம்பூரணத்தின் குழந்தை' என அறிஞர் சுட்டுவது நோக்கத்தக்கது.

பேராசிரியர், பொருளதிகார உரையில் ''உரையின்றிச் சூத்திரத் தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம்'' (மரபு 98) என்றும் ''உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து'' (மரபு 101) என்றும் குறிப்பிடுவன உரை தேவைப்படாதவொரு காலத்தையும், உதாரணங் காட்டப்படாமல் உரை நடந்த ஒரு காலத்தையும் புலப்படுத்துகின்றன. காலவோட்டத்தில் உதாரணம் காட்டுதல் (நன். பொ. பா. 21) உரையின் இன்றியமையாத ஓர் உறுப்பாக அமைந்துவிட்டது.

இந்தப் பின்புலத்தொடு தொல்காப்பிய மொழிமரபில் காட்டப் படும் சில உதாரணங்களை முன்வைத்து சில ஐயங்களை எழுப்புவதே இக்கட்டுரை.

1) சகரக்கிளவி அ, ஐ, ஔ என்னும் மூவுயிர்களைத் தவிர்த்து ஏனைய உயிர்களொடு மொழி முதலில் வருவதைச் சுட்டும் 'நூற்பா' (29) உரையில் ''சட்டி, சகடம், சமழ்ப்பு என்றாற்போல்வன 'கடிசொல் இல்லை' (எச்ச 56) என்பதனாற் கொள்க. சையம், சௌரியம் என்பவற்றை வடசொல் என மறுக்க' என்பர் நச்சினார்க்கினியர்.

2) 'ஆவோடல்லது யகரம் முதலாது' என்னும் நூற்பா (32) உரையில் ''யவனர் என்றாற் போல்வன விலக்கினவும் வருமால் எனின் அவை ஆரியச்சிதைவென்று மறுக்க'' என்று இளம்பூரணரும் ''யவனர், யுத்தி, யூபம், யோகம், யௌவனம் என்பன வடசொல் என மறுக்க' என்று நச்சினார்க்கினியரும் விலக்குவர்.

3) ஞகரம் ஆ, எ, ஒ ஆகிய மூவுயிரொடு மட்டும் மொழிமுதலில் வரும் எனும் நூற்பாவுரையில் (31) ''ஞழியிற்று என்றாற் போல்வன விலக்கினவும் வருமால் எனின் அவை அழிவழக்கென்று மறுக்க'' என இளம்பூரணரும் ''ஞமலி என்பது திசைச்சொல், ஞழியிற்று என்றாற் போல்வன இழிவழக்கு'' என்று நச்சினார்க்கினியரும் உரைப்பர்.

4) ''உச்சகாரம், இருமொழிக்குரித்தே'' எனும் நூற்பாற்விற்கு, உசு, முசு என்னும் உதாரணங்களைத் தந்து பின்னர் 'பசு' என்னும் சொல்லைச் சுட்டி 'அஃது ஆரியச் சிதைவு' என்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

இவ்வுரைப்பகுதிகளிலிருந்து தெரிய வருவன:

1) தொல்காப்பிய விதிகட்குப் புறம்பே சில சொல்லாட்சிகள் உள்ளன.

2) அச்சொற்களைத் தொல்காப்பியர் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

3) கணக்கிலெடுத்துக் கொள்ளாமைக்குக் கரணியம் அவை :

அ) திசைச்சொற்கள் (ஞமலி...)

ஆ) வடசொற்கள் (சையம், சௌரியம், யவனர்...)

இ) அழிவழக்கு, இழிவழக்கு (ஞழியிற்று...)

உரையாசிரியர்கள் குறிப்பிடும் இக்காரணங்களின் வன்மை மென்மைகளைக் காண்போம்.

தொல்காப்பியர் வழக்கையும் செய்யுளையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் தொகுத்தார் என்கிறது பனம்பாரனாரின் சிறப்புப்பாயிரம். தொல்காப்பியரும் வழக்காறு இது, செய்யுளாறு இது எனப் பல இடங்களில் விதந்து பேசுகிறார்.

*ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்*
*ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்*
*வழக்கி னாகிய உயர்சொற் கிளவி*
*இலக்கண மருங்கில் சொல்லாறல்ல (கிளவி 27)*

என்றும்

*இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை*
*வழக்கா றல்ல செய்யு ளாறே (கிளவி 18)*

என்றும் வரையறுத்துப் பேசுதலைக் காணலாம்.

வழக்கெனப்படுவது உலகவழக்கு. இது மக்கள் வழக்கு எனப் பொதுவாகப் பொருள்படுமெனினும் சிறப்பாக 'மேன் மக்கள்' வழக்கையே சுட்டி நிற்கும். 'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே' (எச்ச49) என இழிந்தோர் வழக்கு ஒரோவழிப் பேசப்படினும்.

*வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான (மரபு 92)*

எனத் தெளிவாக மேன் மக்கள் வழக்கையே இலக்கணத்திற்கான அடிப்படையாகக் கொள்கின்றார் தொல்காப்பியர். ''...காலந்தோறும் வேறுபடவந்த அழிவழக்கும் இழிசினர் வழக்கும் முதலாயினவற்றுக் கெல்லாம் நூல் செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இகந்தோடும்...'' என்னும் பேராசிரியர் உரையும் (மரபு 94) இவண் இணைத்து எண்ணத்தக்கது. ஆக, அழிவழக்கு, இழிவழக்கு எனச் சில சொல்லாட்சிகளை உரையாசிரியர்கள் ஒதுக்குவது தொல்காப்பியர் வழிப்பட்டது எனக் கொள்ளுதற்கு இடமுள்ளது.

இனிச் செய்யுளை நோக்குவோம். தொல்காப்பியம் வழக்கினும் செய்யுளுக்கே சிறப்பிடம் தந்து செய்யப்பட்ட இலக்கணம் என்பது அறிஞர் கருத்து. செய்யுள் செய்வதற்கான சொற்கள் யாவை?

*இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று*
*அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (எச்ச 1)*

எனச் செய்யுளில் இடம்பெறும் சொற்களைத் தெளிவு படுத்துகிறார் தொல்காப்பியர். இயற்சொல், திரிசொல் ஆகிய இரண்டினோடு திசைச்சொல், வடசொல் ஆகிய இரண்டும் செய்யுட்குரிய சொற்களாகக் குறிப்பிடப்படுவது கருத்தில் இருத்தவேண்டிய செய்தியாகும்.

செய்யுள் வழக்கிற்குச் சிறப்பிடம் அளித்துத் தொல்காப்பியர் செய்த இலக்கண விதிகட்குச் செய்யுட் சொற்களாக அவரே குறிப்பிடும் திசைச்சொற்களையும் வடசொற்களையும் எடுத்துக்காட்டுவதைத்

தவிர்த்தல் முறையாகுமா? தொல்காப்பிய நெறிக்கு மாறுபட்டதாகாதா? என்பதே ஈண்டு எண்ணத் தக்கது.

திசைச்சொல் என்பது தமிழ் வழங்கும் நிலப்பரப்பின் ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப்பகுதியில் தனித்துச்சுட்டும் பொருட்குறிப்போடு வழங்கும் வட்டாரக்கிளை மொழிச்சொல், திசைச்சொல். வழங்கும் 'செந்தமிழ்சேர் ஏதமில்' பன்னிரு நிலப்பகுதிகள் தமிழகத்தின் பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு நடுநாட்டுப் பகுதிகளே. அப்பகுதிகளுக்குரியவாக உரையாசிரியர்கள் குறிப்பிடும் பலசொற்கள் இலக்கிய ஆட்சி பெற்றவை. திசைச்சொல் என்று கூறி உரையாசிரியர்கள் விலக்கும் 'ஞமலி' (பூழிநாட்டு வழக்கு) சான்றோர் செய்யுட்களாகிய பாட்டிலும் (பட், 140) தொகையிலும் (புறம் 74) இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் உரிய திசைச் சொற்களாகக் குறிப்பிடப்படும் 'இகுளை' (நற் 64, 71, 331, குறு 251, ஐங் 467, கலி 42, 64, 103, அகம் 8, 138, 201, 359, 375...) எலுவன் (நற். 395, குறு. 129) செய் (பரி 2) செறு (பதி. 13, கலி. 68) சொன்றி (புறம். 197) ஆகியன சங்கச் சான்றோர் செய்யுட்களில் பயில்கின்றன. புறத்திணையைச் சுட்டும் 'உழிஞை' (புறம். 50, 76, 77...) 'ஓசை' (புறம். 261...) ஆகியனவும் திசைச் சொற்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு சான்றோர் செய்யுட்களில் இடம்பெறும் திசைச்சொற்கள் பல. 'பெண்மகன்' என்னும் வழக்காற்றைச் சுட்டும் 'பெண்மை அடுத்த மகனென் கிளவி' (பெய. 10) என்னுந் தொடர்க்கு உரை எழுதும் சேனாவரையர் ''புறத்துப் போய் விளையாடும் பேதை பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப'' என்று குறிப்பிடுவது கொற்கை சூழ்நாடாகிய மாறோக்கத்தில், சேனாவரையர் காலத்தும் மக்கள் வழக்கில் தொல்காப்பிய இலக்கணத்துக்கான இலக்கியம் இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இச்சான்றுகளிலிருந்து திசைச் சொற்கள் சான்றோர் செய்யுட்களில் பயின்று வருவன என்பதையும் அவற்றையும் கருத்தில் கொண்டே தொல்காப்பியர் இலக்கணம் சமைத்தார் என்பதையும் உரையாசிரியர்கள் திசைச்சொற்களை உதாரணப் படுத்துதலைத் தவிர்ப்பது முறையானதன்று என்பதையும் உணரலாம்.

இனி வடசொல்லுக்கு வருவோம். செய்யுட்குரிய சொற்களில் இறுதியாகக் குறிப்பிடப்படுவது இது. ஏனைய மூன்றும் தமிழ்மொழிச் சொற்களாக அமைந்து இது தமிழியற்படுத்தப்பட்ட பிறமொழிச் சொல்லாதலின் இறுதியில் வைக்கப்பட்டது. ஒரு காலக்கட்டத்திற்குப் பின் தமிழ் மொழியில் இணைந்திருக்கிறது. தமிழ்வடிவில் வரும் வடமொழிச் சொல்லே வடசொல். தெய்வச்சிலையார் வடமொழிச் சொற்களோடு பாகதச் சொற்களையும் இணைத்துப் பேசுவார். வடசொற்

களாக 'உலகம், குங்குமம், வாரி, மேரு, மணி, மானம், கோபம், ஞானம், நேயம், தமாலம், தாரம், திலகம், நாமம், வட்டம், நட்டம், பட்டிமை' முதலிய பலவற்றை உரையாசிரியர்கள் குறிப்பர். தொல்காப்பியத்திலேயே 'அந்தரம் (1096), கபிலை (1039), கரகம் (1573), காண்டிகை (1602...), காரணம் (505...), குஞ்சரம் (1521), சாதி (1545), சூத்திரம் (1427...), ஞாபகம் (1614), நிமித்தம் (963...), வைசிகன் (1580) முதலிய வடசொற்கள் இடம்பெற்றுள்ளன.

சான்றோர் செய்யுளகத்தும் அங்கி (பட். 54), அரமியம், (மது 451... அகம் 124), ஆராதனை (பரி. 6), உத்தரியம் (கலி. 96), சரணம் (பரி. 10), சிகரம் (அகம். 181), சோபனம் (பரி. 19), தருமம் (புறம். 353), நதி (பரி. 11), நயனம் (பரி. 9), யூபம் (புறம். 15...), ஆசாரம் (குறள். 1075), அதிசயம், அதிபதி, ஆகுதி, உத்தரம், யோகம், வந்தனை, வார்த்தை (சிலம்பு) முதலிய வடசொற்கள் இடம்பெற்றுள்ளன.

செய்யுட்குரியது எனத் தொல்காப்பியரால் குறிப்பிடப்படுவதும், சான்றோர் செய்யுளகத்து இடம்பெறுவதுமாகிய வடசொல்லை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகளில் விலக்குவது. தொல்காப்பிய நெறிக்கு ஏற்புடையதன்று. எனினும் உரையாசிரியர்கள் இலக்கியங்களில், 'செஞ்சொற்கள்' எனக் கருதப்படும் இயற்சொற்களும் திரிசொற்களும் இடம்பெறுவது சிறந்தது என்னும் கருத்தில் ஊன்றி நின்றனர் போலும். இடத்திற்கேற்பப் பொருளமைந்த திசைச்சொற்களும் பிறமொழி வழிச்சொற்களாகிய வடசொற்களும் இலக்கியத்தில் இடம்பெறுவது சிறப்புடையதன்று என்று கருதினர் எனக் கொள்ளலாம்.

உரைகள் இயங்கும் முறையைக் கூர்ந்து நோக்கும்போது, ஆசிரியனிடம், மாணவன் மரபுவழி உதாரணங்கட்கு அப்பால், சான்றோர் செய்யுளிடத்தும் தானறி வழக்கிலும் இடம்பெறும் உதாரணங்கள் பற்றி வினவுவதும், அதற்கு ஆசிரியன் அமைதி கூறுவதுமான போக்கினை அறிய முடிகிறது. சகரம் ஊர்ந்த முற்றுகர ஈற்றுச் சொற்கள் இரண்டு; அவை உசு முசு என ஆசிரியன் உரைக்க, 'பசு' என்னும் வழக்கு மாணவன் முன் தோன்றுகிறது. அதற்கு அமைதி கூறும் வகையில் 'பசுவென்பதோவெனின் அஃது ஆரியச்சிதைவு' என்று ஆசிரியன் ஏற்க மறுக்கிறான். உரையாசிரியர்கள் தொல்காப்பிய இலக்கண வரம்பில் வார்க்கப்பட்டவையாகத் தொகை நூல்களைக் கருதுகின்றனர். தொல்காப்பிய விதிகளில் அடக்கமுடியாத 'ஏமலி' 'யவனர்' முதலிய சொற்களைத் தொகை நூற்களில் காணும்போது 'அவற்றை ஆசிரியர் அறிவார்; இந்தக் காரணத்தால் இவை விலக்கப்பட்டன' என்றாற்போல் எழுதிச் செல்கின்றனர்.

சுருங்கக் கூறின் மூல நூலாசிரியனுக்கும் உரையாசிரியனுக்கும் இடைப்பட்ட காலத்தில் மொழியில் அரும்பிய வழக்குகளை, அவை பிற்காலத்தவை, மூல நூலாசிரியன் அறியாதவை எனக் கூற மனம் இன்றி, அவன் அனைத்தையும் அறிந்தவன், இச்சொற்களைத் தெரிந்தே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப்போல உரை எழுதிச் செல்வதே இவ்விடர்ப்பாட்டிற்குக் காரணமாகின்றது எனலாம்.

■